# மின்னலின் ஒரு துளி



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : மின்னலின் ஒரு துளி |
| ஆசிரியர் | : ஜெய் சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : மே,2006 |
| மொழி | : தமிழ் |
| தாள் | : 11.6 kg வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 272 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை பைண்டு |
| பதிப்பாளர் | : **ஸ்ரீ செல்வ நிலையம்**<br>4, முத்துக்கிருஷ்ணன் தெரு,<br>தி.நகர், சென்னை-600 017. |

**விலை ரூ. 85.00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : 'சிவம்'ஸ், போன்: 9444232005 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை- 14. |


# மின்னலின் ஒரு துளி



# மின்னலின் ஒரு துளி




''ஹேய்! நல்ல செய்தியோட வந்திருக்கேன். ஸ்வீட் செஞ்சு குடு...'' என்றான் சோமநாதன்.

தமிழ்ச்செல்வி திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக பின்னாலிருந்து கட்டிக்கொண்டான்.

''ஐயோ! என்னங்க இது. இன்னும் சின்னப் பிள்ளையாட்டமா.. பசங்க.. அந்தப் பக்கம் ரூம்ல படிக்குதுங்க..' என்ற தமிழ்ச்செல்வி திணறுவதற்குள்ளாகவே ஹாலில் இருந்து ''அண்ணா! நான் இங்கதான் இருக்கேன்'' என்று குரல் கொடுத்தான் தம்பி பரணீதரன்.

'சரிதான்.. போடா! என் வைஃப்.. என் இஷ்டம்.. உன்கிட்ட பர்மிஷன் கேக்கணுமாக்கும் என்றான் சோமநாதன் அலட்டிக் கொள்ளாமல். மனைவியை விட்டு விலகவுமில்லை.

''அண்ணா! என்கிட்டே பர்மிஷன் கேக்கத் தேவையில்லை. நான் நாகரீகமா ஒதுங்கிக்குவேன். ஆனா.. உங்க அருமைச் செல்வன் விக்னேஷும், வீரலட்சுமி வினிதாவும் விவரமா.. எட்டிப் பாப்பாங்க. அப்புறம் எங்கயாவது தங்கவேலு படத்தில மாதிரி.. ரோட்ல போயி நடிச்சுக் கிடிச்சுக் காட்டப் போறாங்க..' என்று சிரிக்கவும் சட்டென்று விலகிக் கொண்டான்.

'சித்தப்பா.. கூப்பிட்டீங்களா?' என்று கனகாரியமாக வெளியே வந்தார்கள் விக்னேஷும், வினிதாவும்.

தமிழ்ச்செல்வி கடுப்பானாள் 'எப்படா சான்ஸ் கிடைக்கும்.. புக்கை மூடி வச்சுட்டு ஓடி வரலாம்னு இருப்பீங்களே! போங்கடி.. போய்ப் படிங்க என்று அவள் மிரட்டிக் கொண்டிருக்கையிலேயே,

"ஏங்கா.. பாவம்.. குழந்தைகளை மிரட்டறே..! வாம்மா.. ராசாத்தி.. சித்தி உனக்கு ரவா லட்டு கொண்டு வந்திருக்கேன் பாரு' என்று வந்தாள் மான்விழி.

'போச்சு! அவ்வளவுதான் இவ வேற வந்துட்டாளா! இனி அவங்க படிச்ச மாதிரிதான்' என்று முணுமுணுத்தாள் தமிழ்ச் செல்வி.

'பாத்தியா.. அம்மா திட்டறாங்க. ரவா லட்டு சாப்பிட்டதுக் கப்புறம் சித்தி பாடம் சொல்லிக் குடுப்பேனாம். நீங்க ஹோம் வொர்க் ஒழுங்கா செய்வீங்களாம்' என்று குழந்தைகளை உள்ளே அழைத்தாள்.

'ஆமா! இரண்டே ரெண்டு ரவா லட்டைக் கொண்டு வந்து வைத்து நைவேத்தியம் மாதிரிக் காட்டிட்டுப் போவீங்களே!' என்று வம்பிழுத்தான் பரணீதரன்.

'அலையாதீங்க சின்னத்தான். தூக்கு நிறையக் கொண்டு வந்திருக்கேன்.. சாப்பிடுங்க..' என்று ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து நீட்டினாள்.

பரணீதரனும் தயங்காமல் வாங்கிக் கொண்டான்.

'ஏன்டா.. எக்ஸாம் முடிஞ்சாச்சா?' என்றான் சோமநாதன்.

'இன்னையோட முடிஞ்சதுண்ணா.. இன்னும்.. மூனே மூனு செமஸ்டர்தான்.. ஐயா.. அப்புறம்.. என்ஜினியர்தான்..' என்றான் பெருமையாக.

'ஆமடா.. இப்பவே கூட சின்னதா ஒரு புராஜக்ட்.. ஆரம்பிச்சராமா?' என்றான் சோமநாதன்.



பரணீதரனும், தமிழ்ச்செல்வியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு பரணீதரன் சொன்னான்.

'அண்ணா! படிப்பும், ப்ராஜக்ட்டுமா அகலக்கால் வேண்டாண்ணா. படிப்பு முடிச்சிட்டு அப்புறம் இறங்கிக்கறேன்' என்றான் பரணீதரன்.

'அதுவும்.. சரிதான்' என்றான் சோமநாதன்.

மான்விழி அதற்குள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

சோமநாதனும், பரணீதரனும் சகோதரர்கள். சோமநாதன்தான் பரணீதரனை வளர்த்தான் என்று சொல்ல வேண்டும்.

இரண்டு பேருமே பெற்றோருக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு பிறந்தவர்கள். அதிலும் இருவருக்கும் எட்டு வயது இடைவெளி. ஆனாலும், சோமநாதன் ஒரு தோழனைப் போலவும் பழகுவான்.

சோமநாதனுக்கு இரண்டு குழந்தைகள். பெரியவள் வினிதா ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். சின்னவன் விக்னேஷ் மூன்றாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான்.

மான்விழி தமிழ்ச்செல்வியின் தங்கை. தமிழ்ச்செல்வியின் பெற்றோர்கள் முதலில் மதுரையில் இருந்தார்கள். சமீபத்தில்தான் தமிழ்ச்செல்வியின் தந்தை மறைந்து போனார்.

தமிழாசிரியராய் இருந்தார். இரண்டே மகள்கள். இரண்டு பேருக்கும் அழகழகான தமிழ்ப் பெயர்கள் சூட்டி மகிழ்ந்தார். ஆனால், தாயார் பர்வதம் பெரிய படிப்பறிவு இல்லாதவர். ஏதோ ஏழாவதோ.. எட்டாவதோ படித்திருந்தார்.

'அத்தே.. இனிமே நீங்க இங்க இருந்துட்டு என்ன செய்யப் போறீங்க...? நம்ம ஊருக்கு வந்துருங்க..' என்றான்.

சொன்னவன்.. அதோடு நிற்கவில்லை. அதற்கா ஏற்பாடுகளைச் செய்தான். ஊரில் மதுரையில் இருந்த அந்த சிறி

வீட்டை விற்ற மாமனாரின் பென்ஷனில் மீதியிருந்த இருப்புத் தொகையையும்.. வைத்துத் தங்கள் தெருவிலேயே சின்னதாக ஒரு போர்ஷன் குடியிருக்கிற அளவுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டான்.

மூன்றே அறைகள்.. ரயில் பெட்டி போல.. என்றாலும் இரண்டு சென்ட் அளவில் சுற்றிலும் கொஞ்சம் இடமும் இருந்தது.

சோமநாதனின் வீடு அவர்கள் தெருவின் இடது கோடியில் இருந்தது. ஐந்து சென்ட் இடம் பங்களா என்று சொல்ல முடியாது. ஆனால் வசதியான வீடு.

சோமநாதன் ஒரு நல்ல கம்பெனியில் வேலைக்குப் போகிறான். வசதிக்குக் குறையிருக்கவில்லை. ஆனால், வேறு விதமான பிரச்சினைகளில் ஆழ்ந்திருந்தான்.

சமீப காலமாக தமிழ்ச்செல்விக்கும் அது குறித்து ஒரு கவலையிருந்தது.

பரணீதரன் அதைப் பகிர்ந்து கொண்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கும் ஏதோ நல்ல செய்தி என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறான்.. என்ன செய்தியோ என்று தமிழ்ச்செல்விக்குக் கொஞ்சம் கவலையாகத்தான் இருந்தது. தயக்கத்துடன் கேட்டாள்.

'எங்க.. என்னங்க.. அது.. நல்ல செய்தி?'' என்று.

'ம்.. அதைச் சொல்ல மறந்துட்டனே..?' என்று திரும்பினான் சோமநாதன்.

'தமிழு! நம்ம பரமசிவம்.. இல்லே.. இப்ப நான் ஆரம்பிச்சிருக்கிற எலச்சீட்ல ரெண்டு சீட் சேர்ந்திருக்கிறாண்டி..'

பரணீதரன் திடுக்கிட்டான்.

'அண்ணா! அவன் பேரே ஃப்ராடு பரமசிவம்' என்று இழுத்தான்.



'போடா! எப்பேர்ப்பட்டவனும்.. நாம நல்லவங்களா இருந்தா.. நம்மகிட்டே நல்லவங்களா இருப்பாங்கடா?' என்று சிரித்தான்.

அந்த வெள்ளை மனது என்னென்ன விதமான பிரச்சினைகளில் கொண்டு விடுமோ என்ற கவலை தமிழ்ச்செல்வியையும் பிடித்தது.

'அண்ணா! ஒரு குரூப் ஒழுங்கா நடக்குதே! அத முடிச்சு எல்லாத்துக்கும் செட்டில் பண்ணீட்டு அப்புறமா அடுத்ததை ஆரம்பிச்சா.. ஆகாதா?'

'டேய்! தொழில்ன்னா ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும். ஒண்ணும் ஆகாதுடா. நான் இருக்கேன்.. மலை போல.. நான் பாத்துக்கறேன்..' என்றான் சோமநாதன்.

மறுபடியும்.. தமிழ்ச்செல்வியும் பரணீதரனும் கவலையாகப் பார்த்துக் கொண்டார்கள்.

∴ ∴ ∴

**'அண்ணீ! சீக்கிரம்! பசிக்குது!'** என்று பரணீதரன் டைனிங் டேபிளில் தாளமிட்டுக் கொண்டிருந்தான்.

'வந்துட்டேன் தம்பீ.. ஒரே நிமிஷம்!' என்றாள் தமிழ்ச்செல்வி சமையலறையிலிருந்தபடியே.

விக்னேஷும், வினிதாவும் கூட அமர்ந்து கொண்டு கிளுகிளுத்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

'என்ன.. தம்பீ! இப்படி அவசரப்படுத்தறே! உனக்காக இன்னைக்குப் பணியாரம் செய்யறேனே!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'பணியாரமா? இனிப்புப் பணியாரம் உண்டா!' என்றான் உற்சாகமாக.

'பின்னே! ஒரு பதினைஞ்சு நிமிஷம் டைம் குடுத்தீங்கன்னா.. பரவால்லே.' என்றாள் உள்ளிருந்தபடியே.

'சரிங்கண்ணி! டேக் யுவர் ஒன் டைம்..' என்றான்.

'வாங்கடா! விளையாடலாம்' என்று குழந்தைகளிடம் சற்று நேரம் விளையாடினான்.

தன் வலது முழங்கையை மேஜையில் ஊன்றிக் கொள்ள விக்னேஷும், வினிதாவும் அதை நகர்த்துவதற்கு தங்கள் பலத்தையெல்லாம் செலுத்தி முயற்சி செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

'ஐயோ! சித்தா! நகர்த்தவே முடியலை என்று எரிச்சலாக முணுமுணுத்தாள் வினிதா.

பரணீதரன் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு சிரித்தான்.

'இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே! என்ன அவசரம் தம்பி.. இன்னைக்காவது வீட்ல இருந்து நிதானமா சாப்பிடக் கூடாதா?' என்றாள் தமிழ்ச்செல்வி ஆதங்கத்துடன்.

'அண்ணி! பத்து மணிக்கு ஃப்ரெண்ட்ஸெல்லாம் சேந்து ஒரு பிக்னிக் மாதிரி எங்கயாவது போயிட்டு வர்லாம்னு இருக்கோம்..' என்றான் பரணீதரன்.

'ஃப்ரெண்ட்ஸ்ன்னா!' என்று குறும்பாகத் தமிழ்ச்செல்வி சிரிக்க, உள்ளே உதவியாக இருந்த மான்விழி...

'அக்கா.. அந்தப் பவித்ரா வர்றாப்லயான்னு கேளுங்க..?' என்று குறும்பாகச் சிரித்தாள்.

தமிழ்ச்செல்வியும் சிரித்தபடியே வெளியே வந்து சூடான பணியாரத்தைப் பரிமாறினாள். கூடவே சொன்னாள்.

'அந்தப் பவித்ரா வர்றாப்லயான்னு மான்விழி கேட்கறா..? என்று சிரித்தாள்.



'ம்.. பவித்ரா வராமயா? அம்மிணி நமக்கும் சேர்த்து மத்தியான சாப்பாடு கொண்டு வர்றாப்ல..' என்றான்.

தமிழ்ச்செல்வி சிரித்தாள்.

'அண்ணன்கிட்டே விஷயத்தை சொல்லட்டுமா?' என்றாள்.

'ஐயய்யோ! சும்மாயிருங்கண்ணி! பவித்ரா, மட்டுமா.. ஷீலா, ரேகா, சீதா எல்லாரும்தான் நம்மகிட்டே நல்லாப் பழகறாங்க. அதுக்காக.. அப்படி அர்த்தம் எடுத்துக்க முடியுமா? லாட்டரல் அட்மிஷன் வாங்கினதே பெரிய விஷயம்.. படிச்சு முடிக்கிற வழியைப் பாக்கலாங்கண்ணி..' என்றான் பாதி விளையாட்டும், பாதி சீரியஸாகவும்.

'சே! புஸ்ஸுன்னு போச்சு!' என்றாள் மான்விழி.

'அண்ணி, இந்த மானு என்ன, நம்மளைச் சீண்டிகிட்டே இருக்கறாப்ல.. அங்க ஏதாவது விஷயம் இருக்கா கேளுங்க..' என்றான் பரணீதரன் சிரித்துக் கொண்டு.

'ஐயய்யோ! சின்னத்தான் சும்மாயிருங்க.. நீங்க பாட்டுக்கு விளையாட்டா எதையாவது கிளப்பிகிட்டிருக்காதீங்க. அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துடும்..' என்றாள் மான்விழி

பணியாரத்தை எடுத்து வாயில் போட்ட படியே 'சேச்சே. அத்தைகிட்ட எல்லாம் சொல்வேனா.. எங்கிட்டே மட்டும் சொல்லு..' என்றான் மறுபடியும் சிரித்தபடி.

'சின்னத்தான்.. அப்படி ஏதாவதுன்னா முதல் உங்ககிட்டேதான் சொல்வேன். நீங்களே பேசி முடிப்பீங்களாம். என்றாள் கெஞ்சுவது போல்.

'ம்.. நான் வீட்டுக்குப் பெரியவன் இருக்கேங்கறது ஞாபகம் இருக்கட்டும்.. என்னை மாதிரிப் பொறுப்பா இரு.. டிப்ளமாவை நல்லபடியா முடிக்கறதுக்கு வழி பாரு..!' என்றான் மிரட்டுவது போல்.

'சரிங்க சின்னத்தான்!' என்றாள் மான்விழி சீரியஸாக.

தமிழ்ச்செல்வியும், பரணீதரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

'ஏய்.. அவன் சும்மா தமாஷுக்கு மிரட்டறாண்டி!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'தமாஷுன்னாலும் சொன்ன விஷயம் கரெக்ட்தானே..!' ன்றாள் மான்விழி பரணீதரனுக்கு சட்னியை எடுத்து ஊற்றியபடியே.

'அண்ணி இப்பல்லாம்.. நீங்க காலேஜ்ல படிச்ச காலம் மாதிரி ல்லை.. பசங்க பொண்ணுங்க எல்லாம் ரொம்ப ஃப்ரீயாப் ழகறாங்க. அதுக்காக சட்டுன்னு போய் லவ் பண்றேன்னெல்லாம் சால்லீர முடியாது.. சப்புன்னு ஒன்னு விட்டாலும்.. ட்டுடுவாங்க..' என்றான்.

'நான் எங்கத்தை தம்பி.. படிச்சேன். ஃபர்ஸ்ட் இயர் முடிக்கறதுக் ளயே உங்க அண்ணன் வந்து பொண்ணு கேட்டுட்டாரு' றாள் தமிழ்ச்செல்வி.

இப்போது மான்விழியும், பரணீதரனும் ஒருவரையொருவர் த்துக்கொண்டு சிரித்தார்கள்.

ஆமா.. இல்லே! கல்யாண வீட்ல இந்த அழகான ணியைப் பாத்து.. அண்ணன் மயங்கிட்டாரு..' என்று ீதரன் ஆரம்பிச்சு..

டேய்.. அங்க என்னடா கலாட்டா!' என்று குரல் கொடுத்தான் நாதன்.

துவரையிலும் உள்ளே அமர்ந்து பேப்பர் படித்துக்கொண்டு ிற கலாட்டாக்களைக் காதில் வாங்கிக்கொண்டு சிரித்துக் டிருந்தான்.



'ஒன்னும் இல்லண்ணா! மலரும் நினைவுகள்ண்ணா. கொஞ்சம் ஞாபகப்படுத்தினேன்னு வைங்க. இன்னைக்கு சாயங்காலத்துக்கு எனக்கு நல்ல டிஃபன் கிடைக்குமில்ல..' என்றான்.

'நல்ல டிஃபன் கிடைக்குமோ இல்லையோ நல்லா நாலு முதுகில போடுவேன்' என்றான் சோமநாதன்.

'தப்புத் தப்பா பேசாதண்ணா!' என்று பரணீதரன் சிரித்தபடியே எழுந்து கை கழுவப் போனான்.

கலகலப்பாக இருப்பார்கள். மகிழ்ச்சியான குடும்பம். ஆனால், சமீப காலமாக சோமநாதனுக்கு ஒரு தீவிரம். எப்படியாவது ஏதாவது பிஸினஸ் செய்து சீக்கிரமாக முன்னேற வேண்டும் என்று எண்ணம்.

அதற்காக அவன் எடுத்த முயற்சிகள்தான் பரணீதரனுக்கும் தமிழ்ச்செல்விக்கும் கவலையை அளித்தது.

ஏதேதோ ஏஜென்சி எடுக்கிறேன் என்று ஆரம்பித்தான். நட்டத்தில் விடிந்தது. பணம்தானே போனால் போகட்டும்!' என்று தேறிக் கொண்டாள் தமிழ்ச்செல்வி.

சமீபமாக ஒரு ஏலச்சீட்டு ஆரம்பிக்கிறேன் என்று ஆரம்பித்தான். பரணீதரனின் நண்பர்கள் எல்லாரும் 'வேண்டாம்டா.. பரணி. ரொம்ப ரிஸ்க்கான வேலை. உங்கண்ணன்கிட்டே சொல்லு' என்று எச்சரித்தார்கள்.

'நா.. எப்படிடா.. அண்ணன்கிட்டே சொல்றது' என்று தயங்கியவன் அண்ணியிடம் சொன்னான். தமிழ்ச்செல்வி கணவனிடம் தயங்கியபடியே அதை 'ரிலே' செய்தாள்.

சோமநாதன் கோபித்துக் கொள்ளவில்லை. மாறாக சிரித்தான். 'அவனைக் கவலைப்படாம படிப்பைப் பாக்கச் சொல்லு. மத்ததை நான் பாத்துக்கறேன்' என்றான்.

ஏலச்சீட்டு என்றால் இலட்ச ரூபாய்ச் சீட்டு. இருபத்தைந்து பேர் உறுப்பினர்கள். ஆரம்பித்து ஒரு வருடமாயிற்று. இப்போது வரை ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தது. அந்த மகிழ்ச்சியில் இன்னொரு குருப் ஆரம்பிக்கிறானாம். அதிலும் இப்போது எப்படியாவது குருப் நடத்த வேண்டும் என்று வெறியே தோன்றிவிட்டது.

ஆள் கிடைத்தால் போதும் என்ற வெறியில் 'சரி' என்று சொல்கிறவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டிருந்தான். ஒழுங்காகக் கட்டக் கூடியவர்களா என்பதையெல்லாம் கவனித்துக் கூடப் பார்க்கவில்லை. இது தமிழ்ச்செல்வியை வெகுவாகக் கவலைக்குள்ளாக்கியது.

பரணியும், தமிழ்ச்செல்வியும் இதைக் குறித்துத் தங்களுக்குள் வெகுவாக விவாதித்தார்கள். ஆனால், மேலே என்ன செய்வதென்று தெரியவில்லை. எப்படியாவது அண்ணன் சமாளித்துவிடுவான் என்ற நம்பிக்கையும் ஒரு ஓரத்தில் இருந்தது.

அளவு மீறிய தன்னம்பிக்கை ஆபத்தில் கொண்டு போய் விடப் போகிறது என்பதை அவர்கள் அப்போது புரிந்து கொள்ளவில்லை. ஆனால், வாழ்க்கை தன் கசப்பான பாடத்தை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தது.

∴ ∴ ∴




ஒரே கலகலப்பாக இருந்தது.

பரணீதரனின் வகுப்பில் இருந்து முப்பது பேருக்கு மேல் கிளம்பியிருந்தார்கள்.

'பாட்டுக்குப் பாட்டு, டான்ஸ் என்று கும்மாளமிடுகின்ற நண்பர்களை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான் பரணீதரன்.



'பரணீ, நீங்க டான்ஸ் ஆட மாட்டீங்களா?' என்றாள் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த பவித்ரா.

'நாங்கள்ளாம் கூட்டத்துல ஆட மாட்டோம். இவங்கள்ளாம் ஓயட்டும்.. அப்புறம் பார்.. நம்ம ஆட்டத்தை..' என்றான் பரணீதரன்.

சொன்னது போலவே பிக்னிக் ஸ்பாட்டுக்குப் போனவுடன் ஆடிக் காட்டினான். நிஜமாகவே பெண்கள் வாயைப் பிளந்தார்கள்.

'பரணீ, நீ பேசாம சினி ஃபீல்டுக்கு டிரை பண்ணலாம்..' என்றான் ரமேஷ்.

'பரணீதரன் பதில் பேசவில்லை. சிரித்துக் கொண்டான்.

'பிற்பகல் வரை எல்லாரும் பவானி ஆற்றில் ஆட்டம் போட்டார்கள். பிறகு கொண்டு வந்த உணவைப் பகிர்ந்து கொண்டார்கள். பிறகு கொஞ்ச நேரம் ஓய்வு என்று விரிப்புக்களை விரித்து விட்டுப் படுத்துக் கொண்டார்கள்.

அந்த நேரம்!

பவித்ரா மெதுவாக அவனருகில் வந்து அமர்ந்தாள். அவன் இயல்பாகத் திரும்பி அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

'என்ன பவித்ரா?' என்றான்.

'சும்மாதான்!' என்றாள்.

கொஞ்ச நேரம் அமைதியாய் அமர்ந்திருந்தார்கள். அவள் மெதுவாக,

'ஏன்.. பரணீ? உங்களுக்கு எந்த ஹீரோ.. ரொம்பப் பிடிக்கும்?' என்றாள். அவன் மீண்டும் புன்னகைத்தான்.

'எல்லாரையும் பிடிக்கும்.. ரொம்பங்கறதெல்லாம்.. இல்லை..!' என்றான்.

'யாருக்கும்.. ஃபேன்.. அப்படின்னெல்லாம்.. கிடையாதா?'

'ஃபேன்னா? ரசிகர் மன்றம்.. அப்படி.. இப்படியா..?' என்றான்.

'ம்..!'

'அப்படியெல்லாம்.. யார் பின்னாடியும் போற ஐடியா இல்லை?' என்றான். பிறகு தொடர்ந்து.

'ஆனா, நம்ம ரேன்ஜ் வேற மாதிரி.. ஒரு சில பேருக்கு.. நான்.. ரொம்ப ஃபேன்..' என்றான்.

'யாரு?' என்றாள்.

நெப்போலியன், ஆபிரஹாம் லிங்கன்.. முகம்மட் அலி.. அப்துல்கலாம்..' என்று அவன் அடுக்க.. அவள் சிரித்தாள்.

'வித்தியாசமாப் பேசறீங்க..!' என்றாள் பவித்ரா.

'நியாயமாத்தான் பேசறேன்..' என்றான்.

'பவித்ரா.. எங்கண்ணிதான் அடிக்கடி சொல்வாங்க.. தம்பி.. வாழ்க்கையை ஒழுங்கா வாழற ஒவ்வொருத்தரும்.. ஹீரோதான்.. நீயே.. பெரிய ஹீரோ! நீ எதுக்கு அவங்க பின்னாடி போகணும்? நடிக்கறது அவங்க தொழில்.. செய்யறாங்க.. சினிமா ஒரு பொழுதுபோக்கு.. அதை ரசிக்கலாம்.. ஆனா.. நிதர்சனம்.. வேற.. அப்படீம்பாங்க..!' என்றான்.

பவித்ரா ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

'ரொம்பக் கவலைப்படாதே... பவித்ரா.. எனக்குப் பிடிச்ச.. ஹீரோ யாருன்னு.. உனக்கு மட்டும் சொல்றேன்.. யார் கிட்டயும் சொல்லாதே..' என்றான், ரகசியம்.. பேசும் பாவனையில்.

'பவித்ரா ஆர்வமானாள்.

'எனக்குப் பிடிச்ச.. ஹீரோ.. ஹீரோ..' என்று இழுத்தான்.

அவள் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தாள்.

'நான்தான்..!' என்றான். வெடிச்சிரிப்புச் சிரித்தான்.



பவித்ராவும் புன்னகைத்தாள். பிறகு மெல்லிய குரலில் சொன்னாள்.

'நிஜம்மாவே நீங்க செகண்ட் இயர்ல வந்து சேர்ந்ததுக்கப்புறம்.. இந்த ஹோல் இயரும்.. நாங்க.. உங்களை ஹீரோவாகத்தான் நினைக்கறோம். உங்களுக்குப் புரியலே..' என்றாள்.

அவன் மறுபடியும் கிண்டலாகச் சிரித்தான். 'ஹேய்.. சும்மா.. காலை.. வாராதே' என்றான்.

'இல்ல.. பரணி, நிஜம்மா.. நிறைய பெண்களுக்கு உங்களைப் பிடிச்சிருக்கு.. தெரியுமா?' என்றாள். எனக்கும் கூட என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவன் மறுபடியும் சிரித்தான்.

சற்றுக் கழித்து சிரிப்பை நிறுத்தியவன் தீவிரமான குரலில் சொன்னான்.

'பவித்ரா.. இப்பல்லாம்.. சினிமாக்களைப் பாத்துட்டு.. காலேஜ்ன்னாலே.. காதல்ன்னு ஒரு கனவு காண ஆரம்பிச்சட்டாங்க.. ஃபிஸிகல் அட்ராக்ஷன்ங்கறது இயற்கையான விஷயம்தான்.. ஆனா.. அதுக்கு.. இப்ப.. முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லே.. பாரேன்.. இப்ப.. எனக்கு இருபத்திரண்டு வயசு.. உனக்கு.. பத்தொன்பது வயசு.. நமக்கு வாழ்க்கையைப் பத்தி என்ன தெரியும்? சேச்சே.. ஐ டோண்ட் லைக் திஸ்.. திஸ் டைப் ஆஃப் அட்ராசிட்டீங்ஸ். வந்த வேலையைப் பாப்பம்டா.. சாமி..' என்றான்.

பவித்ரா.. அமைதியாகிவிட்டாள். மிகச் சாதாரணமாகத் தன் கருத்தைச் சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தான்.

'இப்பப் பார்.. நான் லாட்டரல் அட்மிஷன்ல வந்திருக்கேன். இரண்டு வருஷம் இடையில வேஸ்ட்டாப் போச்சு.. அதை ஈடுகட்டற மாதிரி நல்லாப் படிக்கணும் இதான்.. என்.. எய்ம்..' என்றான்.

'ரொம்ப இடியலப்பா..' என்றாள் பவித்ரா.

'இல்லையே. பவித்ரா அதுக்காக.. நான் ஒண்ணும் சாமியாரா.. இல்லையே!' என்றான்.

'நீங்க.. வேற.. இப்ப.. ஒரு சில சாமியார்ங்கதான் பயமுறுத்தறாங்க. அதுக்கு காலேஜ்.. ஸ்டுடன்ட்ஸ்ஸயே நம்பலாம்.. போலிருக்கு..' என்றாள் பவித்ரா.

இருவரும் சிரித்தார்கள்.

'நான்.. ஒரு கடி ஜோக் சொல்றேன்.. கேக்கறியா?' என்று ஆரம்பித்தான்.

பவித்ரா ஆர்வமானாள்.

ஞாயிற்றுக்கிழமைகள்ல கிடைக்காத பால்.. எது?'

'ம்.. பாக்கெட்.. பால்?'

'ம்ஹூம்.. தபால்..!' என்றான் அவள் சிரித்தாள்.

'சில்லி!' என்றாள்.

'அதுக்குப் பேருதான் கடி ஜோக்!'

சற்று நேரத்தில் அவர்களைச் சுற்றியும் ஒரு கூட்டம் சேர்ந்தது.

ஆளாளுக்குக் கடி ஜோக் சொல்ல ஒரே கலகலப்பாகியது.

பிறகு எல்லாரும் எழுந்து வண்டி நோக்கிச் செல்கையில் பவித்ராவும் அவனும் கடைசியாகப் போனார்கள்.

பரணீதரன் முணுமுணுப்பாகச் சொன்னான்.

'ஹீரோ.. ஆகணும்னு சொன்னியே! கொஞ்ச நேரத்துல கூட்டம் சேத்துட்டேன்... பாத்தியா..' கூட்டம் சேக்கறது ஒண்ணும் கஷ்டமான விஷயமில்லே' என்றான்.

'ம்..!' என்றாள் பவித்ரா. சிந்தனையுடன்.

∴ ∴ ∴



அன்று அவர்கள் வீட்டில் வைத்து சீட்டு ஏலம் நடக்கிற நாள்.

தமிழ்ச்செல்வி ஒரு பத்துப் பதினைந்து பேருக்கு எளிமையாக உளுந்து வடையும் காஃபியும் தயார் செய்தாள்.

பரணீதரனை உதவிக்கு வைத்துக் கொண்டான் சோமநாதன்.

பதினான்காம் சீட்டு!

இன்னமும் கூட அதிகத் தள்ளுபடியில் சீட்டுக்கள் ஏலம் போய்க் கொண்டிருந்தன.

கிட்டத்தட்ட நாற்பதாயிரம் தள்ளுபடி செய்து ஒருவர் ஏலம் எடுத்திருந்தார்.

'பரவாயில்லையே. உன்னோட குருப்ல சேர்ந்தது நல்லதாப் போச்சு' என்று ஒன்றிரண்டு பேர் சொல்லவும், சோமநாதன் ரொம்பவும் மகிழ்ந்து போனான்.

ஐம்பது சதவீதம் பேருக்கு மேல் அப்போதே பணம் கொடுத்து விட்டார்கள். சீட்டு ஏலம் எடுத்தவருக்கு அப்போதே பட்டுவாடா செய்தான்.

புரோ நோட்டில் கையெழுத்து வாங்கிக் கொண்டுதான் தொகையைக் கொடுத்தான். வெற்றுத் தாளிலும் கையெழுத்து வாங்கிக் கொண்டான்.

பிறகு சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒன்பது மணிக்கு மேல்தான் எல்லாரும் கலைந்தார்கள்.

அப்போது பரணீதரன் சகோதரனிடம் கேட்டான்.

'ஏண்ணா, கம்பெனிக்கு ஒரு சீட்டு அலாட் செஞ்சிருப் பேயில்லே.. அதை என்ன செஞ்சே? அவசரத்துக்கு இருப்பு வச்சிருக்கியா?' என்றான்.

சோமநாதன் புன்னகைத்தான்.

'அது' நான் முடிவு.. எடுத்தாச்சு.. மாத்தறதுக்கில்லே..!' என்றான்.

'சரிண்ணா! உன் இஷ்டம்'

'பரணீதரன் முக வாட்டத்துடன் எழுந்தான்.

சோமநாதன் மனமும் இளகியது. தனக்காக.. தன்னுடைய நன்மைக்காகத்தானே சொல்கிறான்.. என்ற எண்ணமும் தோன்றியது.

'அதுக்குப் பதிலா.. வேற ஏதாவது.. சொல்லு..?' என்றான்.

பரணீதரன் நின்றான். திரும்பி அண்ணனைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

'நான் என்ன சொன்னாலும் கேப்பியா?'

'ம்..!'

'அப்ப.. இந்த வீட்டையும், சுத்தி இருக்கற இடத்தையும்.. அண்ணி பேருக்கு மாத்தி எழுதிடு..' என்றான்.

சோமநாதன் இதை எதிர்பார்க்கவில்லை திகைத்துத்தான் போனான்.

பரணீதரன் வெளியே போய்விட்டான்.

மிகவும் கோபம் வருகிற நேரத்தில் வீட்டிலேயே கடுமையான உடற்பயிற்சி செய்வான். அல்லது.. வேகமாக நடப்பதற்கென்று போய்விடுவான். அன்றைக்கும் அப்படித்தான்.'

வெகு நேரம் நடந்துவிட்டு வந்தான். அண்ணி உறங்காமல் அமர்ந்திருந்தாள்.

இராமலிங்க வள்ளலாருடைய வரலாற்றைப் படித்திருக்கிறான் பரணீதரன். அதிலே வருகிற அவருடைய அண்ணி, அவர் மேல் உயிராய் இருப்பார். அது மாதிரித் தன்மேல் அன்பையெல்லாம் கொட்டி வளர்த்த அண்ணி.



பரணீதரன் உள்ளே வந்தவுடன் 'அண்ணி பரபரவென்று எழுந்து வந்தாள்.

'என்ன.. தம்பி.. சாப்பிடாமப் போயிட்டே?' என்று அங்கலாய்த்தாள்.

'அவன் வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

'சும்மாதான்.. அண்ணி, கொஞ்சம் நடந்துட்டு வந்தாத் தேவலை.. போல இருந்தது..' என்றான்.

சற்று நேரம் தன் அறையில் ஓய்வெடுப்பதற்குள்ளாக அண்ணி பலமுறை அழைத்து விட்டார். மறுக்க இயலாமல் போய் சாப்பிட அமர்ந்தான்.

அதே நேரம் பரணீதரனின் எதிரில் வந்து அமர்ந்தான் சோமநாதன்.

'பரணீ.. நான் உயிரோட இருக்கறவரைக்கும்.. நீ.. ஏன்டா.. கவலைப்படறே?'

'அண்ணா.. நான் சொல்றதைப் புரிஞ்சுக்குங்க.. நமக்கு வாழ்க்கை அமைதியாய்ப் போயிட்டிருக்கு.. பேராசை.. எதுக்குண்ணா?

'பேராசையில்லடா..! முயற்சி செய்யறேன். ஒத்து வர்லைன்னா.. விட்டர்றேன்!'

'எப்படிண்ணா.. விட முடியும்? இதுவரைக்கும் பணம் கட்டினவங்களுக்குப் பணத்தைப் பட்டுவாடா செய்யணுமில்லே! எப்படி நடுவிலே விடமுடியும்.'

'அது அப்படித்தான்..!' சோமநாதன் ஒத்துக் கொண்டான்.

'இன்னும்.. ரெண்டே.. வருஷம்.. பாரு.. நிலத்தோட.. விலை உயர்ந்துரும்..' என்றான்.

'உயர்ந்தாச் சரி.. ஆப்போசிட்டா.. ஆயிட்டா.. என்ன செய்யறது?'

'அப்படியெல்லாம்.. ஆகாது?'

'அண்ணா.. என்னோட கவலை உனக்குப் புரியலயா? இருபத்தைஞ்சு.. பேர்.. இருபத்தைஞ்சு லட்சம்.. விளையாட்டில்லை?'' என்றான்.

சோமநாதன் ஒன்றும் பேசவில்லை.

வெறும் அஞ்சாயிரம் ரூபாய் கமிஷனுக்காக ஒவ்வொரு மாசமும்.. நீ கலெக்ட் செஞ்சாகணும்.. அது மட்டுமில்ல.. சட்ட ரீதியாவும்.. நீ போக முடியாது? ஏன்னா? நீ ரெஜிஸ்டர்.. செய்யாமே.. ஏலச்சீட்டு நடத்தறே..' என்றான்.

தமிழ்ச்செல்வி கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இப்ப.. என்னடா.. செய்யணுங்கிறே?'

'நான்.. சொன்னதுதான்.. பிராப்பர்ட்டியை அண்ணி பேருக்கு.. எழுது..' என்றான் அதே பிடியாய்.

'இவ்வளவுதானே..? செஞ்சர்றேன்.. விடு..!' என்றான் சோமநாதன்.

அதற்குப் பிறகுதான் சமாதானமானான் பரணீதரன்.

அன்றிரவு!

தமிழ்ச்செல்வி தன் கணவனிடம் மெதுவாகச் சொன்னாள்.

'ஏங்க.. தம்பி.. இவ்வளவு கோபமாய் பேசி நான் பார்த்ததில்லே!' என்று.

'அவன் பிராக்டிகலாப் பேசறான். நா பாசிடிவ்வா.. யோசிக்கறேன்..' என்றான் சோமநாதன்.



'என் பேருக்கு.. வேண்டாங்க..!' என்றாள் தமிழ்செல்வி.

'இதென்னடா.. வம்பாப் போச்சு!' என்று சிரித்த சோமநாதன்,

'சரி.. விடு.. உனக்கும், தம்பிக்கும் சரி பங்கு..ன்னு.. எழுதி வச்சர்றேன்..' என்றான்.

'அப்போது சோமநாதனுக்குத் தெரியவில்லை. தா விளையாட்டாகச் செய்கிற காரியங்கள் எல்லாம் எவ்வள சிக்கலில் கொண்டுபோய் விடப் போகின்றன என்று.

∴ ∴ ∴




'அப்பாடா! ஒரு வழியாய் முதல் சீட்டு முடிச்சுட்டேன்..' என்று வந்து டைனிங் டேபிளில் தம்பிக்கு எதிரே அமர்ந்தான் சோமநாதன்.

பரணீதரன் புன்னகைத்தான்.

பத்து மாதங்களுக்கு முன்பு அண்ணனுக்கும் அவனுக்கும் நடந்த வாக்கு வாதத்திற்குப் பிறகு அ சகோதரனிடம் எதுவும் விவாதம் வைத்துக் கொள்ளவில்லை.

இரண்டு சீட்டுக்களிலும் வசூல் ஒழுங்காகத்தான் போ கொண்டிருந்தது.

பண ஓட்டம் கையில் இருந்தது. அதனால் சோமந துணிந்து வீட்டுக்கு முன்னாலே இருந்த இடத்தில் நான்கு கடை கட்டிவிட்டான். அதில் ஒன்றைத் தனது அலுவலகம் வைத்துக் கொண்டான்.

'கட்டிடங்களுக்கு வரைபடம் போட்டுக் கொடுக்கப்படும்' ஒரு போர்டை மாட்டிக் கொண்டு பரணீதரன் அங்கே ம நேரங்களில் வேலை செய்தான். அதில் கிடைக்கிற தொ

ஒரு பங்கை அண்ணியிடம் வீட்டு செலவுக்குக் கொடுத்து விடுவான். இப்போது மூன்றாமாண்டில் இருந்தான்.

அண்ணனை ரொம்பவும் பயமுறுத்திவிட்டோம் போலிருக்கிறது என்று கூட நினைக்க ஆரம்பித்தான்.

அண்ணன் போடுகிற திட்டமெல்லாம் இதே போல இடையூறின்றி நடந்தால் இடம் இலாபகரமாகக் கூடப் போகக்கூடும் என்று தோன்றியது.

அதனால் இப்போதெல்லாம் வாக்குவாதங்கள் நிகழ்வதில்லை.

வழக்கம் போல அன்றைக்கு வந்த மான்விழியை வம்புக்கு இழுத்தார்கள்.

'அண்ணி, உங்க தங்கை வராப்ல.. வழக்கம் போல காஃபி பொடி கடன் கேக்க வந்தாச்சு..' என்று வம்பிழுக்க.

'ஆமா.. நேத்து எங்க வீட்டுக்கு வந்து இவ்வளவு பெரிய டம்ளரிலே! 'என்று முழங்கை வரைக்கும் விரல்களைக் காட்டினாள் மான்விழி காஃபி குடிச்சீங்களே? அதுக்கு ஈடா காஃபி பொடி வாங்க வந்தேன்..!' என்றாள் மான்விழி.

'மான்விழி சித்தி பொய் சொல்லாதே! எங்க சித்தா.. காஃபியே குடிக்க மாட்டாங்க!'' என்றான் விக்னேஷ். சித்தப்பா என்பதைக் குழந்தைகள் சித்தா என்றும் குறிப்பிடுவார்கள்.

'அப்ப! உங்க சித்தா.. மட்டும் பொய் சொல்லலாமா? நான் என்ன காஃபி பொடி கடன் வாங்கவா.. வந்தேன்..?' என்று அழகு காட்டினாள் மான்விழி.

'வேண்டாம்.. சளுக்கிக்கப் போகுது. அப்புறம்.. மாப்பிளை தேடறதுக்கு எங்கண்ணன் இல்லே.. கஷ்டப்படணும்?' என்றான் பரணீதரன்.



உங்களுக்கே.. ஒரு பொண்ணு கிடைக்கிறப்ப எனக்கு ஒரு மாப்பிளை கிடைக்காமயா.. போயிடும்..?' என்று அவள் திரும்பப் பதில் சொன்னாள்.

இந்த பொய்ச் சண்டையை சோமநாதனும், தமிழ்ச்செல்வியும் கண்டு கொள்ளாதவர்கள் போல் ரசித்துக் கொள்வார்கள்.

'இந்தாங்க.. சாக்லேட்.. நானே வீட்ல செஞ்சேன்..' என்று ஒரு வட்ட வடிவ டிஃபன் பாக்ஸை டொக்கென்று வைத்தாள் மான்விழி.

'ஹை.. ஹோம் மேட்.. சாக்லேட்..!' என்று பரணீதரன் ஆசையாகப் பாய்ந்து டிஃபன் டப்பாவைத் திறந்தான்.

'சே..! சித்தப்பா.. உனக்கு வெட்கமே.. இல்லையா. இத்தனை நேரம் சித்திகிட்டே சண்டை போட்டுட்டு.. இப்ப மட்டும்.. இந்தப் பாய்ச்சல் பாயறியே!' என்றாள் வினிதா.

'ஐயோடா.. கண்ணு' சாப்படற விஷயத்துல ரோஷம் பார்த்தா வேலையாகாதுடா.. ராஜா..!' என்று சிரித்தான் பரணீதரன்.

'வாயில் போட்டுப் பார்த்தான். 'நிஜம்மாவே.. நல்லா இருக்கு..!' என்றான் குழறலாக.

'அப்ப.. சரி.. இந்தாங்க.. இன்னொரு டப்பா..!' என்று கூடையி இருந்து இன்னொரு டப்பாவை எடுத்து வைத்தாள்.

'ஹே..!' என்று குழந்தைகளோடு ஒன்றாக அவன் குதிப்பதை பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டான் சோமநாதன்.

யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை.

'எப்படிடி.. புதுசா.. புதுசா.. ஏதாவது செய்யறே?' என்ற தமிழ்ச்செல்வி.

'அக்கா..ரெஸிபி ஒருத்தர் சொன்னாங்க.. ரொ ஈஸிதாங்க்கா..' என்றாள்.

'கொஞ்சம் உருளைக்கிழங்கை சீவி கொஞ்சமா தண்ணீர் விட்டு வேகவச்சு.. எடுத்து வச்சுக்கணும்.. அப்புறம்.. கெட்டியான பாத்திரம் வச்சு.. ஒரு டம்ளர் பாலை ஊத்தி சுட வச்சு.. ஒரு ஸ்பூன் தயிர் விடணும்.. மூணு டீஸ்பூன்.. கோகோ.. இல்லேன்னா போர்ன் விட்டா.. நியூட்ராமுல்.. இப்படி ஏதாவது அதிலே போட்டு கிளறணும். மறந்துட்டேனே சக்கரையும் போடணும். ஓரளவு கெட்டிப் பதம் வந்தவுடனே வேக வச்சிருக்கிற உருளைக்கிழங்குத் துவலைக் கொட்டி நெய் விட்டு ஒட்டாம வர்றப்ப.. இறக்கணும்..' என்றாள்.

தமிழ்ச்செல்வியும் மான்விழியும் சுவாரசியமாக ரெஸிபியைப் பகிர்ந்து கொண்டு திரும்பினால் ஒரு டிஃபன் பாக்ஸ் காலியாகி இருந்தது.

இன்னொன்று கண்ணுக்கே படவில்லை. விளையாட்டு வித்தைகள் செய்தாலும், பரணீதரன் குழந்தைகளுக்கே அதிகமாகக் கொடுப்பதைப் பார்த்துத் தமிழ்ச்செல்வி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

பொறுப்பானவன். எப்போதும் விளையாட்டாக இருக்கிற மாதிரித் தெரியும். ஆனால், அவசியம் என்று வரும்போது அண்ணனுக்கே கடிவாளம் போட்டுவிடுவான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

மான்விழி சிறிது நேரம் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாள். குழந்தைகள் உறங்கப் போனார்கள். தன் அறையிலிருந்து வந்த பரணீதரன்,

'மானு! நெஜம்மாவே சாக்லேட்.. சூப்பர்! எப்படியோ.. நாளைக்குக் கல்யாணமாகிப் போனாலும்.. கைவசம் தொழில் இருக்கு..' என்றான் குறும்பாக.

'அதெல்லாம்.. அவ்வளவு சீக்கிரம் என்னை அனுப்பிர முடியாது சின்னத்தான்.. உங்களுக்கு ஒருத்தி வந்து.. அவகிட்டே



நீங்க தோப்புக் கரணம் போடறதை ஆசை தீரப் பாத்துட்டு.. அப்புறம்தான் நான் போவேன்.. அதனால.. என்னைப் பேக் பண்ணி அனுப்பற ஐடியாவை விட்டுட்டு.. நீங்க படிக்கற வழியைப் பாருங்க..' என்று அழகு காட்டிவிட்டுப் போனாள்.

பரணீதரன் சிரித்தான்.

∴ ∴ ∴

அன்றிரவு.

கணவனிடம் தமிழ்செல்வி கேட்டாள் 'ஏங்க.. இந்தப் பரணியும், மான்விழியும் எப்பப் பாரு.. சீண்டிக்கறாங்களே. இதுக்கு வேற ஏதாவது அர்த்தம் இருக்குமோ.?' என்றாள்.

சோமநாதன் புன்னகைத்தான்.

'இப்படி சீண்டிக்கறதையெல்லாம் வச்சு.. ஒண்ணும் சொல்ல முடியாது.. இந்த வினிதாவும்.. விக்னேஷும்.. எப்படி மட்டம் தட்டிக்கறாங்கன்னு ஒரு நாளைக்கு அவங்களுக்குத் தெரியாமக் கேட்டுப் பாரு..! இந்தப் பேச்சு வார்த்தைகளை வச்சு.. ஒரு முடிவுக்கும் வர முடியாது.. நாமளா எதுவும்.. சஜஸ்ட் பண்ண வேண்டாம். அவங்களா.. எதுவும் முடிவுக்கு வந்தா.. வரட்டும்! ரெண்டு பேரும் படிப்பை முடிக்கட்டும்..' என்றான்.

தமிழ்ச்செல்வி ஒத்துக் கொண்டாள்.

'ஆமாங்க.. நாமளே சீண்டிவிட்ட மாதிரி ஆயிரக் கூடாது இல்லே!' என்றாள்.

பிறகு மெதுவாக 'தம்பி சொல்ற மாதிரி.. யோசிங்களேன் எதுக்குங்க.. ஓவர் ஸ்ட்ரெயின் செஞ்சுக்கறீங்க?' என்றாள்.

'ஏய்.. நீயும் என்ன அவன் பேசற மாதிரியே பேசறே. இங்க பாரு. எல்லா மனுஷனுக்கும் ரெண்டு பாதை இருக்கு. ஒண்ணு எப்பவும் சராசரியா இருந்துட்டுப் போய்ச் சேர்றது

இன்னொண்ணு ரிஸ்க் எடுக்கறது. ரிஸ்க் எடுக்கும் போது பலனும் அதிகமா இருக்கும்' என்றான்.

'அது சரிதாங்க..! ரிஸ்க்.. நாம தாங்கக்கூடிய அளவில் இருக்கணுமில்லே!' என்றாள் தயங்கியபடி..

'அது நம்ம மனசைப் பொறுத்தது' என்றான்.

அவன் குரலில் தெரிந்த தீர்மானத்தை வைத்து தமிழ்ச்செல்வி ஒன்றும் பேசுவதற்கு வழியற்றவளாகப் போனாள்.

அன்றைக்கு ஒரு முடிவு செய்து கொண்டாள் தமிழ்ச்செல்வி. அடுத்த நாளிலிருந்து அதைச் செயல்படுத்த ஆரம்பித்தாள்.

∴ ∴ ∴

ஆறு மாதங்கள் போயிருக்கும்!

சோமநாதன் ஒன்றிரண்டு. நாட்கள் யோசனையாகவே இருந்தான்.

தமிழ்ச்செல்வி கேட்பதற்கும் தயங்கினாள். அன்றைக்கு!

மான்விழியும், அவள் அம்மாவும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போகிறேன் என்று போயிருந்தார்கள்.

சோமநாதனும், தமிழ்ச்செல்வியும் மட்டும் இருந்தார்கள்.

'தமிழு!' என்று வந்தான் சோமநாதன். 'என்னங்க!? என்றாள்.

'ரெண்டு மாசமா அந்தக் கண்ணப்பன் வட்டி சரியாக குடுக்க மாட்டேங்கறான்..' என்றான்.

'ஓ!..' என்றாள்.

'ரொம்பக் கவலைப்படாதே! குடுக்கறான். ஆனா, லேட்டாக் குடுக்கறான்.. அதுதான் ஒண்ணும் புரியலே!' என்றான்.

'எங்க.. ஏதாவது எழுதி வாங்கியிருக்கீங்களா?'



'ம்.. ஹூம்..! எல்லாம் நம்பிக்கையின் பேர்லதான் நடக்குது' என்றான்.

'வேண்டாங்க! நம்பிக்கை வேற. குடுக்கல் வாங்கல் வேற.. எதுக்கும் ஏதாவது பாதுகாப்புப் பண்ணிக்குங்க..!' என்றாள் தமிழ்ச்செல்வி.

முதன்முறையாக சோமநாதன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

'ஆமா.. நீ சொல்றதும் கரெக்ட்தான்..' என்றான் குரலை இறக்கி.

அடுத்த நாளே தம்பியையும், நகரின் முக்கியப் பிரமுகர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு போய் பிராமிசரி நோட்டில் கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்தான்.

திரும்ப வரும்போது அண்ணனும், தம்பியும் ஹோட்டலுக்குப் போனார்கள்.

'எப்படிண்ணா போயிட்டிருக்கு?' என்றான் பரணீதரன். பல நாட்களுக்குப் பிறகு விசாரித்தான்.

'இதுவரைக்கும் நல்லாப் போயிட்டிருக்கு.. இதே மாதிரிப் போனா.. ரெண்டு சீட்டையும், முடிச்சுட்டு ரெண்டு குருப்ல இருந்தும் பிராம்ப்ட்டா குடக்கறவங்களை செலக்ட் செஞ்சு ஒரு குருப் மட்டும் ரெகுலரா நடத்தலாம்..' என்றான் சோமநாதன்.

'ம்..!' என்றான் பரணீதரன் ரவா ரோஸ்டை வாயில் அடைத்தபடி.

'மாசா மாசம் கமிஷன் அமௌன்ட்டை உங்க அண்ணி கிட்டே வீட்டு செலவுக்குக் குடுத்தர்றேன்.. அதனால கொஞ்சம் ஃப்ரீயா இருக்கு..' என்றான் மறுபடியும்.

'ம்..!'

'நீ என்ஜினியரிங் முடிச்சவுடனே ஒரு திட்டம் வச்சிருக்கேன்..!'

'ம்..!'

'இரண்டு ஏக்கர் இடத்துலயும் சைட் வாரியாப் பிரிச்சு.. வீடு கட்டி விக்கணும்னு ஒரு எண்ணம்'

'செய்யலாம்ண்ணா, நிலைமையைப் பார்த்து பொறுமையாய்ச் செய்யலாம். அதுக்குள்ள அங்கயும் நிலத்துக்கெல்லாம் விலை ஏறட்டும்..' என்றான்.

வீட்டுக்கு வந்ததற்குப் பின்பும்'

சற்று நேரம் சீட்டு விளையாடினார்கள்!

விளையாட்டாய் இருந்தார்கள்!

விக்னேஷ் அப்பாவுக்குப் பின்னால் எதேச்சையாக நிற்பது போல் மண்டி போட்டு அமர்ந்து கொண்டு பரணீதரனுக்குக் கைகளால் சைகை காட்டி சீட்டுக்களைப் பற்றிய குறிப்புக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சோமநாதன் இதைக் கவனிக்கவில்லை.

வினிதா இதைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள். அந்த நேரம் அங்கே வந்த மான்விழி இதைக் கவனித்துவிட்டாள்.

'சோமநாதனுக்குப் பின்னால் நின்று கொண்டு விக்னேஷின் காதை இறுகப் பிடித்தாள்.

இதைப் பார்த்த பரணீதரன் கண்ணாலேயே 'காட்டிக் கொடுத்திராதே!' என்று கெஞ்சினான். விக்னேஷ் சிணுங்க வினிதா சிரித்தாள். இந்த கலாட்டாவில் சோமநாதன் திரும்பிப் பார்த்து என்னவென்று கேட்டான்.

'பெரியத்தான்! சின்னத்தான்.. உங்களை ஏமாத்தறாங்க.. அதுக்கு இவன் கூட்டு' என்று விக்னேஷின் தலையில் செல்லக் குட்டு வைத்தாள்.

'ஏண்டா! பெரியவன்.. நீ குழந்தைகளுக்குத் திருட்டுத் தனம் சொல்லித் தர்றியா..?' என்று தலையணையை எடுத்துக் கொண்டு சோமநாதன் துரத்த,



'ஐயோ! அண்ணி, காப்பாத்துங்க!' என்று அவன் அறையை விட்டு வெளியே ஓட குழந்தைகள் அதைப் பார்த்து சிரித்தார்கள்.

மான்விழியே கூட சிரித்துவிட்டாள்.

'பெரியத்தான்! போனாப் போகுது விட்டுடுங்க!' என்றாள் மான்விழி.

'என்னவோ.. நீ சொல்றயேன்னு விடறேன்.. இல்லாட்டி.. இவனை..' என்று மிரட்டுவது போல் நடித்துவிட்டுத் திரும்பவும் அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்தான் சோமநாதன்.

தமிழ்ச்செல்வியும் இதைப் பார்த்துச் சிரித்தபடி வந்தாள்.

'என்னக்கா! இப்படி கலாட்டா பண்றாங்க!' என்றாள் மான்விழி.

'ஆமா.. அண்ணனுக்கும், தம்பிக்கும் மூடு வந்தா.. வீட்டை ரெண்டு பண்ணிடுவாங்க..' என்றாள் சிரித்துக் கொண்டு.

அந்தக் கலகலப்பான நேரத்தில் அவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை. இரண்டே மாதத்தில் நிலைமை தலைகீழாக மாறப் போகிறது என்று.

∴ ∴ ∴




மூன்றாமாண்டின் கடைசி இரு மாதங்களில் பல்வேறு நிறுவனங்களில் இருந்து வந்து நேர்முகத் தேர்வுகள் நடத்தினார்கள்.

பரணீதரனின் பல்வேறு திறமைகளினால் கவரப்பட்ட ஒரு நிறுவனம் அவனுக்கு வேலைக்கு உத்தரவாதம் வழங்கிவிட்டது.

அன்று மாலை குடும்பமே மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிட்டது.

அப்போது கட்டுமானத் தொழிலும், ரியல் எஸ்டேட்டும் மிக உச்சமான வளர்ச்சியை எட்டியிருந்தது. நகைத் தொழிலில் அன்றைய பம்பாய்க்கு அடுத்தபடியாகத் தங்க மார்க்கெட் நிலவரத்தைக் கோயம்புத்தூர் கட்டுப்படுத்துகிற நிலைமையில் இருந்தது.

எல்லாமே சிறப்பாகப் போய்க் கொண்டிருந்தது. அந்த ஆண்டின் இறுதியில்..'

ஒன்றிரண்டு பேர் சீட்டுப் பணம் ஒழுங்காகக் கட்டாத நிலை வந்த போது கூட சோமநாதன் முன்பு எப்போதோ மிகவும் குறைவான விலைக்கு வாங்கியிருந்த சைட்டை ஓரளவு நல்ல விலைக்கே விற்று அந்தப் பிரச்சினையைச் சமாளித்துவிட்டான்.

'பொறுடா.. இன்னும் இரண்டே வருஷம். அந்த ரெண்டு மில்லுங்க கிட்டயும் நான் வாங்கிப் போட்டிருக்கிற நிலத்துக்கு என்ன மதிப்பு வரப் போகுது தெரியுமா?' என்று மகிழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

இன்னொரு நாள் சொன்னான். 'நான் ஒரு வெளிநாட்டுப் புத்தகத்தில் படிச்சிருக்கேன். ஓ.பி.எம் அதாவது அதர் பீப்பிள்ஸ் மனின்னு அதை வச்சு இன்வெஸ்ட் பண்றதுலயும் அதுல லாபம் ஈட்டறதுலயும்தான்டா.. கெட்டிக்காரத் தனமே இருக்கு..!' என்றான்.

'அண்ணா! போதும்.. ரொம்ப டம்பமடிச்சுக்காதீங்க.. ஓ.பி.எம்ங்கறது ரொம்பப் போயி பெருக்கேத்த மாதிரி போதை ஏத்திவிடப் போகுது. இதெல்லாம்.. கரணம் தப்பினா.. மரணம் மாதிரித்தான்' என்றான் பரணீதரன்.

தமிழ்ச்செல்வி கூடத் தனியாகக் கேட்டாள்.

'என் தம்பி! உங்க அண்ணனை எப்பவும் டிஸ்கரேஜ் பண்ணியே பேசறே?' என்று.

பரணீதரன் திரும்பி அண்ணியைப் பார்த்தான். வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.



'அண்ணி! எல்லாம் காரணமாத்தான்.. இப்ப வரைக்கும் அண்ணனோட ஸ்ட்ராட்டஜி நல்லாத்தான் போகுது. ஆனா, ரொம்பப் பாராட்டிட்டோம்னு வைங்க.. அகலக்கால் வச்சிடுவாரு.. அப்புறம்.. ரொம்பத் திண்டாட்டமாப் போயிடும்..' என்றான்.

தமிழ்ச்செல்விக்கும் அது சரியென்றே பட்டது.

'ஆமா.. தம்பி! ஏதோ படத்துல சிவாஜி கனவு கண்டு கண்டே எல்லாத்தையும் கோட்டை விடுவாரே. அது மாதிரி ஆயிடும்..' என்றாள்.

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள்.

∴ ∴ ∴

பவித்ரா ஏதோ சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பரணீதரன் அக்கறையாக அவளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தான்.

மணிமாறன் ஒருவிதமான பார்வையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி ஒரு மரத்தடியில் நின்றிருந்தான்.

எதேச்சையாகத் திரும்பிய பரணீதரன் மணிமாறனின் பார்வையைப் பார்த்து விட்டு ஒரு கணம் கண்களைச் சுருக்கினான். ஒரே கணம்தான். பிறகு திரும்பிக் கொண்டான்.

'தேங்ஸ்!' என்று பவித்ரா நகர்ந்ததற்குப் பிறகு பரணீதரன் மணிமாறனை நோக்கி வந்தான்.

மணிமாறன் பெரிய செல்வந்தர் வீட்டுப் பையன். என்ஜினியர் என்ற ஒரு தகுதி மட்டும் போதும் என்பதற்காக படிப்பதற்கு வந்தான். ஆனால், பணம் இருக்கிறது என்பதை ஒரு போதும் காட்டிக் கொள்ள மாட்டான்

பரணீதரனின் பொறுப்புணர்வு அவனுக்கு மிகவும் பிடித்தமான விஷயம். தானே தேர்ந்தெடுத்து அவனுடன் பழகினான்.

முதலில் பரணீதரனுக்குக் கூட ஒருவிதமான தயக்கம்தான். ஆனால், பழகத் துவங்கியபின் இருவருக்கும் ஒருவரை ஒருவர் வெகுவாகப் பிடித்துப் போயிற்று.

'என்னடா.. ஒரு விதமாய் பார்த்தே?' என்றான் பரணீதரன்.

'இல்லே! பவித்ராவுக்கு சந்தேகம் விளக்கறதே.. உனக்கு ஃபுல்டைம் வேலையாய்ப் போயிடும் போலிருக்கு..' என்றான்.

'இதில என்னடா.. இருக்கு?' என்றான் பரணீதரன்.

'ஒன்னும் இல்லாம இருந்தா சரி..'

பரணீதரனின் முகம் தீவிரமானது.

'என்ன.. உனக்கு.. சந்தேகம்?'

'எனக்கொன்னும் சந்தேகம் இல்லே' அம்மிணிக்குத்தான்.. ஏதோ.. அட்ராக்ஷன் மாதிரித் தெரியுது..' என்றான் மணிமாறன்.

'ஐயய்யோ! அது ஆபத்தாச்சே!' என்றான் பரணீதரன்.

'ஏண்டா! நல்லா.. அழகா.. இருக்கா.. வசதியான வீட்டுப் பொன்னு வேறே!' என்றான் மணிமாறன்.

பரணீதரன் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. பிறகு சொன்னான்.

'மணி! என் லைஃப்ல ஒரு விஷயத்துல மட்டும்.. நான் உறுதியா.. இருக்கேன்.. என்ன தெரியுமா? என்னைப் பெத்தவங்க.. இருந்திருந்தாக் கூட இப்படி வளர்த்திருக்க மாட்டாங்க.. அப்படி உயிரையே.. கொட்டி வளர்த்தவங்க.. என் அண்ணனும்.. அண்ணியும்.. அவங்கதான்.. என்.. வாழ்க்கையைத் தீர்மானிக்கனும்..' என்றான்.



'பவித்ரா.. பாவம்டா..' என்றான் மணிமாறன்.

'இல்லடா.. நான்.. ஏற்கெனவே.. இந்த விஷயத்தைக் கிளியரா.. பவித்ராகிட்டே சொல்லியிருக்கேன்.. அதுவுமில்லாம.. அவங்க ஸ்டேட்டஸ்.. வேற.. நம்ம ஸ்டேட்டஸ்.. வேற. சுத்தமா.. சரி வராது.. இப்ப.. நீ அப்ளிகேஷன்.. போட்டீன்னா.. அதுல ஒரு நியாயம்.. இருக்கு..!'

'அப்ப.. சரி!' என்று சிரித்தான் மணிமாறன். பரணீதரன் உற்சாகமாக..' நான் வேண்ணா.. பவித்ராகிட்டே.. பேசவா..?' என்றான்.

இந்த விஷயமெல்லாம் ரெகமன்ட் பண்ணி சரி வராதுடா.. நானே.. பாத்துக்கறேன்' என்றான் மணிமாறன்.

'அப்ப.. ஏதோ.. விஷயம்.. இருக்கு!' என்று பரணீதரன் கேலி செய்ய..

'இப்போதைக்கு.. இல்லே!' என்று மழுப்பிவிட்டு நகர்ந்த நண்பனை சிந்தனையுடன் பார்த்தான். பரணீதரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

∴ ∴ ∴

ஐயய்யோ, அண்ணி ஓடியாங்க! என்று பரணீதரன் குரல் கேட்டு தமிழ்ச்செல்வி அவசரமாக சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.

பரணீதரன் டைனிங்டேபிளில் அமர்ந்திருக்க, குழந்தைகள் இருவரும் பரணீதரனின் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள்.

'என்ன.. தம்பி!' என்றாள் தமிழ்ச்செல்வி.

மான்விழி பரிமாறிக் கொண்டிருந்தாள்.

பரணீதரன் சற்றே கோபமானவன் போல் எழுந்து நின்றான்.

'குழம்பு யார் வச்சா?' என்றான்.

மான்விழி திகைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஏன்! மான்விழிதான் வெச்சா?'

'இல்லே! இப்படிக் குழம்பு வச்சு.. வாயைக் கெடுத்தா.. என்ன செய்ய?'

மான்விழியின் கண்களில் கலவரம் தோன்றியது. கண்கள் கலங்கின.

தமிழ்ச்செல்வி பாவமாக அவனைப் பார்த்தாள்.

'ஏன்.. தம்பி..?' என்றாள் புரியாமல்.

'இல்லே! உங்க சிஸ்டர் வந்து இப்படிக் குழம்பு வக்கிறேன் பேர்வழின்னு.. இப்படி டேஸ்ட்டா செஞ்சு பழக்கினா.. நாளைக்கு மானு கல்யாணமாகிப் போனா.. நாங்கள்ளாம்.. என்ன பண்றதாம்?' என்றான் அதே பாவம் குறையாமல்.

தமிழ்ச்செல்வியின் கண்களில் சிரிப்புத் தோன்றி மெதுவாக முகம் முழுக்கப் பரவியது.

கிட்டத்தட்ட அழுதுவிடுபவள் போல் நின்று கொண்டிருந்த மான்விழியின் முகத்திலும் அழுகை சிரிப்பாக மாறியது.

'சே! போ.. தம்பி.. இப்படிப் பயமுறுத்திட்டியே?' என்றாள் தமிழ்ச்செல்வி.

வினிதாவும், விக்னேஷும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

'ஐயோ! என்ன.. ஆக்ஷன்.. சித்தப்பா..' என்று வினிதா சிரிக்க, பரணீதரனும் வெடிச்சிரிப்பு சிரித்தான்.

ஒரு கணம் கழித்து 'ஐயய்யோ! எதுக்கு ஆ.. ஊன்னா.. கண்ல தண்ணி விடறது.. நான் என்ன கேட்டேன்? இதென்ன.. குழம்பா.. இல்லே.. தேவாமிர்தமான்னு கேட்டேன்' என்றான் மறுபடியும்.



'போசாதீங்க.. சின்னத்தான்..!' என்று மான்விழி கடுப்பாகவும்...

'சரி.. பேசலே!' இன்னும் ரெண்டு கரண்டி குழம்பை.. ஊத்து..! ஒரு வெட்டு வெட்டுவோம்' என்று சாப்பாட்டுடன் சண்டைக்குத் தயாராக தமிழ்ச்செல்வி சமையலறைக்குள் போனாள்.

'சின்னத்தான்' ஆனாலும் ரொம்பத்தான் வம்பு பேசறீங்க..! ஒரு நிமிஷம் பயந்தே போனேன்' என்று மான்விழி முணுமுணுத்தாள்.

பரணீதரன் சிரித்தான்.

'ஆமா! இப்படியும் கொஞ்சம் இருந்தாத்தானே.. சுவாரசியமா.. இருக்கும்..' என்றான்.

'அதென்ன..! இந்த வாரம் ஒண்ணும் பலகாரமே வர்லை?' என்றான் பரணீதரன் மறுபடியும்.

'எதுக்கு' சாப்பிட்டுட்டு இப்படி டீஸ்.. பண்றதக்கா?'

'ஏன்? நாங்க டீஸ்.. பண்ணாம வேற ரோட்ல.. போறவனா.. டீஸ் பண்ணுவான். அப்படி டீஸ்.. பண்ணினா.. விட்டுடுவோமா?' என்றான் பரணீதரன்.

'ஐயோ! உங்ககிட்டே பேச முடியாது' என்றாள் மான்விழி.

'ஏன்? உனக்கா பேசத் தெரியாது.. உங்க ஃபிரண்ட்ஸ்கிட்டே.. என்ன பேச்சுப் பேசறே.. ஃபோன்ல?'

'அதெல்லாம்..' எதுக்கு.. நீங்க கேட்கறீங்க? ஒட்டுக் கேட்கறீங்களா?

'நாங்க எதுக்கு ஒட்டுக் கேட்கறோம்! லவுட் ஸ்பீக்கர் வைக்காத குறையாத் தானே.. பேசறீங்க..?'

தமிழ்ச்செல்வி வெளியே வந்தவள்.

'போதும்.. தம்பி.. விடு.. சும்மா அவளை ஏன் சீண்டறே?'

'யாரு.. நானா.. சீண்டறேன்! மான்விழி மட்டும் ஒட்டுக் கேட்கறேன்னு சொல்லலாமா? ஃபோன் பேசறதை ஒட்டுக் கேட்டாங்கன்னு சொல்லியே அமெரிக்காவுல ஒரு பிரசிடென்ட்டையே காலி பண்ணியிருக்காங்க தெரியுமா! லேசுப்பட்ட குற்றச்சாட்டா அது? அப்படிக் குற்றச்சாட்டை வைக்கலாமா.. என் மேலே?'

'பின்னே? நீங்க.. உங்க ஃபிரண்ட்ஸ்கிட்டே.. அதான்.. பவித்ரா.. ரேகா.. கீதாகிட்டே' பேசறதையெல்லாம்.. நான் கேட்டனா?'

'ஏன்.. பவித்ரா கீதா மட்டும் சொல்றே? மணிமாறன்கிட்டே பேசறேன் இல்லே! ரகுராம்கிட்டே.. பேசறேன் இல்லே! அதையெல்லாம் சொல்ல மாட்டேங்கறே.. அப்ப.. நீதான் ஒட்டுக் கேட்கறே..'

'சித்தா.. அப்ப ஒன்னு செய்யலாம்..!' என்றாள் வினிதா.

'சொல்லு!' என்றான் பரணீதரன்.

இத்தனை நடக்கும் போதும்.. பரணீதரன் தனக்கு வேண்டியதை சைகையிலேயே கேட்டு வாங்கி சாப்பிடுவதை மட்டும் நிறுத்தவில்லை.

'சித்தி.. பேசினதுக்கும்.. நீ பேசினதுக்கும் சரியாப் போச்சுன்னு வச்சுக்கலாம்..'

'ம்.. வச்சுக்கலாம்' என்றான் கூட்டை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு பிறகு யோசிப்பவன் போல் நடித்து.

'சரி.. விஷயத்தை.. இதோட முடிக்கணும்னா இன்னொன்னு செய்யச் சொல்லு..'

'......!'

'அந்த டப்பா.. சாக்லேட்.. இல்லே! அது செஞ்சுட்டு வந்து குடுக்கச் சொல்லு..' என்றான்.



தமிழ்ச்செல்வியும், மான்விழியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். பரணீதரனும், குழந்தைகளும் சிரித்தார்கள்.

'ஐயோ! சின்னத்தான்.. உங்களுக்கு வரப்போறவ பாடு ரொம்பத் திண்டாட்டமதான்' என்றாள் மான்விழி சிரித்தபடி.

வாஷ்பேசினில் கைகழுவி விட்டுத் திரும்பிய பரணீதரன் அழகாகப் புன்னகைத்தான்.

'ஐயோ! உனக்கு விஷயமே புரியலே மான்விழி.. அங்கயெல்லாம் வம்பு பேசினா.. வேலையாகுமா? இம்மென்றால் தோப்புக் கரணம்' அம்மென்றால் பாதநமஸ்காரம்தான்..' என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான்.

எல்லாரும் கலகலவென்று சிரித்தார்கள்.

∴ ∴ ∴

எப்போதும் போல் வாழ்க்கை கலகலப்பாக ஓடி விடுமென்று தான் எல்லாரும் நினைத்தார்கள்.

ஆனால், நிலைமை அப்படியிருக்கவில்லை' ஐந்தாறு மாதங்கள் போயிருக்கும்! ஒரு நாள் மாலை!

பரணீதரனிடம் இருந்து ஃபோன் வந்தது.

'அண்ணி, பசங்கள்ளலாம் வீட்ல இருக்காங்களா?'

'ஆமா.. ஏம்ப்பா?'

'அத்தே? மானு?' என்றான் பதட்டமாக.

'அம்மா.. இங்கதான் இருக்காங்க.. மானு இன்னும் வர்லயேப்பா..'

'அண்ணி, நீங்க யாரும் வெளிய போகாதீங்க.. வீட்லயே இருங்க.. ஏதோ பெரிய பிரச்சினைன்னு பேசிக்கறாங்க.. நான் மானுவைப் பிக்கப் பண்ணிக்கறேன்' என்று வைத்துவிட்டான்.

ENDING COMMAND: ~

CK:

அந்தப் பாலிடெக்னிக் அவர்கள் வீட்டில் இருந்து மூன்றாவது பஸ்-ஸ்டாப்பில் இருந்தது. அவள் கல்லூரி முடிந்து வெளியில் வரும்போது பரணீதரன் நின்றிருந்தான் வண்டியுடன்.

'சின்னத்தான்!' என்றாள் ஆச்சரியமாய் கிட்டத்தட்ட கையைப் பிடித்து இழுக்காத குறையாகப் பேசினான்.

'மானு' ஏதோ பிராப்ளம். உன் ஃபிரண்டஸையெல்லாம் சீக்கிரம் வீடு போய்ச் சேரச் சொல்லு..!' என்றான்.

அவள் ஓடிப் போய் சொல்லிவிட்டு வந்தாள்.

'ஏறு!' என்று பின்சீட்டைக் காட்டினான் அவள் தயங்கினாள்.

'ஆபத்துக்குப் பாவமில்லே.. மானு! ஏறு!' என்று அவசரப்படுத்தினான்.

அவளைக் கொண்டு வந்து இறக்கிவிட்டு விட்டு..

'அண்ணி! அண்ணன் வந்தாச்சா?' என்றான்.

'இல்ல.. தம்பி..!'

'சரி.. நான் அண்ணனைக் கூட்டிட்டு வரேன்..' என்னும் போதே சோமநாதனிடம் இருந்து ஃபோன் வந்தது.

'தமிழு! ஏதோ கலவரம்கறாங்க.. நீங்க யாரும் எங்கயும் போகாதீங்க' என்று அவன் சொல்கையிலேயே பரணீதரன் தாவி ஃபோனைக் கையில் வாங்கினான்.

'அண்ணா! நீ எங்கயிருக்கே?' என்று விவரம் கேட்டுக் கொண்டு

'அங்கயேயிரு! நான் வரேன்!' என்று பறந்தடித்து ஓடிப் போய் எல்லாரையும் வீடு சேர்த்து விட்டுப் பெருமூச்சு விடுகிற சகோதரனைப் பாசத்துடன் பார்த்த சோமநாதன்.

'என்னடா.. விஷயம்?' என்றான்.



'அண்ணா! ரெண்டு இடத்துல பவரான வெடிகுண்டு வெடிச்சிடுச்சாம்..' என்றான்.

'ஓ! என்று எல்லாரும் அதிர்ச்சியானார்கள்.

அந்த வாரத்தை அவர்களால் மறக்கவே இயலாது.

திடீர், திடீரென்று அங்கங்கே புகை கிளம்பியது வேறு. விஷமிகள் கிளப்பி விட்ட வதந்திகள் வேறு. என்று அத்தனை குடும்பங்களும் அவரவர் வீடுகளில் முடங்கியே கிடந்தார்கள்.

எல்லாம் முடிந்த பிறகு மெது மெதுவாக கோவை நகரம் சாதாரண நிலவரத்தை எட்டிப் பிடித்தது என்றாலும் பழைய பொருளாதார நிலையை எட்டிப் பிடிப்பதற்கு வெகு காலமாகும் என்றார்கள்.

சோமநாதன் குடும்பத்துக்கு விழுந்த அடி. எல்லாவற்றைக் காட்டிலும் பலமாக இருக்கப் போகிறது என்பதை இனிமேல்தான் அவர்கள் உணரப் போகிறார்கள் என்பது தெரியாமல் வழக்கம் போல் இருந்தார்கள்.

∴ ∴ ∴




'டேய். என்னோட டேபிள்ல எதுக்குடா கை வச்சே?' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் வினிதா.

'உன்னோட டேபிள்னு எதுல எழுதி வச்சிருக்கு?' என்று கேட்டான் விக்னேஷ்.

'இது சரியில்லடா.. குரங்குப் பயலே! நீ என்னோட லைன்லயே கிராஸ் பண்ணிகிட்டு இருக்கறே!' என்றாள் வினிதா.

'சித்தா.. இவனுக்கு சொல்லி வைங்க.. இவன் எப்பப் பாரு.. என் லைன்ல கிராஸ் பண்ணிகிட்டிருக்கான்..' என்று மிரட்டினாள்.

பரணீதரனுக்கு உள்ளூரச் சிரிப்பு. ஆனாலும் எதனையும் காட்டிக் கொள்ளாமல் -

'டேய்.. என்னடா.. பிரச்சினை..' என்றான்.

'எனக்கொண்ணும் பிரச்சினையில்லே! இவதான்.. பிக் பிரதர் மாதிரி என்னை மிரட்டறா..' என்றான் விக்னேஷ்.

'என்னம்மா?' என்றான் பரணீதரன் அவளிடம்.

'சித்தா.. இவனைப் பாருங்க.. நான் ஹோம் வொர்க் பண்றதுக்காக ஸ்கெட்ச் பென்சில் இங்க வச்சிருந்தேன். இவன் எதுக்கு எடுத்தான்னு.. கேளுங்க..?' என்றாள்.

'டேய்.. விக்கி.. குடுத்துடு.. உனக்கு இப்ப அவசரமில்லைதானே! உனக்கு வேணும்னா.. நான் ஒண்ணு வாங்கித் தரேன்' என்று சமாதானம் செய்தான் பரணீதரன்.

'ஓ.. கே! ஓ.கே!.. நோ.. மோர் ஃபைட்டிங் இனிமே ஃபிரண்ட்ஸ்!' என்று உடன்படிக்கை செய்து வைத்தான்.

சிரித்துக் கொண்டே தன்னுடைய அறைக்குப் போனான்.

தமிழ்ச்செல்வி இதையெல்லாம் உள்ளேயிருந்து கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனால், ஏனோ சுறுசுறுப்பாக எழுந்து வரவில்லை.

பரணீதரன் அதைக் கவனிக்கவில்லை.

∴ ∴ ∴

'ஹலோ!' என்னடா செஞ்சுகிட்டிருக்கே?' என்று கலாட்டாவாக உள்ளே நுழைந்தான் மணிமாறன்.

'டேய்! மாறா! வா.. வா..!' என்று உற்சாகமாக வரவேற்றான் பரணீதரன்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் மான்விழி காஃபி எடுத்துக் கொண்டு வந்தாள்.



'மாறன்.. அண்ணா! எங்க சின்னத்தான்.. ஒழுங்காப் படிக்கிறாரா?' என்றாள் சிரித்துக் கொண்டு.

மணிமாறன் குறும்பாகச் சிரித்துக் கொண்டு நண்பனைப் பார்த்தான்.

'என்னடா! சொல்லீரவா?' என்றான்.

பரணீதரன் கண்களைச் சுருக்கிக் கொண்டு 'என்னத்தைச் சொல்வே? ஏதாவது இருந்தாத்தானே சொல்வே?' என்றான்.

'சொல்லீடுவேன்!' என்றான் மணிமாறன் மறுபடியும் மிரட்டலாக

'போடா! என்ன வேணா.. சொல்லிக்க!' என்றான் பரணீதரன் சளைக்காமல்.

'சொல்றேன்.. பாரு..' என்று மானுவிடம் திரும்பியவன்.

'மானு! கிளாஸ்லலே வச்சு ஒழுக்கமாப் படிக்கிறவன்.. இவன்தான் ரொம்ப நல்ல பையன் தெரியுமா?' என்றான்.

மான்விழியும் பரணீதரனும் ஒரு கணம் திகைத்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

'சே! சின்னத்தான்! உங்க செட்ல இருக்கற ஃபிரண்ட்ஸும் இப்படித்தான் இருப்பாங்க.. போலருக்கு..' என்றாள்.

'எப்படி?' என்றான் மணிமாறன்.

'எப்படி?' வம்பு பேசறது.. வாயடி கைபடியாப் பேசறது?' என்றாள் மான்விழி.

'சிஸ்டர்.. அபாண்டமாக் குற்றச்சாட்டு வக்காதீங்க.. மான நஷ்ட வழக்குப் போட்டுடுவோம்..' என்றான்.

'போடுங்க.. போடுங்க..' எங்க கிட்டேயும் நல்ல லாயர் ஃபிரண்ட்ஸ் எல்லாம் இருக்காங்க.. ஒரு கை பாக்கறோம்..

இப்பத்திக்கு.. இந்தக் காஃபியை சாப்பிடுங்க.. இந்த உருளைக்கிழங்கு.. போண்டாவை சாப்பிடுங்க.. என்றான்.

'டேய்! மாறா! மான்விழி செஞ்ச போண்டா.. எதுக்கும் எச்சரிக்கை பண்ணீட்டேன்..' என்றான் பரணீதரன்.

'வெவ்வெவ்வே!' என்று அழகு காட்டிவிட்டுப் போன மான்விழி.

'மானு! ரெண்டு போண்டா இருந்தாக்குடுன்னு கொஞ்ச நேரம் கழிச்சு அடுப்படிகிட்டே வந்து கெஞ்சுவீங்கள்ல.. அப்பப் பேசிக்கறேன்' என்று ஆட்காட்டி விரல் நீட்டி மிரட்டி விட்டுப் போனாள்.

'பரணீயும், மணிமாறனும் சிரித்தார்கள். மான்விழி போனதற்குப் பிறகு மணிமாறனும் பரணீதரனும் அமைதியாக காஃபியைக் குடித்து முடித்தார்கள்.

மணிமாறன் தீவிரமான முகபாவத்துடன் பரணீதரனிடம் சொன்னான்.

'ஏன்டா! இந்த ஒரு மாசத்தையும் மறக்கவே முடியாதில்லே!' என்று.

'ஆமடா! கோயம்புத்தூரோட பொருளாதாரமே.. தலை கீழா மாறிப் போச்சில்லே..!'

'ஆமடா! எங்க பிஸினஸ்க்கெல்லாம்.. பயங்கர அடி.. நல்ல வேளை.. எங்களுக்கெல்லாம்.. பூர்வீகச் சொத்து, விவசாயம்னு இருக்கறதுனால பொழச்சோம். ஆனா.. நடுத்தரக் குடும்பங்கள் எல்லாம்.. என்ன செய்வாங்கன்னு தெரியல!' என்றான்.

கடந்த ஒரு மாதத்தில் கோவை ஒரு பயங்கரமான அனுபவத்தைக் கண்டு மீண்டிருந்தது. ஆனாலும், அதன் விளைவாகத் தொழிலில் ஏற்பட்ட சரிவின் சாயல் நீண்ட நாட்களுக்கு இருக்கும் என்பதாகத்தான் தெரிந்தது.



தினமும் பத்திரிகைகளில் குடும்பங்களின் தற்கொலை பற்றிய செய்திகள் வந்து கொண்டிருந்தன.. சோமநாதன் 'உள்ளூரக் கலங்கிப் போயிருந்தான் என்றால் பரணீதரன் மிகவும் கவலையாகி இருந்தான். ஆனால் எதையும் காட்டிக் கொள்ளாமல் நடமாடிக் கொண்டிருந்தான்.

இன்னமும் பத்து தவணைகள் சீட்டு முடிக்க வேண்டியிருந்தது. முதன் முறையாக மணிமாறனிடம் தன் கவலையைப் பகிர்ந்து கொண்டான்.

மணிமாறனும் தீவிரமாகக் கேட்டுக் கொண்டான். பிறகு சொன்னான்.

'கவலைப்படாதடா.. பரணீ 'உங்களுக்கு சொத்துன்னு வீடு.. இருக்கு.. தெம்பா உழைக்கறதுக்கு நீயிருக்கே.. தேவைப்பட்ட நேரத்துல என்கிட்டே நீ தாராளமா உதவி கேட்கலாம் என்ன?' என்றான்.

'கேட்கலாம்டா! ஆனா.. எத்தனை உதவியைத்தான் நீங்க.. செய்ய முடியும்?' என்றான் பரணீதரன்.

'இத பாரு! உங்க வீட்ல.. இப்போதைக்கு.. ஒன்னும்.. பிரச்சினை.. வர்ல.. வந்தாப் பாத்துக்கலாம்..' வராத ஒன்னைப் பற்றி.. இப்ப எதுக்கு நினைக்கனும்? தேவையில்லாம கவலைப்படனும்' என்றான் மணிமாறன்.

பிறகு பேச்சை மாற்றினார்கள். வேறு விஷயங்களைப் பற்றிக் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மணிமாறன் விடைபெற்றுக் கொண்டு போனான், அன்றைக்கு பரணீதரன் உற்சாகமாய் உணர்ந்தான். மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரம் பகிர்ந்து கொண்டதால் குறைவாகி இருந்தது.

விசிலடித்துக் கொண்டே நடமாடிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு அப்போது தெரியவில்லை. இனிமேல்தான் தான் பாரம் சமக்க வேண்டியிருக்கும் என்று.

∴ ∴ ∴

இப்போதெல்லாம் கோயமுத்தூர் கடைவீதிப் பகுதியில் கூட ஒன்பது மணிக்கு மேல் நடமாட்டம் இருப்பதில்லை. அமைதியாகி விடுகிறது. இன்னமும் அவ்வப்போது வதந்திகள் கிளம்பிக் கொண்டுதானிருந்தது. எனினும் பொறுமையான வர்களும், பக்குவமானவர்களுமாக மக்கள் நடந்து கொண்டதாலும், காவல் துறையின் செயல்பாடுகளினாலுமோ.. என்னவோ.. மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருந்தது.

நகைத் தொழிலும், டெக்ஸ்டைல் மில்களும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்த நிலையில் தேக்கம் ஏற்பட்டுவிட்டது.

அன்றைக்கு தமிழ்ச்செல்வி தனது தாயுடனும், மான்விழி யுடனும் கோயிலுக்குப் போய்விட்டு வந்தாள். அருகிலே இருக்கிற முருகன் கோயிலுக்கு.

பரணீதரனும் வெளியில் ஏதோ வேலை என்று போய்விட்டு வந்தான்.

மான்விழி 'சரிக்கா! நானும் அம்மாவும் போயிட்டுக் காலையில வர்றோம்!' என்று போனார்கள்.

தமிழ்ச்செல்வி குழந்தைகளுக்கு உணவு பரிமாறினாள்.

'சித்தா! கதை!' என்று தொற்றிக் கொண்டான் விக்னேஷ்.

'ஹாரி.. பாட்டர்.. கதை 'சொல்லு!' என்றான். சொன்னான். பிறகு...

'நம்ம ஊர்ல அனுமான் சின்ன வயசுல செஞ்ச குறும்பெல்லாம் இதைவிட நல்லா இருக்கும் தெரியுமா?' என்று அந்தக் கதைகளைக் கொஞ்சம் சொன்னான்.



'ஆமா! அண்ணி! நம்மளோட பாரம்பரியம்.. இலக்கியம்.. பற்றியெல்லாம்.. குழந்தைகள் கொஞ்சமாவது தெரிஞ்சுக்கணும்.. இல்லீங்களா?' என்பான் அண்ணியிடம்.

குழந்தைகள் உறங்கப் போனதற்குப் பிறகும் கூட சோமநாதன் வரவில்லை.

'என்ன.. தம்பி! உங்க அண்ணனைக் காணோம்! என்றாள் தமிழ்ச்செல்வி. அவன் அறையை எட்டிப் பார்த்து.

வருவாருங்கண்ணி! எங்க போயிருவாரு! ஏதாவது வருலுக்குப் போயிருப்பாரு..' என்றான் பரணீதரன்.

சோமநாதன் வந்தான்.

முகம் இருண்டு போய்க் கிடந்தது.

'என்னங்க!' என்றாள் தமிழ்ச்செல்வி கலவரமாக.

'அண்ணி! முதல்ல.. சாப்பிடக் குடுங்க!' அப்புறம்.. பேசலாம்!' என்றான் பரணீதரன்.

மௌனமாகச் சாப்பிட்டான். பிறகு ஹால் சோஃபாவில் வந்து அமர்ந்தான்.

'அண்ணா! என்ன விஷயம்?' என்று அருகில் அமர்ந்தான் பரணீதரன்.

'டேய்! தம்பி 'நம்ம பணம் வட்டிக்குக் குடுத்திருந்தமே.. அந்தக் கல்யாணராமன்.. அந்த.. ஆளு.. அந்த ஆளு..' என்று நிறுத்தினான்.

'அந்த.. ஆளு?' என்றான் பரணீதரன். அவன் தூக்குப் போட்டு.. செத்துப் போயிட்டான்' என்றான் நொறுங்கிப் போனவனாக.

பரணீதரன் சற்று நேரம் மௌனமாகிவிட்டான். பிறகு மெதுவான குரலில்.

'எவ்வளவுண்ணா குடுத்திருந்தே?!' என்றான்.

'ரெண்டு லட்சம்..!'

'ஓ!..' என்றான் உள்ளடங்கிய குரலில். பிறகு மறுபடியும் 'அண்ணனுக்கு.. ஒரு லட்சம்ன்னு.. சொன்னே?' என்றான்.

'சொன்னா.. நீ திட்டுவேன்னுதான்..'

'ஓ!..'

'ஆனா.. இது வரைக்கும் வட்டி ஒழுங்காக் குடுத்துகிட்டுத்தான் இருந்தான். அதை வச்சுத்தான்.. கடையெல்லாம் கட்டுச்சு..' என்றான் விளக்கம் போல்.

பரணீதரனுக்குக் கோபம் வந்தது. ஆனால், கோபிப்பதற்கான நேரம் இதுவல்ல.. என்று எண்ணியவன்.

'சரி.. விடு.. பெருசாக் கவலைப்படாதே? 'ஏதாவது செய்யலாம்...!' என்றான். சற்று நேரம் பேச்சைத் திசை மாற்றி அது ஒன்னும் 'கவலைப்பட வேண்டிய விஷயம் இல்லை என்பது மாதிரித் தன் அறைக்குப் போய்விட்டான்.

தன்னறைக்குப் போன பின்பு அவன் மனதில் பெரும் கவலை சூண்டது.

∴ ∴ ∴

'அண்ணா! எத்தனை பேருக்கு இந்த மாசம் பணம் குடுக்கணும்?' என்றான் பரணீதரன்.

'ஒருத்தருக்குத்தான்..' ஆனா கையில முப்பதாயிரம்தான் தேறியிருக்கு..!' என்றான்.

'ஏன்?'

'ஏழெட்டு பேருக்கு மேலே தவணை சொல்றாங்க.. யாருகிட்டேயும்.. பணமில்லே.. எப்படி வசூல் செய்யறதுன்னு.. தெரியலே..!'



'எவ்வளவு குடுக்கணும்?'

'எழுபத்தைஞ்சாயிரம் குடுக்கணும்..'

'ஓ..!'

தமிழ்ச்செல்வி தலையை நீட்டினாள்.

'என்னோட இரட்டை வடம் சங்கிலியையும், ரெண்டு வளையலையும் வித்திடுங்க..' என்றாள்.

'தங்கம் விலையும் குறைவா.. இருக்கே? பவுனுக்கு மூவாயிரம் ரூபா கூடத் தேறாது..'

'பரவால்லே!' இந்த மாசம் சீட்டு எடுத்தவங்களுக்கு எவ்வளவு குடுக்கணுமோ.. அவ்வளவுக்கு நகையை வித்திடுங்க.. நிம்மதிதான்.. முக்கியம்..' என்றாள்.

சோமநாதன் சகோதரனைப் பார்த்தான்.

பரணீதரன் தோளைக் குலுக்கினான்.

'அண்ணி சொல்றதுதான்.. சரி.. சீட்டுப் பிரச்சினை முடியட்டும்.. வேணுங்கறது வாங்கிக் குடுத்தர்லாம்..' என்றான்.

தமிழ்ச்செல்வி புன்னகைத்தாள் 'தம்பி! நானும் சுயநலத்துக்காகத்தான்.. குடுக்கறேன்!' என்றாள்.

சூழ்நிலையை இதமாக மாற்றுவதற்காக அண்ணி அப்படிச் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட பரணீதரன் அண்ணனிடம் மென்மையாகப் புன்னகைத்தான்.

அன்றிரவு!

தங்கள் தனிமையின் போது சொன்னாள்.

'தமிழு! சீட்டு எடுத்தவங்கள்ல பாதிப் பேருக்கு மேல.. இனிமே பணம் ஒழுங்காத் தர மாட்டாங்க.. போல இருக்கு.. தம்பி எச்சரிக்கை பண்ணினப்பவே.. கேட்டிருக்கணும்..'

'சரி.. விடுங்க.. வீடு இருக்கில்லே?'

'தமிழு.. வீட்டை எக்காரணத்தைக் கொண்டும் விக்கிறதில்லைன்னு.. அம்மா படத்துக்கு.. முன்னாலே நின்னு சத்தியம்.. பண்ணியிருக்கேன்..!'

'சரி.. அடமானம்.. வைக்கலாம்..'

'அதுக்குத் தம்பி ஒத்துக்கணுமே!'

'நீங்க.. பரணியைப் புரிஞ்சுக்கலைங்க.. நான் வளர்த்த பிள்ளைங்க.. உங்களை கண்டிக்க வேண்டிய நேரத்துல கண்டிச்சது.. ஆனா, ஆபத்துன்னு வந்தா துணைக்கு நிக்குமுங்க.. பாருங்களேன்.. சும்மா நாள்ல அப்படிக் குதிக்குமே.. இன்னைக்கு.. நீங்க மனசொடிஞ்சு வந்தப்ப.. ஒரு வார்த்தை.. கோபமாப் பேசலே.. பாருங்க..!'

'ஆமா!' என்றான் சோமநாதன் சிந்தனையுடன் நீண்ட யோசனையிலாழ்ந்தான்.

மனைவிக்கு வருத்தம் நேரக் கூடாதே என்பதற்காக கண்ணை மூடிக் கொண்டான். ஆனால், தூங்கவில்லை. சற்று நேரம் கழித்து தமிழ்ச்செல்வி கேட்டாள்.

'எங்க.. இடம் வாங்கிப் போட்டீங்களே?' வித்தர்லாமா..?' என்றாள்.

சோமநாதன் பெருமூச்சு விட்டான்.

'தமிழு! இனி இடத்தை நம்பிப் பிரயோசனமில்லே.. ரெண்டு மில்லையும் கட்டறதையே பாதியோட நிறுத்திட்டாங்க.. நாம விக்கறதுக்குத் தயாராய் இருந்தாலும்.. வாங்கறதுக்கு.. ஆட்கள் யாரும் தயாரா இல்லே..!'

'ஓ..!'



'சரி.. விடு.. இந்த மாசம் பிரச்சினை முடிஞ்சது.. அடுத்த மாசத்துக்கு யோசிக்கலாம்.

தமிழ்ச்செல்வி.. அடுத்த மாதத்தில் அவன் போடப் போகிற மெகா சைஸ் வெடிகுண்டைப் பத்தி அப்போது அறிந்திருக்கவில்லை.

∴ ∴ ∴




சோமநாதனுக்குத் தலையே வெடித்துவிடும் போல் ஆகிவிட்டது.

பிரச்சினையை இரண்டு விதமாக அணுக வேண்டியிருந்தது. ஒரு புறம் சரியாகக் கட்டாதவர்கள். மற்றொரு புறம் இதுவரை சரியாகப் பணம் கட்டியவர்கள். இனிமேல்தான் அவர்கள் ஏலம் கோருவார்கள். அதிலும் இனிமேல் தள்ளுபடி குறைவாகவே போகும். எனவே ஒழுங்காகக் கட்டாதவர்களின் தொகையை இவனே சரி செய்து கொடுக்க வேண்டும். குறைந்த பட்சம் ஏழெட்டு லட்ச ரூபாய் சரி செய்ய வேண்டும்.

வீட்டில் முன்னாலே இடம் இருந்ததேயென்று அலுவலகத்தில் பி.எஃப் கடன் போட்டு செலவு செய்துவிட்டான். இப்போது அலுவலகத்திலும் வேறு பெரிய தொகை இல்லை.

டெக்ஸ்டைல் தொழிலுக்கு விழுந்த அடியால் அதைச் சார்ந்து இருந்த தொழில்கள் எல்லாம் வீழ்ச்சியடைந்து விட்டன. அவன் வேலை செய்த நிறுவனத்தையும் அது பாதித்திருந்தது.

இனிமேல் செய்கின்ற தொழிலும் பாதிக்கப்பட்ட நிலையில் கடன்களும் தலைக்கு மேல் போனால் எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை அரித்தெடுக்கத் தொடங்கியது.

நண்பர்களிடம் பேசினான்.

ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள்.

தலை சுழன்றது தான் மிச்சம்.

∴ ∴ ∴

தமிழ்ச்செல்வி மாலை டிஃபன் தயாரிக்கலாம் என்று வந்த போது மான்விழி உள்ளே நுழைந்தாள்.

'அக்கா.. நான் ஹெல்ப் பண்றேனே?'

'ம்..' என்றாள் தமிழ்ச்செல்வி சுரத்தேயில்லாமல். சகோதரியின் மனக்கவலை புரிந்ததாலோ என்னவோ.. மான்விழி இப்போதெல்லாம் துருவித் துருவி விசாரிப்பது இல்லை. மாறாக இயன்ற உதவியைச் செய்தாள்.

அழைப்பு மணி ஒலித்தது.

போய்க் கதவைத் திறந்தாள்.

ஓர் இளைஞனும், உடன் ஒருவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

'நாங்க.. சோமநாதனுக்கு வேண்டியவங்க.. நான் கூட சீட்ல இருக்கேன்..' என்றான் சற்று வயதில் மூத்த ஆள் நடுத்தர வயதில் இருந்தார்.

தமிழ்ச்செல்வி வந்தாள். அடையாளம் கண்டு கொண்டாள்.

'வாங்க.. சார்!' என்று வரவேற்றாள். உட்கார வைத்து காஃபி கொடுத்தாள்.

அந்த இளைஞனின் பார்வை மான்விழியின் மேல் படிந்து மீண்டது. அவளை நோக்கிப் புன்னகைத்தான். படித்தவனாகத் தெரிந்தான். மான்விழியும் மையமாகப் புன்னகைத்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

'ஒண்ணும்.. இல்லே! சும்மா.. சோமநாதனைப் பாத்துட்டுப் போலாம்னு வந்தோம்..!' என்றான்.



'சரிங்க.. சார்! ஆனா.. அவர்.. இன்னும் வரலையே!' என்றாள் தமிழ்ச்செல்வி. பிறகு தயக்கத்துடன்.

'ஏதும்.. பணம்.. கிணம் தாணுமா?' என்றாள்.

'இல்லல்லே.. அதெல்லாம்.. ஒண்ணும் இல்லே! சும்மாதான்.. வந்தோம்..' என்றார் பரமசிவம்.

'அந்த வார்த்தையைக் கேட்ட பின்தான் தமிழ்ச்செல்விக்கு நிம்மதியேற்பட்டது. அதற்குப் பிறகுதான் கலகலப்பாகப் பேசினாள்.

'டிஃபன் சாப்பிடுங்களேன்!' என்றாள் உபசரிப்பாக.

'அதுக்கென்ன.. சாப்பிட்டாப் போச்சு!' என்று அவர்கள் அமர்ந்து கொள்ளவும் அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உள்ளே போனாள்.

மான்விழி அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'கவலைப்படாதேக்கா!' என்று அபயம் கொடுத்தாள். மளமளவென்று கொஞ்சம் சிச்சடி செய்தாள். சட்னி அரைத்தாள். இருந்த சாம்பாரை சுடவைத்து கூட தோசை வார்த்தாள்.

அவள் சமையலறையிலிருந்து டிஃபனை எடுத்துக் கொடுக்கக் கொடுக்க தமிழ்ச்செல்வி பரிமாறினாள்.

'சூப்பர்.. டேஸ்ட்..!' என்று பாராட்டினார் பரமசிவம். உடன் வந்தது அவர் தம்பியாம் பேர் சதாசிவம் என்றார்.

'சதா.. அதுல கெட்டிக்காரன்.. இதுல.. கெட்டிக்காரன்..' என்று பரமசிவம் ஏகமாகப் புகழ்கிற நேரத்தில் பரணீதரன் வந்து சேர்ந்தான்.

அவனிடம் சற்று நேரம் பேசிவிட்டுக் கிளம்பினார்கள்.

புன்னகை முகத்துடன் அவர்களை வழியனுப்பி விட்டுத் திரும்பிய பரணீதரனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

பெண்கள் இருவரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

∴ ∴ ∴

மான்விழிக்கு உறக்கமே வரவில்லை.

பரணீதரனுக்கு சட்டென்று கோபம் வரும்தான். ஆனால் இத்தனை கோபம் வந்து அவள் பார்த்ததில்லை.

பரமசிவத்தையும், சதாசிவத்தையும் வழியனுப்பி வைத்து விட்டு அவர்களை நோக்கித் திரும்பியவன்.

'யாரை வேண்ணா உட்கார வச்சு டிஃபன் செஞ்சு குடுத்திடுவீங்களா?' என்றான் கடுப்புடன்.

'இல்ல.. தம்பீ.. நான் ஒரு உபசரிப்புக்காக சாப்பிடுங்கன்னு.. சொன்னேன்.. சரின்னு உட்கார்ந்துட்டாங்க.. அப்புறம்.. என்ன செய்யறது..?' என்றாள் தமிழ்ச்செல்வி.

மான்விழி திருதிருவென்று விழித்தாள். பரணீதரன் வெகு கோபமாக என்னமோ வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டு நின்றான்.

'ஊர்ப்பட்ட.. வாய்.. பேசறே? ஆளைக் கணிக்கறதுக்குத் தெரியாதா மானு! விழுந்து.. விழுந்து.. அவனுக்குப் பரிமாறினியாக்கும்..?' என்று மான்விழியிடம் எரிந்து விழுந்தான்.

'ஐயோ! நான் சமையல் ரூம்ல இருந்தேன்.. அக்காதான்.. பரிமாறினாங்க..!' என்றாள் நடுங்கிப் போய்.

'அதானே.. பார்த்தேன்!' என்று சற்றே சமாதானமானான்.

'ம்.. சரி.. வேலையைப் போய்ப் பாருங்க..!' என்று தன் அறைக்குப் போய்விட்டான்.

இப்போது நினைத்தாலும் அந்தக் கோபமுகம் அவளை அச்சுறுத்தியது.



'என்ன.. மானு! தூக்கம் வர்லையா?' என்றார் அம்மா.

'இல்லம்மா..! இன்னைக்கு சின்னத்தானுக்கு.. ஒரு கோபம் வந்துச்சு.. பாக்கணும்!' பயந்து போயிட்டேன்..' என்றாள்.

'ஆமா! அவனுக்கு.. அந்தப் பரமசிவத்தைப் பிடிக்காது. அவன்தான்.. ஆசை காட்டி நம்ம மருமகனை இந்த சீட்டுல இறக்கி வுட்டுட்டான்னு கோபம்.. வெளியிலயும். அந்த ஆளு அவ்வளவு நல்ல ஆள்.. இல்லேன்னு.. பேசிக்கறாங்க..' என்றார் அம்மா பர்வதம். 'ஓ..!' என்றாள் மான்விழி. 'அதுமட்டுமில்லம்மா.. அந்தாளு.. தன்னோட தம்பியை வேற கூட்டிட்டு வந்திருந்தாரா..!' என்று இழுத்தாள்.

'சரிடி.. மானு! பரணீக்குப் பிடிக்கலேன்னா.. ஏதாவது.. காரணம் இருக்கும். இனிமே அந்த ஆளுங்க வந்தா.. நீ கழண்டுட்டு வந்துரு..' என்றார் அம்மா.

'சரிம்மா!' என்றாள் மான்விழி.

அன்றைக்கு மான்விழிக்குத் தெரியவில்லை. தனக்கு ஒரு பெரிய தலைவலி தொடங்கிவிட்டது என்று.

∴ ∴ ∴

'என்னடி.. மானு! இன்னும் ரெடியாகலையா? என்று வந்தாள் பார்வதி.

'இருடி.. வந்தர்றேன்!' என்று தயாரானாள் மான்விழி.

நடந்தார்கள்.

கல்லூரிக்கு எப்போதும் நடந்து போவார்கள். பஸ்ஸில் போனால் இரண்டு, மூன்று ஸ்டாப்பிங் வரும். நடந்து போனால் குறுக்கு வழி ஒன்று இருந்தது. பதினைந்து இருபது நிமிடத்தில் போய்விடலாம்.

சுவாரசியமாகக் கதை பேசிக் கொண்டு போனார்கள்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது!

'எக்ஸ்க்யூஸ்.. மீ..!' என்று குரல் கேட்கவும் திரும்பிப் பார்த்தார்கள். சதாசிவம் நின்று கொண்டிருந்தான்.

'ஏதாவது.. ஹெல்ப்.. வேண்ணாக் கேட்கலாங்க.. என் ஃப்ரெண்ட் ஒருத்தர்.. ரெண்டு பேர் உங்க பாலிடெக்னிக்லதான்.. வேலை.. செய்யறாங்க..' என்றான்.

அவன் புன்னகைத்தான்.

அவள் புன்னகைக்கவில்லை வேணும்னா சொல்றேங்க..!' என்றாள்.

'டேக்.. கேர்' என்று சொல்லிவிட்டுப் போனான்.

'இது யார்டி.. ரோமியோ?' என்று சிரித்தாள் பார்வதி.

'எங்க.. பெரியத்தானுக்கு.. வேண்டியவங்கடி..

'ஓ..!' என்றாள் பார்வதி.

'ஆனா.. இந்த ஆளை எங்க சின்னத்தானுக்குப் பிடிக்க மாட்டேங்குது. நேத்து இந்த ஆளுக்கும்.. இவங்க.. அண்ணனுக்கும் டிஃபன் செஞ்சு குடுத்ததுக்கு.. எங்க சின்னத்தான்கிட்டே லட்சார்ச்சனை.. கிடைச்சுது..' என்றாள் மான்விழி.

'ஏன்.. உங்க சின்னத்தானுக்கு.. பொறாமையோ!'

'சேச்சே! இந்த ஆளு கேரக்டர் மோசமாம். அது கூட எங்க அம்மாதான்.. சொன்னாங்க.. எங்க வீட்ல.. எல்லாருகிட்டயும்.. ஃப்ரீயா விளையாடறதும்.. சின்னத்தான்தான்.. ஆனா.. அவருகிட்டே.. எல்லாருக்குமே.. கொஞ்சம் பயம்தான்..' என்றாள் மான்விழி.

'ஏன்.. துர்வாசரா? இல்ல விசுவாமித்திரரா?!' என்றாள்.



'கொஞ்சம்.. முன்கோபம்தான். ஆனா, ரொம்ப சென்சிபின்..' என்றாள் மான்விழி.

'ஆமாடி.. மானு! வீட்ல எல்லாருக்குமே.. யாராவது ஒருத்தர்கிட்டே பயம் இருக்கணும். அப்பத்தான்.. நல்லது..' என்றாள் பார்வதி.

கல்லூரி வாசலில் நுழைகிற போது பார்த்தார்கள். எதிரே சதாசிவம்.. பஸ் ஸ்டாண்டில் நிற்கிற மாதிரி நின்று கொண்டு இவர்களையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

'ஐய்யோ! மானு! உன்னோட அந்த ஜொள்ளு பார்ட்டி!' என்றாள் பார்வதி.

'என்னோட பார்ட்டியா? என்னடி உளர்றே! முதல்ல வாயைக் கழுவு' என்றாள் மான்விழி.

இருவரும் கேலியாகச் சிரித்தார்கள்.

∴ ∴ ∴

இரண்டு மூன்று நாட்கள் போயிருக்கும்!

மாலை நேரம்!

பரணீதரன் மெதுவாக சமையலறையை எட்டிப் பார்த்தான்.

'அண்ணி! மானு வர்றதில்லையோ?' என்றான் சற்றே குற்ற உணர்வுடன்.

தமிழ்ச்செல்வி இயல்பாகச் சிரிக்கவும்தான் ரிலாக்ஸானான்.

'வராம.. இருப்பாளா? நீ அண்ணைக்குப் போட்ட போட்ல பயந்துட்டா! சீக்கிரமே வந்து டிஃபன் செஞ்சு குடுத்துட்டு.. ஓடிர்றா..!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'ஏன் அண்ணி? ரொம்பக் கோபப்பட்டுட்டேனோ? ஐ ம் சாரி..!' என்றான்.

'பரவால்லப்பா.. நீ கோபிச்சுக்கலாம்.. எங்களை யார் கோபிச்சுக்க முடியும்? அக்கறையினாலதான் கோபிச்சுக்கிட்டே.. நான்தான்.. தப்புப் பண்ணிட்டேன்.. முன்னால சிட் அவுட்ல உட்கார்த்திப் பேசி அனுப்பியிருக்கணும். ஹாலுக்குள்ள விட்டது தப்பு..' என்றான்.

'ஓ.. கே!... ஓ..கே! போனது போகட்டும் விடுங்க..!' அண்ணி! உங்க அப்பா.. இருந்தா நிலைமையே.. வேற.. ஆனா.. மானுவை நல்லபடியா கல்யாணம் செஞ்சு குடுக்கறவரைக்கும் நமக்கும் பொறுப்பு இருக்கில்லே!' என்றான்.

'ஆமப்பா!..' என்றாள் தமிழ்ச்செல்வி.

'அதனாலதான் கோபிச்சுக்கிட்டேன்.. நீங்க இந்த விஷயத்தை மானுகிட்டே சொல்லீடறீங்களா?' என்றான் தயக்கத்துடன்.

'எம்ப்பா..! நீயே உரிமையாச் சொல்லலாமே?' என்றவள் அவன் தடுக்கு முன்பே.

'டேய்! விக்கி.. மானு சித்தியைக் கூட்டிட்டு.. வா..' என்று விரட்டினாள். பிறகு அவனிடம் திரும்பி.

'நீ.. சாப்பிட.. உட்காரு தம்பி!.. என்றாள். அவனும் அமர்ந்தான்.

மான்விழியை விக்னேஷ் இழுத்துக் கொண்டு வராத குறையாக வந்தான்.

'மானு! உங்க சின்னத்தான்.. என்னைக் குறை சொல்றாப்பல.. நீங்கதான் மானுவை வரவேண்டாம்னு சொல்லீட்டீங்க.. போல இருக்குன்னு! வாம்மா.. வந்து பரிமாறு..' என்றாள் தமிழ்ச்செல்வி சிரித்துக் கொண்டு.

மான்விழி புன்னகைத்தாள். அமைதியாகப் பரிமாறினாள். வழக்கமில்லாத வழக்கமாக பரணீதரன் தயக்கத்துடன்.

'மானு!' என்றான்.

'ம்!' என்றாள் மான்விழி.



'டோன்ட் மிஸ்டேக்.. மி! அந்த சதாசிவம்.. ரொம்ப மட்டமான பேர்வழி.. லோஃபர்.. அவனை விவரம் தெரியாம.. வீட்டுக்குள்ள உட்கார வச்சு.. உபசரிச்சிட்டீங்கன்னு.. எனக்குக் கோபம்!' என்றான் விளக்கம் போல.

'பரவால்லை.. சின்னத்தான்! நீங்கதானே கோபிச்சுக்கிட்டீங்க..!' என்றாள் மான்விழி.

அவன் தொடர்ந்தான்.

'அது மட்டுமில்லே.. மானு! உனக்கு ஒரு நல்ல இடத்துல கல்யாணம்ன்னு... பண்ணிக் குடுக்கற வரைக்கும்.. ஒரு பிரச்சினையும்.. வராமப் பாத்துக்கணும்.. இல்லே..!' அந்தக் கடமை எனக்கும்.. அண்ணனுக்கும் இருக்கில்லே!' என்றான்.

'ப்ளீஸ்! சின்னத்தான்.. நான்தான் சொல்லிட்டேனே.. உங்களுக்கு எங்களைக் கோபிச்சுக்கற உரிமையும் இருக்கு..! போதுமா..?' என்றாள் மான்விழி.

பரணீதரன் நிறைவான முகத்துடன் சிரித்தான். சற்று நேரம் மேலும் அமைதியாகக் கழிந்தது.

சட்டென்று பரணீதரன் தன் கையை உதறி விட்டுக் கடுப்பாகச் சொன்னான்.

'சே! அட்மாஸ்ஃபியர் ரொம்ப சீரியஸாப் போயிட்டிருக்கு.. ஐ டோன்ட் லைக் இட்' என்று.

தமிழ்ச்செல்விக்கு சிரிப்பு வந்தது.

மான்விழி கோபமானவள் போல் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தாள்.

'என்ன.. என்ன.. முணுமுணுக்கறே?' என்றான் பரணீதரன்.

'நீங்க கூடத்தான்.. அண்ணனுக்கு இப்படி வாய்க்குள்ளே.. ஏதோ.. முணுமுணுத்தீங்க.. நான் என்னன்னு கேட்டேனா?' என்றாள் மான்விழி சீரியஸாக.

பரணீதரன் முகம் மலர்ந்தது. அண்ணியைப் பார்த்து சிரித்தான். பிறகு திரும்பி மான்விழியிடம்.

'அப்படிப் போடு! மான்விழி!' என்று மறுபடியும் சிரித்தான்.

மான்விழி தன் கையிலிருந்த எவர்சில்வர் தட்டை 'ணங்'கென்று கீழே போட்டாள்.

'ஹேய்! என்ன இது? என்று பரணீதரன் திகைக்க-

'நீங்கதானே.. போடச் சொன்னீங்க! போட்டுட்டேன்!' என்றாள்.

பரணீதரன் இதை எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் திகைத்தவன்.. மறுகணம் பெருங்குரலெடுத்து சிரித்தான்.

'ஆரம்பிச்சுட்டீங்களா?' என்று தமிழ்ச்செல்வியும் சிரித்தாள். விக்னேஷும், வினிதாவும் 'அப்படிப் போடு.. அப்படிப் போடு!' என்று ஆட ஆரம்பித்தார்கள்.

'இப்ப வர்றேன்.. பாரு!' என்று போக்குக் காட்டி பரணீதரன் எழுந்தவன் மறுபடியும் சிரித்தபடி அமர்ந்துவிட்டான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சூழ்நிலையில் மகிழ்ச்சி கலந்திருந்தது.

அறைவாசலில் சோமநாதன் நின்றான். முகபாவத்தில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

அதன் பொருள் தமிழ்ச்செல்விக்கு அப்போது புரியவில்லை.

∴ ∴ ∴




தனிமை கிடைப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தான் சோமநாதன்.

'செல்வி!' என்றான் தயக்கக் குரலில்.



தமிழ்ச்செல்வி வியப்பாய்ப் பார்த்தாள். சோமநாதன் 'செல்வி' 'செல்லு' என்றெல்லாம் அழைத்தால் பெரும்பாலும் பொருள் வேறாக இருக்கும். ஆனால், இன்றைக்கு வழக்கமான கிறக்கம் அந்தக் 'குரலில்' இருக்கவில்லை. மாறாக கவலை தொனித்தது.

'சமீப காலமாகவே அவன் குரலில் தெரியும் கிண்டலும், கேலியும் சுத்தமாக மறைந்திருந்தது.

'என்னங்க!' என்றாள்.

'செல்வி!' நான் வேலையை விட்டுட்டேன்' என்றான்.

'என்னது!' என்று திகைத்துப் போய் அமர்ந்துவிட்டாள்.

∴ ∴ ∴

'எங்கே.. பரணீ கண்லயே பட மாட்டேங்கறீங்க?' என்று வந்தாள் பவித்ரா.

பேருக்கு ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தான் பரணீதரன்.

மனம் எதிலும் செல்லவில்லை.

உயிரே இல்லாமல் புன்னகைத்தான்.

'இல்லே! இந்தப் புத்தகம் இன்னைக்குத்தான் கிடைச்சது. கொஞ்சம் பாயிண்ட்ஸ் எடுத்தர்லாம்னு..' என்றான்.

'அது சரி! அதுக்காகக் கொலைப் பட்டினியாக் கிடக்கணும்னு எங்காவது எழுதியிருக்கா.. என்ன?' என்றாள் பவித்ரா..

பவித்ரா அவன் முகத்தை ஊடுருவுவது போல் பார்த்தாள். ஆனால், அவன் புரியாதவன் போல் வேறு எங்கோ பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

'எனி ப்ராப்ளம்?' என்றாள்.

'கான்டீன்.. போலாமா?' என்றாள்.

'ம்..!' என்றான் எழுந்தான்.

வழக்கமாக அவன் நடையில் ஒரு துள்ளல் இருக்கும். எதிரில் வருகிறவர்களை நோக்கி ஒரு இதமான புன்னகையை வீசுவான். பெரும்பாலும் அவனை எல்லாருக்கும் தெரியும். நண்பர்களென்றால் ஜாலியாகக் கமெண்ட் அடித்தபடி இருப்பான். அவன் இருக்கும் இடமே கலகலப்பாக இருக்கும். ஆனால் இன்று ஒருவிதமான அசுவாரசியமான உணர்வு முகத்தில் தெரிய நடந்து கொண்டிருந்தான்.

'என்ன பரணி?' என்றாள் பவித்ரா.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

பிறகு தன் பிரச்சினையைச் சொன்னான்.

'ஓ!' என்றாள் இறங்கிய குரலில்.

'உங்க அண்ணிக்கு ரொம்ப ஷாக்கிங்கா.. இருந்திருக்கும் இல்லே!' என்றாள்.

'ம்..!' என்றான். பிறகு அவனே தொடர்ந்து 'அதைவிட.. ஷாக் அண்ணன் என்னைக் கன்சல்ட் செய்யாமலே முடிவெடுத்ததுதான்..' என்றான்.

'அவருக்கு என்ன பிரச்சினையோ? உங்க கிட்டே கன்சல்ட் பண்ணினா.. நீங்க வேண்டாம்னு சொல்லுவீங்க..?' என்றாள்.

'நிச்சயமாத் தடுத்திருப்பேன்..' அதான்.. சொல்லலை!' என்றாள்.

கான்டீனில் நுழைந்தார்கள்.

பவித்ரா உளுந்து வடையும், காஃபியும் ஆர்டர் செய்தாள்.

காஃபி தொண்டைக்குள் இதமாக இறங்கியது. பரணீதரனுக்குச் சற்றே சுறுசுறுப்புத் தோன்றினாற் போல் இருந்தது.

சற்று நேரம் மௌனமாகக் கழிந்தது.

கனமான மௌனம்.

'கொஞ்ச நாளாவே அண்ணன் ஒரு இம்பல்ஸ்லயே எல்லாம் செய்யறாங்க.. ஒரு வேகம்.. சீக்கிரம் பணம் பண்ணனும்னு ஒரு பேராசை..' என்றான் வருத்தத்துடன்.

பவித்ராவும் ஒரு பெருமூச்சு விட்டாள்.

'ஆமா! யாரோ ஒருத்தர் ரெண்டு பேர்.. சீக்கிரம் பணக்காரர் ஆயிடறதை வச்சுகிட்டு.. எல்லாரும்.. ஆசைப்பட்டர்றாங்க.. பணம் பண்றதுன்னா.. அதுக்கு சில தகுதிகள் இருக்கனும்..' என்று நிறுத்தினாள் பவித்ரா.

பரணீதரன் ஒன்றும் பேசவில்லை.

'முக்கியமான.. தகுதி..! இதயம் இல்லாதவங்களா இருக்கறது..' என்றாள் பவித்ரா.

'அப்படியில்லே பவித்ரா! வியாபாரம்னு தொழில்னு வந்தா தயவு தாட்சண்யம் பார்க்கக் கூடாது. அப்பத்தான்.. நடக்கும்.. ஆனா.. அண்ணாவுக்கு அதெல்லாம் தெரியாது..' என்றான் பரணீதரன்.

'சரி.. போனது.. போகட்டும்.. மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு.. பாருங்க..!' என்றாள் பவித்ரா.

'அதுதான்.. எனக்கும் ஒன்னும் புரியலே!' என்றான் பரணீதரன். அதே நேரம்!

மணிமாறனும் வந்தான்.

'என்னடா.. பரணி! அண்ணி! சொன்னது நிஜமா..?' என்றான் தீவிரமான குரலில்.

'ஆமடா!' என்றான் பரணீதரன் அதற்குள் பவித்ராவை நோக்கித் திரும்பிய மணிமாறன்.

'என்ன.. பவித்ரா..? பரணிக்குத்தான் வடை, காஃபி கிடைக்குமா? இந்த மணிப்பயலுக்குக் கிடையாதா..' என்றான்.

"ஆமா.. இந்த மணிப்பயலுக்கு.. வடையும்.. காஃபியும் தான் முக்கியமாக்கும். பரணி ஏதோ மனகல கஷ்டம்னு.. இருக்கிறப்ப.. என்ன விளையாட்டு.. மணி?' என்றாள் பவித்ரா கடுப்புடன்.

'ஹலோ! இப்ப என்ன ஆச்சு? சோமு அண்ணா வேலையை விட்டுட்டாரு. ஆனா.. என்ன? கையில ஒரு லம்ப் சம்.. அமௌண்ட்.. வந்திருக்கில்ல! எவ்வளவுப்பா.. பரணி?' என்றான் பரணியிடம்.

'த்ரீ.. லாக்ஸ்!' என்றான்.

'அப்புறம்.. என்ன! மூணு, நாலு மாசத்துக்கு இந்த சீட்டுப் பிரச்சினை இருக்காதில்லே?' என்றான்.

'அப்புறம்.. சாப்பாட்டுக்கு..?' என்றாள் பவித்ரா.

'ஏன்.. கடை.. வாடகை வருதில்லே?' சிக்கனமா.. இருக்க வேண்டியதுதான்?

பரணீதரன் மெதுவாக மனம் திறந்தான்.

'அதில்லை. மாறா! அப்புறமும் நாலைஞ்சு லட்சம்.. சரி பண்ணனும்.. இல்லே?'

'எப்படியிருந்தாலும் கலெக்ஷன் கொஞ்சமாவது ஆகும்.. இல்லே?' என்றான்.

'ஆகும். மூணு மாசத்துக்கு ஆகறதை வச்சு ஒரு மாசம் மேனேஜ் பண்ணலாம்' அதுக்கப்புறம்?' என்றான் பரணி.

'அதுக்கப்புறம்.. அப்பப் பாக்கலாம்ம்ப்பா' என்றான் மணிமாறன்.



'பண விஷயத்துல.. அப்படி இருக்க முடியாதில்லே! இப்பப் படிக்கறயில்ல.. எத்தனை பேர்.. பணப்பிரச்சினையினால.. தற்கொலை செஞ்சுக்கறாங்கன்னு' என்றான் பரணீதரன்.

'ஏம்ப்பா.. எப்பப் பாரு.. நெகட்டிவ்வாவே பேசிக்கிட்டு.. நான் ஒண்ணு சொல்லட்டா.. உங்கண்ணன் இப்ப.. ரிசைன் செஞ்சதுதான்.. நல்லது.. தெரியுமா?'

'ஏன் அப்படி சொல்றே?'

'அட ஆமடா.. இப்ப அடி வாங்கியிருக்கிற டெக்ஸ்டைல் தொழில், ரியல் எஸ்டேட் எல்லாம் 'இனி எழுந்து நிக்கறதுக்கு.. இன்னும்.. ஆறேழு.. வருஷமாவது.. ஆகுங்கறாங்க.. இனிமே.. லாக்அவுட்.. லே-ஆஃப்னு தொழில்ல எல்லாம் கஷ்டம்தான். நல்லவேளை.. உங்கண்ணன் ஒரு லம்ப் சம்மோட வெளிய வந்தாரு..' என்றான் மணிமாறன்.

பரணீதரனின் முகம் சற்றே மலர்ந்தது.

'அப்படியா.. சொல்றே?' என்றான்.

'ஆமடா! அது மட்டுமில்லே.. உங்கண்ணன் விருப்பப் பட்டா.. அதே மில்லுக்கே.. டெய்லி வேஜ் பேஸிஸ்ல போக வேண்டியது தான்.. இல்லே.. வேற ஏதாவது.. மில்லில.. வேணும்னாலும் அப்பா.. கிட்டே சொல்லி வாங்கித் தர்றேன்..' என்றான்.

பவித்ரா ஒன்றும் பேசவில்லை. இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

பரணீதரன் பெருமூச்சு விட்டான்.

'எப்படியும்.. உங்க அண்ணனை ஏதாவது ஒரு வழி பண்ணிடுவோம்.. விடு..' என்றான் மணிமாறன் விளையாட்டுப் போல.

மூவரும் சிரித்தார்கள்.

இதுவரை நிலவி வந்த கனமான சூழ்நிலை மாறி இலகுவான மனத்துடன் சற்று நேரம் வேடிக்கை பேசினார்கள். அதற்குள் பரணிதான்.

'பவித்ரா.. நீயும்.. மணியும் பேசிக்கிட்டிருங்க.. இப்பப் பத்து நிமிஷத்துல வந்தர்றேன்' என்று போனான்.

அப்போது.. பவித்ரா.. திரும்பி மணிமாறனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'ஏன்.. மணி! எதையோ சொல்லி.. பரணியைத் தேத்தி விட்டுட்டீங்க..!' என்றாள்.

அவன் திரும்பி அவளிடம் சொன்னான்.

'அதுல ஒண்ணு மட்டும் நிஜம்' என்றான்.

'எது?'

'அதுதான்.. சோமு அண்ணா இந்த டைம்ல வேலையை விட்டது.. உண்மையிலயே நல்ல.. விஷயம்தான்..'

'ஓ ஹோ..'

'ஆனாலும்.. பரணி சொன்னது மாதிரி.. அதுக்கப்புறமும் குறைந்தது மூணு இலட்சமாவது சரி.. பண்ணனும். சரி.. விடு.. பவித்ரா.. ஏதாவது வகையில ஹெல்ப் பண்ணுவோம்..'

'ஆனா.. பரணி அப்படியெல்லாம்.. ஹெல்ப் வாங்கிக்க மாட்டாரே!'

'பாக்கலாம்.. அவசியம் வரும்போது தடாலடியா உள்ளே நுழைஞ்சுற வேண்டியதுதான்' என்றான்.

'கோபிச்சுப்பாரே!'

'அவன் கோபத்தை யார் சட்டை செய்யப் போறா..!' ஆர் வி நாட் வின் ∴பிரண்ட்ஸ்?' என்றான் மணிமாறன்.



'யா.. வி.. ஆர்' என்றாள் பவித்ரா.

அப்போது மணிமாறனுக்குப் புரியவில்லை தான் தடாலடியாக உள்ளே நுழைகிற தருணம் உண்மையிலேயே வருமென்று அதுவும் மிக வேதனையான ஒரு தருணத்தில்.

∴ ∴ ∴

'எக்ஸ்க்யூஸ் மீ..'

குரல் கேட்டுத் திரும்பினாள் மான்விழி.

சதாசிவம் நின்று கொண்டிருந்தான்.

'ஏதோ புத்தகம் கிடைக்கலைன்னு சொல்லிக்கிட்டிருந்தீங்களாம். இந்தாங்க.. சென்னையிலிருந்து வரவழைச்சேன்' என்று நீட்டினான்.

மான்விழிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்தப் புத்தகம் அவளுக்கு மிகத் தேவையான புத்தகம். ஆனால், இந்த ஆளிடமிருந்து வாங்கிக் கொள்வதா என்றும் தோன்றியது. ஆனாலும் வாங்கிக் கொண்டாள்.

சிந்தனையுடன் கல்லூரிக்குள் நடந்தாள்.

சற்று நேரம் கழித்து வந்த பார்வதி கேட்டாள்.

'என்னடி யோசனையாவே இருக்கே?' என்றாள்.

'இல்லடி.. இந்தச் சதாசிவம் இல்லே! அந்த ஆள் வந்து இந்தப் புத்தகத்தைக் குடுத்துட்டுப் போனான். ஆனா, எனக்கு இந்தப் புக் தேவைன்னு அவனுக்கு எப்படித் தெரியும்னு தெரியலை!' என்றாள்.

'ஓ!..'

'நான் யார்கிட்டயும் சொல்லலே! உன்கிட்ட மட்டும்தான் சொன்னேன்.'

'அப்ப.. எப்படி அவனுக்குத் தெரிஞ்சது?' என்று பார்வதியும் யோசனையானாள்.

முகம் திடீரென்று பிரகாசமானது.

'ஒருவேளை.. எங்க அண்ணன் சொல்லியிருப்பாண்டி. நான் அவன்கிட்டே இப்படி மான்விழிக்கு ஒரு புத்தகம்.. வேணும்னு சொல்லியிருந்தேன்.. சென்னையில கிடைக்குமாம். ஃப்ரண்ட்ஸ் கிட்டே சொல்லி வாங்கிக் குடுண்ணான்னு கேட்டுக்கிட்டிருந்தேன். அது எப்படி இந்த ஆளுக்கு...!' என்று மறுபடியும் யோசனையிலாழ்ந்தாள்.

விஷயம் புரிந்தது.

மறுபடியும் சொன்னாள்.

'ஹேய்! புதுசா.. ஒரு ஃப்ரண்ட் கிடைச்சிருக்காப்பலன்னு சொன்னான். ஒரு வேளை இந்தச் சாதா.. சோதா.. இருக்கே.. இது.. நான் உன் ஃப்ரண்டுன்னு தெரிஞ்சுக்கிட்டு.. எங்கண்ணன்கிட்டே ஒட்டியிருக்குமோ..?' என்றாள்.

இருவரும் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தார்கள். பிறகு பார்வதி சொன்னாள்.

'சரிடி.. மானு! இனிமே நம்ம விஷயம் எதுவும் அண்ணன் கிட்டே சொல்ல வேண்டாம். அப்படியே சொன்னாலும் 'இது கிட்டே சொல்ல வேண்டாம்'னு சொல்லிடறேன்'.. என்றாள்.

'ஆமடி.. பாரு! எங்க பரணி அத்தானுக்கு இந்த ஆளை சுத்தமாப் பிடிக்கலே. எங்க அத்தானுக்குப் பிடிக்கலேன்னா.. ஆளு.. ஒரு டைப்பாத்தான் இருக்கணும்..' என்றாள் மான்விழி.

சற்று நேரம் கழித்து மான்விழிக்கு வேறு ஒரு கவலை தோன்றியது.

'அப்ப.. இந்த புத்தகத்தை என்ன செய்யறது?'



'யோசிப்போம்' என்றாள் பார்வதி.

அன்று மாலை சகோதரியிடம் ஆலோசித்தாள் மான்விழி.

'நீ தேவைப்படற அளவுக்கு யூஸ் பண்ணிட்டு தம்பிகிட்டயே குடுத்துத் திருப்பிக் குடுக்கச் சொல்லலாம்' என்றாள் தமிழ்ச்செல்வி.

'ஐயோ! சின்னத்தானா? அவரு போய் அந்தாளைத் துவைச்சு எடுத்துடுவாரு' என்று பயந்தாள் மான்விழி.

தமிழ்ச்செல்வி புன்னகைத்தாள்.

'சே.. சே! அப்படியெல்லாம்.. செய்யமாட்டான். ஆனா.. அடுத்த தரம்.. உனக்குத் தொந்தரவு இல்லாத அளவுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்லிடுவான்..' என்றாள்.

மான்விழியும் ஒத்துக் கொண்டாள். ஆனால் இரண்டு நாள் கழித்து விஷயம் சொன்னதும் பரணீதரனுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது.

'நீ எதுக்கு.. வாங்கினே?' என்றான்.

'இல்லைங்க.. சின்னத்தான்.. ரோட்டுல நான் வேண்டாம்னு சொன்னா.. அந்த ஆளு.. 'இல்ல பரவால்ல' 'இல்ல பரவால்ல'ன்னு வற்புறுத்துவான் அனாவசியமா ஒரு சீன் க்ரியேட் ஆகும்' என்றாள் தயக்கத்துடன்.

'ம்..'! என்று உள்வாங்கிக் கொண்டான்.

அன்றிரவு!

சகோதரனிடம் சொன்னான்.

சோமநாதன் சிந்தனையிலாழ்ந்தான் பிறகு சொன்னான்.

'பரணி! இந்த சதாசிவத்துக்கு நம்ம மான்விழியைப் பொண்ணு கேட்கணும்னு ஐடியா இருக்கு.. போல இருக்கு..' என்றான் தயக்கத்துடன்.

'அதுக்கு.. நாமளே மான்விழியைத் துண்டு துண்டா வெட்டிப் போட்ரலாம்..' என்றான் பரணீதரன் கடுங்கோபத்துடன்.

'அதென்னமோ உண்மைதான். அந்தப் பையன்.. ரொம்ப மோசமானவன்தான்.. ஆனா, கடைசி மூணு சீட்டு அவனோடது. பணத்தைத் தூக்கியெறிஞ்சுட்டுத்தான்.. விஷயத்தைச் சொல்லணும்..' என்றான் சோமநாதன்.

'அண்ணா! குடுக்கல் வாங்கல் வேற. இது வேற. அவனுக்குப் பணம் குடுக்க வேண்டி வந்தா.. அதுக்காக அவனுக்கு அடிமையாயிர வேண்டியதில்லே.. மானுவை.. ஒண்ணுமே இல்லாதவனா.. இருந்தாக்கூடப் பரவால்லே.. நாணயமானவனா.. மானுவைக் கண்கலங்காம வச்சுக்கறவனாப் பாத்துக் குடுக்கணும்..' என்றான் பரணீதரன்.

'ஆமா..!' என்று சோமநாதனும் ஒத்துக் கொண்டான்.

தமிழ்ச்செல்வி தன் மைத்துனனின் பொறுப்பான பேச்சுக் கேட்டு சமையலறையில் நின்று கொண்டிருந்தவள் நெகிழ்ந்து போய் நின்றாள். ஆனால் அவளுக்கும் கூட அன்றைக்கு ஒரு விஷயம் புரியவில்லை. வாழ்க்கை நம் இழுத்த இழுப்புக்கெல்லாம் வரக்கூடிய ஒன்றல்ல என்பதுதான்.. அது.

∴ ∴ ∴




'எக்ஸ்கியூஸ்.. மி.. மேடம்!' என்று நின்றான் சதாசிவம்.

பார்வதியும் மான்விழியும் நின்றார்கள்.

'அந்த புக் யூஸ்ஃபுல்லா இருந்துதுங்களா?' என்ற போது சரியாக பரணீதரனின் பைக் வந்து நின்றது.



'என்ன மிஸ்டர். சதாசிவம்!' என்றான் பரணீதரன் ஒருவிதமான புன்னகையுடன்.

'சதாசிவம் இதை எதிர்பார்க்கவில்லை.

'இல்லே! மான்விழி மேடத்துக்கு ஒரு புத்தகம் குடுத்திருந்தேன்.. அது யூஸ்ஃபுல்லா இருந்துச்சான்னு.. கேட்கலாம்னு..' என்று இழுத்தான்.

'ஓ..! ஆமா! ரொம்ப யூஸ்புல்லா இருந்துச்சாம்.. பாருங்க.. என்கிட்டே குடுத்து உங்ககிட்டே ரிட்டர்ன் பண்ணச் சொன்னாப்ல.. மறந்துட்டேன்.. மானு.. உனக்கு இன்னைக்கு ஏதோ ஒரு டெஸ்ட் இருக்குன்னு.. சொல்லிக்கிட்டிருந்தியே..!' என்றான்.

'ஆமாங்க! சின்னத்தான்.. நாங்க வர்றோம்!' என்று மான்விழி சதாசிவத்தைத் திரும்பியும் பார்க்காமல் நடந்தாள்.

பரணீதரன் புத்தகத்தை நீட்ட சதாசிவம் வாங்கிக் கொண்டான்.

'சார்! உங்ககிட்டே பேசணுமே! என்றான்.

சதாசிவம் மலங்க மலங்க விழித்தபடி நின்றான்.

'வாங்க.. ஒரு டீ சாப்பிடலாம்!' என்று அழைத்துப் போனான்.

மெதுவாகத் தேநீர் அருந்தினார்கள். பேச்சோடு பேச்சாக பரணீதரன் சொன்னான்.

'சார்! எங்க மான்விழி ரொம்ப அமைதியான பொண்ணு. நீங்க வழியில வச்சு புத்தகம் குடுத்ததுல ரொம்ப அப்செட்டாயிட்டாப்ல 'அப்பா இல்லாத பொண்ணு. பேரு கெடாமப் பாதுகாத்து நல்ல இடத்துல பிடிச்சுக் குடுக்க வேண்டியது அண்ணனோட கடமையாச்சே.. அதனாலதான்.. மானுகிட்டே சொன்னேன்.

'மானு! கவலைப்படாதே! சதாகிட்டே நான் பேசறேன். அவரு இனிமே ரோட்ல வச்சு உன்னை டிஸ்டர்ப் செய்ய மாட்டாருன்னு சரிதானே சார்!' என்றான்.

'ஆமாம்!' என்று தலையாட்டுவதைத் தவிர சதாசிவத்துக்கு வேறு வழியிருக்கவில்லை.

'பரணீதரன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். பதவிசாக விடைபெற்றுக் கொண்டான்.

அவன் பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்வதை சதாசிவம் ஒருவித எரிச்சலுடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

∴ ∴ ∴

சுற்றிலும் கணக்குகளை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான் சோமநாதன்.

எப்படி முயற்சி செய்தாலும் முடியாது போல் இருந்தது. வருகிற மாதத்தில் ஏலச்சீட்டு எடுப்பவருக்கு எப்படிப் பணம் கொடுப்பது என்பது தெரியவில்லை.

'அண்ணா! அந்தச் சதாசிவம் இன்னைக்குப் பேய்முழி முழிச்சுட்டான்.. தெரியுமா?' என்று சிரித்தபடி ஒரு சேரைத் திருப்பிப் போட்டுக் கொண்டு அமர்ந்தான் பரணீதரன்.

சிரித்தபடி அண்ணனின் முகம் பார்த்தவன் அவன் முகம் இருந்த நிலை பார்த்துப் பேச்சை நிறுத்தினான்.

'என்னண்ணா?' என்றான்.

சோமநாதன் பெருமூச்சு விட்டான்.

'எல்லாம் பணப்பிரச்சினைதான்..' என்றான் சோமநாதன் சலிப்புடன்.

'சமாளிக்கலாம்.. கவலைப்படாதண்ணா..! என்று வழக்கம் போல் பரணீதரனால் சொல்ல முடியவில்லை.

'ஓ!' என்றான் உள்ளடங்கிய குரலில்.



'இந்தச் சூழ்நிலையில் நீ வேற ஏதாவது அவன்கிட்டே சண்டை தின்டை போட்டு வைக்காதடா..' என்றான் சோமநாதன்.

'சண்டையெல்லாம் போடலே! நாசூக்காத்தான் சொன்னேன்..' என்றான் பரணீதரன் குற்றம் செய்தவனைப் போல.

அந்த சமயம் தமிழ்ச்செல்வி மெதுவாக வந்து அவர்கள் அருகில் அமர்ந்தாள்.

'ஏன்.. பரணி! நான் ஒண்ணு சொல்வேன்.. கோபிச்சுக்கக்கூடாது!' என்றாள்.

பரணீதரன் அவள் முகம் பார்த்தான்.

'இல்லே! மானுவுக்கும் நாம எப்படியும் கல்யாணம் செய்யத்தான்.. வேணும்.. அந்தச் சதாசிவத்துக்கே.. வேண்ணாலும் குடுத்தர்லாமா?

'பணம் கொஞ்சம் மெதுவாக் குடுக்கறோம்னு.. வேண்ணா டைம் கேட்டுக்கலாமே!' என்றாள்.

சோமநாதனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. தமிழ்ச்செல்வியையும், பரணீதரனையும் மாறி மாறிப் பார்த்தான்.

பரணீதரன் முகத்தில் வேதனை மண்டியது.

'அண்ணி! ஒரு ரெண்டு, மூணு நாள் டைம்.. குடுங்க.. யோசிக்கலாம்..!' என்றான்.

தமிழ்ச்செல்வி தலையை ஆட்டினாள்.

அவள் உள்ள போகும்வரை பொதுவான விஷயங்களைப் பேசிவிட்டுத் தன் சகோதரனிடம் தனிமையில் சில விஷயங்கள் பேசினான் பரணீதரன்.

சோமநாதன் உண்மையிலேயே திகைத்துப் போனான்.

∴ ∴ ∴

'பவித்ரா.. இன்னைக்கு புரொஃபசர் ரம்பம் போட்டுட்டார் இல்லே!' என்றான் மணிமாறன்.

'ஆமா! ஒழுங்காப் பாடம் எடுத்தா.. ரம்பம்பீங்க.. ஏதோ நாலு ஜோக்கு.. வார்த்தையெல்லாம்.. பேசி நேரம்.. ஓட்டினா.. அவங்கதான்.. நல்ல.. வாத்தியார்ம்பீங்க!' என்றாள் பவித்ரா கடுப்பாக.

'ஐய்யயோ! கோனியம்மா! ஒரு வார்த்தை.. தப்பாச் சொல்லீட்டேன்.. மன்னிச்சுக்க.. தாயி.. என்று வானம் பார்த்து இரண்டு கன்னத்திலும் போட்டுக் கொண்ட மணிமாறனைப் பார்த்து பக்கென்று சிரித்தாள் பவித்ரா.

'மணி! இப்பல்லாம்.. பரணீ மாதிரியே ஆரம்பிச்சுட்டீங்க..' என்றாள்.

'ஹலோ! நான் ஏன் அவனை மாதிரிப் பேசணும்.. எங்களுக்கே.. ஒரிஜினாலிட்டி.. இருக்காதாக்கும்..!' என்றான் மனத்தாங்கலுடன்.

'அடடடா! பொறாமையாக்கும்..! என்றாள் பவித்ரா.

'எதுக்கு..? எதுக்கு? நாங்க பொறாமைப்படணும்?' என்றான். மனதில் உள்ளதை மறைத்தபடி.

'மணி.. உங்களுக்கு நான் என்னமோ பரணிக்கு.. முக்கியத்துவம்.. கொடுக்கற மாதிரி ஒரு நினைப்பு..!' என்றாள் பவித்ரா.

'பின்னே இல்லையா! பரணீ வந்து சேர்றதுக்கு.. முன்னாடி.. எத்தனை நாள் நாம ஜாயிண்ட்.. ஸ்டடி செஞ்சிருக்கோம்.. ஆனா.. இப்ப..?' என்றான்.

ஐயய்யயோ! நான் அப்படியெல்லாம்.. வித்தியாசமா.. ஒன்னும்.. நினைக்கலே.. நாம.. எல்லாரும்.. ஃப்ரெண்ட்ஸ் நமக்குள்ளே வித்தியாசப்படுத்திக்கக் கூடாது. பரணிக்கு ரொம்ப ஜெனரல் நாலெட்ஜ்.. அது மட்டுமில்லே.. அவரு கூடப் பேசும்போதுதான். மிடில் கிளாஸ் ஃபேமிலியோட கஷ்டங்கள் ளாம்.. என்னன்னு தெரியுது.. என்றாள்.



மணிமாறன் புன்னகைத்தான்.

'ஆமா! அது உண்மைதான்.. பரணி பழகறதுக்கு ரொம்ப இனிமையானவன். எல்லாருக்குமே அவனைப் பிடிக்குது.. உனக்கும்.. கூட..' என்றான்.

பவித்ரா புன்னகைத்தாள்.

மணிமாறன் மெதுவாகக் கேட்டான்.

'ஏன்.. பவித்ரா.. உனக்கும் பிடிக்குது.. சரி.. எந்த அளவுக்கு?' என்றான்.

பவித்ரா திரும்பி அவனை ஆழமாகப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'தெரியலே! இதுவரைக்கும் நான் அதை அனலைஸ் பண்ணலே! இனிமேலும் பண்றதாயில்லை. இப்போதைக்கு ஃப்ரெண்ட் ஷிப்..' என்றாள்.

மணிமாறன் முகம் மலர்வதைப் பார்த்துக் கொண்டு புரியாதவள் போல் நின்றாள்.

மணிமாறனுக்கு அப்போது புரியவில்லை. பெண்களின் மனதை ஏன் ஆழமான கடலுக்கு ஒப்பிடுகிறார்கள் என்று.

∴ ∴ ∴

'அண்ணி!' என்று வந்தான் பரணீதரன்.

'என்னப்பா!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'அண்ணி! அம்மன் கோயிலுக்குப் போகணும்னு சொன்னீங்களே! புறப்படுங்க..' என்றான்.

'போப்பா! எந்தக் கோயிலுக்குப் போயி என்னத்தை நல்லது ஆகப்போகுது..!' என்றாள்.

'அண்ணி! நல்லது ஆகாட்டியும் பரவால்லே.. கெட்டது ஆக வேண்டாம்னு.. வேண்டிக்கலாம்.. இல்லே!' என்றான்.

தமிழ்ச்செல்வி கேள்விக்குறியுடன் பார்க்க அவன் அதைப் புரிந்து கொள்ளாதவன் போல்

'புறப்படுங்க.. அண்ணி!' என்று அழைத்துப் போனான்.

'குழந்தைங்களைக் கூப்பிட்டுக்கலாம்!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'வேண்டாம்! நீங்க மட்டும் புறப்படுங்க..' என்று அழைத்துப் போனான்.

அம்மன் கோவிலுக்குப் போனார்கள். சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்தவுடன் வழக்கமான வழியில் அல்லாமல் வேறு வழியில் அழைத்து வந்தான்.

'ஐயோ! இந்த 'ஏரியா.. ஒரு மாதிரியாச்சே!'

'நான்கூட இருக்கேன் இல்ல! தைரியமா வாங்க!' என்று அழைத்தவன் சற்று தூரம் சென்றவுடன் ஒரு பஸ்-ஸ்டாண்டுக்கு அருகில் நின்றபடி கையைக் காட்டினான்.

அங்கே.. சதாசிவமும்.. நண்பர்களும் தெருவென்றும் பார்க்காமல் மதுபானம் எதையோ வாங்கி விழுங்கி விட்டு ஆடிக் கொண்டு நின்றிருந்தார்கள்.

தமிழ்ச்செல்வி திகைத்துப் போனாள்.

அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக அந்த கும்பல் பஸ்-ஸ்டாண்டை நோக்கி வந்தது.

'தம்பி!' என்று திகைப்புடன் மீண்டும் தமிழ்ச்செல்வி திரும்பிப் பார்க்க.



'முழுசையும்.. பாருங்க!' என்று சற்று ஒதுங்கி நின்றார்கள்.

நான்கைந்து பேர் இருந்தார்கள். குழறலாக உளறிக் கொண்டிருந்தார்கள்.

'உங்க அண்ணன் விழுந்து.. விழுந்து.. சம்பாதிக்கறாரு.. அதை நீ இப்படி வீணாக்கறயே!

சதாசிவம் கெக்கெக்கேவென்று சிரித்தான்.

'இதபார்றா! எங்க அண்ணன் கந்துவட்டி.. வாங்கித்தான்டா.. சம்பாதிக்கறாரு.. இப்பப் போயிப் பாரு.. அவரும்.. எங்கயோ புட்டியும்..' என்று இழுத்துச் சிரித்தான்.

'வீட்லயா?' என்றான் ஒருவன்.

'வீட்ல.. உதை விழுகுண்டா.. இதுக்குன்னு ஒரு வீடே.. வச்சருக்கிறாரு..' என்றான்.

'சின்ன வீடாக்கும்..' என்று சிரித்தான் இன்னொருத்தான்.

'ஒரு.. வீடு.. அதில யார் வேண்ணா.. வருவாங்க.. போவாங்க.. சரி.. நமக்கு வழியைப் பாரு.. அந்த நீலாவோ.. கீதாவோ.. ஏதோ ஒண்ணைப் பிடிச்சுட்டு.. வாங்கடா..' என்று அவன் குழற அதற்கு மேல் நிற்காமல் நடந்தாள் தமிழ்ச்செல்வி.

பரணீதரனும் பின் தொடர்ந்தான்.

'இந்தக் கருங்குரங்குப் பயலுக்கு மான்விழியைக் குடுக்கணும்னு சொல்றீங்க..' என்று பல்லைக் கடித்தான்.

தமிழ்ச்செல்வி ஒன்றும் பேசவில்லை.

சற்று தூரம் வேகமாக நடந்த பின்தான் தமிழ்ச்செல்வி ஆசுவாசமாக மூச்சு விட ஆரம்பித்தாள்.

பரணீதரன் ஆதரவான குரலில் சொன்னான்.

'அண்ணி! கவலைப்படாதீங்க.. வீட்டை வித்தாவது கடனை அடைச்சரலாம்' என்றான்.

தமிழ்ச்செல்வி அதற்கும் ஒன்றும் பேசவில்லை.

'வீடு.. போனாப் போகுது அண்ணி! மறுபடியும் சம்பாதிக்கலாம்.. நிம்மதி வேணுமில்லே!' என்றான்.

அதற்கும் மறுமொழி வராமல் போகவே 'என்ன அண்ணி! நாங் பேசிக்கிட்டே இருக்கேன்..' என்றான்.

தமிழ்ச்செல்வி நின்றாள்.

'தம்பி.. வீட்டை விக்க முடியாது' இப்ப இருக்கற நிலைமையில ரெண்டு லட்சத்துக்குக் கூடப் போகாதாம்.. அதனால.. அடமானம் வச்சருக்கு.. நான்தான் கையெழுத்துப் போட்டுக் குடுத்தேன்..'

பரணீதரன் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டான்.

சற்றுத் தொலைவு சென்றவுடன்.

'சரிங்கண்ணி! கடைக்காரங்ககிட்டே மூணு பேருகிட்டயும்.. ஆளுக்கொரு ஐம்பதாயிரம் வாங்கலாம்' என்றான் ஆதரவான குரலில்.

தமிழ்ச்செல்வி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள்.

'வாங்கியாச்சு.. தம்பி!'

'... ..!!

'போன ரெண்டு மாசமா.. வருலே.. இல்லே! யாருகிட்டே கேட்டாலும்.. தங்க மார்க்கெட் விழுந்து கிடக்குது. காசு நடமாட்டமே இல்லே!' நீங்களும் வற்புறுத்தினா.. நாங்க தற்கொலைதான் பண்ணிக்குவம்கறாங்களாம்..' என்றாள்.



அதற்குள் தெருமுனை வந்தது.

எல்லாக் கதவுகளையும் அடைத்து விட்ட அண்ணனை நினைத்தால் அவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

'அண்ணி! நீங்க வீட்டுக்குப் போங்க.. நான் இப்ப வர்லே! வந்தேன்.. அண்ணன்கிட்டே எக்குத் தப்பாப் பேசிடுவேன்' என்றான்.

தமிழ்ச்செல்வி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'தம்பி! நான் ஒண்ணு கேட்கறேன் பதில் சொல்லு!'

'கேளுங்க!'

'நீ என்னைத் தாயா நினைக்கறது உண்மைதானே!'

'என்னண்ணி இப்படிக் கேட்கறீங்க! என்றான் இறங்கிய குரலில்.

'அது நிஜம்ன்னா.. நீ அவரை ஒண்ணும் பேசக்கூடாது. ஏன்னா, அவரே இப்ப வேதனையில இருக்காரு. அப்புறம்.. அப்புறம்.. முதலுக்கே.. மோசமாயிடக் கூடாது.. தம்பீ! என்றாள். கண்கள் கலங்கின.

பரணீதரன் நெகிழ்ந்துவிட்டான்.

'சரிங்கண்ணி! நான் ஒண்ணும் பேச மாட்டேன்' என்றான்.

இரண்டு பேரும் சற்று மௌனமாக நின்றார்கள். பிறகு மீண்டும்.

'சரிங்கண்ணி! நான் கொஞ்சம் நடந்துட்டு வரேன்..!' என்று பதிலை எதிர்பார்க்காமல் நடந்தான்.

∴ ∴ ∴




'ஏம்பா! சதாசிவத்துக்கு என்ன குறைச்சல்?' என்று பரமசிவம் கேட்ட கேள்வியை ரிலே செய்து விட்டு தமிழ்ச்செல்வியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

தமிழ்ச்செல்வி வருத்தத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள். பிறகு தான் கூட அப்படி நினைத்ததைப் பரணீதரன் சதாசிவத்தின் 'ஆட்டத்தை' அழைத்துப் போய்க் காட்டியதை எல்லாம் பகிர்ந்து கொண்டாள்.

சோமநாதன் முகத்திலும் கலவரம் தெரிந்தது.

'அப்ப சரி! தமிழு அவன் என்ன பிரச்சினையைக் கிளப்பினாலும் நான் பார்த்துக்கறேன். நீ கவலையை விடு. அப்படியெல்லாம் நம்ம ஆட்டுப் புள்ளைய பலிகடா ஆக்க வேண்டாம் தம்பி சொன்னாப்ல நாங்க ரெண்டு ஆம்பளைங்க இருக்கோம்.. பாத்துக்கறோம்.. கூலி வேலை செஞ்சாவது குடும்பத்தைக் காப்பாத்துவோம்' என்றான் உறுதியுடன்.

'ஆமாங்க! நான் கூட ஏதாவது வேலைக்குப் போறேன்' என்றாள் தமிழ்செல்வி.

'ஏதாவது யோசிப்போம்! 'தமிழு!' என்றான் சோமநாதன்.

உறுதியுடன் எழுந்து பரமசிவத்தைப் பார்க்கப் போனான்.

∴ ∴ ∴

'ஹேய்!' என்று குதித்துக் கொண்டு வந்தார்கள் வினிதாவும், விக்னேஷும்.

'அட! விடுங்கடா!' என்று கையில் எதையோ பிடித்துக் கொண்டு பரணீதரன் அதைக் காப்பாற்ற முயற்சி செய்து கொண்டிருந்தான்.

பின்னாலேயே மணிமாறன் சிரித்துக் கொண்டு வந்தான்.



'என்னடா? என்ன?' என்று சமையல் அறையிலிருந்து வெளியே வந்தாள் தமிழ்ச்செல்வி.

'அண்ணி! இது ஒரு ஃபாரின் ஃபோன் செட்! இதுல நிறைய ஃபெஸிலிட்டீஸ் இருக்கு. மாறன் கொண்டு வந்தாப்ல.. அதுக்குள்ள இதுங்க ரெண்டும் படுத்துதுங்க..' என்று சிரித்தான் பரணீதரன்.

'சரிடா.. சரி.. உட்காருங்க.. மணி அங்கிள்.. எல்லாம் விவரமாச் சொல்லுவாரு..' என்று அடக்கி அமர வைத்தான்.

'இத பாரு! இந்த பட்டனை ஆன் செஞ்சா.. அந்தப் பக்கம் பேசறது எல்லாருக்கும் கேட்கும். நாமளும் பதில் சொல்லலாம்.. ஒவ்வொருத்தர்கிட்டயா மாத்தி மாத்தி ரிசீவரைக் குடுக்கிற வேலை மிச்சம்..' என்றான் மணிமாறன்.

'இப்பப் பாரு.. நான் கூப்பிடறேன்..' என்று அவர்கள் வீட்டு டெலிஃபோனிலிருந்தே அழைத்தான்.

ஒலித்தது சற்று நேரம் மாற்றி மாற்றிப் பேசினார்கள். கூச்சலும் போட்டியுமாய் மகிழ்ந்தார்கள்.

'சரி.. நீங்களே வச்சுக்குங்க..' என்றான் மணிமாறன்.

'குழந்தைகள் உடனே ஆவலாகத் திரும்பி அன்னையைப் பார்த்தார்கள். அவள் பார்வையில் மறுப்புத் தெரிய.. அமைதியாகி விட்டார்கள்.

மணிமாறன் உடனே 'சரி.. ஒரு வாரத்துக்கு வச்சுட்டுக் குடுங்க..' என்றான்.

பரணீதரன் அண்ணியைக் கெஞ்சலாகப் பார்க்க..

'என்ன அண்ணி. என்கிட்டயே.. இவ்வளவு தூரம்.. யோசிக்கறீங்க..!' என்றான் மணிமாறன் லேசான வருத்தத்துடன்.

'ஐயய்யோ! அப்படியில்ல.. தம்பி! செட்.. ரொம்ப விலையாய் இருக்கும் போல் இருக்கு. இதுங்க.. ஏதாவது உடைச்சிடுச்சன்னா..' என்றாள் தயக்கமாய்.

'அதெல்லாம்.. உடைக்க மாட்டாங்க.. நல்ல குழந்தைங்க பத்திரமா வச்சுக்குவாங்க..' என்றான் மணிமாறன்.

உடனே குழந்தைகள் இருவரும் பதவிசாக ஒரு மேஜையின் மேல் வைத்தார்கள்.

'அண்ணி! இது ஃபாரின் செட்.. இந்த மாதிரி விஷயமெல்லாம் இன்னும் இந்தியாவுக்கு வர்லே! இது மாதிரி.. எங்க வீட்ல ரெண்டு மூணு இருக்கு.. என்றான். பிறகு மணிமாறனும் பரணீதரனும் எழுந்து பரணீதரனின் அறைக்குப் போனார்கள். சற்று நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்ச்செல்வியின் கையால் டிஃபன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான். மணிமாறன் புறப்படும் போது

'அண்ணி! உங்க வீட்டு அட்மாஸ்ஃபியரே எனக்கு ரொம்பப் பிடிக்குதுங்கண்ணி எங்க வீட்ல போய் 'அண்ணி அது செஞ்சாங்க.. இது செஞ்சாங்கன்னு சொல்வேனா எங்கம்மா கூட இன்னைக்கு உங்கண்ணியையும், உங்கண்ணனையும் கூட்டிட்டு வாயேன்டாங்கறாங்க.. ஒரு நாளைக்கு வர்றீங்களா?' என்றான்.

'அப்ப.. நாங்க!' என்றார்கள் வினிதாவும், விக்னேஷும் சோகமாக.

'நீங்க.. இல்லாமயாடா.. ராஜா?' என்று மணிமாறன் விக்னேஷைத் தூக்கிக் கொண்டான்.

பிறகு என்ன தோன்றியதோ என்னவோ..

'ஏங்கண்ணி, இப்பவே போலாமா?' என்றான்.

தங்கள் வீட்டுக்கு ஃபோன் செய்து தகவல் தெரிவித்துக் காரை வரவழைத்தான்.

எல்லாரையும் அழைத்துப் போனான்.



அவர்கள் வீட்டில் பரணீதரனின் குடும்பத்துக்கு ஏக வரவேற்பு.

'அம்மா.. உங்க பரணீதரன் நல்ல பையன். இவன்கூடப் பழக ஆரம்பிச்சதுக்கப்புறம்.. எங்க பையன் கிட்டயே ஒரு நல்ல சேன்ஜ் தெரியுது?' என்று பாராட்டினார் மணிமாறனின் அம்மா. மணிமாறனின் தந்தையும் பரணீதரன் கூட உரிமையாக 'அப்பா!' என்று அழைத்துப் பேசினான்.

மணிமாறனின் பெரிய பங்களாவைப் பார்த்து குழந்தைகளுக்கு மலைப்பு.

பங்களாவின் முன்னாலிருந்த புல்வெளியில் ஓடி ஆடி விளையாடினார்கள்.

மகிழ்ச்சியுடன் வீடு வந்து சேர்ந்தார்கள். இனி வரப்போகிற பல நாட்களுக்கு இந்த மகிழ்ச்சிதான் கடைசியாக இருக்கப்போகிறது என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

∴ ∴ ∴

ஒரு வாரம் போயிருக்கும்!

'மானு! இன்னைக்கு என்ன டிஃபன்?' என்றான் பரணீதரன்.

'மாங்காய்க் குழம்பு.. தேங்காய்ப் புலவு' என்று குறும்பாகச் சிரித்தாள் மான்விழி.

'நல்ல.. வேளை! ஏதோ சாப்பிடற ஐட்டமா.. சொன்னியே! நீ என்ன நெனச்சகிட்டிருக்கே! எங்களுக்குச் சாப்பாடு போடறியா.. இல்லே.. நீவனம்.. போடறியா?' என்று தன் சண்டையை ஆரம்பித்தான்.

'ஏன் நான்? மாங்காய்.. தேங்காய்னு தானே சொன்னேன்? வைக்கப்புல்லு குழம்புன்னா.. சொன்னேன்?' என்று எதிர்ப்பாய்ச்சல் பாய்ந்தாள் மான்விழி.

'ஆமாப்பா.. விட்டா.. அதையும் செஞ்சு போடுவீங்க?' என்றான் பரணீதரன்.

'அதையும் டேஸ்டா.. செஞ்சு போடுவம் இல்லே.. உங்களாலே கண்டே பிடிக்க முடியாது. கேட்டா.. வெங்காயத் தண்டுக் குழம்புன்னு சொல்லுவோம்..' என்றாள் சிரிக்காமல்.

பரணீதரன் அதிர்ந்தாற் போல் அண்ணியைப் பார்த்தான்.

தமிழ்ச்செல்வி சிரிப்பை அடக்கிக் கொண்டு நின்றாள்.

'அண்ணி! இது நியாயமில்லே! நாங்க உங்களை நம்பி 'சாப்பிட உட்கார்றோம்.. இப்படியெல்லாம்.. சொன்னா இந்தக் குழம்புலயே என்னென்ன இருக்கோன்னு சந்தேகம் வருது..!' என்று குழம்பைக் கரண்டியில் எடுத்து மேலும் கீழும் ஊற்றிப் பார்த்தான்.

'தம்பீ.. அவ கிடக்கறா.. நீ சாப்பிடு தம்பீ..!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'இன்னொரு முறை சொல்லுங்க!' என்றான்.

தமிழ்ச்செல்வியும் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

'மானு! கேட்டுக்க.. ஐயா.. லைன்ல கிராஸ் பண்ணாதே!' என்றான்.

மான்விழி அவசரமாகக் கரண்டியோடு வந்தாள்.

கீழே குனிந்து தேடினாள்.

'என்ன தேடறே?' என்றான் பரணீதரன்.

'இல்லே! லைனைக் கிராஸ் பண்ணாதேன்னு சொன்னீங்கள்லே! லைன் எங்க இருக்குன்னு.. தேடறேன்?' என்றாள்.

'அது மாயக்கோடுங்க மேடம்! உங்க கண்ணுக்கெல்லாம்.. தெரியாது' என்றான்.

'இது அடுத்த சீலாக்கும்..' என்றாள்.



நின்றாள். பிறகு எல்லாரும் சிரித்தார்கள்.

'அட.. ஏம்ப்பா! நீ சும்மா அவளைச் சீண்டிக்கிட்டு..!' என்று சிரித்தாள் தமிழ்ச்செல்வி.

மான்விழியும் சிரித்துக் கொண்டே உள்ளே போனாள்.

பரணீதரன் மெல்லிய குரலில் அண்ணியிடம் 'அண்ணி! மானு பட்டுப் பட்டுன்னு பதில் குடுக்கறதைப் பாத்தீங்கல்ல.. அது எனக்குப் பிடிச்ச விஷயம்..' என்றான்.

தமிழ்ச்செல்வியும் புன்னகைத்தாள். 'ஆமாப்பா.. நீ இப்படி வாய் பேசிப் பழக்கி. விடு.. அப்புறம்.. போற வீட்லயும்.. இப்படியே பேசினான்னா..' என்றாள் லேசான கவலையுடன்.

இப்போது பரணீதரன் தீவிரமான குரலில் 'அண்ணி! மானு அப்படியெல்லாம் இல்லைங்கண்ணி. ரொம்பப் பொறுப்பான பொண்ணு. அது மட்டும் இல்ல.. அண்ணி.. நம்ப வீட்ல ஈஸியா ஃபீல் பண்ணனுங்கறதுக்காகத்தான் சும்மா.. இந்தக் கலாட்டா.. வெல்லாம்..' என்றான்..

தமிழ்ச்செல்வியும் 'அது தப்பில்லே' என்று ஒத்துக் கொண்டாள்.

∴ ∴ ∴

அன்றிரவு!

பத்து மணியிருக்கும்!

அந்தப் புதிய ஃபோன் ஒலித்தது.

சோமநாதன் எடுத்தான்.

அந்தப் புறம் பரமசிவம்!

'உனக்கெப்படி... இந்த நம்பர் கிடைச்சுது..' என்றான் சோமநாதன்.

'எப்படியோ.. கிடைச்சது.. உங்க வீட்டு ஃபோன்ல கூப்பிட்டா, நீ இல்லே.. இல்லேங்கறாங்க..' என்றான் எரிச்சலுடன்.

'நிஜமாவே.. நான் இல்லப்பா.. உனக்குக் குடுக்கறதுக்காகப் பணத்துக்காகத்தான் அலைஞ்சுக்கிட்டிருக்கேன்..' என்றான் சோமநாதன் தயவான குரலில்.

'அதான்.. நான் ஒரு ஏற்பாடு சொன்னேன்.. அதுக்கு மட்டும் அன்னைக்கு வீராப்பா முடியாதுன்னு பதில் சொன்னே?' என்றான் பரமசிவம்.

'இங்க.. பாரு..! பரமசிவம்! உனக்குப் பணம்தானே வேணும், நான் ஏற்பாடு செய்து தரேன்!' என்றான்.

அதே நேரம் தமிழ்ச்செல்வி அருகில் வந்து நின்றாள்.

நல்ல வேளையாக பரணீதரன் வெளியில் போயிருந்தான்.

'ஏன்.. அந்தப் ப்ரபோஸல் உங்க வீட்டு லேடீஸ்க்குப் பிடிக்கலையாமா?' என்றான் பரமசிவம்.

'அப்படியில்லப்பா.. எங்க மாமியாரம்மா ஊர்ல சொந்தத்துல பையன் இருக்கான்.. அப்படீங்கறாங்க.. நான் என்னப்பா பண்ண முடியும்?' என்று சோமநாதன் சமாளித்தான்.

பரமசிவம் ஒருவிதமான குரலில்.

'இங்க.. பாருப்பா.. உங்க வீட்ல நீ சொன்னா எல்லாம்.. கேப்பாங்க.. இந்தக் கதையெல்லாம்.. இங்க.. விடாதே!' என்றான்.

சிரிப்பு என்ற பெயரில் இளித்தான்.. 'அந்தப் பேச்சை விடப்பா..' என்றான் சோமநாதன் மறுபடியும் பணிவாக.

பரமசிவம் ஆனால் விடவில்லை.

'ஏன்.. உன் தம்பி.. அந்தப் பிஸ்தா.. வேண்டாங்கறானாக்கும்..' என்றான்.



சோமநாதன் பொறுமையான குரலில் 'பரமசிவம்.. நீ நிதானத்துல இல்லை.. மாதிரித் தெரியுது.. நான் காலையில நேரத்துல.. வீட்டுக்கு வர்றேன்.. வைக்கட்டுமா?' என்றவுடனே அந்தப் பக்கம் பரமசிவம் வெறிவந்தாற் போல்

'வச்சராதே! அப்புறம்.. இப்பக் கிளம்பி.. நான் நேரா ஓட்டு வாசல்ல.. நிப்பேன். அக்கம் பக்கம் கேக்கறாப்ல.. கத்துவேன்.. மானத்தை வாங்குவேன்..' என்றான்.

தமிழ்ச்செல்வி கவலையுடன் கேட்டுக் கொண்டு நின்றாள்.

சோமநாதன் லேசாகப் பொறுமையிழந்த குரலில்

'பரமு! அடாவடி பேசாதே..!' என்றான்.

'அப்ப சரி.. நாளைக்கே என் பணம் மூணு இலட்சத்தையும் கொண்டு வந்து என் மூஞ்சியில வீசு.. அப்புறம்.. நான் எதுக்குப் பேசறேன்' என்றான்.

சோமநாதன் தலையைப் பிடித்துக் கொண்டான்.

'ப்ளீஸ் பரமசிவம்' என்றான் மனத்தாங்கலுடன்.. பிறகு

'வேற ஏதாவது.. வழி சொல்லு!' என்றான்.

பரமசிவம் கொக்கரித்துச் சிரித்தபடி ஒரு வழி சொன்னான்.

சோமநாதன் மேலும் பேசுவதற்குள் ஃபோனை டொக்கென்று வைத்தான்.

முதன்முறையாகத் தன் கைகளுக்குள் முகம் புதைத்துக் கொண்டு விக்கி, விக்கி அழுதான்.

தமிழ்ச்செல்வியும் வெடித்த விம்மலை அடக்கியபடி உள்ளே ஓடினாள்.

சற்றுக் கழித்து உள்ளே உருட்டுகிற சத்தம் கேட்டு அவசரமாக எழுந்து போய்ப் பார்த்தான்.

தமிழ்ச்செல்வி மண்ணெண்ணெய் பாட்டிலைக் கையில் வைத்துக் கொண்டு நின்றாள்.

'உடம்பெல்லாம்.. எரியற மாதிரி.. இருக்குதுங்க..' என்றாள்.

'ஐயோ! தமிழு! நானே குத்துயிரும்.. குலையுயிருமா.. நடமாடிக்கிட்டிருக்கேன்.. என்னை நீயும் கொல்லாதே!' என்று இரு கைகளையும் முகத்தில் அறைந்து கொண்டு அழுதான்.

அதைப் பார்த்துத் திகைத்த தமிழ்ச்செல்வி பாட்டிலை ஒரு புறம் வைத்து விட்டு அவனைக் கைத்தாங்கலாகத் தங்கள் அறைக்கு அழைத்துப் போனாள்.

தன் மனசைக் கல்லாக்கிக் கொண்டு 'சமாளிக்கலாங்க.. கவலைப்படாதீங்க..' என்று தேற்றினாள்.

இருவருமே இரவெல்லாம் உறங்கவில்லை. அதிகாலையில் தான் சற்றுக் கண்ணயர்ந்தார்கள்.

∴ ∴ ∴




'தம்பீ பரணீ' என்று தமிழ்ச்செல்வியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போய்த் தன்னறையில் இருந்து வெளியே வந்தான் பரணீதரன்.

அவள் கையில் கடிதம்!

ஒற்றைக் காகிதம் படபடத்தது.

பரணீதரன் வாங்கிப் படித்தான்.

அன்புள்ள பரணிக்கு,

என் மனம் குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டது. வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது. நான் சென்னையோ எங்கேயோ கொஞ்ச நாள்



போகிறேன். வீட்டை விற்று அந்தப் பரமசிவத்துக்குப் பணத்தைக் கொடுத்து விடுங்கள். அண்ணியிடம் நான் மன்னிப்புக் கேட்டதாகச் சொல். வருவேன்.. கொஞ்ச நாளில் பணத்தோடு..

அன்புடன்

சோமநாதன்.

பரணீதரன் திகைத்து நின்று விட்டான்.

∴ ∴ ∴

எத்தனை முறை பேசினாலும் பேச்சால் எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை.

'ஏன்.. அண்ணி. ஏன் அண்ணன் திடீர்னு இப்படிப் பண்ணிட்டாங்க?' என்று குடைந்து, குடைந்து கேட்டான் பரணீதரன்.

'நேத்து அந்தப் பரமசிவம் கோபமாகப் பேசி விட்டானாம்..' என்று மட்டும் சொன்னாள் தமிழ்ச்செல்வி.

வேறு எதுவும் செய்யவில்லை. இந்த விஷயத்தைச் சொன்னால் முதல் வேலையாகப் பரணீதரன் 'பரமசிவத்தைத் தொலைத்துக் கட்டிவிட்டு வருகிறேன்' என்று புறப்பட்டு விடுவான் என்று பயம்.

மணிமாறனும், பவித்ராவும் வந்திருந்தார்கள் 'என்ன செய்வது?' என்று ஆலோசித்தார்கள்.

'வீட்டை வித்தரலாம்!' என்றான் பரணீதரன்.

'ரொம்ப நட்டமாப் போயிடுமேடா?' என்றான் மணிமாறன்.

'வேற எப்படி?' என்றான்.

பவித்ரா ஒன்று சொன்னாள். 'எங்கப்பா இந்த ஏரியாவுல ஒரு ஆஃபீஸ் போடணுங்கறார். மூணு கடையையும், நாங்க போக்கியத்துக்கு எடுத்துக்கறோம்.. அப்பாகிட்டே நான் பேசறேன்..

'எவ்வளவுக்கு?' என்றான் பரணீதரன் தயக்கத்துடன்.

'ஒவ்வொரு கடைக்கும் ஒரு லட்சம் வாங்கித்தரேன்.'

'இப்ப.. இருக்கறவங்களுக்கு பணத்தைத் திருப்பித் தந்தா.. ஒன்றரை லட்சம்தான் நிக்கும்'

'அதையாவது குடுத்து இப்போதைக்கு அவன் வாயை அடைப்போம்' என்றான் மணிமாறன்.

பிறகும் ஒன்று சொன்னான்.

'பரணி, இப்ப மட்டும் நீ பர்மிஷன் குடுத்தின்னா, எங்கப்பாவையும் பவித்ராவோட அப்பாவையும் விட்டு ஒரு மிரட்டு, மிரட்டினாப் போதும்.. பரமசிவம் வாலைச் சுருட்டிக்குவான்' என்றான்.

'ஆமா!' என்றாள் பவித்ராவும் உற்சாகமாய்.

பரணீதரன் ஒரு பெருமூச்சு விட்டான்.

'வேண்டாம்.. நாம பணம் குடுக்க வேண்டியது நம்ம கடமை. அதைக் குடுத்துட்டு ஒதுங்கிக்குவோம்.. அப்புறம்.. நமக்கும்.. அவனுக்கும்.. என்ன கிடக்கு..?'

பவித்ரா அவனை ஆழ்ந்து பார்த்தாள். இத்தனைக்கு நடுவிலும் மான்விழி அமைதியாக அமர்ந்திருந்தவள் அந்தப் பார்வையைக் கவனித்தாள். கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

தமிழ்ச்செல்வி ஆழ்ந்த வருத்தத்துடன் தரையில் அமர்ந்திருந்தாள். மணிமாறன் அவளருகில் போய்த் தரையில் அமர்ந்தான்.

'அண்ணி! இது ஏதோ கெட்ட நேரங்கண்ணி. அண்ணன் கொஞ்ச நாள் வெளியூர் சுத்திட்டு வரட்டுங்க.. நீங்க.. தைரியமா இருங்க..' நாங்கள்ளாம்.. இருக்கோம்.. பயப்படாதீங்க' என்றான்.

தமிழ்ச்செல்வி கண்கள் கலங்கத் தலையாட்டினாள். பவித்ரா, மான்விழிக்கும் தமிழ்ச்செல்விக்கும் இடையில் அமர்ந்தாள்.



'அக்கா! யாருகிட்டயும்.. எதையும் சொல்ல வேண்டாம்.. யாரு கேட்டாலும்.. சார்.. வெளியூர் போயிருக்காரு.. ஒரு வாரத்துல வந்துருவாருன்னு மட்டும் சொல்லுங்க..' என்றாள்.

அதற்கும் தமிழ்ச்செல்வி கண்களில் நீர் வழியத் தலையாட்டினாள்.

பரணீதரனும் அருகில் அமர்ந்தான்.

'அண்ணி, ப்ளீஸ்.. அழாதீங்க.. நீங்க தைரியமா.. இருந்தாத் தானே.. நாங்க.. தைரியமா இருக்க முடியும்? இனிமே.. பணப்பிரச்சினையை நான் பாத்துக்கறேன்..' என்றான் ஆறுதலாக.

அதே நேரம் டெலிஃபோன் மணியடித்தது.

மான்விழி பாய்ந்து எடுத்தாள்.

அந்தப் பக்கம் சோமநாதன் குரல் கேட்டது. திரும்பி எல்லாரிடமும் பரபரப்பாக

'பெரியத்தான்! பெரியத்தான்!' என்றாள். பிறகு ஃபோனில்.

'என்ன பெரியத்தான்! இப்படிப் பண்ணிட்டீங்க..!' என்று அழுதாள்.

அந்தப் பக்கம் அவன் ஆறுதல் சொன்னான் போலும். தமிழ்ச்செல்வியை அழைத்து அவள் கையில் கொடுத்தாள் அவளுக்கும் ஆறுதல் சொன்னான். பிறகு பரணீதரனிடம் பேசினான்.

'பரணி! மனசு சரியில்லடா..! கொஞ்ச நாள் வெளியூர் போறேன்டா.. ஹௌரா மெயில்ல கொல்கத்தா.. புறப்படறேன். கொஞ்ச நாள் மேனேஜ் பண்ணு. வீட்டை வேண்ணா வித்துடு.. ஒரு மாசம்.. ரெண்டு மாசத்துல வந்தர்றன்டா..' என்றான்.

அதற்குள் மணிமாறன் 'அண்ணா, எந்த ஊருக்கு போனாலும் ஃபோன் பண்ணுங்க. அப்பாவுக்கு வேண்டியவங்க.. நார்த்ல இருக்காங்க.. கவலைப்படாம.. போயிட்டு.. வாங்க! என்றான்.

ஓரளவு மனம் தெளிவடைந்தது. எல்லாருக்கும் அந்த உற்சாகத்தில் 'மான்விழி அவசர, அவசரமாக ரவா உப்புமா.. செய்தாள்.

சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினார்கள்.

அந்த நேரம்!

பரணியை அழைத்து தமிழ்ச்செல்வி ஏதோ சொன்னாள். உடனே பரணீதானும் சிரித்துக் கொண்டே அந்த ஃபோன் செட்டைக் கொண்டு வந்து

'ரொம்பத் தாங்ஸ்டா.. மணி! குழந்தைங்க.. இதை ரொம்ப வைக் பண்ணினாங்க..!' என்றான்.

'அது சரி! குழந்தைங்க.. எங்கே!'

'அப்பவே... தூங்கிட்டாங்க..!' என்றாள் மான்விழி.

புறப்பட்டார்கள்!

எல்லாருடைய மனமும் ஓரளவு தெளிந்தாற்போல் நம்பிக் கொண்டார்கள். அது வெறும் கானல் நீர் போன்ற நம்பிக்கை என்று அன்று புரியவில்லை!

∴ ∴ ∴

மணிமாறன் வீட்டில் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

நடுத்தரக் குடும்பங்களும், கீழ் நடுத்தரக் குடும்பங்களும் பணம் சேர்க்க வேண்டும் என்று நினைத்து ஆரம்பித்தால் எல்லாம் சரியாகப் போனால் தப்பித்தார்கள். இல்லையென்றால் வாழ்க்கையே தலைகீழாகப் புரட்டிப் போட்டாற் போல் ஆகி விடுகிறதே என்ற ஆதங்கம் அவன் மனத்தை ஆக்கிரமித்தது.

அந்த ஃபாரின் ஃபோன் செட்டை எடுத்தான்.



எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கை யிலேதான் அதைக் கண்டுபிடித்தான்.

பரமசிவமும், சோமநாதனும் பேசிய பேச்சு அதிலே பதிவாகியிருந்தது.

கேட்டான்!

அதிர்ந்து போனான்! அதிலும், பரமசிவம் கடைசியாக சொன்ன வார்த்தைகளைக் கேட்டபோது அவனுக்கே கோபம் குப்பென்று தலைக்கேறியது.

'நாய்களா! உங்களை!' என்று கறுவிக் கொண்டு எழுந்தான். பிறகு நிதானித்துக் கொண்டான்.

'வேண்டாம்! இந்தக் கோபத்தை அவனுங்களிடம் காட்டப் போய்.. பரணிக்கு விவரம் தெரிய வரும்.. அப்புறம்.. வெட்டுக் குத்துதான்.. நடக்கும்..!' என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

'பிரச்சினை வரக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ்ச்செல்வி அண்ணி கூட இதைச் சொல்லவில்லை போலும் என்று தேற்றிக் கொண்டான்.

அவனும் உறங்குவதற்கு வெகு நேரமாயிற்று. ஆனால், வழக்கமில்லாத வழக்கமாக மூன்று மணிக்கே விழிப்பு வந்து விட்டது. சற்று நேரம் ஏதோ ஆங்கிலப் படம் போட்டுப் பார்த்தான். பிறகு ரிமோட்டைக் கையில் வைத்துக் கொண்டு சானல் சானலாக மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதிலும், இடையிடையில் செய்திகளுக்காக அந்த நியூஸ் சானலை அடிக்கடி பார்ப்பது அவன் வழக்கம்.

அப்படி அப்போது பார்த்தான். அப்போதுதான் அந்த ஃபிளாஷான வரிகளைப் பார்த்தான்.

அதிர்ந்து போனான்.

'சென்னையிலிருந்து புறப்பட்ட ஹௌரா மெயில் நள்ளிரவில் விபத்தில் சிக்கியது. இரண்டு பெட்டிகள் எரிந்து போயின. ஏராளமானோர் மரணம்!

பரணீதரனின் வீட்டில் காலை நேரத்தில் டி.வி. போட மாட்டார்கள் என்பது தெரியும். அதிலும் இந்த நேரத்தில் நிச்சயமாகப் போட மாட்டார்கள்.

உடனே புறப்பட்டான்!

காரை எடுத்தான்!

∴ ∴ ∴

பரணீதரன் கதவைத் திறந்தான்!

சற்றே ஆச்சரியமானான்!

'என்னடா! இந்நேரத்துல!' என்றான் பரணீதரன்.

மணிமாறன் அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

'வா.. சொல்றேன்!' என்று பரபரப்பாக உள்ளே அழைத்து போனான்.

விவரம் சொன்னான்!

பரணீதரனின் முகம் வெளுத்தது. படபடப்பானான். கைகள் நடுங்க டி.வியை ஆன் செய்தான். சத்தமில்லாமல் ஓட விட்டான்.

செய்தி கீழே ஃப்ளாஷாக வந்தது.

'ஐயோ! அண்ணா! என்று பெருங்குரலெடுத்து அழுதான்.

சத்தம் கேட்டு தமிழ்ச்செல்வி ஓடிவந்தாள்.

'என்ன? என்ன?' என்று பதற அவன் டி.வியை கையைக் காட்டினான்.



சடலங்கள் சிதறிக் கிடந்த அந்தக் காட்சியைக் கண்ட தமிழ்ச்செல்வி கதறி அழுது மயங்கிச் சாய, பரணீதரன் குலுங்கி குலுங்கி அழ, மணிமாறன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

∴ ∴ ∴

**யா**ருக்கும் விவரம் தெரியவில்லை!

யாராலும் எதுவும் சொல்ல முடியவில்லை. புகை மண்டலமாய், கறுப்புக் காடாய்க் கிடந்த இடத்திலே புதையுண்டவர்கள் எத்தனை பேர்! மாண்டவர்கள் எத்தனை பேர்! பிழைத்தவர்கள் எத்தனை பேர்! யாருக்கும் தெரியவில்லை.

மணிமாறன், அவர் அலுவலகத்து உதவியாளர்கள், பவித்ரா, மான்விழி, தமிழ்ச்செல்வி.. என்று எல்லாரும் வேனில் வந்திருந்தார்கள்.

'ஐயோ.. இது அவுரு வாட்ச மாதிரி இருக்கே!' என்று திடீரென அழுதாள் தமிழ்ச்செல்வி.

வாங்கிப் பார்த்தார்கள். அவனுடையது மாதிரித்தான் இருந்தது. ஆனால் அதுவொன்றும் வித்தியாசமாக டிசைன் வாட்ச இல்லை. நிறையப் பேரிடத்தில் அது போன்று இருந்தது. ஒரு நாள் முழுதும் அலைந்தார்கள். பிழைத்தவர்கள் என்று கொஞ்சம் பேர் திகைப்பும், பீதியுமாய் அமர்ந்திருந்தார்கள். அதில் சோமநாதன் இல்லை.

கண்ணீரும், கம்பலையுமாய்ப் பெண்கள் வேனில் வந்தார்கள்.

ஒரு இடத்தில் மணிமாறன் வண்டியை நிறுத்தினான்.

ஹோட்டல்!

'வேண்டாம்ப்பா! சாப்பாடா முக்கியம்!' என்று அழுதாள் தமிழ்ச்செல்வி.

'அண்ணி! முதல்ல நான் சொல்றதைக் கேளுங்க.. வயித்துக்கு ஏதாவது சாப்பிடுங்க..' என்றான் மிரட்டலாக.

பரணீதரனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

'பனி.. நீ இவர்களையெல்லாம் கூட்டிட்டுப் போய் சாப்பிட வை!' என்றான். மற்ற நண்பர்களும் இறங்கிப் போனார்கள்.

ஒருவன் மட்டும் பார்சல் வாங்கிக் கொடுக்க மணிமாறனும், பரணீதரனும் தமிழ்ச்செல்வியின் பக்கத்தில் அமர்ந்தார்கள். பரணீதரன் அழுத்தமான குரலில் சொன்னான்.

'அண்ணி! அண்ணனுக்கு என்ன ஆயிருந்தாலும்.. சரி..! இனித்தான்.. நீங்க எழுந்து நிக்கணும்.. பணப்பிரச்சினையை விடுங்க.. நான்.. பாத்துக்கறேன்.. குடும்பத்துல.. குழந்தைகளுக்கு. அண்ணனோட இழப்பு தாக்காம.. கொண்டு போக வேண்டிய கடமை இருக்கு.. இப்ப என்னைப் பாருங்க! நான் முழுங்கிட்டு நிக்கலையா? குழந்தையா.. என்னை வளர்த்த அண்ணன்! வாரிக் குடுத்துட்டு உசுரோட இருக்கேன்! தோலை செருப்பாப் போட்டு உழைச்சுக் குடும்பத்தைக் காப்பாத்தறேன்.. அண்ணி! நீங்க மட்டும் மனசு விட்டுராதீங்க.. அண்ணி!' என்று வெடித்து அழுதான்.

இருவரும் அழுதார்கள். பிறகு மெல்லத் தேறினான்.

'சாப்பிடுங்கண்ணி!' என்று சாப்பிட வைத்தார்கள்.

மணிமாறனும் அழுது கொண்டே போய் வேனுக்கு வெளியே தலை காட்டி ஏதோ சொன்னான். அவன் வாங்கி வந்து தர ஒரு மாத்திரையை நீட்டினான்.

'இந்தத் தூக்க மாத்திரையைப் போடுங்க..' என்று சாப்பிட வைத்தார்கள்.

பின் சீட்டில் கால் நீட்டிப் படுக்க வைத்தார்கள். உறங்கி விட்டான்.

பிறகு வண்டி கிளம்பிய பின்தான் மணிமாறன் தோளில் முகம் புதைத்து அழுகிற நண்பனை மணிமாறன் தேற்ற முற்பட்டான்.



மான்விழி ஒருபக்கம் அழுதாள்.

'விடுறா.. மாறா! அழுதுக்கறேன்!

அண்ணி முன்னால துக்கத்தைக் காட்ட முடியாம.. போதுங்கற அளவுக்குப் பட்டுட்டன்டா. விடு.. இப்ப.. அழுதுக்கறேன்' என்று வெடித்து அழுதான் பரணீதரன்.

ஊர் வந்ததற்குப் பின்பும்.. இரண்டு மூன்று நாட்கள் துக்கம் விசாரிக்கக் கூட்டம் வந்து கொண்டே இருந்தது.

இதற்கு நடுவே அங்கு வந்த பரமசிவத்திடம் மணிமாறன் ஏதோ மிரட்டிக் கொண்டிருந்ததை மான்விழி கவனித்தாள் உடனே போய் பரணீதரனிடம் சொன்னாள். அவன் வெளியே போவதற்குள் பரமசிவம் போய்விட்டான்.

'என்ன விஷயம் மணி!' என்றவனிடம் 'ஒண்ணுமில்லே! எங்கப்பா.. யாரு.. பனியோட அப்பா.. யாருன்னு விவரமாச் சொன்னேன். பேசாமப் போயிட்டான். விசாரிக்க வந்தானாம்.. பொறுக்கிப் பய.. இவனுக்கு.. இருக்குடா.. வேட்டு.. நீ போய் உள்ள வந்தவங்ககிட்டே.. பேசு..! இந்தப் பயலை நான் பாத்துக்கறேன்' என்றான் மணிமாறன் ஆக்ரோஷமாக.

பரணீதரன் மணிமாறனை இவ்வளவு கோபமாகப் பார்த்ததில்லையாதலால் சற்றே வியப்பாய்ப் பார்த்துவிட்டு உள்ளே போனான்.

அங்கே வேறொரு வேதனை காத்திருந்தது.

∴ ∴ ∴




கும்பல், கும்பலாகப் பெண்கள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மான்விழி உள்ளே வேலையாக இருந்தாள். இரண்டு, மூன்று பெண்கள் தமிழ்ச்செல்வியின் அம்மாவிடம் போய்த் திரும்பத் திரும்பக் கேட்டார்கள்.

கடைசியில் பர்வதம் தமிழ்ச்செல்வியின் தாய் 'ஐயோ, என்னை விடுங்க.. என்னை எதுக்குக் கேட்கறீங்க?' என்று பெருங் குரலெடுத்து அழுதார். அந்தச் சத்தம் கேட்டு வெளியில் அமர்ந்திருந்த பெரியவர்கள் எழுந்து வந்தார்கள்.

ஒரு பெண்மணி தயங்கியபடி அவர்கள் குடும்ப நண்பரும், இது போன்ற விஷயங்களில் ஆலோசனை சொல்பவருமான சிவசுந்தரத்திடம் சொன்னாள்.

'ஐயா! சோமனோட உடம்பும் கிடைக்கலை. தெளிவா ஒன்னும் புரியலை. செல்வியோட மங்கலியத்தை வாங்கறதா.. என்ன.. ஒன்னும் புரியலே..' என்றார்.

பரணீதரன் வேதனையுடன் இதைப் பார்த்துக் கொண்டிருந் தவன் சட்டென்று தமிழ்ச்செல்வி அமர்ந்திருந்த அறைக்குள் போனான்.

'அண்ணி! உங்க மனசுக்கு என்ன தோணுதோ.. அதைச் சொல்லுங்க..' என்றான்.

தமிழ்ச்செல்வி தன் மாங்கல்யத்தை இறுகப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

'ஐயோ! பரணி அவுரு எங்கயோ உயிரோட இருந்து.. இதைக் கழட்டினா.. தப்பாப் போயிடுமில்லே.. அவுரு எங்கயோ.. இருக்காருன்னு நான் நம்பிக்கறனே.. அதுக்கு விட மாட்டீங்களா?' என்று பெருங்குரலெடுத்து அழுதாள்.



அந்த அறையின் வாயிலில் வந்து நின்ற சிவசுந்தரம் சற்று நேரம் சிந்தனையுடன் நின்றார். மீண்டும் ஹாலுக்கு வந்து அழுத்தமான குரலில் சொன்னார்.

'மாங்கல்யம் செல்வி கழுத்திலயே இருக்கட்டும்.. வாங்க.. வேண்டாம்..' என்றார்.

பெண்கள் எல்லாரும் திகைத்துப் போய் நின்றனர்.

'சோமன் இல்லாமயே போயிருந்தாலும்.. சரி.. மாங்கல்யத்தை வாங்க வேண்டியதில்லை.. எல்லாரும்.. போயி வேலைகளைப் பாருங்க..' என்றார்.

ஆனால், பெண்கள் கலையவில்லை.

ஒரு பெண்மணி 'அதெப்படிங்க'? என்று ஆரம்பித்தார். சிவசுந்தரம் மறுபடியும் அழுத்தம் தொனிக்கும் குரலில்.

'சோமன்.. எங்கயோ.. உயிரோட இருக்காருன்னு அந்தப் பொண்ணு நம்புது.. நம்பிக்கைதானே.. வாழ்க்கை..' என்றார்.

மற்ற பெண்கள் சமாதானமாகவில்லை. சிவசுந்தரம் ஒரு காரியம் செய்தார்.

'எல்லாரும்.. அமைதியா.. உக்காருங்க.. என்று அமர வைத்தார்.

'பாருங்கம்மா.. நீங்க நினைக்கற மாதிரித் தாலி வாங்கற வழக்கம் வேண்டாம்னு நானாச் சொல்லலை. வள்ளலார்ன்னு ஒரு ஞானி.. கேள்விப்பட்டிருக்கீங்களா? அவரே சொல்றாரு..

"ஆண்களைப் போலவே சகல பெண்களும் கலைகளுக்கும் உரியவர். பெண்கள் கணவனை இழந்தால் பூவையும், பொட்டையும் இழக்கின்றனர். மங்கல நாணை அகற்றி விடுகின்றனர். இனி இவற்றையெல்லாம் இழக்காமல் மங்கலக்கோலத்துடன் இருக்கலாம்" என்கிறார்.

கணவன் இறந்தபின் பெண்களுக்குத் தாலி வாங்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார். விதவைக் கோலம் செய்வதை வள்ளலாரே தடுக்கிறார். அப்படியிருக்க.. நம்மளை மாதிரி சாதாரண மனுஷங்க.. சொல்றதுக்கு.. என்ன இருக்கு? அதனால செல்வி.. பாட்டுக்கு சோமன் எங்கயோ.. வெளியூரு போயிருக்கான்னு நினைச்சுகிட்டு.. இருக்கட்டும்.. ஆள் பொழைச்சிருந்தா.. எப்படியும்.. காண்டாக்ட் பண்ணுவான்.. இல்லே..! அப்புறம் முடிவு பண்ணிக்கலாம்..!' என்றார்.

அந்த விஷயத்துக்கு அன்றோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இது மாதிரி விஷயங்களில் முன்னாலே நின்று அதிகாரம் செய்து பழக்கப்பட்ட பெண்கள் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் 'ஆமா! ஐயா.. சொல்றதுதான்.. சரி.. பாவம்.. ஏற்கெனவே.. அவ.. நொந்து போய்க்கிடக்கா..' என்றபடி மெது மெதுவாகக் கலைந்தார்கள்.

அதையும் இதையும் பேசிய பெண்களிடம் சிவசுந்தரம் கண்டிப்பாக ஒரு வார்த்தை சொன்னார்.

'இதபாருங்கம்மா! ஒரு குடும்பத்து நல்லது.. பொல்லதுகள்ல.. மத்த நெருங்கின குடும்பங்க.. ஏன்.. கலந்துக்கறோம் தெரியுமா? சந்தோஷத்தை நாலு பேருகிட்ட பகிர்ந்துகிட்டா.. அதிகமா.. ஆகும்! துக்கத்தை நாலு பேருகிட்ட பகிர்ந்துட்டா.. கம்மியா.. ஆகும்.. விஷயம்.. அதுதான்.. மற்றபடி.. சடங்குகள் மனுஷனாப் பாத்து அமைச்சுகிட்டதுதான்.. அதனால துக்கம் வரும் போது.. மனுஷத் தன்மையா சடங்கான்னு பாத்தா.. மனுஷத் தன்மைதான் முக்கியம்.. முடிந்தா.. அந்தப் பொண்ணுக்கு ஆறுதல் சொல்லுங்க..' என்றார்.

அதற்குப் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை. மெதுவாகக் கலைந்தார்கள்.

பரணீதரனும் கண்டு கொள்ளவில்லை.



அண்ணியின் மனது சமாதானமாகட்டும்.. மற்றதையெல்லாம்.. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டான்.

∴ ∴ ∴

இரண்டு மூன்று நாட்கள் போயிருக்கும்!

காலை ஏழு மணியிருக்கும். பரமசிவத்திடம் சதாசிவம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

'உன்னை யாருண்ணா அப்படியெல்லாம்.. பேசச் சொன்னா? இப்பப் பார்த்தா.. அந்த பரணீதரனுக்குப் பூராவும் பெரிய.. இடத்துத் தொடர்பா.. இருக்கும் போலிருக்கு.. என்னென்ன வில்லங்கம்.. வருமோ?..' என்று புலம்பினான்.

அப்படி அவன் புலம்பிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே வீட்டின் முன்பாக சர் சர்ரென்று இரண்டு மூன்று கார்கள் வந்து நின்றன.

இறங்கி வந்தவர்களைப் பார்த்து சகோதரர்கள் இருவரும் திகைத்து நின்றார்கள்.

∴ ∴ ∴

முதல் நாளிரவு!

சோமநாதன் போன நாளிலிருந்தே மணிமாறன் வந்து சற்[...] நேரம் இருந்து விட்டு செல்வது வழக்கமாகி இருந்தது.

அதுபோல் அன்றைக்கும் ஒன்பது மணியிருக்கும். பரணீதரனு[...] மணிமாறனும் மொட்டை மாடியில் இருந்த ஒரே அறையில் பேசி[...] கொண்டிருந்தார்கள்.

'எனக்குப் பொறுப்புக் கூடுதலாயிருச்சுடா.. மணி! வீட்[...] எல்லாமே லேடீஸாப் போச்சு. இவங்களை விட்டுட்டு வெளியூ[...] வேலைக்கு எப்படிப் போறதுன்னு.. தெரியலடா..!' என்றா[...] பரணீதரன்.

'எல்லாம்.. யோசிக்கலாம்டா.. இந்தக் கடைசி செமஸ்டரையும் முடிச்சா.. அப்புறம்.. ஏதாவது.. வழி பண்ணலாம்டா!' என்றான்.

'அது மட்டுமில்லாம.. இந்தப் பரமசிவம் பிரச்சினை.. வேற.. இருக்கு..!

'அந்த நாய்களை..!' என்று மணிமாறன் பல்லைக் கடிக்கவும் பரணீதரன் சற்றே வியப்பாய்ப் பார்த்தான்.

'நாய்கள்' என்பன போன்ற சொற்களையெல்லாம் மணிமாறன் அவ்வளவு விரைவில் பயன்படுத்த மாட்டான். ஒருவேளை அவர்களால்தான் அண்ணனுக்கு இந்த நிலைமை என்ற கோபம் என்று எண்ணிக் கொண்டான். அப்போது மணிமாறன் தொடர்ந்தான்.

'அந்தப் பரமசிவத்தை உண்டு.. இல்லைன்னு பண்ணி டணும்டா.. அந்த நாய் பேசின வார்த்தைதாண்டா.. இத்தனைக்கும் காரணம்' என்றான் தன்னை மறந்து.

பரணீதரன் வெறித்துப் பார்த்தான்.

'மாறா! நீ என்னத்தையோ எங்கிட்டே மறைக்கறே!' என்றான்.

மணிமாறனின் முகம் வெளுத்துப் போனது.

'நான் கிளம்பறண்டா!' என்று எழுந்தான்.

பரணீதரன் வழியை மறித்தாற்போல் நின்றான்.

'மாறா! டோன்ட் டூ திஸ் டு மீ! என்ன விஷயம்.. சொல்லு!' என்றான்.

மணிமாறன் நின்றான் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'ஆமடா! அந்தப் பரமசிவம் உங்கண்ணனை ரொம்பப் பேசிட்டான்!'

பரணீதரன் இறுகிய முகத்துடன் கேட்டான். மணிமாறன் தயக்கத்துடன்



'அந்த ஃபோன்ல ரெகார்ட் ஆயிருந்தது..' என்றான்.

'நான் கேட்கணும். இப்ப..!' என்றான். புறப்பட்டார்கள்!

ஃ ஃ ஃ

முதற்கட்டப் பேச்சுகள் முடிந்த பின்னர் பரமசிவம் கேட்டான்.

'ஏம்ப்பா! எப்பக் கேட்டாலும் இப்படியே சொல்றே! இப்ப.. என்ன.. உங்க வீட்ல ரெண்டு அழகான லேடீஸ்.. இருக்காங்க.. உன்ற கொழுந்தியாளைக் கேட்டாலும் குடுக்க மாட்டேங்கறே.. என் தம்பி வேற ரொம்ப இன்ட்ரஸ்ட்.. காட்டறான்.. ஒண்ணு. பணத்தைக் குடு.. இல்லே.. கல்யாணம் ஏற்பாடு பண்ணு.. இல்லே.. கொஞ்ச நாளைக்கு ஃபிரண்ட்லியா இருக்க.. விடு.. யாருக்குத் தெரியப் போகுது? என்றான்.

'ஃபிரண்ட்லியான்னா?' என்றான் சோமநாதன் கடுப்பாக.

'என்னப்பா! நீ புரியாதவன் மாதிரி பேசறே? எங்கயாவது அங்கயும், இங்கயும் டூர் மாதிரிப் போயிட்டு வரட்டுமே? கடனைப் பூராவும் தள்ளி விட்டர்றேன்!' என்றான்.

அப்போதுதான் சோமநாதன் ஃபோனை டொக்கென்று வைத்து விட்டு வெடித்து அழுதது.

'இந்தப் பேச்சுக்களைக் கேட்ட பரணீதரனின் முகம் இறுகியது.

பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டான்.

தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

இப்போது மணிமாறனின் வீட்டில் இருந்தார்கள்.

மணிமாறன் துக்கத்துடன் அவனைப் பார்த்தான்.

'டேய்! பரணி! நான் அண்ணைக்கே இதை அழிச்சிருப்பேன்.. ஆனா, பரமசிவத்து வாலை ஒட்ட நறுக்கறதுக்கு.. ஒரு எவிடென்ஸ்ங்கறதுனாலதான் அப்படியே வச்சிருக்கேன்' என்றான்.

பரணீதான் ஒன்றும் பேசவில்லை.

'தான் தவறு செய்து விட்டோமோ?' என்ற பயம் கூடத் தோன்றிவிட்டது மணிமாறனுக்கு.

'ஏன், பரணீ நான் ஏதும் தப்புப் பண்ணிட்டேனோ?' என்றான்.

'இல்லல்லே! அண்ணன்தான் தப்புப் பண்ணிட்டார்! பெரிய தப்புப் பண்ணிட்டார்!' என்றான். ஆழ்ந்ததொரு பெருமூச்சு விட்டான். பிறகு மணிமாறனைப் பார்த்தான்.

'மாறா! இதுநாள் வரைக்கும் ஃபிரண்ட்ஸ்கிட்டே உதவி கேட்க வேண்டாம்னு நினைச்சுகிட்டிருந்தேன். ஆனா, நிலைமை இப்படியானதுக்கப்புறம்.. உன்கிட்டே.. என்னடா.. சுயமரியாதை? எனக்கு ஒரு மூணு லட்ச ரூபா.. கடன் குடுடா.. மூணு வருஷத்துல எப்படியாவது திருப்பிக் குடுத்தர்றன்டா..' என்றான் தழுதழுத்த குரலில்.

அப்படியே தலைகவிழ்ந்து மேஜை மேல் முகம் பதித்துக் கொண்டு வெடித்து அழுதான். மணிமாறனின் கை அவன் தோளின் மேல் ஆழப்பதிந்தது.

'அழாதடா.. பரணி! நீ இப்படிக் கேட்க மாட்டியான்னுதான்.. நான்.. எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். ஒரு வார்த்தை.. சொல்லு.. நான் எப்படி அவங்களை டாக்கிள் பண்றேன்.. பாரு..' என்றான்.

∴ ∴ ∴

பரமசிவமும், சதாசிவமும் திகைத்துப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே மணிமாறனின் அப்பா உள்ளே நுழைந்தார்.

மாணிக்கம் ஊரின் முக்கியப் புள்ளி அவர்.. அதுவும்.. இந்தக் காலை நேரத்தில்..!

பரமசிவம் வியப்பாய்ப் பார்க்கையிலேயே பின்னாலேயே.. பரணீதரன்.. வந்தான்.. மணிமாறனும் கூட வந்தான்.



உள்ளே நுழைந்தவர்களுக்கு அவசர.. அவசரமாக சேர் போட்டான் பரமசிவம்..

'ஐயா! வாங்க.. நீங்க எங்கே.. இங்கே?' என்று உபசரித்தான்.

'இல்லே! ஒரு விஷயம்.. இங்கே.. செட்டில் பண்ண வேண்டியிருக்கு!' என்றார்.

அவர் பார்வையைப் பார்த்த மணிமாறன் ஒரு தோல்பையை எடுத்தான். அதன் உள்ளிருந்து.. மூன்று ஆயிரம் ரூபாய்க் கட்டுக்களை.. எடுத்தான்.

முன்னாலிருந்த டீபாயின் மேல் வைத்தான். மாணிக்கம் பரமசிவத்தைப் பார்த்தார்.

'பாருப்பா!.. சோமநாதன் உனக்குக் குடுக்க வேண்டிய.. பணம்.. மூன்று லட்சம்.. ஏதாவது.. புரோ நோட்டு கீட்டு இருந்தா.. எடு..' என்றார்.

பரமசிவம் சதாசிவத்தைப் பார்க்க அவன் போய்.. உள்ளே பீரோவில் தேடி சோமநாதன் கொடுத்திருந்த புரோ நோட்டுகளை எடுத்து வந்தான்.

'இத பாருப்பா! சோமநாதன் குடுக்க வேண்டிய பணம் இதுதானா? இன்னும் இருக்கா?'

'இல்லைங்க.. ஐயா!'

'அவன் எத்தனை புரோ நோட்டு எழுதிக் குடுத்திருக்கான்னு.. தெரியல! அதனால பணத்தை பாக்கி தீரப் பெற்றுக் கொண்டேன்னு ஒரு ரசீது எழுதிக் குடு' என்றார் மாணிக்கம்.

பரமசிவம் கப்சிப்பென்று எழுதிக் கொடுத்தான். வாங்கிப் பார்த்த மாணிக்கம்

'உன் தம்பியையும் கையெழுத்துப் போடச் சொல்லு..' என்றான்.

சதாசிவமும் சத்தமில்லாமல் போட்டுக் கொடுத்தான். வாங்கிக் கொண்டார்.

பிறகு மகனைப் பார்த்தார். பிறகு திரும்பி

'ஏம்ப்பா! உன்ற வீட்ல வயசுப் பொண்ணுக இருக்காங்களா?' என்றார்.

'ஆமாங்க! என்ற தங்கச்சி.. இருக்குங்க!'

'இல்லே! நமக்கு வேண்டியவர் ஒருத்தர்.. பொண்ணு கேக்காலாமான்னு பாக்கறாங்க!' என்றார்.

பரமசிவம் உற்சாகமானான். உள்ளே திரும்பித் தன் மனைவியையும், தங்கையையும் அழைத்தான். அறிமுகப்படுத்தினான்.

மாணிக்கம் தொடர்ந்து 'ஏம்ப்பா! ஒருவேளை இந்த அலையன்ஸ் ஒத்து வர்லேன்னு வச்சுக்க..' என்று மகனைத் திரும்பிப் பார்க்க அவன் மறுபடியும் தோல் பைக்குள் கைவிட்டு இரண்டு கட்டுகளை எடுத்து வைத்தான்.

'இதுல.. ரெண்டு லட்ச ரூபாய் இருக்கு..! உன்ற வீட்டு லேடீஸை ஒரு வாரம் டூர் அனுப்புவியான்னு கேக்கறாங்க' என்றார் இறுகிய முகத்துடன்.

பரமசிவத்தின் முகம் வெளுத்தது. அவன் தங்கை அழுது கொண்டு உள்ளே ஓடினாள். மனைவி கோபமாக மாணிக்கத்தைப் பார்த்தாள்.

'ஐயா.. நீங்க.. ஒரு பெரிய மனுஷன் தானே? இப்படிக் கேட்கலாமா?' என்றாள்.

'இந்த வார்த்தைகளை அப்படியே உன்ற வீட்டுக்காரன்கிட்டே கேளு.. அம்மினி! ஏன்னா! இப்படி வார்த்தையை அவன் கேட்டுத்தான்.. ஒரு குடும்பமே நிலை குலைஞ்சு போய்.. இருக்கு-



ஒருத்தன் செத்தானோ.. இருக்கானோன்னு தெரியாத நிலைமை! இப்ப.. மூணு லட்சத்தைத் தூக்கி உன்ற 'வீட்டுக்காரன் மூஞ்சில நான் வீசிட்டேன்.. அவனை சோமநாதனைக் கொண்டு வந்து குடுக்கச் சொல்லு..' என்றார் மாணிக்கம்.

பரமசிவமும் சதாசிவமும் பேச வாயெழாமல் நின்றார்கள்.

இது வரையிலும் பேசாமல் நின்ற பரணீதரன் இப்போது குறுக்கிட்டான்.

'ஐயா! வேண்டாங்க! பணம் இன்னைக்கு வரும்.. நாளைக்குப் போகும்.. ஆனா.. யாரு மனசையும் நோகடிக்கக் கூடாதுங்க. பரமசிவண்ணன் கேட்ட வார்த்தைகள்ல.. எங்க குடும்பம்.. பட்ட வேதனை போதும்.. அவங்க குடும்பத்து லேடீஸ் என்ன செய்வாங்க! விட்டுருங்க..!' என்றான்.

பரமசிவத்தின் மனைவி பரமசிவத்தை முறைத்துக் கொண்டு நின்றாள்.

பரணீதரன் அதோடு நிறுத்தவில்லை.

'ஐயா! உங்களை சாட்சியா வச்சுட்டுப் பேசறனுங்க! பரமசிவண்ணே! கேவலம் பணத்துக்காகப் பொம்பளைங்களை டூர் அனுப்பறவங்க.. நாங்க இல்லே! அதுக்குப் பதிலா.. அவங்களை கண்டம்.. துண்டமா வெட்டி வேண்ணாலும் போடுவம்.. அதுமட்டுமில்லே! இனிமேக் கொண்டு உங்க தம்பியோ.. நீங்களோ.. எங்க குடும்பத்தைப் பத்தி ஏதாவது பேசினீங்கன்னு.. தெரிந்தது.. உங்களை நான் கண்டம்.. துண்டமா.. வெட்டிப் போடுவேன்..!' என்றான்.

சாவதானமாக திரும்பி மணிமாறனிடம் 'போலாமா.. மாறா!' என்றான்.

வீட்டின் முன் இறங்கி விட்ட மணிமாறனிடம்.

'மாறா! அண்ணிகிட்டே நானே சொல்லிக்கறேன்.. ரொம்பத் தாங்ஸ்டா.. மாறா! ஆயுசுக்கும் மறக்கமாட்டேன்!' என்று அவன் இரு கைகளையும், தன்னிருகைகளாலும் தாங்கிப் பிடித்துக் குலுக்கினான்.

ஒருவிதமான நிறைவுடன் உள்ளே நுழைந்தவன் அண்ணியின் அறையில் மான்விழி சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டு வெறி பிடித்தாற் போல் நின்றான்.

∴ ∴ ∴




'மானு! இனி மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசாதே! நிறுத்து!' என்று கிட்டத்தட்ட கர்ஜனை செய்தான் பரணீதரன்.

அழுகையும், தேம்பலுமாய் தான் சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள் தமிழ்ச் செல்வியும், மான்விழியும்.

மான்விழி தன் சகோதரியிடம் அழுகையுடன் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுத்தான் அவனுக்கு அத்தனை கோபம்.

'அக்கா! அந்த சதாசிவத்துக்குப் பொண்ணு கேட்டாராமா பரமசிவம்?' என்று அக்காவைக் கேட்டாள்.

'ஆமாடி! மானு.. ஆனா, அவன் கேரக்டர் ரொம்ப மோசம்னு பரணி ஒத்துக்கலை' என்றாள் தமிழ்ச்செல்வி.

'அக்கா! என்னக்கா மோசம்? அந்த ஆள் தண்ணி போடறாராக்கும்.. வேற சகவாசமாக்கும்? இருந்துட்டுப் போகட்டுமேக்கா.. ஒருவேளை.. எனக்கு நல்ல மாப்பிள்ளையாவே பாத்துக் கல்யாணம் செஞ்சு வச்சாக்கூட அவன் நாளைக்கு அப்படி



மாற மாட்டான்னு என்ன நிச்சயம்? என் தலையெழுத்துன்னு இருந்துட்டுப் போறேன்.. இப்படிப் பெரியத்தான் இருக்காரா.. இல்லையான்னு தினம் தினம் செத்து செத்துப் பொழைக்கறமே.. அந்த வேதனையை விடப் பெருசாப் போயிருமா.. அது?' என்றாள்.

அந்தக் கட்டத்தில்தான் பரணீதரன் நுழைந்து சத்தம் போட்டது.

அவன் கோபத்தைப் பார்த்த சகோதரிகள் இருவரும் திகைத்துப் போனார்கள்.

'மானு! நீ ஒரு தமிழ் வாத்தியார் பொண்ணுதானே! புறநானூறு படிச்சிருக்கியில்ல? போர்க்களத்துக்கு முதல்ல புருஷனை.. அனுப்புவாங்களாம். அவன் போனா மகனை அனுப்புவாளாம்.. அது மாதிரி.. அண்ணன் போனா.. என்ன.. நான் இருக்கேன்.. நான் போனாக் கூட..! என்று விக்னேஷை இழுத்து நிறுத்தினான்.

'பாரு! இந்தப் பயல் இருக்கான்! இவன் காப்பாத்துவான்.. உங்களை!' என்றான்.

வாய் துடிக்க நாசி துடிக்க அவன் நின்ற விதம் பார்த்து திகைத்த மான்விழி நிதானத்துக்கு வந்தாள்.

'சின்னத்தான்! எதுக்குக் கோபப்படறீங்க! நிதானம்.. நிதானம்..!' என்றாள்.

பரணீதரன் நிதானப்பட்டான். ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

'பாருங்கண்ணி! இனிமே அந்தச் சதாசிவம் இல்லயில்ல சோதாசிவத்தையும், பரமசிவத்தையும் பத்திக் கவலைப்பட வேண்டாம். அவனுகளுக்குப் பணத்தைக் குடுத்தாச்சு..' என்றான்.

தமிழ்ச்செல்வி நம்ப முடியாதவளாய்ப் பார்த்தாள். 'ஆமாங்கண்ணி! அண்ணன் மட்டும் என்கிட்டே உட்கார்ந்து பேசியிருந்தா.. விஷயத்தை ஈஸியா முடிச்சிருக்கலாம்..' என்றான்.

தமிழ்ச்செல்விக்கு சுருக்கென்று பட்டது போலும்.

'இப்பவும்.. எப்படிப்பா.. குடுத்தே? கடன் வாங்கித்தானே?' என்றான்.

'ஆமா! ஆனா.. யார்கிட்டே குடுக்கல் வாங்கல் வச்சுக்கலாம்னு பார்த்துத் தகுதியானவங்ககிட்டே!' என்றான்.

தமிழ்ச்செல்வியின் முகம் வாடியது. சட்டென்று பரணீதரன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'அண்ணனை நான் குறை சொல்லலே அண்ணி. அவனுங்க.. சரியில்லாத ஆளுங்கன்னு சொன்னேன்' என்றான்.

'ஆமா!' என்றாள் தமிழ்ச்செல்வி கண்களில் திரள பரணீதரன் வருத்தத்துடன் தொடர்ந்தான்.

'அண்ணி! நீங்களே என்கிட்டே வருத்தப்பட்டுச் சொல்லியிருக்கீங்க..' என்றான்.

'ஆமா..!' என்றாள் மறுபடியும்.

'அண்ணி! போனது போகட்டும். அண்ணன் எங்கயோ இருக்காருன்னு நாம நம்புவோம்..' என்றான்.

தமிழ்ச்செல்வி சட்டென்று எழுந்தாள்.

'சரிப்பா.. சாப்பிடு..' என்று அடுக்களைக்குள் நுழைந்தாள்.

'சாப்பிடறேன்.. நீங்க சாப்பிடறதாயிருந்தா..' என்றான் பரணி.

'எனக்குப் பசிக்கலைப்பா!' என்றாள் வருத்தத்துடன்.

'எனக்கு மட்டும் என்ன பசிக்குதாக்கும்?'

நாளைக்குத் தெம்பா நடமாடணுமில்லே.. இல்லேன்னா.. இந்தக் குழந்தைங்க.. நம்மளைப் பாத்து அழுதுக்கிட்டிருக்குமில்லே!' என்றான்.



அவர்களின் வற்புறுத்தலுக்காகத் தமிழ்ச்செல்வி சிறிது சாப்பிட்டாள்.

மறுபடியும் பரணீதரன்.

'அண்ணி!' என்றான்.

'என்னப்பா!'

'அண்ணி! மானுவையும், அத்தையையும் அந்த வீட்டைக் காலி பண்ணிட்டு இங்கயே வரச் சொல்லுங்க.. நான் மாடி ரூம்ல தங்கிக்கறேன்..' என்றான்.

'நீ எப்படிச் சொல்றயோ அப்படி!' என்றாள்.

'உங்களைத் தனியா விட்டுட்டு வெளியே என்னால நிம்மதியா நடமாட முடியாது' என்றான்.

தமிழ்ச்செல்வி ஒன்றும் சொல்லவில்லை.

அப்போது விக்னேஷும், வினிதாவும் வந்தார்கள்.

'சித்தா.. நாங்க ஹோம்வொர்க் முடிச்சுட்டோம். பசிக்குது..' என்றார்கள்.

எல்லாத் துக்கங்களையும் தூக்கித் தூர வைத்துவிட்டு குழந்தைகளுக்காக மூவரும் நடிக்கத் தயாரானார்கள்.

∴ ∴ ∴

கடைசி செமஸ்டரில் ப்ராஜக்ட். அவர்களது கல்லூரியில் அட்டெண்டென்ட்ஸ் பெரிதும் முக்கியமில்லை என்பதால் மணிமாறன் தன் தந்தையிடம் பேசி பரணீதரனுக்கு ஒரு உதவி செய்தான்.

மணிமாறனின் தந்தை நடத்திய பல தொழில்களில் கட்டிடம் கட்டும் தொழிலும் ஒன்று.

குண்டு வெடிப்பின் காரணமாகக் கோவையில் பல பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும் அவர்கள் மாநிலம் முழுதும் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்ததாலும், பெரிய கம்பெனி என்பதாலும் தொய்வில்லாமல் போய்க் கொண்டிருந்தது. அதனால் ஒரு சூப்பர்வைசர் வேலை வாங்கித் தந்தான்.

நேரம் கிடைக்கும்போது இன்ஸ்பெக்ஷன் போக வேண்டும். என்ஜினியர்கள் கேட்கும் உதவிகளைச் செய்தல் வேண்டும்.

உழைப்புக்கு என்றும் அஞ்சியதில்லை என்பதால் உழைத்தான். இருபது நாட்கள் ஓடிவிட்டது.

சோமநாதன் பிழைத்திருக்கக் கூடும். எங்கிருந்தாவது ஃபோன் செய்யக் கூடும் என்ற எதிர்பார்ப்பு மாறிப் போயிருந்தது.

அன்றைக்கு மாலை!

'அண்ணி!' என்று வந்தான்.

'டிஃபன்!' என்றான்.

வாஞ்சையாய்ச் சிரித்தபடி வந்த தமிழ்ச்செல்வி டிஃபன் எடுத்து ந்தாள்.

இரண்டு பேருக்குமே அது நடிப்பு என்று தெரிந்த போதும் த்தார்கள். குழந்தைகளுக்காக.

விக்னேஷ் ஓடி வந்தான்.

'சித்தா! இன்னைக்கு எங்க டீச்சர்.. குட் போட்டாங்க..' என்று பள்ளிக்கூட விஷயங்களைக் கொட்டித் தீர்த்தான்.

'குட்..! குட்! வெரிகுட்!' என்று பாராட்டினான்.

மான்விழியும், அவள் அம்மாவும் இப்போது இங்கேயே வந்து ட்டார்கள்.



அவர்கள் இருந்த வீட்டை வாடகைக்கு விட்டார்கள். சிறிய இடமாக இருந்தாலும் தனி வீடாக இருந்ததால் இரண்டாயிரம் வாடகை பேசினார்கள்.

'அண்ணி! அந்தப் பணத்தை அப்படியே பேங்கில் போட்டர்லாம்.. மான்விழியோட மேரேஜ்க்கு உதவியா.. இருக்கும்..' என்றான்.

தமிழ்ச்செல்வி தலையாட்டினாள்.

'ஹலோ! மானு எங்கே? என்ன மானு.. உள்ளே உள்ளே போய் ஒளிஞ்சுக்கறே!' என்று அவளையும் அழைத்தான்.

மான்விழி புன்னகையுடன் வெளியே வந்தாள்.

'சின்னத்தான்.. இப்பல்லாம்.. விக்னேஷும்.. வினிதாவும்.. ஹோம்வொர்க்ல நல்லா ஏமாத்தறாங்க.. சரியா.. செய்யறதில்லே..' என்றாள்.

'அப்பா.. அப்பாவை வரச் சொல்லு..!' அப்பத்தான்.. ஒழுங்காப் படிப்போம்..' என்றாள் வினிதா.

'எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்களில் நிறைந்த கண்ணீரை அடக்க முயன்றார்கள்.

பரணீதரன் சட்டெனத் தன்னை மீட்டுக் கொண்டான்.

'ஹேய்! ஹேய்! உங்களுக்கு நிறைய விளையாட்டு சாமான்.. வாங்கணும்.. சட்டை.. வாங்கித் தரணும்.. கார் வாங்கித் தரணும்னுதானே.. அப்பா.. வெளியூர் போய் சம்பாதிக்கப் போயிருக்காரு.. நீங்க ஒழுங்காப் படிச்சாத்தானே.. அவருக்கு சந்தோஷமா.. இருக்கும்..' என்றான் பரணீதரன்.

'ஓ..! அப்பா அதுக்கா.. வெளியூர்.. போயிருக்காங்க..!' என்றான் விக்னேஷ்.

'ஆமாடா.. பயில்வான்.. நீ வாடா.. இங்கே! சும்மா.. பெரிய மனுஷனாட்டம் கேள்வி.. கேக்காதடா..' என்று தூக்கித் தட்டாமாலை சுற்றினான். சிரிக்க வைத்தான்.

சூழ்நிலையை மாற்றினான்.

குழந்தைகள் கிளுகிளுவென்று சிரித்தார்கள்.

சிரிக்கிற மாதிரி ஏதோ சொல்லிச் சாப்பிட வைத்தான். பிறகு இரண்டு பேருக்கும் முதுகில் செல்லமாக ஒரு அடி வைத்து 'ஒழுங்கா! ஹோம் வொர்க் முடிங்க..!' என்று விரட்டினான்.

'மானுதான்.. டீச்சர்! ஒழுங்கா.. முடிக்கலே.. நான்தான் ஹெட்மாஸ்டர். என்கிட்டே சொல்லீடுவாப்ல..' என்று அனுப்பி வைத்தான்.

பிறகு மெல்லிய குரலில் அண்ணியிடம் 'அண்ணி உட்காருங்க!' என்று அமர வைத்தான்.

தமிழ்ச்செல்வி அமர்ந்தாள்.

'அண்ணி.. நான் ஒரு ஐடியா.. சொல்றேன்.. வருத்தப்படக் கூடாது' என்றான்.

'சொல்லு.. தம்பி..!' என்றாள்.

இவ்வளவு பெரிய ஹால், இத்தனை ரூம்கள் இப்ப இருக்கற நிலைமையில கட்டுப்படியாகாது.. வீட்டுக்குக் குறுக்கே.. ஒரு சுவரு.. போட்டு.. ரெண்டாப் பிரிச்சு.. வாடகைக்கு விட்ரலாம்னு பாக்கறேன்..' என்றான்.

'செய்யப்பா.. ஆனா.. சுவரெழுப்ப.. பணம்?'

'அது நான் மேனேஜ் பண்றேன்..' என்றான்.

சொன்னது போலவே மணிமாறனிடம் கொஞ்சம் பணம் வாங்கி சுவரெழுப்பினான். வீட்டை வாடகைக்கு விட்டான்.



அட்வான்ஸ் பணத்தில் சுவரெழுப்ப வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

பத்தே நாட்களில் வேலையை முடித்தான்.

∴ ∴ ∴

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான் பரணீதரன். மொட்டை மாடியில் நடமாடிக் கொண்டிருந்தான்.

கீழே சத்தம் கேட்டது.

இறங்கி வந்தான்.

விக்னேஷ் பெருங்குரலெடுத்து அழுது கொண்டிருந்தான். ஆளாளுக்குத் தேற்ற முயன்றார்கள்.

'தூக்கம்.. வர்லே! அப்பா.. வேணும்!' என்று அழுதான்.

பரணீதரன் நெருங்கிப் பையனை அணைத்துக் கொண்டான்.

'என் ரூமுக்கு.. வா..! நான் கதை சொல்றேன்' என்று அழைத்துப் போனான்.

தன் படுக்கையில் படுக்க வைத்துக் கொண்டான்.

பையன் அமைதியானான்.

'சித்தா.. நீ கிரிக்கெட் விளையாடுவியா?'

'விளையாடறதா.. ஐயாவை யாருன்னு நெனச்சே?' என்று அவன் ஆரம்பித்த தோரணையில் பையன் சுருண்டு போனான்.

'சித்தா.. ஹாட்ரிக்னா.. என்ன?' என்றான்.

விளக்கம் சொன்னான்.

பத்து நிமிடம் பேச்சில் பையன் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

தலையணையில் சாய்ந்து அமர்ந்தபடி மார்பில் சாய்த்துக் கொண்டு தட்டிக் கொடுத்தான். அடுத்த சில நொடிகளில் விக்னேஷ் உறங்கிவிட்டான்.

நிலைமை எப்படி இருக்கிறதோ என்று எட்டிப் பார்த்த தமிழ்ச்செல்வியிடம் 'ஷ்..' என்று வாயில் விரல் வைத்துக் காட்டினான்.

உள்ளே வந்த தமிழ்ச்செல்வி 'நான் கீழே எடுத்துகிட்டுப் போகட்டுமா?' என்றாள்.

'வேண்டாண்ணி..! இங்கயே இருக்கட்டும்.. எனக்கும் நல்லாத்தான்.. இருக்கு..!' என்றான்.

தமிழ்ச்செல்வி இறங்கிப் போனாள்.

கீழே போனதற்குப் பிறகு சற்று நேரம் அழுதாள்.

'என்னக்கா?' என்ற மான்விழியிடம் இது பாதி சந்தோஷக் கண்ணீருடி.. உங்க பெரியத்தான் இப்படி அம்போன்னு கைவிட்டுட்டுப் போனதுக்குத் துக்கப் படறதா.. இல்லே.. நான் வளர்த்த புள்ளை இப்படிக் கை குடுக்கிறானே.. அதை நினைச்சு சந்தோஷப்படறதா..ன்னு தெரியலே..' என்றாள்.

மான்விழிக்குக் குறுகுறுப்புத் தாங்கவில்லை. 'அக்கா! சின்னத்தானுக்கு இந்தப் பாலைக் குடுத்துட்டு வர்றேன்' என்று போனாள்.

எட்டிப் பார்த்தாள்.

விக்னேஷ் தன் கழுத்தைக் கட்டிக் கொள்ள அனுமதித்து விட்டு ஒரு விதமாக பாலன்ஸ் செய்தபடி டேபிள் லேம்ப்பை வைத்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தான் பரணீதரன்.

அவள் வருகை பார்த்துத் திரும்பினான்.



'சின்னத்தான்.. சூடா.. பால்! குருமிளகுப் பொடி போட்டுக் கொண்டு வந்திருக்கேன்' என்றாள்.

லாவகமாகப் பையனை விலக்கிப் படுக்க வைத்துவிட்டு எழுந்து வந்தான்.

'தாங்ஸ்.. மானு..!' என்று பருகினான்.

'என்னங்க.. சின்னத்தான்.. டிரெய்னிங்கா..?' என்று பல நாட்களுக்குப் பிறகு சீண்டினாள் மான்விழி.

'அப்படித்தான்.. வச்சுக்கயேன்..' என்று சிரித்தான்.

'என்னாலதானே.. எல்லாமே!' என்றாள் மான்விழி வருத்தத்துடன்.

'அப்படியெல்லாம்.. இல்லே.. மானு! நடக்கறது நடக்கும்..' என்றான்.

'இல்லல்லே.. எனக்காக ரோஷப்பட்டுத்தான் பெரியத்தான்.. ஊரை விட்டுப் போனாங்க.. நான் இருக்கறதுனாலதான்.. பேச்சு வருங்கறதுக்காக நீங்க இப்படி மேல வந்து தனியாத் தங்கியிருக்கீங்க..' என்றாள் மான்விழி.

'வேண்டாம்.. மானு! போனதை பத்தி அலச வேண்டாம்.. எல்லாருமா சேர்ந்து அண்ணியை சந்தோஷமா வச்சுக்க முயற்சிப்போம்..' என்றான்.

முதல் தடவையாகத் தன்னிடம் சீரியஸாகப் பேசுகிற சின்னத்தானை அவளும் ஆழ்ந்து பார்த்தாள். பிறகு தலையாட்டினாள்.

'சரிங்கத்தான்!' என்று இறங்கிப் போனாள்.

பரணீதரன் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

பையனின் அரவணைப்பில் பல நாட்களுக்குப் பிறகு நிம்மதியாக உறங்கினான்.

∴ ∴ ∴




'மாறன்.. நீங்க இப்படிச் செய்வீங்கன்னு நான் நினைக்கவேயில்லை' என்றாள் பவித்ரா.

'தான் என்ன தப்பு செய்தோம்!' மாறனுக்குத் தெரியவில்லை. விழித்தான்.

'நான் நம்ப மூணு பேருமே.. ஒரு ட்ரையோ.. ரொம்ப நெருங்கின ஃபிரண்ட்ஸ்ன்னு நினைச்சுகிட்டிருக்கேன். ஆனா.. நீங்க.. தனியா.. என்னை எந்த விஷயத்திலும்.. கலந்துக்காம.. எல்லாம் நடத்தியிருக்கீங்க!' என்றாள் மறுபடியும்.

நிஜமாகவே மாறனுக்குப் புரியவில்லை.

'ப்ளீஸ்.. பவி! விவரமாச் சொல்லு..!' என்றான்.

'பின்னே? பரணிக்கு இத்தனை ஹெல்ப் பண்ணியிருக்கீங்க.. பரணிக்கு இத்தனை பிராப்ளம்ஸ் இருந்திருக்கு.. நீங்க.. எதையுமே என்கிட்டே சொல்லலை..' என்றாள் வருத்தத்துடன்.

மாறன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு சன்னமான குரலில்

'பவி! வேணும்னு செய்யலே! பரணியைப் பொறுத்தவரை இந்த உதவி கேட்கறதெல்லாம்.. ரொம்ப டெலிகேட்டான விஷயம்.. அதிலயும் ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையிலதான் ஹெல்ப் கேட்டான்.. அதிலயும்.. அவங்க வீட்டுப் பெண்களோட மானப் பிரச்சினைங்கறதுனாலதான்..' என்றான்.

'ஓ..!' என்றாள் பவித்ரா.

சுருக்கமாகக் கோடி காட்டினான்.

பவித்ராவின் கண்கள் கலங்கிவிட்டன.

'எனக்கு மட்டும் ஒரு வார்த்தை சொல்லியிருந்தீங்கன்னா.. எங்க அப்பா.. கிட்டே சொல்லி.. அந்த சதாசிவத்தை என்ன விலை



இதை எப்படி அவன் உன்கிட்டே சொல்ல முடியும்..?

'இதுதான்.. இதுதான்.. பிரச்சினையே! விஷயம் ரொம்பப் பெரிசாவும் ஆயிரக்கூடாது.. சென்ஸிட்டிவ்வான.. விஷயம்.. இப்பவும்.. பரணியாச் சொல்லாதவரை நீ தெரிஞ்ச மாதிரிக் காட்டிக்கக் கூடாது..!' என்றான்.

பவித்ரா புரிந்து கொண்டாற் போல் தலையாட்டினாள்.

அவளைச் சற்று நேரம் கூர்ந்து கவனித்த மணிமாறன் கேட்டான்.

'ஏன்.. பவி! உனக்கு என்னைக் காட்டிலும்.. பரணீதரன்தான்.. பிடிக்கும்.. இல்லே!' என்றான்.

பவித்ரா அதிர்ந்து போவாள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக அவள் சிரித்தாள்.

'மாறன்! நான் அப்படியெல்லாம் அளவுகோல் வச்செல்லாம் யோசிப்பதில்லே.. ஒரு குடும்பத்தின் கஷ்டங்களைப் பரணி பொறுப்பாத் தாங்கிக்கறதைப் பார்த்து பரணி மேலே கொஞ்சம் அஃபெக்ஷன் அதிகம்.. அவ்வளவுதான்..!' என்றாள்.

மணிமாறன் எதையும் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான்.

பவித்ரா தொடர்ந்தாள்.

'உங்ககிட்டே சட்டுன்னு ஹெல்ப் வாங்கிட்டார். ஆனா.. நான் எங்கப்பாகிட்டே சொல்லி மூணு கடையையும் போக்கியத்துக்கு எடுத்துக்கறேன்னு சொன்னேன்' அதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலை..' என்றாள் வருத்தத்துடன்.

'பவி..! வேண்டாம் விட்டுரு.. அவனாச் சொல்லாதவரைக்கும் எதுவும் கேட்காதே!' என்றான் மணிமாறன்.

'இல்லல்லே! கேட்க மாட்டேன்!' என்றாள் பவித்ரா.. பிறகு

'என்ன.. இருந்தாலும்.. எனக்குக் கொஞ்சம் பொறாமைதான்..' என்றாள் பவித்ரா.

மணிமாறன் சிரித்தான்.

'குட்! இப்படியாவது உனக்குப் பொறாமை வரவைக்க.. முடிஞ்சதே!' என்றான்.

அன்றைக்கெல்லாம் மணிமாறன் சிந்தனையில் இருந்தான்.

தனக்குப் பவித்ராவை மிகவும் பிடிக்கிறது. அவளும் தன் நட்பை விரும்புகிறாள். ஆனால், தன்னைக் காட்டிலும் பரணியை மிகவும் பிடிக்கிறது. பரணிக்கோ எந்தப் பெண்ணையும் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவுக்குப் பிரச்சினைகள். ஒருவேளை.. பரணியின் மனத்தில் பவித்ராவுக்கு இடமில்லையோ..!

அப்படி மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.. ஆனால்.. பவித்ரா மனம் வாடி நின்றால் எனக்கும்தான் கஷ்டமாக இருக்கும்.

குபீரென்று தன்னைக் குறித்தே சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

'என்னடா.. இது என் மனசு வாடினாக் கூடப் பரவாயில்லை.. அவ மனசு வாடக் கூடாதாமடி? தியாகப் பரம்பரைடா.. டேய்.. நீ' என்று தன் மனத்துடன் கூட உரையாடிக் கொண்டான்.

கூடவே இன்னொன்றும் மனத்தில் தீர்மானம் செய்து கொண்டான்.

பரணீதரன் காதல் வயப்படுவதற்கான சூழ்நிலையில் இல்லை. அப்படியே மனதில் இருந்தாலும் காட்ட மாட்டான்.. என்பதைப் பவித்ராவுக்கு மெல்ல மெல்லப் புரிய வைக்க வேண்டும்.. மனதைப் பக்குவப்படுத்த வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.



'அடடா..! உனக்கென்ன பவித்ரா காயப்பட்டு விடக்கூடாது என்பது மட்டும்தான் காரணமா.. இல்லை.. உள்ளூர அப்படி நடந்தால் நன்றாக இருக்குமே..' என்ற எண்ணமா?'

யோசனையில் ஆழ்ந்தான்.

∴ ∴ ∴

'ஹல்லோ' பவித்ரா! என்று வரவேற்றான் பரணீதரன்.

காலை ஏழு மணி வாக்கில் மொட்டை மாடியில் எக்ஸர்சைஸ் செய்து கொண்டிருந்தான்.

பவித்ரா மேலேயே வந்து விட்டாள்.

'உட்கார்.. பவித்ரா..!' என்று ஒரு சேரைக் கொண்டு வந்து போட்டு உள்ளே போய்த் தூய்மை செய்து கொண்டு வந்தான்.

'காலங் கார்த்தாலே சண்டை போட வந்திருக்கேன்' என்றாள் பவித்ரா கோபத்துடன்.

அவன் புன்னகைத்தான்.

சற்று நேரம் அவள் கோபமாகப் பேசியதையெல்லாம் வாங்கி கொண்டான்.

சட்டைக்கு மேலே டர்க்கி டவலைத் தொங்கவிட்ட படி அவன் அமர்ந்து கொண்டிருந்தான்.

அதே நேரம் மான்விழி காஃபியை எடுத்துக் கொண்டு மே வந்தவள்

'அப்படியென்ன நா அந்நியமாப் போயிட்டே எப்பலேருந்து இப்படியெல்லாம் மூடி மறைக்க ஆரம்பிச்சிங்க என்று பவித்ரா கோபமாகக் கேட்பதையும். பரணீத செய்வதறியாது விழிப்பதையும் பார்த்தாள்.

ஒரு கணம்அவள் மனது வாடியது. மான்விழியைக் கண்டதும் பவித்ரா சட்டென்று அமைதி காத்தாள்.

இருவரும் காஃபியை எடுத்துக் கொண்டார்கள் சட்டென்று சூழ்நிலையைச் சீராக்க பரணீதரன் 'மானு' ஏன் என்கிட்டே ஹெல்ப் கேக்கலேன்னு பவி கோபிச்சுக்கறாப்ல..!' என்று சிரித்தான்.

'ஓ!' என்று மான்விழி திகைத்தாள்.

'உட்காரு மானு!' என்றான் பரணீதரன் இயல்பாக.

'இல்லே! நீங்க ஏதோ ஃப்ரீயாப் பேசுவீங்க.. நான்.. எதுக்குத் தொந்தரவா..? என்று முணுமுணுத்தபடி இறங்கிப் போகிற மான்விழியை பரணீதரன் சாதாரணமாக எடுத்துக் கொண்டான். ஆனால், பவித்ரா பார்வையில் அளந்தாள்.

பரணீதரன் மென்மையான குரலில் சொன்னான். 'பவி! இதுல மானுவோட ரெஸ்பெக்ட்டும் அடங்கியிருக்கு. அதனாலதான்.. நாங்க யார்கிட்டயும் இதப் .பத்திப் பேசலே.. உன்கிட்டே பேசக்கூடாதுன்னு நினைக்கலே.. யு.. ஆர் எ குட் ஃபிரண்ட்.. தெரியாதா.. எனக்கு?' என்றான்.

ஓரளவு சமாதானமானாள்.

காஃபியை இருவரும் அமைதியாகப் பருகினார்கள். பவித்ரா மறுபடியும் கேட்டாள்.

'ஏன்.. பரணி! இந்தக் கடைகளை வேண்ணா போக்கியத்துக்கு எடுத்துக்கற ஸ்கீம் ஒண்ணு சொன்னேனே..' என்றாள்.

பரணீதரன் சற்று நேரம் மௌனம் சாதித்தான்.

'பவி..! நானும் அப்படித்தான் நெனச்சேன். ஆனா, அண்ணா இல்லாத நிலைமையிலே இந்தக் கடை வாடகையும், வீட்டு வாடகையும் கொஞ்சம் வந்தா அட்லீஸ்ட் வீட்டுக் கவலையாவது இல்லாம நான் கடனை அடைக்கிறதுக்கு வழி பார்ப்பேன்.. இல்ல..!'



'அப்ப.. கிடைச்ச வேலையில நீங்க சேரப் போறதில்லையா?'

அவன் பெருமூச்சு விட்டான்.

'எப்படி பவி! அண்ணி அத்தை மானு குழந்தைங்க.. எல்லாரையும்.. தனியா மானேஜ் பண்ண விட்டுட்டு.. எப்படி நான் வெளியூர்ல இருக்கறது? முடியாதில்லே.. அதான் மாறன்கிட்டே அவங்கப்பா கன்சர்ன்ல ஒரு வேலை கேட்டிருக்கேன். இப்பவே ஒரு சூப்பர்வைசர் வேலை குடுத்திருக்காங்க..' என்றான்.

பவித்ராவுக்கு அவன் பேசுவதில் உள்ள நியாயம் புரிந்தது. ஆனால், தன் நட்பைக் காட்டிலும் மணிமாறனின் நட்பை அவன் அதிகம் விரும்புவதாக ஒரு காம்ப்ளெக்ஸ் அவளுக்குத் தோன்றியது.

'ம்..!' என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

'என்ன இருந்தாலும்.. நான் ஒரு லேடிதானே! என்கிட்டே குடுக்கல்.. வாங்கல் வச்சுக்கறது உங்களுக்கு ஒரு கௌரவப் பிரச்சினை..' என்றாள்.

ஒரு நிமிடம் கனமான அமைதி நிலவியது.

'அதுவும்.. உண்மைதானே? படிப்பு முடிஞ்சவுடனே.. உனக்கு மாப்பிள்ளை பார்ப்பாங்க.. அப்படியிருக்கும் போது.. உன்கிட்டே கடன் வாங்கி.. லாங் டர்ம் கமிட்மெண்ட் வச்சுக்க முடியாதில்லம்மா.. புரிஞ்சுக்க..!' என்றான்.

பவித்ராவின் உதடுகள் துடித்தன.

'நீங்களும் சரி.. மணிமாறனும் சரி.. என்னை விலக்கியே வக்கறீங்க.. உங்களை நான் அதிலும்.. குறிப்பா.. உங்களை.. நான் ஃபிரண்டுக்கு மேலா மதிக்கறேன்.. ஆனா.. நீங்க.. நீங்க..?' என்றாள்.

கோபமாக எழுந்தாள்.

தடதடவென்று படிகளில் இறங்கினாள்.

பரணீதரன் செய்வதறியாது பின் தொடர்ந்தான். அவள் வாசற்படியில் இறங்கிக் கட்டிடத்திற்கு முன்பு வருகிற நேரத்தில் மான்விழி செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

'பவி.. ப்ளீஸ்! அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்க!' என்று கெஞ்சியபடி பரணீதரன் இறங்கி வருவதையும்

'பேசாதீங்க.. பரணி!' என்று அவள் முறுக்கிக் கொண்டு போவதையும் அவள் பார்த்துக் கொண்டு நிற்கையிலேயே தமிழ்ச்செல்வி வெளியே வந்து பார்த்தாள்.

'ப்ளீஸ்.. பவி! நான் சொல்றதைக் கேளு' என்றான்.

நின்றாள்!

'பவி! எதிர்காலத்துல எந்த மிஸ்அண்டர்ஸ்டாண்டிங்கும் வந்துரக் கூடாது. எப்பவும் நாம ஃபிரண்ட்ஸா இருக்கணும்.. அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்க!' என்றான்.

'சரி.. அப்புறம்.. பேசலாம்!' என்றாள் பவித்ரா அடிக்குரலில்.

'வரேன்க்கா.. வரேன் மானு!' என்று அவர்களை நோக்கித் தலையசைத்துவிட்டுப் போனாள்.

'என்னப்பா.. ப்ராப்ளம்?' என்றாள் தமிழ்ச்செல்வி.

அவன் அண்ணியைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டபடி உள்ளே போனான்.

'அண்ணி! இந்தப் பொண்ணைப் பாருங்க! நான் அவகிட்டே பண உதவி கேட்கலையாம்.. நீங்க என்னை ஃபிரண்டாவே நினைக்கலேன்னு சண்டை போடறாப்ல..' என்றான்.

தமிழ்ச்செல்வி புன்னகைத்தாள்.

'பரவால்லைப்பா.. நாம இந்த விதத்துலயாவது அதிர்ஷ்டம் பண்ணியிருக்கோம்..' என்றாள்.



அவன் உள்ளே வந்து டைனிங் டேபிளில் அமர்ந்தான்.

மான்விழி வாடிய முகத்துடன் உள்ளே போவதை யாருமே கவனிக்கவில்லை.

'என்னண்ணி, இந்தப் பொண்ணு மணிமாறனை மட்டுந்தான் நீங்க ஃபிரண்டா நினைக்கறீங்க.. என்னை ஃபிரண்டாவே ஒத்துக்கலைன்னு 'சண்டை' என்றான் மறுபடியும்.

அதற்கு மேல் மான்விழிக்குப் பொறுக்கவில்லை. பாத்திரம் கழுவுகிறேன் பேர்வழி என்று பைப்பைத் திருப்பி விட்டுவிட்டு பாத்திரங்களைச் சத்தமாக உருட்டிக் கொண்டு தேய்க்க ஆரம்பித்தாள்.

'ஏம்பா.. ஏதாவது ஒரு ஹெல்ப்.. வாங்கிக்கயேன்..' என்றாள் தமிழ்ச்செல்வி லேசான புன்னகையுடன்.

தமிழ்ச்செல்விக்குக் கூட உள்ளூர ஒரு சந்தேகம் எழுந்தது. ஆனால், பரணீதரனின் பொறுப்பான பதில் அவளை அமைதியடையச் செய்தது.

'அண்ணி! பவித்ரா.. வசதியான வீட்டுப் பொண்ணு. காலேஜ் ஃபிரண்ட்ஷிப் எல்லாம்.. ஒரு கட்டத்துக்கு அப்புறம்.. நீடிக்குமோ.. என்னவோ.. ஹெல்ப் வாங்கிக்கறது சரியில்லங்கண்ணி. அதுவும் இல்லாம.. கல்யாணம் ஆகி வேற ஒரு வீட்டுக்குப் போக வேண்டிய பொண்ணு.. அளவா.. இருந்துக்கறதுதான்.. நல்லது..' என்றான்.

தமிழ்ச்செல்வி அதை ஏற்றுக் கொண்டாள்.

இந்த வார்த்தைகள் மான்விழியின் காதுகளில் விழவில்லை. விழுந்திருந்தால் ஒரு வேளை அவள் மனது அமைதியடைந்திருக்குமோ என்னவோ..!

குழந்தைகள் பள்ளிக்கூடம் போகத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

'சித்தா.. சீக்கிரம் ரெடியாகுங்க.. எங்களை டிராப் செய்யணும்..' என்றாள் வினிதா.

'அண்ணி! இந்த மாசத்துல இருந்து இவர்களுக்கு ஆட்டோ ஏற்பாடு பண்ணிடலாம். நான் வெளியே அலையறதுக்கு சரியா இருக்கும்..' என்றான்.

இதையெல்லாம்.. தலையிடாமல் கவனித்துக் கொண்டிருந்தார் பர்வதம்.

முக வாட்டத்துடன் நடமாடிக் கொண்டிருக்கிற சின்ன மகளைப் பார்த்தார்.

வேறொரு பெரிய கவலை மண்டியது.

உள்ளூர வேதனையில் புழுங்கிக் கொண்டிருக்கிற பெரிய மகளை நினைத்து வருத்தப்படுவதா..?

தானே தனக்குப் பிரச்சினையாய் நிற்கிற சின்ன மகளுக்குக் கவலைப்படுவதா.. என்று தெரியவில்லை.

திகைத்துப் போனார்.

∴ ∴ ∴

அன்றிரவு!

பரணீதரனுக்குக் கொஞ்சம் கவலையாகிப் போனது.

பவித்ராவின் உரிமைக் கோபம் வெறும் நட்புதானா? அதற்கு மேல் ஏதோ எதிர்பார்ப்பு இருக்கிறதோ?

பவித்ராவின் கோபம் தனக்குப் பிடிக்கிறது. ஆனால் அதற்கு மேல் ஏதாவது எதிர்பார்ப்பு இருந்தால்..!

'இதேதடா.. புதுத் தலைவலி?' என்ற எண்ணம் தோன்றியது.

புதுத் தலைவலியா? அப்படி ஒரு பணக்காரப் பெண் கிடைத்தால் இந்தச் சூழ்நிலையில் அவனவன் கொத்திக் கொள்ள மாட்டானா?



கொத்திக் கொள்ளலாம். ஆனால், தனக்கு ஏன் இதுவரை அந்த மாதிரி எண்ணமெல்லாம் வரவில்லை.

பவித்ரா.. மான்விழி.. என்று எத்தனை பெண்கள் தன்னைச் சுற்றி நடமாடுகிறார்கள். மற்ற இளைஞர்களைப் போல் பெண்களை ஓரக் கண்ணால் பார்ப்பது. அசடு வழிவது இதெல்லாம் அவனுக்குத் தோன்றியதேயில்லை.

ஏன் அப்படி?

'சே! வீட்டில் இத்தனை பிரச்சினைகள் இருக்கும்போது தனக்கு இந்த யோசனை தேவையா?

'அது சரி.. இப்போதைக்கே ஒன்றும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லைதான். ஆனால், தன் மனதில் என்னதான் இருக்கிறது என்று தானாவது புரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

இன்னொன்றும் அவன் மனதிற்குள் வந்து போனது.

எப்போதும் பவித்ராவைக் கண்டால் மணிமாறன் முகம் மலர்ந்துவிடும்.

அவன் இருக்கிற இடத்தில் இல்லையென்றாலும் சற்றுத் தொலைவில் இருந்தாவது அவனைக் கவனித்துக் கொண்டிருப்பான்.

தெரிந்து கொள்ள வேண்டும்.. மணிமாறன் மனதில் என்ன இருக்கிறது? தன் மனதில் என்ன இருக்கிறது? பவித்ரா மனதில் என்ன ஓடிக் கொண்டிருக்கிறது.

எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இப்போது இல்லை. இன்னும் ஒரு வருடத்திற்கு எதைப் பற்றியும் யோசிக்கப் போவதில்லை.

அதற்குப் பிறகு யோசிக்கலாம் என்று முடிவெடுத்துக் கொண்டான். தொடர்ந்து அலைச்சலினாலோ என்னவோ களைத்து உறங்கினான்.

ஆனால், அதே சமயத்தில் கீழ்ப்பகுதியில் மூன்று பெண்களும், மூன்றுவிதக் கவலைகளினால் உறக்கம் வராமல் தவித்தார்கள் என்பதை அவன் உணரவில்லை.

∴ ∴ ∴




நாட்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன.

சோமநாதன் போய் ஆறு மாதங்கள் ஆகிவிட்டன.

எங்கேயாவது பிழைத்திருக்கக் கூடும் தொடர்பு கொள்ளக் கூடும் என்ற கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் தேய்ந்து கொண்டே வந்தது.

பரணீதரன் ஒன்றை எல்லாருக்கும் வலியுறுத்திச் சொன்னான்.

'அண்ணன் வெளியூர் போயிருக்காங்க.. வந்துடுவாங்க.. அப்படிங்கற நினைப்பையே மனசில் பதிய வச்சுக்குங்க..

திரும்பத் திரும்பச் சொல்லி மனதைத் தெளிய வைத்ததாலோ என்னவோ..மெது மெதுவாக இயல்பு நிலை வந்து கொண்டிருந்தது.

வழக்கம்போல் பொறுப்புகளை சுமந்தாலும் குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடுவான்.

அன்றைக்கு விடுமுறை நாள்.

'டேய்..வினிதா.. எங்கயாவது போயிட்டு வரலாமா?' என்றான்.

'ம்.. ம்..! எங்கே?' என்று குதித்தாள் வினிதா.

'பிளாக் தண்டர்' என்று டிக்கெட்டுகளைக் காட்டினான்.

மணிமாறன் தங்களுக்குக் காம்ப்ளிமெண்டாக வந்த டிக்கெட்டுகளைக் கொடுத்திருந்தான்.



'எல்லாரும்.. போலாமா? மானு நீயும் வரயா?' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

'நான் வர்லே!' என்றாள்.

'ஹேய்.. நீ கார் ஓட்டறே! தெரியுதா?' என்றான்.

'ஐயய்யோ! நான் வர்லைப்பா.. நாளைக்கு நான் பத்திரமா ஸ்கூலுக்குப் போகணுமே?' என்றாள் வினிதா.

'போடி!' என்று பொய்க் கோபத்துடன் ஒரு அடி வைத்தாள் மான்விழி.

மணிமாறன் தங்களிடம் இருந்த ஒரு பழைய மாருதிக் காரை அவர்களுக்காகக் கொடுத்திருந்தான்.

அந்தக் காரை ஓட்டுவதற்கு மான்விழிக்குப் பழக்கிக் கொடுத்தான் பரணீதரன்.

'கார் எல்லாம் வேண்டாம்டா!' என்றான் பரணீதரன்.

'டேய்.. இது பழைய மாடல் கார்டா.. கம்பெனி பேர்ல இருக்கு.. இன்னைக்கெல்லாம் வித்தா.. ரொம்பக் குறைவான விலைக்குப்போகும்..' என்றான்.

பரணீதரன் ஒத்துக் கொள்ளவில்லை.

'டேய்.. பரணீ! இங்க பாரு குழந்தைங்க ஸ்கூலுக்குப் போறதுக்கே.. மாசம் எண்ணூறு ரூபாய் குடுக்கறீங்க.. அதுபோக.. அண்ணி எங்கயாவது போறதுன்னா.. ஆட்டோவுக்குக் காசு.. அந்த ஆயிரம் ரூபாய்க்குப் பெட்ரோல் போட்டீங்கன்னா மாசம் முழுக்க யூஸ் பண்ணலாமில்லே.. பழைய கார்றா.. மைலேஜ் நல்லாக் கிடைக்கும்'

அப்போதும் பரணீதரன் ஒத்துக் கொள்ளவில்லை. மணிமாறன் மேலும் சொன்னான்.

'மான்விழிக்குக் காரோட்ட சொல்லிக் குடு. ஃபேமிலி போக்குவரத்து அது பாத்துக்கிச்சன்னா.. நீ பாட்டுக்கு உன்னோட வேலைகளைப் பாக்கலாம் இல்லே!..' நான் ஒன்னும் பொது நலத்துக்காக மட்டும் சொல்லலே.. கொஞ்சம் சுயநலமும்தான். உனக்கு வீட்டைப் பத்தின கவலையில்லாம இருந்தா.. எங்க கம்பெனி.. வேலையை ஒழுங்காக் கவனிப்பே.. இல்லே..?' என்றான்.

பரணீதரன் மௌனம் சாதித்தான்.

மணிமாறன் சிரித்தான். 'இப்ப உனக்கொரு நியூஸ் சொல்றேன். அப்ப.. நீ கண்டிப்பா.. ஒத்துக்குவே..' என்றான்.

பரணீதரன் ஆர்வத்துடன் அவன் முகம் கவனித்தான்.

'பெரிய.. ஒரு பில்டிங்.. முப்பதாயிரம் ஸ்கொயர்.. ஃபீட்ல.. ஒரு காலேஜ்.. அதை உன் பொறுப்பில விடப்போறோம்.. அதாவது உனக்கு சப் காண்ட்ராக்ட்.. அதை சிக்கனமா முடிச்சுக் குடுத்தீன்னா.. உன்னோட கடனை ரைட் ஆஃப் பண்ணிடுவோம்.. அப்ப.. நேரங்காலம் பாக்காம.. உழைக்கணும் இல்ல.. அப்ப.. ஃபேமிலியப் பத்திக் கவலைப்பட்டுட்டிருந்தா.. வேலையாகுமா..?' என்றான்.

பரணீதரன் கண்களும், முகமும் மலர்ந்தன.

மணிமாறனின் இரு கைகளைப் பிடித்துக் கொண்டு தன் மகிழ்ச்சியை வெகு ஆர்வமாக வெளிப்படுத்தினான்.

'நாங்க ஏதோ.. உனக்கு சாரிட்டி, மாதிரிப் பண்றோம்னு நெனைக்காதே.. இப்பவே நீ குடுக்கற ஐடியாஸ்னால கம்பெனிக்கு நிறைய மிச்சம் ஆகுதுன்னு அப்பா ரொம்ப ஹேப்பிதான்.. உன் ஃபிரண்டுக்கு நல்ல மூளைடாங்கறாரு.. நாங்க உன்னை யூஸ் பண்ணிக்கறோம்.. நீ எங்களை யூஸ் பண்ணிக்க..' என்றான்.

பரணீதரன் 'எனிஹௌ.. தாங்க்ஸ்டா.. என்று நன்றி சொன்னான். மனதாரச் சொன்னான்.

காரை வைத்துக் கொள்ள ஒத்துக் கொண்டான்.



காரை மேட்டுப்பாளையம் ரோடில் மான்விழி ஓட்டிக் கொண்டிருந்தாள்.

தமிழ்ச்செல்வி முன் சீட்டில் அமர்ந்து கொள்ள வினிதாவையும், விக்னேஷையும் தன் இரு பக்கமும் அமர்த்திக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள்.

குழந்தைகளுக்கு அவனிடம் சொல்வதற்கு நிறைய இருந்தது.

'சித்தா.. எங்க மேக்ஸ் டீச்சர் அப்படிச் சொன்னாங்க.. தமிழ் மேடம் இப்படிச் சொன்னாங்க..' என்று வினிதா எல்லாவற்றையும் ஒப்பித்துக் கொண்டிருந்தாள்.

பரணீதரனும் சுவாரசியமாய்க் கேட்டுக் கொண்டான்.

'நா வர்லப்பா..' என்று தயங்கிய தமிழ்ச்செல்வியிடம் சொன்னான்.

'அண்ணி! நிதர்சனங்களை ஏத்துக்கணும். நீங்க இப்படி சோகமா நடமாடினீங்கன்னா.. குழந்தைகங்க மனசு பாதிக்கப்படும்..' என்றான்.

ஒரு வழியாகக் கிளம்பினாள்.

சற்று நேரம் குழந்தைகள் வெளியே வேடிக்கை பார்க்க, பரணீதரன் மான்விழி ஓட்டுகிற விதத்தில் கவனம் செலுத்தினான்.

அவளுக்குக் காரோட்டக் கற்றுக் கொடுத்த அனுபவங்கள் அவன் மனதுக்குள் வந்து போயின.

காலை நேரங்களில் அழைத்துப் போவான்.

முதல் இரண்டு மூன்று நாட்களில் ரொம்பவும் பயப்படுவாள். பிறகு மெதுவாக ஓட்ட ஆரம்பித்தாள்.

ஒரு வாரத்தில் ஓரளவு ஓட்டினாள். ஆனால் ஸ்டார்டிங் டிரபிள்.

'ஹேய்! கிளட்சை ரிலீஸ் பண்றப்பவே இந்தப் பக்கம் ஆக்ஸிலேட்டரின் மேல் கால் வைக்கணும்.'

'அதான் சின்னத்தான்.. வர மாட்டேங்குது..' என்றாள் பரிதாபமாக.

'சரி.. சரி.. ஓட்டு' என்றான் கோபம் தணிந்தவனாய்.

மறுபடியும் ஸ்டார்ட் செய்து கொஞ்சம் தூரம் போனவுடன்,

'ப்ரேக் போடு.. மானு!' என்றான் போட்டாள்.

'இன்ஜினை ஆஃப் செய்' என்றான் 'ஆஃப் செய்தாள்.'

'சரி.. மறுபடியும் ஸ்டார்ட் பண்ணு!' என்றான்.

ஸ்டார்ட் செய்தாள். ஆனால் கிளட்சை வேகமாக விட்டு விடவே வண்டி தடதடவென்று ஆடிக் கொண்டு நின்றது.

'மக்கு.. மக்கு!' என்று சற்றே கோபமாக ஒரு குட்டு வைத்தான்.

அவள் தலையைத் தடவிக் கொண்டு பரிதாபமாகப் பார்த்தாள்.

'சின்னத்தான்! இதான் சாக்குன்னு நல்லாத் தாக்கறீங்க.. நான் ஒண்ணும் கார் கத்துக்கலே..' என்றாள் சிணுங்கலாக.

பரணீதரன் தனது முறையை மாற்றினான்.

'ஹேய்! ஓரளவுக்கு நல்லாத்தான் ஓட்டறே! ஆனா, இந்தக் கிளட்சை வேகமா விடறதுங்கற பிராப்ளம்ல்லாம் எல்லாருக்கும் தான் வரும். நான் மாறன்கிட்டே கத்துக்கிட்டப்ப ஒரு செவுத்துல கொண்டு போய் இறக்கப் பார்த்தேன்.. தெரியுமா? நல்லவேளை அவன் ஹேண்ட் பிரேக்கைப் போட்டான்' என்று சிரித்தான்.

'அப்ப.. சரி..!' என்று களுக்கென்று சிரித்தாள் மான்விழி.

'ஹேய்! இப்படி சிரிச்சா.. என்ன அர்த்தம்..?' என்றான் பரணீதரன் கண்ணைச் சுருக்கிக் கொண்டு.



'இப்படி சிரிச்சா.. நான் உங்களை விட பெட்டர்ன்னு அர்த்தம்..' என்றாள்.

'ம்.. இதுல ஒரு திருப்தி..' என்றான். பிறகு 'சரி.. ஓட்டு..' என்று பாடத்தைத் தொடர்ந்தான்.

அப்படித் தட்டுத் தடுமாறிக் கொண்டு இருந்த பெண் பத்தே நாட்களில் நன்றாக ஓட்டப் பழகிக் கொண்டாள்.

பேச்சு வாக்கில் அவன் சொன்ன விஷயங்கள் அவள் மனதில் பதிந்தன.

'மானு! இந்தப் பிரச்சினைக்கப்புறம்.. அண்ணி வெளியே போகவே பயப்படறாங்க.. நீ கார் ஓட்டறேன்னா.. எங்கயாவது போகணும்னா உன்னோட போயிட்டு வர்லாம்.. இல்லே!' என்றான்.

அப்போதுதான் மான்விழி சொன்னாள்.

'சின்னத்தான்.. அதெல்லாம்.. ஒரு பக்கம் இருக்கட்டும்.. நான் ஏன் இப்ப இன்ட்ரஸ்ட்டா கத்துக்க ஆரம்பிச்சிருக்கேன்.. தெரியுமா? நீங்க.. எங்களுக்காக.. ரொம்ப ரொம்ப பாரம் சுமக்கறீங்க.. எப்படியாவது.. இராமருக்கு ஹெல்ப் செஞ்ச அணில் மாதிரி ஏதோ ஒரு விதத்துல.. உங்களுக்கு ஹெல்ப் செய்யணும்னு.. மனசு துடிக்குது..' என்றாள்.

பரணீதரன் மனம் நெகிழ்ந்தது.

'தேங்ஸ்..!' மானு.. தேங்ஸ்' என்றான் குழைந்த குரலில்.

இப்போது அதெல்லாம் நினைவு வர புன்னகைத்துக் கொண்டான்.

'மானு! நான் கொஞ்ச நேரம் ஓட்டட்டுமா?' என்றான்.

'வாங்கத்தான்!' என்று அவளை ஓட்ட விட்டு அவள் அருகில் அமர்ந்து கவனித்துக் கொண்டு வந்தாள். தமிழ்ச்செல்வி பின் சீட்டுக்குப் போனாள்.

மிக உற்சாகமாகப் பேசிக் கொண்டு போனார்கள். தமிழ்ச்செல்வியும் கூடத் தன்னை மறந்து சிரிக்கத் துவங்கினாள்.

பிளாக் தண்டரில் கார் நுழைந்தவுடன் பார்க் செய்துவிட்டு இறங்கினார்கள்.

'ஹல்லோ!' என்று வந்தாள் பவித்ரா. கூடவே அவள் தோழியர்கள் இரண்டு பேர்.

'ஹாய்!' என்று சிரித்தான் பரணீதரன்.

'டேய்! இங்க பாரு.. நான் ஒருத்தன் இருக்கேன்..!' என்று பின்னாலிருந்து வந்தான் மணிமாறன்.

'டேய்! சொல்லவே.. இல்லை!' என்று வியந்தான் பரணீதரன்.

'சொன்னா.. நான் எதுக்குப்பா.. நான் வர்லேம்பாங்க.. அண்ணி மான்விழியும் எங்க போகுது? அதான்.. நானும் பவியும் ஏற்பாடு செஞ்சோம்!' என்றான்.

சற்று நேரத்தில் தன் வயதொத்த பெண்களிடம் மான்விழி இலகுவாகப் பழகிக் கொள்ள ஒரு பிக்னிக் மனப்பான்மை உருவாகியது.

தமிழ்ச்செல்வி அவர்களது உடைமைகளைப் பார்த்துக் கொள்ள எல்லாரும் தண்ணீரில் இறங்கி ஆடினார்கள்.

சற்று நேரத்தில் தமிழ்ச்செல்வியையும் இழுத்துக் கொண்டார்கள்.

'ரொம்பத் தாங்ஸ்.. பவி!' என்றான் பரணீதரன் ஆத்மார்த்தமாக.

பவித்ரா புன்னகைத்தாள்.

'பரணி! வாழ்க்கைன்னா.. பொறுப்புக்கள் இருக்கத்தான்.. செய்யும். அதுக்காக எப்பவும் சீரியஸா இருக்கணும்கற தேவையில்லை..'



'எனக்கும் தெரியும்! பவி! ஆனா, ரொம்ப விளையாட்டா இருக்கற மூடே போயிடுச்சு.. அண்ணியைப் பாக்கும் போதெல்லாம் வாய் விட்டு சிரிக்கறதுக்கோ, கேலி பேசறதுக்கோ மனசுக்கே ரொம்பக் கஷ்டமா இருக்கு..' என்றான்.

'அங்கதான் தப்புப் பண்றீங்க.. பரணி.. நீங்க சோகமா நடமாடிட்டிருந்தீங்கன்னா அவங்க நடந்ததை மறக்கவே முடியாமத் தவிப்பாங்க.. அதுக்குப் பதிலா.. நீங்க சந்தோஷமா.. இயல்பா நடமாடிட்டிருந்தீங்கன்னா.. கொஞ்ச நாள்ல அவங்களும் இயல்புக்கு வருவாங்க..' என்றாள்.

'தட்ஸ்.. எ.. பாயிண்ட்' என்றான் பரணீதரன் முகம் மலர்ந்தது.

தொடர்ந்து அவன் 'பரவால்லே! அப்பப்ப உன் மூளை கூட வேலை செய்றது' என்றான்.

'ஹலோ.. நாங்க முதல்லே யெல்லாம் ரொம்பப் பிரில்லியண்ட்தான்.. உங்களோட சேர்ந்ததுக்கப்புறம்.. கொஞ்சம் மழுங்கிப் போச்சு..' என்றாள் பவித்ராவும் சளைக்காமல்.

இருவரும் சிரித்துக் கொண்டே திரும்பினார்கள் மணிமாறன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இயல்பாகத் திரும்பிய பவித்ரா ஒரு காட்சியைக் கண்டாள். சற்றுத் தொலைவில் வினிதாவுக்குத் தலையைத் துவட்டி விட்டபடியே.. இவர்கள் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மான்விழி.

அவள் கண்களில் சற்றே சோகம் தென்பட்டாற்போல் தோன்றியது பவித்ராவுக்கு. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

∴ ∴ ∴

'ஹேய்! பவி நீ மாறன் கூடத்தானே வந்தே.. அந்தக் கார்லயே

'அந்தக் கார்ல ஏழெட்டு பேர் இதுலதான் இடமிருக்கே.. நான் இதுலயே வர்றேன்' என்றாள் பவித்ரா பிடிவாதமாக.

'மணிமாறன் தப்பா நினைச்சுக்குவான்.. பவி..' என்றான் கெஞ்சலாக.

'இதபாருங்க.. உங்க முதலாளியை நீங்க சேடிஸ்ஃபை பண்ணனும். எனக்கு அந்தக் கவலை.. இல்லே!' என்றாள் மறுபடியும்.

பரணீதரன் தலையில் கை வைத்துக் கொண்டான். அப்போது பவித்ரா குறும்புடன் கண்ணைச் சிமிட்டியபடி.

'ஹலோ! மாறன் கூட எப்பவும்தான் போகப் போறேனே? உங்களோட உங்க ஃபாமிலி அட்மாஸ்ஃபியர்ல வர்றேனே?' என்றாள்.

பரணீதரன் முகம் மலர்ந்தது.

'ஹேய்! நீ இப்ப என்ன சொன்னே?' என்றான் ஆர்வமாக.

'சொன்னேன் சுரைக்காய்க்கு உப்பில்லேன்னு' என்றாள் எரிச்சலாக.

காருக்குள் அமர்ந்து கொண்டு மான்விழி சற்றுத் தொலைவில் அவர்கள் பேசிக் கொள்வதை ஒரு விதமான மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சரி.. அட்லீஸ்ட்.. அவன்கிட்டே சொல்லிட்டாவது.. வா..!' என்றான்.

'நீங்களே சொல்லிக்குங்க..' என்றவள் நேராக வந்து டிரைவர் சீட்டில் அமர்ந்தாள்.

பரணீதரன் லேசாகத் தலையிலடித்துக் கொண்டு போய் மணிமாறனிடம்-



'டேய்! மாறா! பவி என் கூடக் கார்ல வர்றாப்லயாம்..' என்றான்.

மணிமாறன் முகம் லேசாக வாடியது. உடனே பரணீதரன்

'டேய்! கேட்டா.. நான் மாறன் கூடத்தான்.. எப்பவும் போப் போறேனே.. இன்னைக்கு உங்களோட ஃபாமிலி அட்மாஸ்பியர்ல வர்றேங்கறா..' என்றான்.

'ஓ! வாட் டிட் ஷி மீன் பை தட்..?'

'கேட்டேன்டா.. அம்மிணி, மழுப்பிட்டாப்ல' என்றான்.

'சரி.. உங்க கூடவே.. வரட்டும்..' என்றான் மணிமாறன்.

சரியென்று தலையாட்டிக் கொண்ட பரணீதரன் நகர்ந்த போது மணிமாறன் மறுபடியும் அழைத்தான்.

'பரணீ பவிக்கும் உன்னைத்தான் பிடிக்குதுன்னு நா நெனச்சுகிட்டிருக்கேன்.. ஃபால்ஸ் ஹோப் குடுக்காதடா..' என்றான்.

பரணீதரன் சற்றே கோபமாக

'பைத்தியம் மாதிரிப் பேசாதே! பவியை நான் அந்த மாதிரியெல்லாம் நினைச்சதேயில்லை. வெரி.. வெல்யுபள்.. ஃபிரண்ட் அவ்வளவுதான்' என்றான்.

மணிமாறனின் முகம் மலர்வதை ஆழப்பார்த்துக் கொண்டிருந்தான்.

மணிமாறன் சட்டென்று சிரித்தான்.

'சரி.. உன் கார்லயே கூட்டிட்டுப் போ..' என்றான்.

முன் சீட்டில் தமிழ்ச்செல்வி அமர்ந்து கொள்ள குழந்தைகளை இடையில் அமர்த்திக் கொண்டு பயணித்தார்கள்.

சற்று தூரம் வந்ததுமே குழந்தைகள் உறங்கி விட்டார்கள்.

வழக்கம் போல் விக்னேஷ் பரணீதரனின் மடியில் சாய்ந்து

கொண்டான். மான்விழி வினிதாவை மடியில் சாய்த்துக் கொண்டாள்.

முழுவதும் தானே டிரைவ் செய்து கொண்டு வந்தாள் பவித்ரா.

'என்ன.. உங்க மான்விழியை விட நல்லா ஓட்டறேனா?' என்று வம்பிழுத்தாள்.

'பவி! வேண்டாம்.. மானுவை வம்பிழுக்காதே! மானு பதில் குடுத்தா நீ தாங்க மாட்டே!' என்று சிரித்தான் பரணீதரன்.

மான்விழி வாயைத் திறக்கவேயில்லை. ஒரு அடி தூரத்தில் பரணீதரன் அமர்ந்திருப்பதை முழுமையாக உணர்ந்தவள் போல் அமைதி காத்து வந்தாள்.

இறங்கி உள்ளே போனபின் பவித்ரா நேரடியாக சமையலறைக்கே வந்தாள்.

'என்ன.. மானு! உங்கத்தான் பக்கத்திலே.. ஒரு மணி நேரம்.. உட்கார்ந்துட்டு வர்ற மாதிரி ஒரு வாய்ப்புக் குடுத்தேனே.. அதுக்காகக் கூடவா.. எனக்கு சூடா.. ஒரு ஃபில்டர் காஃபி போட்டுத் தர மாட்டே' என்றாள்.

ஒரு நிமிடம் விழித்த மான்விழி இதோ.. இப்பப் போட்டுத் தரேன்' என்று போட்டுக் கொண்டு வருகையில் பரணீதரனிடம் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் பவித்ரா.

பரணீதரன் அவளைக் கொண்டுவிடப் போகிறேன் என்று சொல்லி விட்டுக் காருக்குப் போக அந்த இடைவெளியில் மான்விழி மெல்லிய குரலில் கேட்டாள்.

'என்ன அர்த்தத்துல.. அப்படிச் சொன்னீங்க..?' என்றாள்.

'சும்மா.. முறைப் பெண்ணாச்சே.. அதான் கிண்டல் செய்தேன்..' என்றாள்.



நகர்ந்து விட்டாள். ஆனால், அன்றைக்குப் படுக்கையில் விழுந்தவுடனே பவித்ரா வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்தாள்.

∴ ∴ ∴




பவித்ரா இதை எதிர்பார்க்கவில்லை.

பத்து மணிக்குத் தன் வேலையையெல்லாம் விட்டு விட்டு மணிமாறன் தன்னைப் பார்க்க வந்திருக்கிறான் என்பதுதான் அது.

தன் அறையிலிருந்து கீழே இறங்கி வந்தாள். மணிமாறன் பவித்ராவின் தந்தையிடம்பேசிக் கொண்டிருந்தான்.

'குட் மார்னிங்!' என்றாள் பவித்ரா.

கண்களில் தூக்கக் கலக்கம்.

'ஹலோ! என்ன இது இவ்வளவு நேரம் தூக்கம்!' என்றான் மணிமாறன்.

'இல்லே! நேத்து ரொம்ப நேரம் தண்ணியிலே ஆடிட்டோம் போலிருக்கு.. அதான்.. தூக்கம் பிடிக்கலே.. தூங்கறப்போ லேட்டாப் போச்சு..' என்றாள் ஒருவிதமான குற்ற மனப்பான்மையுடன்.

பவித்ராவின் தந்தை அவனிடம் 'என்னமோ மணிமாறன் கம்பெனிக்காக ஒரு இடம் பாத்திருக்காங்களாம். பேரம்பேச உன்னைக் கூப்பிடறாரு..' என்றார்.

'யாரு?' என்றாள் மணிமாறனிடம்.

'ப்ளீஸ்! புறப்படேன். பதினோரு மணிக்கு அப்பாயின்ட் மென்ட்.. வழியில பேசிக்கலாம்..' என்றான்.

'சரி.. ஃபிப்டீன் மினிட்ஸ்ல வந்தர்றேன்' என்று ஓடினாள்.

சொன்ன மாதிரியே வந்தாள். புறப்பட்டார்கள்.

காரை நோக்கி நடக்கும் போது.

'ரெகார்ட் பிரேக்' என்று சிரித்தான் மணிமாறன்.

'எது?' என்று விழித்தாள்.

'ஒரு பொண்ணு. அதுவும் வயசுப் பொண்ணு பதினைஞ்சு நிமிஷத்துல ரெடியாகி வர்றதுதான்.'

'வேண்டாம்..!' என்று முறைத்தாள்.

'என்ன இது வம்பாப் போச்சு.. பாராட்டினாக் கூடத் தப்புங்கறீங்க?' என்றான்.

'சரி.. அதை விடுங்க.. விஷயத்துக்கு வாங்க.. யாரோட இடம்..! எங்க இருக்கு? என்று ஆர்வமாக விசாரித்தாள்.

'சொல்றேன்.. வா..!' என்று அழைத்துப் போனான்.

மணிமாறனின் ஆஃபீஸ் கெஸ்ட் ஹவுஸ் ஹாலில் அமர்த்தி விட்டு வேலையாட்களை அழைத்து காஃபி கொண்டு வரச் சொன்னான்.

சாப்பிடும் வரை காத்திருந்தான்.

அதற்குள்ளாகவே வரப்போவது என்ன என்று பவித்ராவுக்கு ஓரளவுக்குப் புரிந்தது.

தயாரானாள்.

'பவி! நான் ஒன்னு கேக்கறேன்.. மனசு விட்டு பதில் சொல்லணும். மறைக்காம பதில் சொல்லணும்..' என்றான்.

'கேளுங்க..!'



மணிமாறன் மறுபடியும் சற்று மௌனம் சாதித்தான். பிறகு சொன்னான்.

'பவி! பரணீதரன் கிட்டே நேத்து நான் ஒரு விஷயம் கேட்டேன்.. அவனுக்கு உன்மேல ஏதாவது இன்ட்ரஸ்ட் இருக்காங்கற மாதிரிக் கேட்டேன்..

பவித்ரா ஒன்றும் பேசாமல் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அதுக்கு அவன் என்னடா.. பைத்தியம் மாதிரிப் பேசறே! பவி.. என்னோட வெல்வுபின் ஃபிரண்ட் அவ்வளவுதான்.. அப்படீன்னான்' என்று தயங்கி நிறுத்தினான்.

பவித்ராவின் முகம் பார்த்தான். ஆனால் அதிலிருந்து எதையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'சரி.. அதுக்கு.. என்ன இப்ப?' என்றாள் வருவாக.

மணிமாறன் மறுபடியும். தயக்கத்துடன் அவளைப் பார்த்தான்.

'இல்ல.. பவி! ஒருவேளை.. ஒருவேளை.. உனக்கு இன்ட்ரஸ்ட் இருக்கற மாதிரித் தெரிஞ்சா.. நான்.. அவன்கிட்டே.. பேசறேன்.. ஐ கேன் கன்வின்ஸ் ஹிம்..' என்றான்.

பவித்ரா புன்னகைத்தாள்.

'தேங்ஸ்.. ஃபார்.. தி.. ஆஃபர்.. ஆனா.. அதுக்கு அவசிய மில்லே.. அஃப்கோர்ஸ் ஐ லைக் ஹிம் வெரி மச். ஒரு நடுத்தரக் குடும்பம். இன்னும் சொல்லப் போனா ஒரு கீழ் நடுத்தரக் குடும்பத்து இளைஞர் இவ்வளவு அழகா எல்லாப் பொறுப்பையும் சுமக்கறாரேன்னு ஒரு ஆச்சரியம்.. அட்மிரேஷன்..' என்று நிறுத்தினாள்.

படபடக்கும் இதயத்துடன் மணிமாறன் ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

'ஆனா.. பரணீ ஒரு தனி மனுஷன் இல்லே.. ஒரு குடும்பத்தை எனக்கு அவரோடு வாழ்க்கை நடத்த முடியுமோ என்னவோ.. அவருக்கு என்னோட வாழ்க்கை நடத்த முடியாது.. ஃபிரண்ட்ஸ் ஆயிடுவாரு.. அது சரிவராது..' என்றாள்.

'அப்ப.. நீ இதைப் பத்தி யோசிச்சிருக்கே?' என்றான் மணிமாறன் இறங்கிய குரலில்.

'ஆமா..! ஒரு ஸ்டேஜ்ல என் மனசுகிட்டயே கேள்வி கேட்டு நான் அனலைஸ் பண்ணிக்க வேண்டி வந்தது.. பண்ணினேன் ஃபிரண்ட்ஷிப்தான்னு' முடிவு தெரிஞ்சவுடனே.. பழகறது ரொம்ப ஈஸியாப் போச்சு..' என்றாள்.

மணிமாறன் மறுபடியும் மௌனம் காத்தான்.

'என்ன.. மாறன்..? பேச மாட்டேங்கறீங்க!' என்றாள்.

'நல்லா.. யோசிச்சுக்க.. எந்த நேரம் வேண்ணாலும் ஹெல்ப் பண்றேன்' என்றான் மணிமாறன்.

இப்போது பவித்ரா மணிமாறனை ஆழ்ந்து நோக்கினாள். கண்களில் லேசாகக் குறும்பு மின்னியது.

'சரி.. உங்களுக்காக மறுபடியும் யோசிக்கறேன். ஒரு வாரம் டைம் குடுங்க.. அப்புறம்.. முடிவு சொல்றேன்' என்றாள்.

அந்த பதிலில் மணிமாறனின் முகம் லேசாக இருண்டது. அதை அவள் கவனித்தாலும் கவனித்தாற் போல் காட்டிக் கொள்ளவில்லை.

'சரி.. இப்பப் போகலாமா?' என்றாள்.

'ம்..!' என்றான். புறப்பட்டார்கள்.

∴ ∴ ∴

பரணீதரனைப் பற்றிய எண்ணங்கள் இரண்டு பெண்களின் மனதில் ஆழமாக ஓடிக் கொண்டிருந்தது.



பவித்ராவுக்கு மட்டுமல்ல அவர்கள் வகுப்பில் பல பேருக்கு பரணீதரனைப் பிடிக்கும்.

நாகரீகமாகப் பழகுவான். நடிப்பில்லாமல்.. இயல்பாக.

'ரேகா! இந்தக் கலர் உங்களுக்கு நல்லா சூட் ஆகுது..' என்று சொன்னால் ரேகா 'தாங்க்ஸ்' என்று இயல்பாக எடுத்துக் கொள்வாள்.

ஒரு விகல்பமான பார்வையோ, அழுக்கான கற்பனைகளோ அவனிடம் இல்லை என்பதை அறிந்ததால் பெண்கள் அவனிடம் இயல்பாகப் பழகினார்கள்.

தேவைப்பட்ட உதவிகள் செய்வான். தன் சக்திக்கு இயன்ற வகையில்.

முடியாததை முடியும் என்றோ முடிந்ததை முடியாதென்றோ சொல்ல மாட்டான்.

எல்லாப் பெண்களுக்கும் அவனைப் பிடிக்கிறது.

ஒருநாள் மணிமாறன், பவித்ரா, பரணீதரன் மூவரும் நின்று கொண்டிருந்தபோது அவர்கள் கிளாஸ்மேட் ரமேஷ் கேட்டான்.

'அதென்னடா.. பரணீ உன்கிட்டே மட்டும் எல்லாம் இயற்கையா பழகறாங்க' என்று. ஒருவேளை என்னை அவங்களோட ஒண்ணா நினைக்கறாங்களோ..' என்று சிரித்து மழுப்பப் பார்த்தான் பரணி.

'அப்படியெல்லாம்.. ஒண்ணும் இல்லே.. தான் எவ்வளவு பர்ஸனாலட்டியான ஆளுன்னு பரணீ காட்டிக்கறதே இல்லை.. தெரியுமா?ன்னு உருகறாங்க..' என்றான் ரமேஷ் மனத்தாங்கலுடன்.

பரணீதரன் சிரித்தான்.

'ரமேஷ்.. காலம் மாறிக்கிட்டிருக்கு. பெண்கள் நிறைய வெளிய வர ஆரம்பிச்சுட்டாங்க.. வீக்கர் செக்ஸுங்கறதெல்லாம் மாறியாச்சு. எனக்குத் தெரிஞ்சு எத்தனையோ பேர் அட்மினிஸ்ட்ரேஷன்ல

போடு போடுன்னு போடறாங்க.. அதனால் ஜெண்டர் டிஃபரன்ஸ் பாக்கற காலமெல்லாம் மலையேறிப் போச்சு. அவங்களை எப்பப் பாரு உடல் ரீதியாப் பாக்காம அவர்களை சக மனுஷிங்கற தோரணையா ஒத்துக்கிட்டோம்னா அவங்களும் டக்குன்னு புரிஞ்சுக்கறாங்க.. நம்ப பார்வையில மாறுபாடு இருந்தா.. அதையும் டக்குன்னு புரிஞ்சுக்கறாங்க..'

'அப்படின்னா.. எல்லாரையும் தங்கைன்னு நினைச்சுக்கச் சொல்றியா?'

'அதாண்டா.. சொல்றேன்.. தங்கை, கொழுந்தி.. அக்கான்னு எதுக்கு உறவு சொல்லணும். நாம ஆண்கள், அவங்க பெண்கள். ரெண்டு பேரும் சமுதாயத்தில ஒரு பாதி. இன்னைக்கு லெவல்ல ரெண்டு பேரும் சேர்ந்து வேலை செய்யறது அவசியமாப்போச்சு.. விகல்பமில்லாம, சந்தோஷமா வாழ்க்கையை நடத்தலாமே?' என்றான்.

'ஆமா.. இல்லே! நல்ல பாலிஸியாத் தெரியுது இல்லே?' என்று சிரித்தான் ரமேஷ்.

எல்லாரிடமும் நன்றாகப் பழகுகிறான். தன்னிடம் நன்றாகப் பழகுகிறான். தன்னை நெருங்கிய தோழியாய் ஏற்றுக் கொண்டான். அவ்வளவுதான். அவன் சொல்லுவது போல் புரட்சி சிந்தனைகளில்தான் தொடங்க வேண்டும். தன்னளவுக்கு ஆண், பெண் உறவுகளில் பரணீதரன் புரட்சி செய்கிறான் என்று புரிந்தது. அதே சமயம் மணிமாறனின் மனம் தன்னிடம் சாய்ந்திருக்கிறது என்பதும் புரிந்தது.

அப்போது அவளுக்கு இன்னொரு எண்ணமும் தோன்றியது. எப்போது ஒரு ஆண் மகனுக்கு சலனமே இல்லாத நிலைமை தோன்றும். தனக்காகத் தன் மனம் கவர்ந்த ஒருத்தி காத்திருக்கிறாள் என்ற எண்ணம்தோன்றும் போது எந்த வெளிப்புற அழகும் சலனப் படுத்தாது.



ஒருவேளை அப்படியிருக்குமோ?

பரணிக்கே அவன் மனது புரிந்திருக்கவில்லையோ-

பார்க்க வேண்டும். பேசிப் பார்க்க வேண்டும்.

'பாவம்! மணிமாறன்.. ஒரு வாரம் டென்ஷனில் இருப்பார்..' என்று நினைத்துக் கொண்டாள்.

லேசாகப் புன்னகை மலர்ந்தது.

தலையணையை அணைத்துப் பிடித்துக் கொண்டு கண்ணயர்ந்தாள்.

∴ ∴ ∴

**மா**ன்விழி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

காருக்குள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்த போது பரணீதரனும், பவித்ராவும் பேசிக் கொண்டிருந்த விதத்தில் ஒரு உரிமை தெரிந்தது.

'ஆமா.. பின்னே? இந்த மாதிரிச் சிக்கலான ஒரு குடும்பத்தில் மறுபடியும் பெண் எடுத்து அவருக்கு என்ன ஆகப் போகிறது.

பவித்ரா மாதிரி ஒரு பெண் கிடைத்தால்.. அத்தானுடைய எல்லாப் பிரச்சினையும் தீர்த்துவிடும்.. அத்தானுக்கும் அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிற மாதிரித் தெரிகிறது.

வேண்டுமென்றே காரை நான் ஓட்டுகிறேன் என்று ஓட்டினாள். நன்றாகத்தான் ஓட்டினாள். அதற்காக அப்படிக் கேட்க வேண்டுமா? அப்புறம் உங்க அத்தான்கிட்டே ஒரு மணி நேரம் உட்கார அலவ் செய்தேனே என்கிறாள்.

'ஒஹ்ஹோ! இப்படி இருக்குமோ? நான் பார்த்து அனுமதித்தால்தான் நீ உங்க அத்தான் பக்கத்துல உட்கார முடியுங்கறாளோ?

நன்றாக பதில் கொடுக்கலாம்தான். ஆனால், அத்தானுக்கு சங்கடமாகி விடக் கூடாதே'

தூக்கம் பிடிக்கவில்லை.

எழுந்து அமர்ந்தாள். மறுபடியும் படுத்தாள். மறுபடியும் தூக்கம் வரவில்லை. 'சரி, கீரையாவது ஆய்ந்து வைக்கலாம்..' என்று சமையலறைக்குப் போனாள்.

சமையலறையில் லைட்டை எரிய விட்டுக் கொண்டு கீரையை ஆய்கையில் பார்வதம் எழுந்து வந்தார்.

'டீ.. மானு! என்னடி பண்றே?'

'அம்மா.. தூக்கம் வர்லைம்மா.. கீரையாவது ஆய்ந்து வக்கலாம்ன்னு' என்று இழுத்தாள்.

'மணி என்ன தெரியுமா? ரெண்டு, ரெண்டு மணிக்கு உட்கார்ந்து கீரையை ஆயறியா? என்னடி இது?'

'ரெண்டு மணின்னா.. என்ன? தூக்கம் வர்லே. வேலை செய்யறேன்.. இதுல என்ன இருக்கு?'

'சரி.. என்னமோ.. பண்ணு!' என்று அம்மா போய்ப் படுத்து விட்டார்.

சற்று நேரம் கழித்து வந்த மானுவிடம் பார்வதம் கேட்டார்.

'மானு! மனசுக்கு ஏதாவது சங்கடமா?'

'எனக்கு என்னம்மா சங்கடம்? ஒண்ணுமில்லே.. சும்மா.. நீயா.. ஏதாவது கற்பனை செஞ்சுக்காம.. படு' என்று படுத்துக் கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

தன் மனமே தனக்குத் தலைவலியாய்ப் போனதையும், தன் வாழ்க்கையே கேள்விக்குறியாய்ப் போனதையும் அவள் தன் தாயிடம் விவரிக்க முடியாத நிலையில் இருந்தாள்



என்றாலும் தாய்அறியாத சூலா? பார்வதத்தின் மனம் கவலையில் ஆழ்ந்தது.

கூடவே ஒரு முடிவும் தோன்றியது.

ஃ ஃ ஃ




'சின்னத்தான்!' என்று குரல் கொடுத்துக் கொண்டு மாடியேறினாள்.

வெற்று மார்புடன் இருந்த பரணீதரன் ஸ்டாண்டில் மாட்டி யிருந்த சட்டையை எடுத்து அவசர அவசரமாக மாட்டிக் கொண்டு வந்தான்.

'என்ன மானு!' என்றான்.

'உங்க கிட்டே ஒரு விஷயம் பேசணும். இந்தக் காலை நேரத்திலதான் நீங்க கிடைக்கறீங்க.. அப்புறம் ஓட்டமோ.. ஓட்டம்தான்' என்று சிரித்தாள்.

'சரி.. பேசறதுக்கு என்ன லஞ்சம் தருவே?'

'தரேன்.. தரேன்.. முதல்ல பேசறதுக்கு அப்பாயிண்ட்மெண்ட் குடுங்க' என்றாள்.

'கிராண்டட்' என்றான்.

இருவரும் சிரித்தார்கள். இந்த மாதிரி சிரித்து ரொம்ப நாளாகி விட்டது என்றும் எண்ணிக் கொண்டார்கள்.

'ஏன்.. மானு.. இப்பல்லாம் வாயடிக்கறதையே விட்டுட்டே.. இல்லே?' என்றான்.

'ஆமாங்கத்தான்.. ஃப்ரீயா சிரிக்கவே மனசு வர மாட்டேங்குது..' என்றாள்.

இருவரும் குற்றம் செய்தாற்போல நின்றார்கள்.

'சரி.. சொல்லு மானு!' என்றான்.

'சின்னத்தான்! எங்க பாலிடெக்னிக்ல பெண்களுக்காக நிறைய ஷார்ட் டர்ம் கோர்ஸஸ் நடத்தறாங்க. அதுல பியூட்டிஷியன் கோர்ஸ் கூட இருக்கு. கல்யாண வீடுகள்ல மெஹந்தி போடறது மாதிரி கோர்ஸ்ங்களும் இருக்கு' என்றாள்.

'ஓ.!'

'அதுல.. அதுல..!' என்று இழுத்து நிறுத்தினாள்.

'சொல்லுங்க.. மேடம்!'' என்றான் புன்னகையுடன்.

'அதுல.. அக்காவை சேக்கலாமா?'' என்றாள்.

பரணீதரன் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்தான் முகத்தில் வேதனை படிந்து மறைந்தாற் போல் இருந்தது.

'ஏன்.. மானு! நம்ம குடும்பத்தை நான் கவனிக்க மாட்டேன்னு நினைச்சியா?' என்றான்.

மான்விழியின் முகத்தில் கலவரம் தோன்றியது.

'ஐயய்யோ.. நான் அப்படி நினைக்கலே.. நினைச்சுப் பாருங்க. நாம எல்லாரும் வெளிய போயிடறோம். அம்மாவும், அக்காவும் எத்தனை நேரம் முகத்தை முகத்தைப் பாத்துட்டிருப்பாங்க.. வீட்லயே முன்னால இருக்கற ரூம்ல சின்னதா ஒரு பார்லர் போட்டுட்டா.. பொழுதும் போகும்.. அக்காவுக்கும் ஒரு தன்னம்பிக்கை வருமில்லே!'

பரணீதரன் பெருமூச்சு விட்டான்.

'இதுவும் யோசனைதான்.. யோசிக்கலாம்' என்றான். பிறகு மெதுவாக.

'மானு! அன்னி இதுக்கு ஒத்துக்குவாங்களா?'



'நீங்க சொன்னா ஒத்துக்குவாங்க!'

அவன் சிந்தனையுடன் பேசினான்.

'இல்ல.. மானு! இந்த விஷயம் நான் பேசக் கூடாது. அது வேற மாதிரி அர்த்தத்துல போயிடும்.. யு அண்டர்ஸ்டாண்ட்?'

மானுவும் ஒத்துக் கொண்டாள்.

'சரி.. நானே பேசறேன். இப்பவே போய்ப் பேசறேன்.. நீங்க கொஞ்சம் கழிச்சு டிஃபன் சாப்பிட வருவீங்கல்லே.. அப்ப நீங்களும் பேசுங்க..' என்றாள்.

அவன் தயங்கினான்.

'சின்னத்தான்! அக்காவுக்கு நான் புரிய வக்கறேன்' என்றாள்.

மடமடவென்று இறங்கிப் போனாள்.

∴ ∴ ∴

எப்போதும் காலை டிஃபன் சாப்பிடும்போது வினிதாவும் விக்னேஷும் அவனோடு சாப்பிடுவார்கள்.

முதல் நாள் நேரம் கிடைத்துப் பேசியிருந்தால் பொதுவான விஷயங்களை அவனிடம் பேசுவார்கள். இல்லையென்றால் முதல் நாளைய பள்ளிக்கூட நிகழ்வுகளைப் பேசுவார்கள்.

'சித்தா! எனக்கு ஜியாமெட்ரி பாக்ஸ் உடைஞ்சு போச்சு.. வாங்கித் தரணும்'

'ஸ்கூல் ஃபீஸ்.. கட்டணும்!' என்று தங்கள் தேவைகளையும் சொல்வார்கள்.

மனதில் குறித்துக் கொள்வான். வீட்டுத் தேவைகளைப் பற்றிக் கேட்டுக் கொள்வான்.

இன்றைக்கும் குழந்தைகள் அதுபோல் தங்கள் தேவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் அந்த நேரம் தமிழ்ச்செல்வி தயங்கியபடி அழைத்தாள்.

'தம்பி! மானு என்னவோ சொல்றாளே!' என்றான்.

மான்விழி இடையில் புகுந்து 'அதான்.. சின்னத்தான்.. உங்ககிட்டே சொன்னனே.. பியூட்டிஷியன் கோர்ஸ்' என்று எடுத்துக் கொடுத்தாள்.

பரணீதரன் ஒரு சேரை இழுத்துப் போட்டு அண்ணியை உட்காருமாறு சைகை காட்டினான்.

'அண்ணி! வருமானம் வரணுங்கறதுக்காக நீங்க எதையும் செய்ய வேண்டியதில்லே. இப்ப ஓரளவுக்கு வாடகை வருது. கடன் பார்ட் நான் பாத்துக்கறேன். இப்பவே மூணுல ஒரு பங்கு அடைஞ்சிருச்சு.. அதனால உங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருந்தா.. மட்டும்.. ஏதோ பொழுது போறதுக்கு வசதியா இருக்குன்னு நினைச்சா மட்டும் செஞ்சா.. போதும்..' என்றான்.

'எனக்கும் இன்ட்ரஸ்டாத்தான் இருக்கு' என்றாள்.

'சியவி?' என்று மகிழ்ந்தான் பரணீதரன். உற்சாகமாக மான்விழியை நோக்கித் திரும்பினான்.

'சரி.. மானு! உடனே ஏற்பாடு செஞ்சுடு' என்றான்.

'அம்மா..! எனக்கு மேக் அப் போட்டு விடுவியா?' என்றாள் வினிதா ஆர்வமாக.

பரணீதரன் செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

'நம்ம வீட்ல எல்லாமே இயற்கையாவே உலக அழகிங்கதான்' என்று சிரித்தான்.

'யாரைச் சொல்றீங்க சித்தா? இவளையா' என்றான் விக்னேஷ்.

'இல்லடா.. பாட்டியைச் சொன்னேன்' எனவும் பர்வதம் சிரித்தார்.

'ஆமப்பா.. இப்ப இந்த ஒரு பட்டந்தான் பாக்கி..!' என்றார்.



'ஆமாங்கத்தே! உங்களுக்கென்ன குறைச்சல்! நீங்க பெத்த இரண்டு மகாராணிகளுக்கும் தான் என்ன குறைச்சல்?' என்று சிரித்துக் கொண்டு நகர்ந்தான்.

பர்வதம் பின்னாலேயே வந்தார்.

அவன் பைக்கில் ஏறி அமர்ந்ததும் சொன்னார்.

'தம்பி.. இன்னைக்கு சாயங்காலம் சீக்கிரம் வர்றியா.. உன்கிட்டே ஒரு விஷயம் பேசணும்..' என்றார்.

'வர்றேங்கத்தை' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அவன் சற்றும் எதிர்பார்க்காத ஒரு விஷயத்தை அவர் பேசப் போகிறார் என்று அப்போது அவனுக்குப் புரியவில்லை.

∴ ∴ ∴

வீடே அமைதியாக இருந்தது.

தமிழ்ச்செல்வி பாத்திரங்களைக் கழுவி முடித்து விட்டு வீட்டைப் பெருக்கினாள். பிறகு 'அப்பாடா' என்று தரையில் காலை நீட்டித் தூணில் சாய்ந்தபடி அமர்ந்தாள்.

'தமிழு!' என்றபடி அம்மாவும் வந்து அருகில் அமர்ந்தாள்.

'என்னம்மா!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'தமிழு! இனி நீயும் கோர்ஸ் படிக்கப் போயிடுவே அப்புறம் நான் மொட்டு, மொட்டுன்னு முழிச்சுகிட்டு இருக்கணும்' என்றாள்

'ஒரு மூணு மாசந்தானேம்மா?' அப்புறம் வீட்லயே வேலை பாக்கலாமே? என்றாள் தமிழ்ச்செல்வி.

'அம்மா, அது மட்டுமில்லம்மா.. அதுல ஓரளவுக்கு நல் வருமானமும் வருதும்மா..' என்றாள்.

அம்மா தான் சொல்வதையெல்லாம் அரைகுறையாகத் தா காதில் வாங்குகிறாற் போல் அவளுக்குத் தோன்றியது.

'என்னம்மா! என்ன விஷயம்.. ஏதோ சொல்லணும் போல இருக்கோ? என்றாள்.

'ஆமாடி.. தமிழு.. நானும் கொஞ்ச நாளாவே சொல்லணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். மானுகிட்டே ஒரு மாற்றம் இருக்கே பாத்தியா?'

'ஆமா.. நானும் கவனிச்சேன்.. முந்தி மாதிரி வாயடிக்கிறதில்லே. வயசு கூடக் கூடப் பொறுப்பு அதிகமாகுதில்லே.. அதான்..' என்றாள்.

பர்வதம் தலையாட்டி மறுத்தார்.

'ஐயோ.. தமிழு அதில்லே! நான் சொல்ல வர்றது வேறே!'

'என்ன!' என்றாள்.

'வந்து.. வந்து.. சமீபமா.. அந்தப் பவித்ரா.. வர்றப்ப.. அந்தப் பொண்ணு கொழுந்தன்கிட்டே ஃப்ரீயாப் பேசறப்போ.. எல்லாம்.. நம்ம மான்விழி முகம் வாடிப் போகுது.. பாத்தியா..' என்றார் கவலையுடன்.

அப்போதுதான் தமிழ்ச்செல்விக்குத் தன் தவறு உறைத்தது. எப்போதும் தன் கவலையையே நினைத்துக் கொண்டு தங்கையைப் பற்றி யோசிக்கவே மறந்து விட்டோம். அவளும் கம்ப்யூட்டர் கோர்ஸ் அது இது வீட்டு வேலை என்று பிஸியாக இருக்கிறாள்.

தமிழ்ச்செல்விக்கு மன உறுத்தலாகி விட்டது.

'ஓ..!'

'ஏ.. தமிழு! இந்தப் புள்ளைக்கு இந்த பரணியைக் கல்யாணம் செய்யணும்னு ஏதாவது ஐடியா இருக்குமோ.. என்னவோ?' என்றார்.

தமிழ்ச்செல்வி திகைத்துப் போனாள்.



'அம்மா..!' என்றாள்.

'.....!'

ஏற்கெனவே பரணி நம்ம குடும்ப பாரம் முழுசையும் சுமக்கறான். அந்தப் பவித்ராவை மனசல வச்சிருக்கானோ என்னவோ தெரியலையே' என்றாள் தவிப்புடன்.

'இத பாருடி.. தமிழு! மானுவும், பரணியும் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. என்னைக்குமே நம்ம குடும்பம் ஒண்ணா இருக்கலாம்.. இதை விட ஒரு நல்ல ஏற்பாடு எங்கயாவது இருக்குமா?'

தமிழ்ச்செல்வி குறுக்காகத் தலையாட்டினாள். பர்வதம் விடாப்பிடியாகத் தொடர்ந்தார்.

'இதப் பாருடி! அவன் யாரை மனசல வச்சுருந்தாலும்.. சரி.. என் தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்க தம்பின்னு நீ ஒரு வார்த்தை சொன்னயின்னா போதும்.. ஒத்துக்குவான்' என்றார்.

'அதனாலதாம்மா.. யோசிக்க வேண்டியிருக்கு.. நமக்கு வேணுங்கறதுக்காக அவன் மனசைக் கொன்னுராக் கூடாதில்ல.' என்றாள் அழுத்தமாக.

'சரிடி.. அப்ப இதுக்கு என்னதான் முடிவு?'

'அம்மா.. பரணிகிட்டே இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷம் இல்லாம.. கல்யாணம் எப்படி.. பேசறது? மானுவுக்கு வேண்ணா வயசாகுது. அதுக்காக நம்ம சுமையை அவன்மேல சுமத்தக் கூடாதில்லே' என்றாள்.

'சரிடி.. அப்ப ஒண்ணு செய்வோம். நான் இன்னைக்கு மானுவோட கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கிறேன் அதுக்கு அவன்கிட்டேயிருந்து வர்ற பதில்லே இருந்து விஷயம் தெரிஞ்சிருமில்லே!' என்றார்.

'சரி..' என்று மனசில்லாமல் ஒத்துக் கொண்டாள் தமிழ்ச்செல்வி.

∴ ∴ ∴

நிலாப்பிறை வானில் மின்னியது.

வீட்டுக்கு முன்னாலே இருந்த வெற்றிடத்தில் நாள்கைந்து சேர்களைப் போட்டுக் குடும்பமே அமர்ந்திருந்தார்கள்.

மான்விழி குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு அருகில் நின்றிருந்தாள்.

குழந்தைகளை உறங்குவதற்கு அழைத்துப் போகச் சொல்லி விட்டு தங்கள் அத்தையைப் பார்த்தான் பரணீதரன்.

'சொல்லுங்கத்தே!' என்றான்.

'தம்பீ! இப்ப வீட்டுல வச்சு நாந்தான் பெரியவ! நான் சில விஷயங்களைப் பேசித்தான் ஆகணும்' என்றார் பர்வதம்.

'சொல்லுங்கத்தே!' என்றான் மறுபடியும் அன்பு கலந்த குரலில்.

'இல்லப்பா.. மான்விழி கல்யாணத்தை முடிச்சர்லாம்னு பாக்கறேன். அவளுக்கும் இப்ப இருபத்திரண்டு முடிஞ்சு இருபத்து மூணு நடக்குது. இனியும் ரொம்ப நாள் நீட்டிக்க முடியாதில்லே!'

'ஓ!' என்றான் திகைத்துப் போய்.

'ஆமாப்பா! உன்கிட்டே கேட்டுட்டு ஜோசியரை வரச்சொல்லி ஜாதகம் குடுக்கலாம்னு பாக்கறேன்..'

'மாலு, என்ன சொல்றாப்பலே!'

'அவ என்னத்தைப்பா.. சொல்வா.. எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னா கேப்பா.. நாமதான் செய்யணும்' என்றார்.

'ஆமா.. அண்ணன் இருந்திருந்தா.. இதைப் பத்தி முன்னாடியே யோசிச்சிருப்பார். நான் தப்புப் பண்ணிட்டேனோ?' என்றான் உள்ளடங்கிய குரலில்.



'ஐயோ.. நீ தங்கமான புள்ளைப்பா.. உன்னை மாதிரி ஒரு பையன் கிடைக்கணுமே.. பாவம் நீயே இப்பத்தான் குடும்பத்தை ஒரு நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கே..!' அதுக்காக.. நடக்க வேண்டிய எதையும் நிறுத்த முடியாதில்லே..' என்றார்.

'ஆமா!' என்றான் மறுபடியும்.

'சரி.. அப்ப.. ஜோசியரை வரச்சொல்லட்டா?' என்றார்.

அப்போது தன் வாயிலிருந்து தெறித்து விழுந்த வார்த்தைகள் குறித்து பரணீதரனே ஆச்சரியப்பட்டுப் போனான்.

'அத்தே! ஒரே வாரம் பொறுங்க..! நான் சொன்னதுக்கப்புறம் ஜோசியரை வரச் சொல்லலாம்' என்றான்.

இத்தனையிலும் தமிழ்ச்செல்வி தலையிடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரம் வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்து விட்டு மாடிக்குப் போனான் பரணீதரன்.

யோசிக்க ஆரம்பித்தான். தான் எதற்காக ஒரு வாரம் டைம் கேட்டோம்!

'அடடா! ஆமா.. மான்விழி வேறு ஒரு வீட்டுக்குப் போக வேண்டிய பெண்தானே?

மான்விழி இல்லாத ஒரு வீட்டைக் கற்பனை செய்து பார்த்தான். மேற்கொண்டு யோசிக்கவே அவனால் முடியவில்லை. மான்விழிக்கு இந்த வீட்டில் என்ன இடம்? தன் மனதில் என்ன இடம்? அண்ணியிடம் எதையாவது கேட்டு

'உங்க அண்ணனை கல்யாணம் பண்ணிகிட்டு நான் பட்டது போதாதா? இனி, என் தங்கச்சியும் காலத்துக்கும் உங்களுக்கு ஊழியம் செய்துகிட்டிருக்கணுமா? என்று கேட்டால்..!

என்ன பதில் சொல்வது.

தனக்கு அருகில் இருக்கிற பொருள்.. அருகில் இருக்கும் வரை அதன் அருமை தெரிவதில்லை. இழக்க நேரிடுமோ.. என்ற அச்சம் வரும்போதுதான் அதன் அருமை புரிகிறதோ?

ஏற்கெனவே அண்ணன்..!

இப்போ.. மான்விழியா?

நெஞ்சுக்குள் சொல்ல வொண்ணா பாரம் ஏறிக் கொண்டாற் போல் இருந்தது. பல சிக்கல்களைச் சந்தித்த போது கூட சரியான நேரத்துக்கு உறங்கிவிடுவான். இன்றைக்கு உறக்கம் வரவில்லை.

இதற்கு நடுவில் இன்னொரு பிரச்சினை வேறு காத்திருக்கிறது என்ற கவலையும் சேர்ந்து கொண்டது.

∴ ∴ ∴




'ம்மா.. சொல்லாதீங்க!' என்று வாயில் விரல் வைத்து சைகை காட்டி விட்டு அதிகாலையில் மாறனைப் பார்க்க வந்திருந்தான். மாடியேறி அவன் அறைக்குப் போனான்.

அலுவலகப் பணி தொடர்பாக அவனைப் பார்க்க வேண்டி யிருந்தது மட்டுமல்லாமல் அவனைப் பார்த்தே ஒரு வாரமாகி யிருந்தது.

பாத்ருமில் தண்ணீர் விழுகிற சத்தம் கேட்டது. உள்ளே இருக்கிறான் போலும் என்றே எண்ணிக் கொண்டே திரும்பியவன் கண்களில் அது பட்டது.

பரணீதரன் புன்னகையுடன் அதை எடுத்துப் பார்த்தான்.

ஃபோட்டோ!



பவித்ரா அழகாக தண்ணீருக்குள் நின்றபடி சிரித்துக் கொண்டிருந்தாள்.

பிளாக் தண்டரில் எடுத்த ஃபோட்டோ!

'ஓஹோ! த கேட் இஸ் அவுட் ஆஃப் த பேக்' என்று எண்ணியபடி சிரித்துக் கொண்டான் பரணீதரன்.

அதே நேரம் மணிமாறனும் வெளியே வந்தான்.

'ஹல்லோ! குட்மார்னிங்!' என்றான். பரணீதரன் ஃபோட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு.

'ஹல்லோ! குட்மார்னிங்!' என்றவனின் பார்வை அவன் கையிலிருந்த ஃபோட்டோவுக்குத் தாவியது.

முகம் சிவந்தது!

'ம்.. ம்..' அப்படியா விஷயம்!' என்று சிரித்தான் பரணீதரன்.

'டேய்!' என்றான் மணிமாறன் கெஞ்சலாக.

'இன்னும் பவிக்குத் தெரியாது!' என்றான்.

'ஓஹோ! நான் பேசறேன்!'

'வேண்டாம்டா.. அவ வேற ஒரு விஷயமா ஒரு வாரம் டைம் கேட்டிருக்கா. அது முடிஞ்சவுடனே.. நானே சொல்லிடறேன்' என்றான்.

பிறகு தயக்கத்துடன் மணிமாறன் கேட்டான். 'பரணி ஒரு வேளை.. ஒரு வேளை.. அவளுக்கு உன்னைப் பிடிச்சிருந்தா..!' என்றான்.

'வாட்! பைத்தியமாட்டம் உளறாதடா! எனக்கு பவியை ரொம்பப் பிடிக்கும். ஆனா, நீ நினைக்கிற மாதிரி இல்லே! அன்றைக்கே சொன்னேனே'

'கேள்வி அதில்லடா.. ஒரு வேளை.. ஒரு வேளை.. அவளுக்கு உன்னைத்தான் பிடிச்சிருக்குங்கற நிலைமை வந்தா.. நான் ரிக்வெஸ்ட் பண்றேங்கறதுக்காக..!' என்று நிறுத்தினான்.

'இங்க பாரு! மாறா.. நான் உனக்காக எது வேண்ணா செய்வேன்.. அது வேற விஷயம்.. ஆனா.. இப்படி சினிமாட்டிக்கா ஒரு முடிவு எடுத்தேன்னு வச்சுக்க.. மூணு பேருக்கும்.. வாழ்க்கை சிக்கலாயிடும்.. வாழ்க்கை இப்படிப்பட்ட முடிவுகள்னால அமையக் கூடாதுடா.. அது பவிக்கு நல்லாத் தெரியும்..' என்றான்.

'இப்ப.. நீ என்கிட்ட பேசினதிலே..' உனக்காக நான் எதுவும் செய்வேன்னு சொன்னியே.. 'அதை மட்டும் நான் மனசுல குறிச்சுகிட்டேன்.. சரியா?' இப்ப ஆஃபீஸ் மேட்டர் பேசலமா?' என்றான்.

பேசினார்கள். பேசிவிட்டு மணிமாறன் பங்களாவை விட்டு வெளியே வந்ததுமே பரணீதரன் பவித்ராவுக்கு ஃபோன் போட்டான்.

'பவி.. நான் உன்கிட்டக் கொஞ்சம் பேசணும். ஒரு கால் மணி நேரத்துல எங்க வீட்டுக்கு வர்றியா?' என்றான்.

வீட்டுக்கு வந்தவுடன் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான்.

மான்விழி வந்து 'சின்னத்தான்.. காஃபி கொண்டு வரட்டுமா? காஃபி கூடக் குடிக்காம வெளியே போயிட்டீங்க' என்றாள்.

'இல்லம்மா.. அவசரமாக் கொஞ்சம் மாறனைப் பாக்க வேண்டியிருந்தது. காஃபி அங்கயே குடிச்சேன். இப்ப பவி வருவா.. வந்ததுக்கப்புறம் வேண்ணா கொஞ்சம் கழிச்சு.. காஃபி மேல கொண்டு வர்றியா..' என்றான்.

பவித்ரா வந்தாள். வரும்போதே 'ஏங்க.. பரணீ உங்களுக்கும், மாறனுக்கும் பொழப்பே இல்லையா? என்ன எப்பப் பாரு.. உடனே புறப்பட்டு வா.. வாங்கறது..' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.



'சரி.. சரி.. ரொம்பத்தான் பிகு பண்ணாதே' வா..!' என்று வரவேற்று அழைத்துக் கொண்டு அவன் மாடியேறுவதை மான்விழி ஒருவிதக் கடுப்புடன் கவனிப்பதைப் பார்த்த தமிழ்ச்செல்வியும், பர்வதமும் பார்வை பரிமாறிக் கொண்டார்கள்.

'பவி! உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்' என்றான் சீரியஸாக.

'சொல்லுங்க..!' என்றாள்.

'பாரு.. பவி! நான் நேரடியா விஷயத்துக்கு வரேன்.. உனக்கு வாழ்க்கைத் துணையா இன்னார்தான் வரணும்னு ஏதாவது முடிவு செஞ்சு வச்சிருக்கியா!' என்றான்.

'ஏன்.. கேக்கறீங்க?' என்றாள்.

'காரணமாத்தான்!' என்றான் பரணீதரன்.

'சில நாட்களுக்கு முன்பு தன் மனம் லேசாக குழப்பத்தில் இருந்தது என்பதையும், ஆனால், மான்விழி அவன் மேல் காட்டுகிற ஆர்வத்தைப் பார்த்தும், மணிமாறனுக்குத் தன் மேல் விழுந்திருக்கிற கவனத்தைப் பார்த்தும் ஆரம்பத்திலேயே தெளிவு செய்து கொண்டதையும் என்றைக்கும் யாரிடமும் சொல்லப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டாள்.

'ஒரு வேளை பரணி உன்னைப் பிடிக்கிறது என்று சொன்னால்..! சொன்னாலும்.. மான்விழியைக் கருதியாவது தன் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்று முடிவு செய்தாள்.

'சொல்லுங்க.. பரணி!' என்றாள் முழுதும் தயாரானவளாய்.

'பவி! இன்னைக்குக் காலையில மாறனைப் பாக்கப் போனேன். அங்க அவன் தலையணைக்கடியில உன் ஃபோட்டோ வச்சிருக்காப்ல.. அவன் மனசை நீ உண்மையாப் புரிஞ்சிருக்கியா.. இல்லையா..? அதுவுமில்லாம இன்னொரு அபத்தமான விஷயம் வேற சொன்னான். நீயும் நானும் பழகற விதத்தை வச்சுகிட்டு உனக்கு.. உனக்கு.. என்மேல..' என்று தயங்கினான்.

'இன்ட்ரஸ்ட்டுன்னு அந்தக் கிறுக்கு சொல்லிருச்சாக்கும்.. கிறுக்கு.. கிறுக்கு..!' என்றாள் கோபமாய்.

'பவி!' என்றான் பரணீதரன் திகைத்துப் போய்!

'பின்னே என்ன பரணீ! நா அன்னைக்கே இனிமே மாற கூடத்தான் எப்பவும் போறதாச்சேன்னு சொன்னேன்.. இப்ப அப்பவே நீங்க புரிஞ்சுக்க வேண்டாம். இதைப் பத்தி என்கிட்டயும் பேசினாப்ல. 'உனக்கு பரணீயைத்தான் பிடிக்குதுன்னா சொல்லு. நான் பரணிகிட்டே பேசறேன்னு பத்து தடவை சொன்னா என்ன செய்ய? அதான் ஒரு வாரம் டைம் குடுங்க அப்புறம் யோசிச்சு முடிவு சொல்றேன்னு கடுப்படிச்சேன்' என்று சிரித்தாள்.

பரணீதரன் ஒரு நிமிடம் திகைத்தான். பிறகு சிரித்தான்.

'வேண்டாம்.. பவித்ரா.. பயல் ரொம்ப ஏங்கிப் போயிருக்கான். கடுப்படிக்காதே!' என்றான்.

அவளும் சிரித்தாள். 'ஒரு வாரம்தானே! அவஸ்தைப் படட்டும்..' என்றாள்.

'ப்ளீஸ்..! ப்ளீஸ்..! எனக்காக! என்றான்.

'சரி.. கெஞ்சாதீங்க.. இன்னைக்கே சொல்லித் தொலை கறேன்..' என்றாள்.

'மாறன் ஒருவிதத்துல கிறுக்குன்னா.. நீங்க இன்னொரு விதத்துல' என்றாள் பவித்ரா.

'நானா..? எப்படி?'

அப்போது பவித்ரா கேட்டாள். 'ஏன், பரணீ எப்பவாவது இப்படி யோசிச்சிருப்பீங்களா? நாங்க எத்தனை பேர்கள் உங்ககிட்டே விழுந்து விழுந்து பழகினோம்.. ஆனா, உங்க மனசு சலனமே வர்லே.. ஏன்? ஒரு ஆம்பளைக்கோ, பொம்பளைக்கோ எப்ப சலனமே வராது தெரியுமா? தனக்கு மனசுக்குப் பிடிச்ச



ஒருத்தனோ.. ஒருத்தியோ வேற இடத்துல காத்துக்கிட்டிருக் காங்க..ங்கற நெனப்பு இருக்கும் போதுதான்.. ஒரு வேளை உங்களுக்கு அந்த மாதிரி ஏதாவது இருக்கோன்னு எப்பவாவது யோசிச்சிருக்கீங்களா? என்றாள்.

'யோசிச்சதில்லே.. ஆனா.. ரெண்டு நாளா அது கொஞ்சம் புரியுது. அதுவும் அத்தே.. மான்விழிக்குக் கல்யாணம் செய் யணும்னு பேச்செடுத்ததுக்கப்புறம்..' என்றான் பெருமூச்சு விட்டான்.

'ஆமா.. மானு உங்களை ரொம்ப லைக் பண்றாப்பலே' என்றாள் பவித்ரா. பிறகு 'நீங்க உங்க அத்தைகிட்ட என்ன சொல்லியிருக்கீங்க.

'ஒரு வாரம் டைம் கேட்டிருக்கேன்!'

'போச்சுரா.. இங்கயும் அதே ஒரு வாரம் டைம்தானா?' என்று பவித்ரா கலகலவென்று சிரிக்கையில்.

'உள்ள வரலாமா?' என்று காஃபிக் கோப்பைகளுடன் மான்விழி நின்றாள்.

முகம் இறுக்கமாக இருந்தது.

பரணீதரன் திரும்பிப் பார்த்தான் 'வாயேன்.. மானு! இதென்ன புதுப் பழக்கம் பர்மிஷன் கேக்கறே!'

'ஆமா.. பிரைவேட் மேட்டர்தான்.. பேசறோம்' என்று பவித்ரா பரணீதரனைப் பார்த்துக் கண்ணைக் காட்டிச் சிரித்தாள்.

'உட்கார்.. மானு!' என்றான் பரணீதரன்.

அம்மா தன்னிடம் மான்விழியின் கல்யாணம் குறித்துப்பேச ஒரு வாரம் டைம் கேட்டிருந்தான் என்பதை பர்வதம் அவளுக்குச் சொல்லியிருந்தார். மான்விழி படியேறி வரும்போதே 'ஒரு வாரம் டைம்!' என்று இருவரும் பேசிச் சிரிப்பது காதில் விழ மான்விழியின் மனம் வாடியது.

தன்னைக் குறித்துத்தான் சிரிக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குள் பரணீதரன் உட்காரச் சொல்லவே 'இல்ல! பரவாயில்ல! உங்க பேச்சுக்கு எதுக்கு நான் இடைஞ்சலா..!' என்றாள் நிற்காமல் போய்விட்டாள்.

பவித்ரா.. சிரித்தாள்.

'பரணி உங்க மேடத்துக்குப் பொறாமை!' என்றாள்.

'அப்படியா சொல்றே!' என்றான் பரணீதரன்.

'ஆமா.. இதை வேற சொல்லணுமாக்கும்' என்றாள். பவித்ரா தலையிலடித்துக் கொண்டாள்.

'பவி!' என்று சற்றே அசடு வழிந்தான் பரணீதரன். 'எனக்கே இதுவரைக்கும் என்னைப் புரியல. பவி.. எப்பவும் மான்விழி இந்த வீட்ல ஒருத்திங்கற எண்ணம் மனசுல பதிந்திருந்தது போலே. அத்தை மாப்பிள்ளை பாக்கறேன்னு ஆரம்பிச்சப்புறம்தான் திகிலான மாதிரியாயிருச்சு. மான்விழி இல்லாத ஒரு வீட்டைக் கற்பனை பண்ணக் கூட என்னாலே முடியலே. அவளை எவ்வளவு சாதாரணமா எடுத்துகிட்டோம்னு.. நேத்தெல்லாம்.. எனக்கே ஆச்சரியம்..' என்றான்.

முகம் லேசாகச் சிவந்தது.

'ஹலோ! வெட்கமாக்கும்!' என்று பவித்ரா அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து சிரித்தாள்.

அவன் கையை முகத்துக்குக் குறுக்காக அசைத்து விட்டு 'ஹேய்! சும்மாயிரு!' என்று சிரித்தான்.

மறுபடியும் பெருமூச்சு விட்டான்.

'ம்.. மாறனை நினைச்சாத்தான் பாவமாயிருக்கு. வெட்கம்னா.. கிலோ எத்தனைன்னு கேப்பயாட்டருக்கு' என்றான்.



இப்போது முகம் சிவப்பது பவித்ராவின் முறையாயிற்று.

'சரி.. நானே மாறன்கிட்டே சொல்லட்டுமா?' என்றான் பரணீதரன் ஆவலாக.

'வேண்டாம்.. அவரே கேட்கட்டும்.. அப்புறம் நான் சொல்லிக்கறேன்' என்றாள் சற்றே இறங்கிய குரலில். பிறகு தொடர்ந்து

'ஓ.. கே.! ஓ.கே..! நீங்க எனக்கு அட்வைஸ் பண்றது இருக்கட்டும். முதல்லே மான்விழிகிட்டே விஷயத்தைச் சொல்லுங்க.. மேடம் ரொம்ப ஃபீல் பண்றாப்ல' என்றாள்.

சற்றுக் கழித்துப் பேசிக் கொண்டே இறங்கி வந்தார்கள்.

'ஹேய்! மான்விழி இங்க வா' என்று அழைத்தான் பரணீதரன்.

'என்ன..' என்று வந்தாள் மான்விழி சுரத்தில்லாமல்.

'ஒரு நல்ல விஷயம்.. நானும், பவித்ராவும் உன்கிட்டேதான் முதல்ல சொல்றோம்' என்றான்.

மான்விழி திகிலடித்தவள் போல் அவன் முகத்தைக் கண்கொட்டாமல் பார்த்தாள் என்ன வரப் போகிறதோ என்ற அச்சம் அவள் வயிற்றில் பரவியது.

பவித்ராவும், பரணீதரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். பிறகு பரணீதரன் மெதுவாக ஆனால் சிரித்துக் கொண்டு சொன்னான்.

'மாறனுக்கும்.. பவித்ராவுக்கும் அநேகமா வெகு சீக்கிரத்திலேயே டும்.. டும்.. டும்.. ஹவ் டூ யூ லைக் தட்?' என்றான்.

'ஓ!' என்றாள் திகைத்துப் போய்.

'என்ன ஓ! ஓடிப் போய் ஏதாவது ஸ்வீட் கொண்டு வா!' என்றான் பரணீதரன் செல்லமாய் ஒரு குட்டு வைத்து-

தன்னைக் குறித்துத்தான் சிரிக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குள் பரணீதரன் உட்காரச் சொல்லவே 'இல்ல! பரவாயில்ல! உங்க பேச்சுக்கு எதுக்கு நான் இடைஞ்சலா..!' என்றாள் நிற்காமல் போய்விட்டாள்.

பவித்ரா.. சிரித்தாள்.

'பரணி உங்க மேடத்துக்குப் பொறாமை!' என்றாள்.

'அப்படியா சொல்றே!' என்றான் பரணீதரன்.

'ஆமா.. இதை வேற சொல்லணுமாக்கும்' என்றாள். பவித்ரா தலையிலடித்துக் கொண்டாள்.

'பவி!' என்று சற்றே அசடு வழிந்தான் பரணீதரன். 'எனக்கே இதுவரைக்கும் என்னைப் புரியல. பவி.. எப்பவும் மான்விழி இந்த வீட்ல ஒருத்திங்கற எண்ணம் மனசுல பதிந்திருந்தது போலே. அத்தை மாப்பிள்ளை பாக்கறேன்னு ஆரம்பிச்சப்புறம்தான் திகிலான மாதிரியாயிருச்சு. மான்விழி இல்லாத ஒரு வீட்டைக் கற்பனை பண்ணக் கூட என்னாலே முடியலே. அவளை எவ்வளவு சாதாரணமா எடுத்துகிட்டோம்னு.. நேத்தெல்லாம்.. எனக்கே ஆச்சரியம்..' என்றான்.

முகம் லேசாகச் சிவந்தது.

'ஹலோ! வெட்கமாக்கும்!' என்று பவித்ரா அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து சிரித்தாள்.

அவன் கையை முகத்துக்குக் குறுக்காக அசைத்து விட்டு 'ஹேய்! சும்மாயிரு!' என்று சிரித்தான்.

மறுபடியும் பெருமூச்சு விட்டான்.

'ம்.. மாறனை நினைச்சாத்தான் பாவமாயிருக்கு.. வெட்கம்னா.. கிலோ எத்தனைன்னு கேப்பயாட்டருக்கு' என்றான்.



இப்போது முகம் சிவப்பது பவித்ராவின் முறையாயிற்று.

'சரி.. நானே மாறன்கிட்டே சொல்லட்டுமா?' என்றான் பரணீதரன் ஆவலாக.

'வேண்டாம்.. அவரே கேட்கட்டும்.. அப்புறம் நான் சொல்லிக்கறேன்' என்றாள் சற்றே இறங்கிய குரலில். பிறகு தொடர்ந்து

'ஓ.. கே.! ஓ.கே..! நீங்க எனக்கு அட்வைஸ் பண்றது இருக்கட்டும். முதல்லே மான்விழிகிட்டே விஷயத்தைச் சொல்லுங்க.. மேடம் ரொம்ப சஃபர் பண்றாப்ல' என்றாள்.

சற்றுக் கழித்துப் பேசிக் கொண்டே இறங்கி வந்தார்கள்.

'ஹேய்! மான்விழி இங்க வா' என்று அழைத்தான் பரணீதரன்.

'என்ன..' என்று வந்தாள் மான்விழி சுரத்தில்லாமல்.

'ஒரு நல்ல விஷயம்.. நானும், பவித்ராவும் உன்கிட்டேதான் முதல்ல சொல்றோம்' என்றான்.

மான்விழி திகிலடித்தவள் போல் அவன் முகத்தைக் கண்கொட்டாமல் பார்த்தாள் என்ன வரப் போகிறதோ என்ற அச்சம் அவள் வயிற்றில் பரவியது.

பவித்ராவும், பரணீதரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். பிறகு பரணீதரன் மெதுவாக ஆனால் சிரித்துக் கொண்டு சொன்னான்.

'மாறனுக்கும்.. பவித்ராவுக்கும் அநேகமா வெகு சீக்கிரத்திலேயே டும்.. டும்.. டும்.. ஹவ் டூ யூ லைக் தட்?' என்றான்.

'ஓ!' என்றாள் திகைத்துப் போய்.

'என்ன ஓ! ஓடிப் போய் ஏதாவது ஸ்வீட் கொண்டு வா!' என்றான் பரணீதரன் செல்லமாய் ஒரு குட்டு வைத்து-

மான்விழியின் முகம் முழுதாக மலர்ந்தது.

'இதோ.. இப்ப! பத்து நிமிஷம் உட்காருங்க.. புதுசா ஸ்வீட் செஞ்சுட்டு வர்றேன்..' என்று ஓடினாள்.

சொன்னது போலவே அவசரமாக கேசரி செய்து கொண்டு வந்தாள்.

அவர்கள் இருவரும் சுவைத்து உண்கையிலே பரணீதரன் கேட்டான்.

'மானு! பாவம்.. இந்தப் பவி.. மணிப்பயலை ஒரே சஸ்பென்ஸ்ல வச்சிருக்காப்ல. அவன்கிட்டே எப்படி சொல்றதுன்னு தயக்கம் போலே.. இதை எப்படி சால்வ் செய்யலாம்.. சொல்லு..' என்றான்.

'ஆமா! இதென்ன பெரிய விஷயமா.. நீங்க ஒரு ஃபோன் போட்டு 'பவி.. உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணுமாம். அப்படீன்னு பேசறதுக்கு ஒரு இடம் ஃபிக்ஸ் பண்ணிக் குடுத்துடுங்க.. அப்புறம்.. அவங்களே பேசிக்கட்டும்' என்றாள்.

பவித்ரா முகம் சிவக்க 'நான் கிளம்பறேன் என்று கிளம்பினாள்.

பரணீதரன் திரும்பிப் பார்க்க மான்விழி முகம் மலரச் சிரித்துக் கொண்டு கையாட்டி பவித்ராவுக்கு விடை கொடுத்தாள்.

∴ ∴ ∴




இன்றைக்கு முக்கியமான வேலைகள் இரண்டு மூன்று இருந்தது. அதனால் மான்விழியிடம் இப்போது பேச நேரமில்லை என்று எண்ணிக் கொண்டவன் கீழே வந்து டிஃபன் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டான்.



தமிழ்ச்செல்வியும், பார்வதமும் பக்கத்தில் ஏதோ கோவிலுக்குப் போய்விட்டு வந்தார்கள்.

மான்விழியின் முகம் மலர்ந்து கிடப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள்.

'என்ன.. மான்விழி.. ரொம்ப சந்தோஷமா இருக்கே..!' என்றாள் தமிழ்ச்செல்வி.

'அக்கா..! அந்தப் பவித்ரா வந்திருந்தாப்ல.. அந்தப் பவித்ராவுக்கும், மணிமாறன் அண்ணாவுக்கும் மேரேஜ் ஆகப் போகுதாம். சின்னத்தான் சொன்னாங்க' என்றாள் மகிழ்ச்சி நிறைந்த குரலில்.

பார்வதத்துக்கும் கூட அதைக் கேட்டு மகிழ்ச்சிதான்.

'அப்படியா? நல்ல விஷயமாச்சே!' என்று வாய்விட்டு சொல்லிக் கொண்டார்.

மான்விழி மகிழ்ச்சியாக சமையல் அறையில் மெல்லிய குரலில் பாட்டுப் பாடியபடி பிற்பகலுக்கான சமையலில் ஈடுபட இங்கே அம்மாவும் மகளும் குசுகுசுவென்று ஆலோசனை செய்தார்கள்.

'அப்புறம்.. என்னடி தமிழு! உன் கொழுந்தன்கிட்டே.. பேசேன்?' என்றார் அம்மா.

'அம்மா.. ஒருவேளை பரணிக்கு இன்ட்ரஸ்ட் இல்லாம.. இருந்து நான் சொல்றதுக்காக ஒத்துக்கற நிர்பந்தத்தை நாம ஏற்படுத்தக் கூடாதில்லே!' என்றாள் தயக்கத்துடன்.

'அப்புறம்.. என்னதான்டி.. முடிவு' என்று கவலைப்பட்டார் பார்வதம்.

கடைசியாக அவர்கள் பேசியதைக் காதில் வாங்கிய மான்விழி

'யாரும் கவலைப்பட வேண்டாம். பவித்ரா இல்லேன்னு ஆச்சில்ல.. இனி நான் என் வழியைப் பாத்துக்கறேன்' என்று எண்ணிக் கொண்டாள்.

கண்களில் பழைய குறும்புடன் அந்த மின்னல் சிரிப்பும் மீண்டும் முகத்தில் குடி கொள்ள ஆரம்பித்திருந்தது.

மாலையில் மறுபடியும் தமிழ்ச்செல்வியும், அம்மாவும் மறுபடியும் அம்மன் கோவில் போய்விட்டு வந்தார்கள்.

மணி எட்டாகியிருந்தது.

அப்போதும் பரணீதரன் வந்திருக்கவில்லை. அவர்கள் வந்ததற்குப் பிறகு பத்து நிமிடம் கழித்துத்தான் அவன் வந்தான்.

'சின்னத்தான்.. உங்களுக்குப் பிடிச்ச ஆப்பம் சுட்டுத் தரட்டுமா?' என்றாள்.

பரணீதரன் சற்றே களைப்பாக இருந்தான்.

'மானு! ஈவ்னிங் டிஃபன் சாப்பிட்டேன். ரொம்பப் பசியில்லே. கொஞ்சம் கழிச்சு.. சின்னதா ரெண்டு ஊத்தி மாடிக்குக் கொண்டு வந்துரு..' என்று போய்விட்டான்.

இன்றைக்கு மாறனையும், பவித்ராவையும் பிக்னிக் மாதிரி அனுப்பி விட்டு மணிமாறனுடைய வேலைகள் இரண்டு, மூன்றையும் அவனே செய்ய வேண்டி வந்தது.

அதனால் கொஞ்சம் அலைச்சல். அலுப்புத் தீர வெந்நீரில் குளித்து விட்டு வந்தான். விச்ராந்தியாக இருக்கையில் 'சித்தப்பா..' என்று மேலே வந்தான் விக்னேஷ்.

சற்று நேரம் அவனிடம் வேடிக்கை பேசி உறங்க வைத்து விட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தான்.

மான்விழி ஹாட்பேக்கில் ஆப்பம் எடுத்துக் கொண்டு பிளேட், தண்ணீர் ஜக் எல்லாவற்றையும் ஒரு டிரேயில் வைத்துக் கொண்டு வந்தாள்.



அவன் மொட்டை மாடியிலேயே சேரில் அமர்ந்து டீபாயின் மேல் வைத்து சாப்பிட்டான். அவன் சாப்பிடும் வரை பொறுமையாக இருந்த மான்விழி மெதுவாக ஆரம்பித்தாள்.

'சின்னத்தான்..! எனக்கு இன்னைக்கெல்லாம் ஒரே கவலையா இருந்தது' என்றாள்.

'ஏன்?' என்றான் பரணீதரன் புரியாதவனாக..

'இல்லே! சின்னத்தான்.. இதோட வேலை செஞ்சிருப்பாரா.. இல்லையான்னுதான்' என்று வலது நெற்றிப் பொட்டைத் தட்டிக் காட்டினாள்.

'ஹேய்! அதுக்கெல்லாம்.. இது வேணுங்கற அட்வர்டைஸ்மெண்ட் மாதிரி ஏதோ சேட்டை பண்றே? இதுக்கு என்ன அர்த்தம்? நான் மூளை இல்லாதவன்னா?' என்றான்.

'பின்னே? பவித்ராகிட்டே போய் நான் வேண்ணா மணிமாறன்கிட்டே சொல்லட்டுமான்னு கேக்கறீங்களே. எங்கயாவது ஹெல்ப் பண்றேன்னு எசகு பிசகா உள்ளே நுழைஞ்சு எக்குத் தப்பாய் ஏதோ சொல்லியிருப்பீங்களோன்னு ஒரே கவலை! என்றாள் குறும்பாய்.

அவன் சற்றே அசடு வழிந்தான். எழுந்து அறைக்குள் நுழைந்து வாஷ்பேஷினில் கை கழுவி விட்டுத் திரும்ப வந்து கட்டிலில் அமர்ந்தான்.

'ஆமா.. இல்லே' என்றான்.

'ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயம்.. அவங்களுக்கு மட்டுமே சொந்தமான விஷயம்' என்று அவள் நிறுத்த-

'அது சரி! சினிமாவிலயெல்லாம் ஹீரோ ஹீரோயினுக்குப் பின்னாடி ஒரு பத்து நாப்பது பேர் ஆடறாங்களே 'அது எதுக்கு?' என்றான் பரணீதரன் அப்பாவி போல.

"ஆமா... சின்னத்தான்.. நானும் கூட அதைப்பத்தி யோசிச்சிருக்கேன்.. நாப்பது பேர் சத்தி ஆடறப்ப.. அவங்க எப்படி ஃப்ரியா பேசிக்க முடியும்?" என்றாள் அவளும் அப்பாவியாய்.

இருவரும் சிரித்தார்கள்.

மான்விழி சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள்.

அவன் சட்டென்று நினைவு வந்தவனாக "ஹேய்.. என்ன சொன்னே? ஏசகு பிசகாய் உள்ளே நுழைஞ்சு.. எக்குத் தப்பாய் பேசறவனா. நான்.. நீ என்ன எப்பப் பாரு எடக்கு மடக்காவே... பேசறே" என்று எழுந்தவன் ஏதோ வழக்கம் போல் அவள் தலையில் குட்டு வைப்பதற்கு வந்தவன் போல் அருகில் வந்தவன் அவளது கலவையான உணர்வுகளுக்கு ஆட்பட்ட பார்வையைப் பார்த்து நின்றான்.

அவன் குரல் மாறியது. பார்வையில் ஒருவித ஆழம் படர்ந்தது.

"ஹேய்! என்ன சொன்னே! இந்த விஷயம்.. பேசறப்ப... ரெண்டே பேர்தான் இருக்கணுமா? இதெல்லாம் எப்படி உனக்குத் தெரியும்?" என்றான் கிறக்கக் குரலில்.

"எல்லாம்.. கேள்வி ஞானம்தான்" என்றாள் கீழே பார்த்துக் கொண்டு.

"கேள்வியின்னா எத்தனை மார்க் கேள்வி? ஞானம்ன்னா.. விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா?" என்று அவன் வம்பு பேச ஆரம்பிக்க,

அவள் பேசாமல் நின்றாள்.

பரணீதரன் பார்வை அவள் முகத்தில் ஆழப்படிந்திருந்தது. ஒருமுறை சுற்றிலும் பார்த்தான்.

"ரெண்டு பேர்தான்.. இருக்கணும்ன்னு கண்டிஷன் போடறே.. ம்.. இந்த விக்னேஷ் பயல் நல்லாத் தூங்கறான் கும்பகர்ணன் மாதிரி..



அப்ப.. நாம ரெண்டு பேர் மட்டும்தான்.. இருக்கிற மாதிரித்தான்... அர்த்தம்" என்றான் குழைந்த குரலில்.

இன்னும் சற்று நெருங்கி நின்றான். அரை அடி இடைவெளி கூட இல்லாமல் நின்றான்.

"சரி.. இப்ப சொல்லு!" உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா..?" என்றான் ஒவ்வொரு வார்த்தையும் தனித்தனியாகவும் அழுத்தமாகவும் உச்சரித்தபடி.

மூச்சே நின்று விடுவது போல உணர்ந்த மான்விழியின் கண்கள் படபடத்தன. பேச்செழாமல் உணர்ச்சி வசப்பட்டு நின்றாள்.

அவன் தொடர்ந்து அதே பார்வையுடன் "எனக்கு.. உன்னைப் பிடிச்சிருக்கு.." என்றான். மறுபடியும் வார்த்தை வார்த்தையாய் உச்சரித்தபடி.

மான் விழி மறுபடியும் அமைதியாக நின்றாள்.

"ஹேய்!" என்றான் கிறக்கக் குரலில்.

"எப்பவும் ஏட்டிக்குப் போட்டியாப் பேசுவே! இப்ப என்ன பதிலைக் காணோம்?" என்றான் ஒற்றை விரலால் முகம் நிமிர்த்தி.

அவள் சட்டென்று தன் முகத்தை வலப்புறம் திருப்பிக் கொண்டாள். முகம் அந்திவானம் போல் சிவந்து கிடந்தது.

அவன் கையை விலக்கினாள்.

"சரிப்பா..! நான் தொடலே! பார்.. நான் அந்தச் சேர்ல உட்கார்ந்துக்கறேன்.. டேக்.. யுவர். ஓன்.. டைம்.. ஆனா, பதில் சொல்லு..' என்றான்.

தன் மனத்தைப் புரிந்து கொண்டு விட்ட உரிமையில்தான் அவன் சீண்டுகிறான் என்பது புரிய அவள் தவித்துப் போய் நின்றாள்.

அவன் நேர் எதிர் சுவர்க்கருகில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டு அவள் முகத்தை விழுங்குவது போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

இத்தனைக்கும் ஐந்து நிமிடங்கள் கூட ஓடியிருக்காது.

சட்டென்று அவன் எதிர்பாராத விதமாக அவள் கண்களில் நீர் திரள அறையை விட்டு இறங்கிக் கீழே ஓடினாள்.

இதை எதிர்பார்க்காத பரணீதரனும் ஒரு நிமிடம் தயங்கிப் பின் கீழே இறங்கிப் போனான்.

கீழே டைனிங் டேபிளில் அமர்ந்து தன்னிரு கைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டு மான்விழி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்ததைப் பார்த்தவன் செய்வதறியாமல் நின்றான்.

தமிழ்ச்செல்வியும், பர்வதமும் விழித்தார்கள்.

''ஏன் தம்பீ... அழறா?'' என்றாள் தமிழ்ச்செல்வி. அவன் முகம் சிவக்க,

'அண்ணி! எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு.. உனக்கும் என்னைப் பிடிச்சிருக்கான்னு' கேட்டேன். அதுக்கு.. இப்படி..'' என்று தடுமாறினான்.

தமிழ்ச்செல்வி புரியாமல் விழிக்க... பர்வதம்மாவுக்கு விஷயம் புரிந்தது.

''பரணி! நீ மேல உன் ரூமுக்குப் போப்பா... கொஞ்ச நேரம் கழிச்சு அனுப்பி வைக்கறோம்'' என்றார் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

பரணீதரன் 'பேய்முழி' என்பார்களே அப்படி விழித்துக் கொண்டு மேலே மொட்டை மாடியில் கால் மணி நேரம் கழித்து அவள் வரும் வரை காத்துக் கொண்டு நின்றிருந்தான்.

∴ ∴ ∴



கால்கள் பின்னிக் கொண்டாற்போல் தயங்கிய நடையுடன் மேலே வந்த அவளிடம் ஆதங்கத்துடன் கேட்டான்.

''ஹேய்! என்ன நீ! இப்படி அழுது என்னை சங்கடப்படுத்தறே?'' என்றான் இறங்கிய குரலில்.

அவள் மறுபடியும் பேசாமல் நின்றாள்.

''மானு! பிடிக்கலேன்னா சொல்லிடலாம்'' என்றான் கவலை தொனித்த குரலில்.

''அதில்லே..!'' என்றாள்.

''பின்னே..?'' என்றான் கேள்விக் குறியாய்.

''அத்தான்.. உங்களுக்குத் தெரியாது. திடீர்னு பாரம் இறங்கினாற் போல ஒரு ஃபீலிங். அந்த இமோஷனை எனக்கு ஹேண்டில்... பண்ணத் தெரியலே..! அந்த சந்தோஷத்தைத் தாங்க முடியலே'' என்றாள்.

அவன் முகம் தெளிவடைந்தது.

''அசடு.. அசடு..! கால் மணி நேரமா என்ன தவிப்பு தவிச்சேன் தெரியுமா?'' என்றான் ஆதங்கத்துடன்.

அவள் சற்றே கோபம் போல் நிமிர்ந்து பார்த்தாள்.

''தவிச்சா... என்ன? நான் எத்தனை நாளாத் தவிச்சிருப்பேன்?'' என்றாள்.

அவன் முகம் மென்மையாக மாறியது. லேசாகச் சிரிப்புத் தோன்றியது.

சற்றே நெருங்கி நின்றான். கைகளை மெதுவாக நீட்டித் தொட முயற்சிக்க,

''ஒண்ணும் தொட வேண்டாம்!'' என்று கைகளை விலக்கினாள்.

''சரிப்பா.. தொடலே!' என்றான். கைகளை சற்றே உயர்த்தி உள்ளங்கைகளை அகல விரித்துச் சிரித்தான்.

கைகளைக் கட்டிக் கொண்டான்.

"எதுக்குத் தவிப்பு?" என்றான் குழைந்த குரலில்.

"அந்தப் பவித்ரா.. பவித்ரா.." என்று அவள் திணறலாகச் சொல்லும்போதே.. "போதும்.. அந்த மேட்டரை இன்னொரு நாளைக்குப் பேசலாம்" என்றவன் அவள் சற்றும் எதிர்பாராத விதமாக தான் நின்ற விதத்திலேயே குனிந்து அவள் கன்னத்தில் அழுந்த இதழ் பதித்தான்.

இதை எதிர்பாராத மான்விழி திகைத்துப் போய் கண்களை மூடிக் கொண்டாள்.

சற்று நேரம் மௌனம் நிலவ அவளே மெதுவாகக் கண் திறந்தாள். அவன் சிரிப்புடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

"பார்! நான் தொடவேயில்லை!" என்று மறுபடியும் கைகளை விரித்துக் காட்டினான்.

அவள் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டாள்.

"ஹேய்! திட்டறே!" என்று சிரித்தான்.

முதல் முறையாக அவன் பார்வையில் தெரிந்த அந்த வித்தியாசம் அவளை இயல்பாக இருக்க விடாமல் செய்தது.

"ஊர்ப்பட்ட வாயடிப்பே? இப்ப பதிலைக் காணோம்" என்றான் குறும்பாக.

அவள் கண்களில் குறும்பு மின்ன ஏதோ சொல்ல வந்தவள் வாயை இறுக மூடிக் கொண்டாள்.

"ஹேய்.. என்னவோ சொல்ல வந்தே? சொல்லு.!" என்று கெஞ்ச ஆரம்பித்தான்.

ஓரிரு நாட்களுக்குள் அவன் கைச் சிறையில் சிக்கிக் கொண்டாள்.



"ப்ளீஸ்! ரொம்ப நேரம் போகலேன்னா.. அக்காவும்.. அம்மாவும்..!" என்று திணறினாள்.

விடுவித்தான். ஏக்கப் பார்வையுடன் நின்றான்.

"சரி... கோபிச்சுக்காதீங்க... ஸ்வீட் செஞ்சு தரேன்.." என்றவள் குழந்தையைச் சமாதானப்படுத்துவது போல், அவன் புன்னகைத்தான். "என்ன ஸ்வீட்!" என்றான் மறுபடியும் நெருங்கி இளைந்தபடி.

"டப்பா... சாக்லேட்!" என்றாள் மான்விழி. கலகலவென சிரித்தான்.

இருவரும் சிரித்து முடிக்கிற அந்த இடைவெளியில் மான்விழி சட்டென்று பரணீதரனின் கன்னத்தில் அவனைப் போலவே அழுத்தமான பதில் கொடுத்தாள்.

அவன் திகைத்துப் போய் கண்கள் மூடி நிற்கையில் 'பதில் குடுக்க மாட்டேன்னு நினைச்சீங்களா? நீங்க கேக்கற எல்லாக் கேள்விக்கும்... பதில் குடுப்பேன்.. மிஸ்டர் சின்னத்தான்' என்று முணுமுணுத்தாள்.

இறங்கி ஓடிப் போய்விட்டாள்.

அவன் கனவில் இருப்பவன் போல் கன்னத்தைத் தடவிக் கொண்டு ஒரு சிரிப்புடன் வெகுநேரம் நின்று கொண்டிருந்தான்.

∴ ∴ ∴




'யாரையுமே நம்ப முடியலைடி.. இந்தக் காலத்துல!" என்றாள் ரேகா.

"யாரைச் சொல்றே?" என்றாள் கீதா.

"இதோ! இந்த அமுக்கினியைத்தான்" என்று செல்லமாக பவித்ராவின் தலையில் ஒரு தட்டுத் தட்டினாள் ரேகா.

''அம்மா பொண்ணே! இப்படித் தலையைத் தலையை ஆட்டினா எப்படி அலங்காரம் செய்யறதாம்'' என்றாள் தமிழ்ச் செல்வி.

''சாரிக்கா!'' என்றாள் ரேகா. தமிழ்ச்செல்விதான் பவித்ராவுக்கு முக அலங்காரம் செய்ய வேண்டுமென்று விரும்பினான் மணிமாறன். பலத்த தயக்கத்துக்குப் பின் தமிழ்ச் செல்வி ஒத்துக் கொண்டாள்.

மணிமாறனுக்கும் பவித்ராவுக்கும் அன்றைக்கு நிச்சயதார்த்தம். அன்றைக்கொருநாள் பவித்ரா மணிமாறனிடம் தன் சம்மதத்தைச் சொன்னாள். தொடர்ந்து பெற்றோர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. பின்னர் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ள முடிவு செய்தார்கள்.

பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருப்பதால் மூன்று மாதம் கழித்து நிச்சயம் வைத்துக் கொள்ளலாம் என்றும், அதற்கு அடுத்த மூன்று மாதம் கழித்துத் திருமணம் என்றும் முடிவு செய்தார்கள்.

மூன்று மாதங்கள் வேகமாக ஓடிப் போய் விட்டன.

தமிழ்ச் செல்வி தான் கற்றுக் கொண்ட அழகுக் கலையைப் பயன்படுத்த ஒரு பியூட்டி பார்லரைத் தன் வீட்டின் முன்னறையிலேயே அமைத்துக் கொண்டாள்.

ஃபேஷியல், மெஹந்தி போட்டு விடுதல், பெடிக்யூர், மெனிக்யூர் என்று செய்து வருவாய் பார்க்க ஆரம்பித்திருந்தாள். பெண்கள் மட்டுமே என்பதால் அவளுக்கும் கடினமாக இருக்கவில்லை.

புதிய புதிய நட்புகள் கிடைத்தன. அவளுடைய வெளிப் படையான பேச்சும், உழைப்பும் பெண்கள் அவளைத் தேடி வருவதற்குக் காரணமாக இருந்தன. அவளுக்கும் பொழுதும் உருப்படியாகக் கழிந்தது.



அந்த வகையில் இப்போது பவித்ராவுக்குச் செய்த அலங்காரம் எல்லாருக்கும் பிடித்திருந்தது. ரோஸ் நிறத்தில் வயலட் நிறம் இழைந்தோட பவித்ரா அணிந்திருந்த பட்டு அவள் அழகுக்கு மேலும் அழகூட்டியது. மணிமாறனின் கண்கள் அவள் மேல் படிந்து மீண்டு கொண்டிருந்தன.

''சரி.. சரி... ரொம்பத்தான் வழியாதே! எங்கிட்டேயும் பேசு!'' என்று நண்பர்கள் செய்த கலாட்டாவுக்குச் சிரித்துக் கொண்டான்.

எளிய அலங்காரத்தில் மெல்லிய பிரிண்டட் பட்டுப் புடவை அணிந்து பெண்ணுக்குத் துணைப் பெண்ணாக வந்தாள் மான்விழி.

பரணீதரனின் பார்வை அவள் மேல் அழுத்தமாகப் படிவதைப் பார்த்த மணிமாறன் ''டேய்.. இங்க பாருங்க! என்னை மட்டும் சொல்றீங்க! இவன் முழிக்கற முழியைப் பாருங்க!'' என்று திரும்பக் கலாட்டா செய்ய அங்கே கலகலப்பும் சிரிப்பும் நிறைந்து வழிந்தது.

∴ ∴ ∴

''தம்பி... ரெண்டு பேரும் கொஞ்சம் சேர்ந்து நில்லுங்க'' என்றாள் தமிழ்ச்செல்வி.

பர்வதம்மா திருஷ்டி சுற்றிப் போட பரணீதரனும், மான்விழியும் லேசான வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

குழந்தைகள் வழக்கம் போல் அவனிடம் அமர்ந்து கொண்டார்கள்.

''சித்தப்பா.. என் தொங்கட்டான் பாத்தியா?'' என்றாள் வினிதா ஆர்வமாக.

''அழகாயிருக்குடா.. ராஜாத்தி!'' என்று லேசாக அணைத்துக் கொண்டான்.

"சித்தப்பா..! இன்னைக்கு அங்க எல்லாரும் பேசிக்கிட்டாங்க.. நம்ம மானு சித்தி ரொம்ப அழகா இருந்தாங்கன்னு.." என்றாள்.

பரணீதரன் கண்களில் குறும்பு மின்ன மான்விழியைத் திரும்பிப் பார்த்தான்.

மான்விழி ஒரு கிறக்கமான புன்னகையுடன் 'மானு சித்திகிட்டே ஏதாவது கேட்பாளாயிருக்கும். அதான் ஐஸ் வைக்கறா..' என்றாள்.

'நீ அழகா இருந்து அவளுக்கு என்ன ஆகப் போகுது?' என்று பரணீதரன் சிரிக்கவும் அவர்கள் பேசிக் கொள்ளட்டும் என்று நினைத்த தமிழ்ச்செல்வியும், பர்வதமும் வீட்டின் முன்னாலிருந்த அந்த இடத்தில் சேர் போட்டு அமர்ந்து கொண்டார்கள்.

'சித்தப்பா.. என் ஃப்ரண்டு கமலா என்கிட்டே கேட்டா..' என்றாள் வினிதா.

'என்ன கேட்டா?'

'நான் சொன்னேன் எங்க சித்தப்பாவுக்கும் சித்திக்கும் கல்யாணம் நடக்கப் போகுதுன்னு. அதுக்கு அவ கேக்கறா... கல்யாணம் ஆனப்புறம்தானே சித்தப்பா.. சித்தியாக முடியும் இப்பவே.. எப்படி? எனக்கும் புரியலேன்னு.'

'அதானே! ஒரே சிக்கலா இருக்கே!' என்றான் பரணீதரன் சிரிக்க.

'சிரிக்காதே. சித்தப்பா.. சொல்லு!' என்றாள்.

'பார்றா.. கண்ணா.. பரணி சித்தப்பா.. எங்கப்பாவோட தம்பி. அதனால சித்தப்பா.. மான்விழி சித்தி எங்கம்மாவோட தங்கை. அதனால சித்தி.. இப்ப ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கறாங்க..ன்னு சொல்லு!'

'கல்யாணம் பண்ணிக்கலேன்னாலும், சித்தப்பா.. சித்திதானே... அப்புறம் எதுக்குக் கல்யாணம்? அப்படின்னு கேட்கறாங்க' என்றாள் வினிதா.



'அதானே? பதவியில் எந்த மாற்றமும் இல்லை. அப்ப எதுக்கு மானு, கல்யாணம்?' என்று பரணீதரன் மறுபடியும் குறும்பாகச் சிரிக்க... மான்விழி முறைத்தாள்.

'சித்தப்பா.. எதுக்குக் கல்யாணம் பண்றாங்க?' என்றான் விக்னேஷ் மறுபடியும்.

'ம்.. கல்யாணம் பண்ணினா.. நிறைய புது டிரஸ் கிடைக்கும்.. நகை கிடைக்கும்.. அப்புறம் பாப்பா.. கிடைக்கும்.. அதுக்குத் தாண்டா' என்றாள் வினிதா.

இனிச் சரமாரியாக சங்கடமான கேள்விகள் வரும் எனப் புரிந்து கொண்ட பரணீதரன் பேச்சை மாற்றினான்.

'சரி.. ரொம்ப டயர்டாயிருக்கீங்க.. தூங்கலாம். அப்புறம்.. இன்னொரு நாளைக்கு இதைப் பேசலாம்... மணிமாறன் மாமா.. ரெண்டு பாக்ஸ் நிறைய உங்களுக்கு ஸ்வீட்ஸ் குடுத்திருக்காங்க.. சீக்கிரம் தூங்கி எழுந்தா... காலையில சாப்பிடலாம், என்ன?' என்று குழந்தைகளை மான்விழி கிளப்புவதை அவன் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு முணுமுணுப்பாக...

'கொஞ்சம் கழிச்சு மேல வா.. கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாம்' என்று சொல்லிவிட்டு மேலே போனான்.

∴ ∴ ∴

மிகத் தீவிரமாக குனிந்து ஏதோ கணக்கு வழக்குகளைப் புரட்டிக் கொண்டிருந்தான் பரணீதரன்.

மான்விழி மேலே வருவதைப் பார்த்துத் திரும்பினான்.

முகம் மலர்ந்தது. ஃபைலை மூடி வைத்துவிட்டு எழுந்து வந்தான்.

'ஹேய்! மானு!' என்று சற்று நேரம் அவள் அழகைக் கண்களால் பருகிக் கொண்டான்.

அவள் 'எதுக்கு வரச் சொன்னீங்க?' என்று குழறினாள்.

அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் எத்தனையோ பொருள் தெரிந்தது. அந்தச் சிரிப்பு ஏன் தன்னை இவ்வளவு அலைக்கழிக்க வேண்டும் என்று தனக்குள் கேள்விகள் எழுப்பிக் கொண்டே வெட்கம் ததும்ப நின்று கொண்டிருந்தாள்.

'எதுக்கு வரச் சொன்னேன்? நியாயம் கேக்கத்தான்.'

அவன் கைகள் மெதுவாக வளைந்து மான்விழியைத் தன்னருகே இழுத்தன.

'பின்னே! இப்படி அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்து நின்னா போற வர்றவனெல்லாம் கண்ணைப் போடறாங்க.. அவங்க பார்த்த பார்வைக்கு அவனுக கண்ணுகளை அப்படியே..' என்று அவன் சிரிக்க அவளும் சிரித்தாள்.

''அத்தான்... நீங்களே... பாருங்க' சிம்பிளா ஒரு புடவை. [illegible] ஒரு செயின் கூடுதலா.. நான் என்னத்தை அலங்காரம் பண்ணிக்கிட்டேன்? ஒண்ணுமே இல்லை.'

'அதானே! அப்புறம் என்ன இப்படி ஒரு ஜொலி ஜொலிப்பு!'

'அதான்... எனக்கும் தெரியலே!'' என்று அவள் வெட்கத்துடன் அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் கைகள் அவள் தலையை வருடிக் கொடுத்தன. சற்று நேரம் அமைதியில் கழிந்தது. அவன் மௌனம் பார்த்து அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கணத்தில் அவன் கண்களில் தெரிந்த தாபம் நிறைந்த பார்வையால் கவரப்பட்டு அப்படியே நின்றாள்.

மெல்ல முணுமுணுப்பாகச் சொன்னாள்.

'ஏன் ஜொலி ஜொலிப்பு தெரியுமா?'

'ம்!' என்றான் கிறக்கக் குரலில்.



'மனசுக்குப் பிடிச்சவர்.. மனசில் நிறைஞ்சிருக்கிறோம்.. அவரோட சம்மதம் கிடைச்சிருக்குங்கற சந்தோஷம்..' என்றாள்.

அவன் குனிந்து அவள் நெற்றியில் இதழ் பதித்தான். புன்னகைத்தான்.

'தேங்க்ஸ்... பார் தி காம்ப்ளிமெண்ட்' என்றாள் லேசா விலகினாள்.

'சரி.. நீ கீழே போ! அண்ணி ஏதாவும் நினைக்கப் போறாங்க' என்றான்.

அவள் விலகவில்லை. மறுபடியும் நெருங்கி நின்றாள். 'நினைக்க மாட்டாங்க!' என்றாள் உறுதியாக.

'அவங்கதானே பர்மிஷன் குடுத்தாங்க' என்றாள்.

சற்று முன் கீழே நடந்ததைச் சொன்னாள் மான்விழி. சமையலறைக்கும் டைனிங் டேபிளுக்கும் காரணமில்லாமல் நடப்பதையும், நகத்தைக் கடித்துக் கொள்வதையும் பார்த்த தமிழ்ச் செல்விக்கு உள்ளூரச் சிரிப்பு.

'ஏய்.. மானு! இங்கே வா! ஏன் ரொம்ப டென்ஷனாயிருக்கே?' என்றாள்.

'இல்லே..! இல்லே..!' என்று இழுத்து நிறுத்தினாள்.

'ம்.. சொல்லு!'

'இல்லே! அத்தான் கொஞ்ச நேரம் மேலே வா.. பேசிக்கிட்டிருக்கலாம்னு சொன்னாங்க!' என்றாள்.

என்றைக்கு பரணீதரன் தன் மனதைத் திறந்து காட்டினானோ அன்றையிலிருந்தே மான்விழியை இரவு நேரங்களில் மேலே வரவேண்டாமென்று சொல்லிவிட்டான்.

'வேண்டாம்.. மானு! இதுவரைக்கும் இருந்த நிலைமை வேற. இன்னைக்கு இருக்கிற நிலைமை வேற. நாம் பாட்டுக்கு

சாதாரணமா பேசிக்கிட்டிருந்தாலும் பெத்தவங்க மனசுல உறுத்துன்னு இருக்கும்.. வேண்டாம்!' என்று சொல்லிவிட்டான். அதனால் அப்போதிருந்து அவன் மேலே செல்கிற வழக்கத்தையே விட்டு விட்டாள்.

ஒருவேளை திருமணம் பேசி விட்டதால் மான்விழி வெட்கப்பட்டுக் கொண்டு மேலே போவதைத் தவிர்க்கிறாள் போலும் என்று தமிழ்ச்செல்வியும், பார்வதம்மாவும் எண்ணிக் கொண்டார்கள். ஆனால், எதுவும் கேட்கவில்லை. ஆனால் மான்விழியே ஒரு தடவை தமிழ்ச்செல்வியிடம் வெட்கத்துடன் பரணி சொன்னதைச் சொன்னாள்.

'சரி.. பரணி எப்படிச் சொல்றானோ? அப்படிக் கேளு' என்று சொல்லிவிட்டாள் தமிழ்ச்செல்வி. ஆனால் இன்றைக்குத் தன் அனுமதியைக் கேட்டுக் கொண்டு நிற்கிற சகோதரியைப் பார்த்து அன்பு பெருகியது.

'ஹேய்! மக்கு! நான் வளர்த்த பையன்டி பரணி. எனக்கு அவனைப் பத்தி நல்லாத் தெரியும். என்ன கொஞ்ச நேரம் சந்தோஷமாகப் பேசிக்கிட்டிருக்கலாம்னு கூப்பிட்டிருப்பான்.. போ.. போய்ப் பேசிட்டு வா..' என்றாள். நகர முற்பட்டவள் தங்கையிடம் மறுபடியும் சொன்னாள்.

'பாருடி.. மானு! ஒழுக்கமா இருக்கணும்னு நினைக்கிற ஆணோ, பெண்ணோ எத்தனை பேருக்கு நடுவில் எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும் ஒழுக்கமா இருப்பாங்க.. அதே மாதிரி கெட்டுப் போறவங்களையும் யாரும் காப்பாத்த முடியாதுடி.. போ.. ஃப்ரீயாக் கொஞ்ச நேரம் கலகலப்பாய்ப் பேசிட்டு வா..' என்று அனுப்பினாள்.

இதைக் கேட்டதும் பரணீதரன் முகம் மலர்ந்தது. 'இனி என்னடா.. பெரிய இடமே.. பர்மிஷன் குடுத்துட்டாங்க..' என்று தன் மகிழ்ச்சியை வேறு வேறு விதங்களில் வெளிப்படுத்தினான்.



அவளும் தடுக்கவில்லை.

'ஆனா... கூடவே.. நான் வளர்த்த பையன் நல்ல பையன்னும் சொன்னாங்க..'

'ஆமா... அதனாலதான் பொறுமையாக் காத்திருந்து.. முறையாப் பொண்ணு கேட்டு' என்று கொஞ்சலாகச் சொல்லிக் கொண்டே மேலும் சற்று தாபத்தை வெளிப்படுத்தினான். பிறகு விலகி 'உட்கார்!' என்று தன்னருகில் சோஃபாவில் அமர்த்திக் கொண்டான். பிறகு சொன்னான்.

'ஆமா.. பவி... கூட ஒரு தடவை மாறன்கிட்டே சொன்னாப்பல யாம். நம்ம பரணியை காலேஜ்ல நிறைய பெண்களுக்குப் பிடிக்கும். ஆனா, பரணிக்கு பெண்கள் வேறு இனம், என்கிற நினைப்பே கிடையாது. கல்மிஷம் இல்லாம இயல்பா சக மனுஷி என்கிற முறையிலதான் பழகுவாரு. அவரைப் பொறுத்தவரை மாறனும் ஒண்ணுதான். பவித்ராவும் ஒண்ணுதான். 'நண்பர்கள்' அவ்வளவுதான். இது ரொம்ப ஆரோக்கியமான மனநிலை அப்படீன்னு..'

'ஐயய்யோ' என்று குறும்பாகச் சிரித்தாள் மான்விழி.

'என்ன.. என்ன..' என்றான் சற்றே பதற்றத்துடன்.

'உங்க மனநிலையைப் போயா ஆரோக்கியமான மனநிலைன்னு சொன்னாங்க!' என்றாள் மான்விழி.

'ஆமா.. ஏன்?' என்றான் பரணீதரன்.

இப்போது அவள் சட்டென்று அவன் காதருகில் இதழ் வைத்து 'நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உளர்னதெல்லாம் கேட்டா அப்படித் தெரியலியே!' என்றாள்.

அவன் ரசித்துச் சிரித்தான். மறுபடியும் சொன்னான்.

'ஒரே ஒருத்திக்கிட்டே உளறலாம். என்னவும்.. பேசலாம்... எல்லா உரிமையும்.. இருக்கு தெரியுமா? அப்படி ஒரே

ஒருத்திகிட்டே அந்த மாதிரிப் பிரியம் வர்லைன்னாத்தான் ஆரோக்கியமான மனநிலை இல்லைன்னு அர்த்தம் தெரியுதா..?' என்றான்.

'ம்.. தெரியுது.. தெரியுது..!' என்றாள்.

'என்ன தெரியுது?'

'நல்லா உளறத் தெரியுதுன்னு தெரியுது. அது மட்டுமில்ல..' என்று நிறுத்தினாள்.

'ம்.. சொல்லு! சொல்லு!'

'ம்ஹூம்.. அப்புறம் சொல்றேன். அதுசரி நீங்க என்னவோ பேசணுன்னு கூப்பிட்டீங்களே!' என்றாள்.

'ஆமா! மானு! எனக்குக் கொஞ்சம் உள்ளூரக் கவலை. என்னன்னா.. அண்ணி சமீப காலமாக அண்ணனைப் பத்திப் பேசறதேயில்லை. மனசுக்குள்ள எல்லாக் கவலையும் அமுத்திக்கறாங்களோ. அப்படின்னு.. அதனால.. நான் என்ன நினைக்கறன்னா கொஞ்ச நாளைக்கு நாம அண்ணி முன்னால ரொம்பவும் இழைஞ்சுக்கறது அது.. இதெல்லாம். வேண்டாம்ன்னு.. நினைக்கிறேன்.'

'ஓ.. எஸ்!' என்றாள் மான்விழி.

'தெரியும்! என் செல்லம்ஸ் நான் எது சொன்னாலும் ஒத்துக்குவேன்னு' என்று 'ஐஸ்' வைத்தான் பரணீதரன்.

அவள் வலது கட்டை விரலை ஆட்டினாள்.

'ஹலோ! ஹலோ! இப்படி ஆளை முழுக்காட்டற வேலையெல்லாம் வேண்டாம்..' என்று சிரித்தாள். மான்விழி எழுந்தாள்.

'சரி.. சரி.. சீரியஸாப் பேசணும்.. உட்காரு..' என்றவன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு 'மான்விழி! அண்ணிக்குத்



தர்ம சங்கடம் இல்லாம இருக்கணும்னா நம்ம மேரேஜை சிக்கனமா நடத்திரலாம். ஒரு ரிசப்ஷன் வேண்ணா.. ரொம்ப கிராண்டாவும் இல்லாம.. ரொம்பவும் சிம்பிளா இல்லாம நடத்திரலாம்.. என்ன?' என்றான்.

மான்விழியின் முகம் சீரியஸாக மாறியது.

'அத்தான்.. நீங்க என்ன சொன்னாலும் நான் கேக்கறேன். நாந்தான் சொல்லிட்டேனே! உங்களோட வாழப் போறேன்கறதே எனக்குப் பெரிய விஷயம்.... சிம்பிளா ஒரு மஞ்சள் கயிறை எடுத்துக் காட்டினாலும்.. போதும்' என்றாள் உணர்ச்சி வசப்பட்டு.

பரணீதரனின் முகத்திலும் கலவையான உணர்வுகள் தோன்றின.

'ஹேய்! வேண்டாம்.. இந்த மாதிரி எல்லாம் பேசாதே! நான் ரொம்பக் கட்டுப்பாடான ஆளுன்னு பெருமையா நினைச்சுக் கிட்டிருக்கேன்.. அந்தப் பெருமையைக் கெடுத்திராதே!' என்றான் கிறக்கக் குரலில்.

அந்த வார்த்தைகளின் பொருள் புரிந்த மான்விழி முகம் சிவந்து 'ஐயோ! நான் கீழே போறேன்!' என்று நகர்ந்தாள்.

'ஹேய்.. நில்லு.. கீழே இறங்கிப் போறதுக்கு முன்னாடி என்னமோ சொல்றேன்னய என்ன அது?' என்றான்.

அவள் நின்றாள். மறுபடியும் அவன் மார்பில் முகம் பதித்தாள். பிறகு சொன்னாள். 'உங்களுக்கு நல்லா உளறத் தெரியுதுன்னு சொன்னேனே. அது மட்டுமில்லை.. அது மட்டுமில்லை.. அது.. அது.. அப்படி உளர்றது எனக்கும் பிடிக்குது!' என்றாள். அவன் மேலே ஏதும் சொல்வதற்குள் இறங்கி ஓடி விட்டாள்.

அவன் அவள் போன பாதையைச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டே லேசாக மார்பை நீவிக் கொண்டான். திரும்பக் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

இனிமேல் தன் வாழ்க்கையில் அதிரடித் திருப்பங்கள் இருக்காது. வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் ஓடி விடும் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் இனிமேல்தான் பெரிய திருப்பங்கள் காத்திருக்கின்றன என்று அன்றைக்கு அவனுக்குப் புரியவில்லை.

∴ ∴ ∴




'ஹல்லோ! பவி!' என்று குரல் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் பவித்ரா.

இரவு சற்று நேரம் வரை தோழிகள் மாற்றி மாற்றி அழைத்ததால் ஃபோனில் பேசிக் கொண்டிருந்தாள் பவித்ரா. பிறகும் சற்று நேரம் நிச்சயதார்த்தத்தில் நடந்த நிகழ்வுகளை நினைத்துக் கொண்டிருந்ததனால் மணிமாறனின் மலர்ந்த முகத்தை நினைக்கும் போதெல்லாம் அவளுக்குள்ளும் மகிழ்ச்சி பொங்கியது. உறங்குவதற்கு நேரமாகிவிட்டது.

'இப்போதென்ன? காலையிலேயே வந்து நிற்கிறார்' என்று கன்னம் சிவக்கப் புன்னகைத்தாள்.

எழுந்தாள். அவசர அவசரமாக முகந்திருத்திக் கொண்டு வந்தாள்.

'இதென்ன? இப்படிக் காலையிலயே வந்து நிக்கிறீங்க?' என்றாள்.

'ஹேய்! என்ன இப்ப? காலையில வந்தா.. என்ன?' என்று அவன் செல்லமாகக் கோபித்துக் கொண்டான்.

'என்ன காலையில வந்தா என்னன்னு கேக்கறீங்க? என்னை மேக் அப் இல்லாமல் பார்த்துப் பயந்து போய்.. ஷாக் ஆயிட்டீங்கன்னா?' என்றாள் அவள்.



'ஹலோ! உங்க மேக் அப் முகத்தைப் பாத்தா.. நாங்க மயங்கினோம். அம்மாவுடைய குணம் பார்த்துத்தானே நாங்க மயங்கினோம்?' என்று வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

நெருங்கி நின்றான்.

'பவி! பொதுவா எல்லாமே கல்யாண சமயத்துல எப்படிக் கற்பனை செய்வாங்களோ எனக்குத் தெரியாது. ஆனா நான் உன்னை நீ சமைக்கறப்போ.. ஒட்டரைக் குச்சியை வச்சுக்கிட்டு கிளீன் பண்றேன்னு நிக்கறப்போ.. அப்புறம்.. நம்ம குழந்தையைக் கொஞ்சறப்போ.. எப்படி இருப்பேன்னுதான் கற்பனை பண்ணுவேன்.. தெரியுமா?'

'ஓஹோ.. அப்ப.. ஃபுல்லா.. எங்களை வேலை வாங்கறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?' என்றாள் மறுபடியும் கோபித்துக் கொண்டு.

'ஆமா! அப்படித்தானே நானும் ஹெல்ப் பண்றேன் பேர்வழின்னு.. கொஞ்சம் அப்படி.. இப்படி பக்கத்துலயே நிக்கலாம்..' என்று மேலும் இழைந்தான்.

'இப்ப.. நிக்கறீங்களே! இப்படியா?' என்றாள் அவளும் குழைந்த குரலில்.

'ம்..!' என்றான் மணிமாறன்.

'என்ன.. மாறன் இது! நேத்துதான் முழுநாளும் ஒண்ணா இருந்தோமே! இப்ப இப்படிக் காலையில வந்து நிக்கறீங்க!' என்றாள் வெட்கத்துடன்.

'ஆமா! என்ன பண்ணச் சொல்றே! நைட் தூக்கமே வர்லே! காலையிலயும் பார்த்தே ஆகணும்னு எண்ணம்!' என்றான்.

அவன் அப்படிச் சொன்னாலும் அவன் வருகைக்கு வேறு ஏதோ காரணமும் இருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் கேட்கவில்லை.

'மணி! அம்மாவும், அப்பாவும் மனசுக்குள்ளே சிரிச்சுக்கு வாங்க!' என்றாள்.

'உங்க அம்மா.. அப்பா.. டிரைவர் சமையல்காரன்னு யார் வேண்ணா சிரிக்கட்டுமே! எனக்கென்ன அதைப் பத்தி.. என் அவஸ்தை எனக்குத்தானே தெரியும்!' என்றான் மறுபடியும்.

'சரி.. சரி.. போதும்.. ரொம்ப வழியாதீங்க... ஏதோ ப்ரொகிராமோட வந்திருக்கீங்க... அது என்ன சொல்லுங்க!' என்றாள்.

'ஆமா.. ப்ரோகிராம்தான். நீ குளிச்சிட்டு அலங்காரம் முடிச்சுட்டு உடனே வருவியாம். அம்மாவும் அப்பாவும் உங்க பேரண்ட்ஸைப் பாக்கறதுக்கு ஏதோ ஏற்பாடுகள் பற்றி டிஸ்கஸ் பண்ண வந்திருக்காங்க.. நமக்குக் கொஞ்சம் டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கு... வா!' என்று இறங்கிப் போனான்.

∴ ∴ ∴

**த**ண்ணீர் தலையில் கொட்டிக் கொண்டிருக்கும் போதே பவித்ராவுக்கு உள்ளே எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

மணிமாறன் தன்னை மிகவும் நேசிக்கிறான். நேசிக்கிறான் என்ன பூஜிக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். அன்றைக்கொரு நாள் பரணீதரன் சொன்னது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

'பவி.. ஒன்னுமில்லே.. இந்தப் புதுப்பணக்காரன் சதாசிவம் என்ன ஆட்டம் போடறான். ஆனா நம்ம மணிமாறனுக்கு இருக்கற வசதிக்கு அவன் என்ன ஆட்டம் போடலாம் தெரியுமா? ஆனா என் அதிர்ஷ்டம் அவன் எங்கூடப் பழகறது தெரியுமா? அதுமட்டுமல்ல என் கஷ்டங்கள்ல எல்லாம் கைகொடுத்தான்' என்று நெஞ்சம் நெகிழச் சொன்னான்.

'ஆமா.. பரணி. எனக்கு உங்களையும் மாறனையும் ரொம்பப் பிடிக்கும். ஆனா, எப்ப அவரை நான் ரொம்ப நேசிக்க ஆரம்பிச்சேன் தெரியுமா? பவி, உனக்கு பரணியைத்தான்



பிடிக்குதுன்னா.. சொல்லு.. நான் அவன்கிட்டே பேசறேன்...னு சொன்னாரு பாத்தீங்களா? அப்பத்தான் அது எவ்வளவு உயர்வான மனசு என்றாள்.

'சொன்னது மட்டுமில்லே என்கிட்டே பேசவும்.. செஞ்சான். அப்பத்தான்.. நான் சொன்னேன்.. பவித்ரா.. எனக்கு ரொம்ப உயர்வான ஃப்ரெண்டுடா.. குழம்பிக்காதே.. அதுமட்டுமில்லடா.. என் மனசுல மான்விழிதான் இருக்கான்னு எனக்கே புரிய வச்சதே பவித்ராதான்டான்னு சொன்னேன்' என்றான்.

பவித்ரா கனவில் இருப்பது போல் பேசினாள்.

'ஏன் பவி? தான் நேசிக்கிற ஒரு பெண் வேற ஒருத்தரை நேசக்கிறாளோன்னு ஒரு எண்ணம். ஆனா, அப்படி அவ நேசிச்சா அதுக்குக் கோபப்படாம அவளுக்குப் பிடிச்சவனையே சேத்து வைப்போம்.. அவ நல்லா இருக்கட்டும்னு நினைக்கறது எவ்வளவு பெரிய விஷயம்? அதுக்கு எவ்வளவு பெரிய மனசு வேணும்!' அதுக்கு நான் என்ன திரும்பிக் குடுக்கறது?

'உன் மனசைக் குடு. உன் வாழ்க்கையை அவன் பொறுப்பில் குடு. அவனை எவ்வளவு சந்தோஷமா வச்சுக்க முடியுமோ அவ்வளவு சந்தோஷமா வச்சுக்க' என்றான்.

'கண்டிப்பா.. பரணி!' என்றாள் ஆத்மார்த்தமாக.

அவசர அவசரமாக உடை மாற்றிக் கொண்டு கீழே வந்து பெரியவர்களிடம் ஓரிரு வினாடிகள் பேசிவிட்டு மெதுவாகத் தனிமை நாடி அவனுடன் வீட்டிற்குப் பின்னாலே இருக்கிற அந்தச் சின்ன கார்டனில் அவர்கள் சேர் போட்டு அமரும் வரை அவள் அதே பெருமித உணர்விலேயே இருந்தாள்.

அந்த உணர்வே மனத்தை நிறைத்திருந்ததாலோ என்னவோ இருவரும் சேர்களில் அமர்ந்தவுடன் அவனைப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தாள்.

அவன் தன் வலக்கையால் இடது மார்பைப் பிடித்துக் கொண்டு மயங்கிச் சாய்வது போல் நடித்தான்.

'ஹேய்! என்ன இது! இப்படி ஒரு பார்வையை எடுத்து வீசிட்டியே! எனக்கே இது நிஜம்தானான்னு நம்பவே முடியலை' என்று மயங்கினான்.

'போதும்!' என்று கலகலவெனச் சிரித்தாள். பிறகு 'விஷயத்துக்கு வாங்க!' என்றாள்.

வந்தான்!

∴ ∴ ∴

முதல் நாளிரவு!

பத்து மணி வாக்கில் பரணீதரன் அழைத்தான். 'மாறா..! நல்ல மகிழ்ச்சியான மூட்ல இருப்பே! இப்பப் பேசினா நம்ம காரியமும் ஆயிரும்னு ஒரு நம்பிக்கை!' என்றான்.

'டேய்! நீ என் பெஸ்ட் ஃபிரெண்ட். உனக்கு வேண்டியது எப்பவும் நடக்கும்டா!' என்றான்.

'தெரியும்... மாறா...! நீ மட்டும் இல்லேன்னா நான் இன்னைக்குத் தன்மானத்தோட நடமாட முடியுமா? மறப்பேனாடா உன்னை! இன்னைக்கு உன்னை சந்தோஷமாப் பாக்க எவ்வளவு நல்லா இருந்துச்சு தெரியுமா?' என்றான்.

'நீதான் அம்மினிக்கு ஸ்ட்ராங்கா ரெகமன்டேஷன் செஞ்ச ஆளாச்சே?'

'அப்படியெல்லாம் இல்லே! பவித்ராவுக்கு என்னைக் காட்டிலும் உன்னை நல்லாப் புரிஞ்சிருக்கு. உன்னைப் பத்தி ரொம்பப் பெருமை. தனக்குப் பிடிச்ச பொண்ணு கிட்டயே வந்து உனக்குப் பிடிச்சவன் யாருன்னு சொல்லு.. நான் பேசறேன்னு சொன்னதுன்னா எவ்வளவு உயர்வான மனசு.. அப்படிங்கறாப்பல..



ரொம்ப உருகி உருகிப் பேசறாப்ல... விவரமா.. பூஸ் பண்ணிக்க..!' என்று பரணீதரன் சிரித்தான்.

அந்தக் கணத்தில் மணிமாறன் மனத்தில் இருந்த உறுத்தல் சுத்தமாக மறைந்தே போனது. கலகலவென்று சிரித்தான்.

'ஆஹா! ரொம்ப ஸ்வீட்டா இருக்குடா.. உன் சிரிப்பு' இதைப் பவித்ரா மிஸ் பண்ணிட்டாங்களே!' என்றான்.

'சரிடா.. போதும்.. சும்மா.. காலை வாராதே! என்னை இப்ப இந்த நேரத்துக்குக் கூப்பிட்டு ஐஸ் வச்சுக்கிட்டிருக்கே!'

'வந்து.. வந்து!'

'சரி.. இரு நான் புறப்பட்டு வர்றேன்.. வெளியில எங்கயாவது நடந்துகிட்டுப் பேசலாம். நமக்கும் ஒண்ணும் இப்போதைக்குத் தூக்கம் வராது போல இருக்கு!' என்றான் மணிமாறன்.

'இங்கயும் அதே நிலைமைதான்டா!' இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

காலார நடந்தார்கள். பதினோரு மணிக்கு ஊரடங்கிய வேளையில் நண்பனுடன் நடப்பது சுகமாக இருந்ததாக உணர்ந்தான் பரணீதரன்.

'கமான்.. மேன். வாட்ஸ்.. ஈட்டிங் யூ?' என்றான்.

'இல்லே! சீக்கிரமே நம்ம மேரேஜையும் முடிச்சர்லாம்னு நினைக்கறேன்.'

'ஓஹ்ஹோ..' என்று கடகடவென்று சிரித்தான் மணிமாறன்.

''இல்லல்லே! நீ நினைக்கிற மாதிரி அவசரமெல்லாம்.. இல்லே. நானும், மானுவும் ஒரே வீட்ல இருக்கோம். கல்யாணம்னு பேச்சு வந்ததுக்கப்புறம் அக்கம் பக்கத்துல, சொந்தக்காரங்கன்னு மானுவை எதுவும் பேசிடுவாங்களோன்னு கொஞ்சம் யோசனையா இருக்கு..'

மணிமாறனும் யோசனையில் ஆழ்ந்தான்.

'ஆமா... அது யோசிக்க வேண்டிய விஷயம்தான்.'

'அதுமட்டுமில்ல.. மாறா! மேரேஜைக் கூட சிம்பிளா முடிச்சர்லாம். ஒரு மீடியம் ரேன்ஜில ஒரு ரிசப்ஷன் வைக்கலாம்னு பாக்கறேன்.'

'ஏன்டா, பவிக்கும் எனக்கும் மேரேஜ் முடிஞ்சவுடனேயே ரெண்டு பேருமா முன்னால நின்னு உங்க மேரேஜை நல்ல விதமா முடிக்கலாம்னு பாக்கறேன்.''

''இல்ல.. மாறா.. எங்க மேரேஜை கிராண்டா நடத்துறதுல சிக்கல் இருக்கு. இப்பப் பாரு அண்ணன் போயி ரெண்டு வருஷமாச்சு. இருக்காரா இல்லையான்னு தெரியலே. மேரேஜுக்கு வர்றவங்க.. அதிலயும் குறிப்பா சொந்தக்காரங்க.. இந்த விஷயத்தையே கிளறிக்கிட்டிருப்பாங்க. ரெண்டு வருஷமாயிட்டதாலே அண்ணன் இனிமே வருவாங்கன்னு நினைக்கவும் முடியலே. எங்க ஃபேமிலி பெரியவர் ஒருத்தவர் போட்ட கட்டளைக்குக் கட்டுப்பட்டு எல்லாரும் வாயை மூடிக்கிட்டிருக்காங்க. அதனால.. இந்தச் சிக்கல்களையெல்லாம் மறுபடி யாரும் கிளறாம இருக்கணும்னா, சீக்கிரம், ஒரு மேரேஜ்... சிம்பிளா... போதும்டா...' என்றான்.

மணிமாறன் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு 'சரிடா.. பரணீ, நீ எப்படிச் சொல்றயோ அப்படி!' என்றான்.

'ஆமா.. மாறா..! ஒரு நூறு பேர் மட்டும் மேரேஜுக்கு.. ஈவ்னிங் ரிசப்ஷனுக்கு ஒரு முன்னூறு பேர்லருந்து நானூறு பேர்.. போதும் இன்ஃபாக்ட்.. மேரேஜுக்கு இன்னும் கூட ரெண்டு வருஷம் பொறுப்பேன்... ஆனா அதுல நிறைய சிக்கல் இருக்கு.'

'இங்க பார்றா.. நீ சொன்ன எல்லாத்தையும் நம்பறேன். கடைசியா ஒன்னு சொன்னயே.. மேரேஜுக்கு ரெண்டு வருஷம் காத்திருக்கேன்னு.. அதை நம்ப மாட்டேன்... 'நேத்தே



அய்யாவோட கண்ணு பூராவும் மான்விழி சிஸ்டர் மேலதான் இருந்ததாம். நம்ம பசங்க எல்லாம் கலாட்டா பண்ணிக்கிட்டு இருந்தானுங்க' என்று சிரித்தான்.

'சரி.. சரி.. அந்த டாபிக்கை எடுக்காதே! அப்புறம்.. ரெண்டு பக்கத்து ரகசியங்களும் வெளியே வரும் என்றான் பரணீதரனும் சளைக்காமல்.

மேலும் சற்று நேரம் பேசி பரணீதரன் திருமணம் பத்துப் பதினைந்து நாட்களுக்குள் முடிப்பது என்று முடிவெடுத்தார்கள்.

மணிமாறன் சொன்னது முழுமையும் கேட்ட பவித்ராவும் மகிழ்ந்தாள்.

'சரி. கல்யாண ஏற்பாடு பூராவும் நம்முளுதுன்னு சொல்லிடுங்க' என்றாள் பவித்ரா.

'சொல்லாம இருப்பேனா! சொல்லிட்டேன். நம்ம பேரண்ட்ஸ் பாட்டுக்கு நம்ப கல்யாணத்தை மூணு மாசம் தள்ளி ஃபிக்ஸ் பண்ணிட்டாங்களேன்னு கவலையா இருந்தேன். இப்ப அப்பப்ப பரணி கல்யாண ஏற்பாடுன்னு நடிச்சிக்கிட்டாவது பாக்கலாமில்லே!' என்று சிரித்தான்.

'நடிக்கறது சரி' அது சரி... அதுக்கு எதுக்கு இப்படி இடிக்கிறீங்க' என்று பவித்ராவும் சிரித்தாள்.

'ஆமா.. இல்லே! ஐ ஆம் சாரி' என்று சொன்னவன் விலகுவானா என்று பவித்ரா பார்க்கையிலேயே இன்னும் நெருங்கி நின்றான்.

பவித்ரா முறைத்தாள்.

'அப்ப.. இன்னைக்கு ஆஃப்டர்நூன் மானுவுக்கும், பரணிக்கும் கல்யாண டிரஸ் எடுத்தர்லாமா? அப்புறம் கல்யாணத்துக்கு அந்த டிரஸ், கிஸ்ன்னு ரெடியா வேண்டியிருக்கும்ல்ல!' என்றான்.

பவித்ரா மறுபடியும் சிரித்தாள்.

'அட.. என்ன?' என்றான்.

'டிரஸ்.. ரெடியாகணும்.. அப்புறம் இன்னொன்னு சொன்னீங்களே... அதுக்கு ரெடியாகணுமா என்ன?'

சற்றுத் தாமதமாகப் புரிந்து கொண்டவன் கண்களில் கிறக்கம் ஏறியது.

'ரெடியாக வேண்டாமா என்ன? ஒரு ரிகர்ஸல் பார்த்தர்லாமா?' என்றான் சுற்றுமுற்றும் பார்த்தபடி.

அவள் தப்பிக்க முயன்றும் சிறைப்பட்டுக் கொண்டாள் சிரித்தபடி.




**கோ**விலில் வைத்து முக்கிய உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது.

அதற்குப் பிறகு ரெஜிஸ்ட்ரார் ஆ∴பிஸில் பதிவு செய்தார்கள்.

'எப்படியும் எதிர்காலத்துல உன்னை ∴பாரின் அனுப்பற ஐடியா இருக்கு. அதனால மேரேஜை ரெஜிஸ்டர் பண்ணிக்கலாம்' என்றான் மணிமாறன்.

மணிமாறனின் பெற்றோர் தாரை வார்க்க சிவசுந்தரமும் அவர் மனைவியும் தாரை வாங்கிக் கொண்டார்கள்.

பரணீதரனுக்கும் மான்விழிக்கும் திருமணமானதில் சிவ சுந்தரத்துக்கு மிகவும் மகிழ்ச்சி.

'ரெண்டு பேரும் ரொம்பப் பொறுப்பான குழந்தைங்க! இந்தக் கல்யாணத்துனால இந்தக் குடும்பத்துக்கும் நல்லது. கடவுள் ஏதோ கணக்குப் போட்டுத்தான் எல்லாத்தையும் நடத்தறார்' என்று எல்லாரிடமும் மகிழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டார்.



பரணீதரனிடம் மான்விழி மட்டும் ரகசியமாக 'உங்களைப் போய் பொறுப்பானவர்ன்னு எல்லாத்துக்கிட்டயும் சொல்லிக் கிட்டிருக்கார் சிவசுந்தரம் மாமா..' என்று சிரித்தாள்.

அவன் சிரித்துக் கொண்டான். ஒன்றும் பேசவில்லை.

மாலையில் ரிசப்ஷன் மிகச் சிறப்பாக இருந்தது. நிறையக் கூட்டம். அதனாலேயே என்னவோ தமிழ்ச்செல்வி பெரும்பாலும் அறைக்குள்ளேயே இருந்து கொண்டாள். அதைக் கவனித்துக் கொண்டிருந்த பரணீதரனின் உள்ளத்தில் எந்த அளவுக்குத் திருமணத்தினால் மகிழ்ச்சி இருந்ததோ அந்த அளவுக்கு வருத்தமும் இருந்தது.

'அண்ணன் மட்டும் இருந்திருந்தால் எத்தனை மகிழ்ச்சி அடைந்திருப்பார். அண்ணி எவ்வளவு உற்சாகமாக நடமாடியிருப்பார்' என்ற எண்ணம் உள்ளே உறுத்திக் கொண்டேயிருந்தது.

மான்விழியிடம் பகிர்ந்து கொண்டான். அவளும் 'ஆமாங்க..! எனக்கும் இதே எண்ணம் மனசுக்குள்ளே ஓடிட்டேயிருக்கு. ஆனா நாம கொஞ்சம் வருத்தப்படறதாக் காட்டினாலும் அக்காவுக்கு இன்னும் மனசு சங்கடமாகும்ன்னு வெளியே காட்டாம இருக்கேன்' என்றாள்.

அதே நேரம் மணிமாறனும் பவித்ராவும் வந்தார்கள். அவர்களிடமும் பகிர்ந்து கொண்டார்கள்.

'நீ சொல்றது நிஜம்தான் பரணி. எனக்கு மட்டும் அந்த எண்ணம் தோணல்லேன்னு நினைச்சியா. ஆனா, நாம கொஞ்சம் வருத்தப்படறதாக் காட்டிக்கிட்டாலும் அண்ணி மனசு சங்கடப்படும். அதனாலதான், ரேகாவையும், கீதாவையும் எப்பவும் அவங்ககிட்டே இருக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணியிருக்கேன்' என்றான் மணிமாறன்.

இதைக் கேட்டு பரணீதரனும் மான்விழியும் சமாதான மானார்கள்.

பவித்ரா 'சரி.. சரி..! எந்த ராஜா எந்தப் பட்டணம் போனா என்ன? என் காரியம் நடந்தாச் சரின்னு இருக்கறதுக்கு.. எங்க மாறன் மாதிரிப் பழகிக்குங்க..' என்று கேலியில் இறங்கி சூழ்நிலையை மாற்றினாள்.

மீண்டும் கலகலப்புத் தொற்றிக் கொண்டது.

∴ ∴ ∴

போன வாரத்தில் ஒரு நாள்!

மணிமாறன் 'டேய் பரணி!' என்று வந்தான்.

'என்ன.. மாறா?' என்றான் பரணீதரன்.

'கல்யாணத்துக்கு என் பரிசா உனக்கு என்ன வேணும்.. சொல்லு' என்றான்.

'என்னைக்கும் உன் அன்பும் ஆதரவும் இருந்தாப் போதும்' என்றான் பரணீதரன் நெகிழ்ந்த குரலில்.

'ஐய்யோ! சென்டிமென்ட்லயே அடிக்கறாண்டா' என்று சிரித்தான் மணிமாறன். பிறகு 'எப்பவுமே என் பேர் சொல்ற மாதிரி இருக்கணும். உன்னால மறக்கவே முடியாத மாதிரி.. ஏதாவது செய்யணும்னு அப்படின்னு யோசிச்சு.. ஒரு பிளான் செஞ்சிருக்கேன்'' என்றான்.

'...!'

உனக்கு உங்க மொட்டை மாடியில ஒரு ஷெட் இருக்கே.. அது பாட்டுக்கு அது இருக்கட்டும். உனக்கும் மானு சிஸ்டர்க்கும் பிரைவஸி கிடைக்கிற மாதிரி ஒரு பெட் ரூம், ஒரு ஸ்டடி ரூமும் கட்டித் தரேன்' என்றான்.

'ஐய்யோ! ரொம்ப செலவாகுமே!'

'எதுக்குடா... ரொம்ப செலவாகுது.. நம்ப வேலைகள் நாளைஞ்சு இடத்துல நடக்குதே.. அதுல நிறைய மெட்டீரியல் இருக்கே... எடுத்து விளாசிடுவோம்' என்று சொன்னவன் நிற்கவில்லை.



அடுத்தநாளே வேலையை ஆரம்பித்துவிட்டான்.

வேறு வழியில்லாமல் பரணீதரனும் கீழேயே தங்க வேண்டியதாகி விட்டது. நல்ல வேளையாக பக்கத்துக் குடித்தனம் காலி செய்திருந்ததால் மேலே மாடி தயாராகும் வரை கீழ்ப் போர்ஷனையும் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தார்கள்.

இரண்டு போர்ஷன்களையும் இணைத்த குறுக்குக் கதவைத் திறந்து விட்டார்கள்.

ஒரு அறையில் பரணியும் மான்விழியும் தங்கிக் கொள்ளலாம் என்றாள் தமிழ்ச்செல்வி.

ஒத்துக் கொண்டார்கள்.

இன்றைக்கு அந்த அறையில் முதலிரவு என்று ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

'ஏய்.. மானு!' எதுக்கு இப்படி 'டாம் டாம்.. அடிக்கறாங்க. உங்க அம்மாகிட்டே சொல்லி இந்த ஏற்பாட்டையெல்லாம் நிறுத்தச் சொல்லு.. நம்ம சௌகரியப்படி பாத்துக்கலாம்' என்றான் பரணீதரன்.

அவளும் சொன்னாள். பர்வதம்மாள் உடனே தமிழ்ச்செல்வியிடம் சொன்னாள்.

தமிழ்ச்செல்வி 'மானு! நான் சொன்னா.. எங்கே கேக்கறாங்க நான் இப்படி ரெண்டுங்கெட்டானா இருந்துக்கிட்டு எதுலயும் தலையிட முடியலைடி..' என்றாள்.

பரணீதரன் கடுப்பாக இருந்தான். ஆனால் காட்டிக் கொள்ளவில்லை உறவினர்களிடம் வழக்கம் போல் கேலியும் கிண்டலும் பேசிக் கொண்டிருந்தான். அவன் இருக்கிற இடம் கலகலப்பாக இருந்தது.

'மானு! என்னடி உன்கூட்டுக்காரன் சத்தமாவோ ஆர்ப்பாட்டமோ பேசறதில்லே. ஆனா, அவன் இருக்கிற இடத்தைக் கலகலப்புப் பண்ணிடறான்' என்று வயதில் மூத்த பெண்கள் பாராட்டினார்கள். ஆனால், சடங்குகள் என்று வரும்போது 'அதெல்லாம், எங்க பொறுப்பில் விட்டுடுங்க..' என்றார்கள்.

அந்த நிகழ்வுக்கான நேரமும் வந்தது.

'வாங்க.. மேடம்!' என்று கேலி பேசி வரவேற்றான் பரணீதரன்.

சற்று நேரம் பொதுப்படையாகப் பேசினான். பிறகு 'மானு' நாம புது மாப்பிளை, புதுப் பொண்ணு மாதிரி நடமாட முடியாத சூழ்நிலை இருக்கு..! இன்னையோட சரி, இதுக்கப்புறம்... நாம ரொம்ப நெளிவு சுளிவோட நடந்துக்க வேண்டியிருக்கும். அண்ணியும் ரொம்ப சின்ன வயசு.. அவங்க மனசுலயும் அண்ணனைப் பத்தின.. ஏக்கம்.. வந்தரக் கூடாது.. தெரியுதா? நான் சொல்றது புரியுதா?' என்றான்.

மான்விழி அவனைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் சிரித்தாள்.

'புரியுதுங்கத்தான்.. நீங்க அக்காவோட குழந்தைகளுக்கு அப்பா இல்லையேங்கற ஏக்கம் வந்துரக் கூடாதுங்கறதுக்காக எவ்வளவு கேர் எடுத்துக்கறீங்கன்னு எனக்குத் தெரியும் என்றாள் நெகிழ்ந்த குரலில்.'

அவன் சிந்தனை எங்கோ தாவியது.

'ஆமா.. மானு! எனக்கு அப்பா, அம்மா இல்லையேங்கற ஏக்கம் கொஞ்சம் கூட வந்துடாம அண்ணனும், அண்ணியும் அப்பாவும் அம்மாவுமா இருந்து வளர்த்தாங்க.. அதற்காக நான் எதுவும் செய்வேன். ஆனா என்ன? அண்ணன் இப்படி திடீர்ன்னு வெளியே கிளம்புவார்ன்னு நா நெனைக்கலே.. கொஞ்சம் என்கிட்டே உட்கார்ந்து பேசியிருக்கலாம்.. எனக்கும் மணிமாறன்



இவ்வளவு தூரம் ஹெல்புக்கு வருவான்னு அப்போ தெரியலே..' என்று நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'சரிங்கத்தான்... போனது போகட்டும்.. இனி ஆகறதைப் பார்ப்போம்' என்றாள் மான்விழி.

அவன் கண்களில் சிரிப்புத் தொற்றிக் கொண்டது.

'சரி.. ஆகறதைப் பார்ப்பமா?' என்று மெல்லத் தன்னருகில் இழுத்த அதே நேரத்தில் ஹாலில் குரல் கேட்டது.

'சித்தா.. சித்தப்பா.. எங்கே?' என்று விக்னேஷ் அழும் குரல் கேட்டது.

பரணீதரனின் 'மூட்' மாறியது. சட்டென்று கதவைத் திறந்து கொண்டு வெளியே போனான்.

கையைக் காலை உதைத்துக் கொண்டு அழுகிற அவனைச் சுற்றிப் பெண்கள் பேந்தப் பேந்த விழிப்பதைப் பார்த்த அவனுக்கு சிரிப்பு வந்தது.

'சித்தப்பா.. இங்கதாண்டா.. இருக்கேன்!' என்று அள்ளிக் கொண்டான்.

'ஆமா.. பத்து வயசுக்குப் பக்கம் ஆயாச்சு.. இன்னும் இடுப்பில் வச்சுக்கிட்டு கொஞ்சுங்க.. விடு.. தம்பி! நான் பாத்துக்கறேன்' என்று பொரிந்த தமிழ்ச்செல்வி 'அண்ணி! ப்ளீஸ்' என்ற ஒரு பார்வையில் அடங்கினாள்.

'சித்தா.. நீ என்னை விட்டுட்டு எங்கே போனே?'

'எங்கேயும் போகலைடா.. நீ. வா.. நம்ம ரூமுக்குப் போகலாம்..' என்று தன் அறைக்குப் போகவும் மற்றவர்கள் செய்வதறியாது பார்த்துவிட்டுச் சற்றுக் கிசுகிசுத்துவிட்டு அவரவர்கள் அறைக்குப் போனார்கள்.

மான்விழி அவனை வாங்கிக் கொண்டாள்.

'சித்தா..' என்று பையன் கட்டிக் கொண்டான்.

'சாப்பிடாமலே.. படுத்துட்டேன்.. பசிக்குது!' எனவும் பரணீதரன் மனைவியைப் பார்த்தான். அவள் சமையலறைக்குப் போய் ஏதோ டிஃபனை அள்ளிக் கொண்டு வந்து ஊட்டினாள்.

சற்று நேரம் வழக்கம் போல் அவனிடம் பேசிக் கொண்டிருந்து உறங்கச் செய்தான். பிறகு மனைவியைப் பார்த்தான். இருவரும் சிரித்தார்கள். மான்விழி பையனுக்கு அந்தப்புறம் படுத்தாள்.

'மானு!' என்று சிரித்தபடி அழைத்தான் பரணீதரன்.

'ம்..!'

'நீ ஏதோ ஆகற வேலைன்னு சொன்னயே.. அது இன்னைக்கு.. ஆகாது போலருக்கே?' என்று கலகலவென்று சிரித்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.. அவனே தொடர்ந்தான்.

இவன் கும்பகர்ணன் மாதிரித் தூங்கற பையன்தான்., ஆனாலும் குழந்தைங்க முன்னாடி நாம எச்சரிக்கையா இருக்கணும் தெரியுமா?' என்றான்.

அவள் இப்போது சிரித்தாள். 'சரி.. சரி! இதுக்கெல்லாம் ஒன்னும் இப்ப விளக்கம் எல்லாம் சொல்லத் தேவையில்லை.. நீங்களும் ஒன்னும் தாத்தா ஆயிடல்லே.. நானும் ஒன்னும் பாட்டி ஆயிடல்லே..' என்றாள்.

மேலும் சற்றுப் பேசிக் கொண்டிருந்துவிட்டு உறங்கி விட்டார்கள்.

∴ ∴ ∴

'பொண்ணே! இந்தா உன் வீட்டுக்காரனுக்கு காஃபி கொண்டு போய்க் கொடு..!' என்று பெண்கள் கொடுக்கக் கொண்டு போனாள்.



'அத்தான்...! உறவுக்காரங்க பெரும்பாலும் இன்னைக்குக் கிளம்பிறாங்க போல இருக்கு..!' என்றாள்.

சற்று நேரம் கழித்து மான்விழி வினிதாவுக்காக ஹார்லிக்ஸ் கலந்து கொண்டிருந்தபோது தமிழ்ச்செல்வி மெல்ல அருகில் வந்து நின்றாள்.

'ஐயம் சாரிடி.. மானு! இந்தப் பையனால..!' என்றாள் வருத்தத்துடன்.

'அக்கா.. ப்ளீஸ்..! இப்படியெல்லாம் பேசி.. எங்களைச் சங்கடப்படுத்தாதே.. வி ஆர்.. ஹாப்பி.. சொல்லப் போனா.. இப்படித் தனியா ஃபங்ஷன்னு செய்யறதெல்லாம்.. அத்தானுக்குப் பிடிக்கவே இல்லை..' என்றாள்.

'இல்லடி.. மானு! பரணி எங்களுக்காக எத்தனைதான் தியாகம் செய்வான்?' என்றாள்.

'அக்கா... நீ இப்படி எங்களுக்காகன்னு பிரிச்சிப் பேசறதைக் கேட்டாத்தான் ரொம்ப வருத்தப்படுவாரு. இத்தனை நாள் பழகி அத்தானை நீ புரிஞ்சுக்கிட்டது இதுதானா?' என்றாள் மான்விழி. பிறகு களுக்கென்று சிரித்தாள்.

'அக்கா.. உன் கொழுந்தன்.. லேசுப்பட்ட ஆள் இல்லே! அதெல்லாம் எப்ப.. எப்படி.. எதைதெ... நடத்திக்கணுமோ.. அப்ப நடத்திக்குவாரு!' என்றாள். முகம் சிவக்கச் சிரித்தாள்.

தமிழ்ச்செல்வியும் சிரித்துக் கொண்டு நகர்ந்தாள்.

பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் கிளம்ப நண்பர்கள் கூட்டம் வந்து சேர்ந்தது.

தமிழ்ச்செல்வி பவித்ராவிடம் ஏதோ குசுகுசுக்க பவித்ரா மணிமாறனிடம் அதை குசுகுசுக்க அங்கே இரகசியமாக ஒரு திட்டம் போடப் பட்டுக் கொண்டிருப்பதை அறியாத பரணீதரனும்,

மான்விழியும் கணவன், மனைவி என்ற உறவோடு ஒன்றாக இருப்பதே மகிழ்ச்சி என்ற நினைவில் இருந்தார்கள்.




தோளில் ஒரு டர்க்கி டவலைப் போட்டுக் கொண்டு தரை மட்டத்திற்கும் சற்றே உயரத்தில் இருந்த அந்த வட்ட வடிவப் பாறையில் ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டிக் கொண்டு ரிலாக்ஸ்டாக அமர்ந்திருந்த பரணீதரனை அவன் எதிர்பாராத தருணத்தில் ஃபோட்டோ எடுத்தாள் மான்விழி.

அவன் திரும்பிப் பார்த்தான். ஆனால் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

'ஹேய்! உலகமகா போஸ் இது. இதைப் போய் ஒளிஞ்சு நின்னுகிட்டு எடுக்கறாளாம்! இங்க வா.. உட்காரு! என்று பாறையின் பக்கத்தைத் தட்டிக் காட்டினான்.

அவளும் சிரித்துக் கொண்டே அமர்ந்தாள்.

கேரளாவின் எல்லைப் பகுதியில் மலைப் பகுதியில் அமர்ந்திருந்த ஊர், அது ஏன் சிற்றூர் என்று கூட சொல்ல முடியாது. மணிமாறன் குடும்பத்துக்கு அங்கே நிறைய நிலம் இருந்தது. மலை வாழ் மக்கள் வாழ்கிற பகுதி இது. இன்னமும் நகரத்தின் கண் அந்தப் பகுதிகளில் விழாததாலோ என்னவோ இயற்கை அழகு கொஞ்சம் சுத்தமான பகுதியாகவே இருந்தது.

பரணீதரனுக்கும், மான்விழிக்கும் அது மிகவும் பிடித்திருந்தது. அங்கே ஒரு ஓட்டு வீடு அந்தப் பகுதியின் அமைப்பிற்கேற்பவே இருந்தது. அதில் தங்கியிருந்தார்கள்.

'மானு! என்ன அழகா இருக்கில்லே! கேரளா கடவுளின் நாடு என்று சொல்கிறார்களே உண்மைதான். இல்லே!' என்று



சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மனைவியை அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் உலகம் மறந்தார்கள். வீட்டின் சூழ்நிலையில் அவர்களுக்குத் தனிமை கிடைக்கவில்லை என்பதை அறிந்த மணிமாறன் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்.

பரணீதரன் 'வேண்டாம்... குழந்தைங்க நாலஞ்சு நாளைக்கு நான் இல்லேன்னா... ஏங்கிப் போயிடுவாங்க' என்று மறுத்தான்.

மணிமாறன்தான் 'அப்புறம்.. நீ ரொம்ப ஏங்கிப் போயிடுவடா.. பயலே!' என்று அனுப்பி வைத்தான்.

ஒரு வாரம்.. முழுசா இருந்துட்டு வாங்க.. அதுக்கப்புறம்.. என்னோட கல்யாண வேலைகள் வந்துடும்.. பிஸியாயிடுவோம்.. புரியுதா?' என்று செல்லமாக மிரட்டி அனுப்பி வைத்தான்.

பரணிதரனும் அவ்வப்போது வீட்டுக்குத் தொடர்பு கொண்டு பேசினான்.

குழந்தைகளிடமும் பேசினான். அவன் வினிதாவிடமும் விக்னேஷிடமும் கொஞ்சிப் பேசுவதை மான்விழி கண் கொட்டாமல் பார்த்தாள். அவன் திரும்பி 'ஹேய்! என்ன பார்வை இது?' என்றான் கிறக்கமாக.

'ஆளுக்குத் தகுந்த மாதிரி அவதாரம் எடுக்கறீங்களே.. அது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு!' என்றாள்.

அவன் புன்னகைத்தபடி அவள் காதைத் திருகினான்.

'இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் என்னைப் பத்தி நிறையத் தெரிஞ்சுக்குவே!' என்று சிரித்தான்.

'பின்னே? என்னைத் தவிர வேற யார் தெரிஞ்சுக்க முடியும்?' என்றாள் அவளும் சளைக்காமல்.

'மானு! ஒரு விஷயம் சொல்லட்டா?'

'சொல்லுங்கத்தான்!'

'ஒரு ரெண்டு வருஷத்துக்கு நம்ம வாரிசுகளின் விஜயத்தைத் தள்ளிப் போட்ரலாமா?' என்றான்.

'நீங்க எப்படிச் சொன்னாலும் சரி!' என்றாள் மான்விழி.

எதிர்காலம் பற்றித் திட்டமிட்டுக் கொண்டார்கள் மகிழ்ச்சியாக.

∴ ∴ ∴

பல நாட்களுக்குப் பிறகு!

தனிமையில் அழுது தீர்த்தாள் தமிழ்ச்செல்வி.

சோமநாதன் வீட்டை விட்டுப் போய் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

இருக்கிறானா, இல்லையா என்று அறியாத கொடுமை அவளை வாட்டியெடுத்தது. ஆனால் தான் சற்று வேதனைப்பட்டாலும் எல்லாருமே துக்கத்துடன் நடமாடுவார்களே என்பதற்காகத் தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள்.

இந்தத் திருமணத்திற்கு மட்டும் கணவன் இருந்திருந்தால் தான் எவ்வளவு மகிழ்ச்சியாக நடமாடி இருப்போம்.. எப்படி முன்னால் நின்று எல்லாக் காரியத்தையும் நடத்தி இருப்போம் என்று நினைக்கையில் அவளுக்கு ஆற்ற முடியவில்லை.

இந்தச் சின்ன வயதில் பரணீதரன் குழந்தை வளர்ப்பு, குடும்ப பாரம் என்று எத்தனை சுமக்கிறான் என்ற வருத்தம் வேறு அவளைத் தாக்கியது.

சீக்கிரம் பணக்காரனாகி விட வேண்டும் என்ற அவசரத்தில் தன் கணவன் எடுத்த முயற்சிகள் எப்படித் தங்கள் வாழ்வையே அலைக்கழித்து விட்டது என்ற வேதனை அவளை அழுத்தியது.



அதே சமயம் இன்னொரு மனது கேட்டது. ஒருவேளை அவனுடைய முயற்சிகள் வெற்றியடைந்திருந்தால் அதனால் வரக் கூடிய சந்தோஷத்தையும் தாங்கள்தானே அனுபவித்திருப்போம் என்ற எண்ணமும் தோன்றியது.

இந்த வேதனைக்கு விடிவில்லையா? இனி வரவே போவதில்லை என்று முடிவெடுக்கவும் மனசு ஒத்துழைக்க மறுத்தது.

தன்னிடம் யாரும் இது பற்றிப் பேசக் கூடாது என்று பரணீதரனும், சிவசுந்தரமும் ஒரு தடுப்புச் சுவர் போட்டு வைத்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

இன்றைய காலகட்டத்தில் கணவன் இறந்து போனாலும் பூச்சூடுவதையும், பொட்டு வைத்துக் கொள்வதையும் யாரும் பெரிதாகக் குறை கூறுவதில்லை என்றாலும் கணவனைப் பற்றிய சஸ்பென்ஸ் அவளை உருக்குலையச் செய்தது.

எல்லாத் துக்கங்களையும் இப்படித் தனிமை கிடைக்கும் போது அழுது தீர்த்துக் கொள்வாள். அப்போது பத்து மணி இருக்கும்.

பர்வதம் குழந்தைகளைச் சமாதானப்படுத்துவதற்காகப் பக்கத்திலேயிருந்த ஸ்வீட் கடைக்கு அழைத்துப் போயிருந்தார்.

உறங்கப் போகும் நேரத்தில் மான்விழியையும் பரணீதரனையும் தேடினார்கள். கொஞ்சம் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது.

பரணீதரனும், மான்விழியும் வரும் வரை தங்கள் கம்பெனி வாட்ச்மேன் ஒருவரை அனுப்பி வைத்தான் மணிமாறன். அந்த வாட்ச்மேன் காம்பவுண்டுக்குள்ளே வீட்டுக்கு முன்னாலேயிருந்த வெட்ட வெளியில் ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொள்வான். அதனால் பாதுகாப்புக்கு குறையிருக்கவில்லை.

டெலிஃபோன் ஒலித்தது.

அந்தப் பக்கம் பரணீதரன்.

'அண்ணி! தனியாவா இருக்கீங்க?' என்றான்.

சற்று நேரத்திற்கு முன்தான் குழந்தைகளிடம் பேசினான். இப்போது மறுபடியும் பேசுகிறானே என யோசித்துக் கொண்டே பதில் சொன்னாள் தமிழ்ச்செல்வி.

'ஆமாப்பா.. ஏனப்பா?' என்றாள்.

'அண்ணி.. ஏதோ சங்கடத்துல இருக்கிற மாதிரி மனசுக்குப் பட்டுச்சு... அதான் கூப்பிட்டேன்..' என்றான்.

தமிழ்ச்செல்வி வியந்து போனாள்.

'ஆமாப்பா! நீயும் மானுவும் இல்லையா? அவரு மட்டும்தான் இருந்திருந்தா..? இந்தக் கல்யாணம் எப்படி நடந்திருக்க வேண்டியது? அதெல்லாம் நினைச்சேன்' என்று தழுதழுத்தாள்.

'அண்ணி! மனசைச் சங்கடப்படுத்திக்கறது இல்லைன்னு எனக்கு பிராமிஸ் பண்ணியிருக்கீங்க...'

'எப்படிப்பா.. என்ன முயற்சி செஞ்சாலும்..! முடியலியே!'

'கஷ்டம்தான்! ஆனா.. சோதனைகளை ஜெயிக்கனும்ங்கண்ணி குழந்தைகளை நல்லாக் கொண்டு வரணுங்கண்ணி.. எனக்கும் நீங்கதானே தாய், தகப்பன் எல்லாமே..! நீங்களே இப்படி வருத்தப்பட்டா.. எப்படிங்கண்ணி?' என்றான் இறங்கிய குரலில்.

தமிழ்ச்செல்வி உடனே தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

'இல்லப்பா... இல்ல.. இனிமே சங்கடப் படமாட்டேன். எனக்குத்தான் மலை போல நீ இருக்கியே.. இனிமே எனக்கு என்ன கவலை.. தேத்திக்கறேம்பா' என்றாள்.

'தட்ஸ் தி ஸ்பிரிட்! ஒரு கடி ஜோக்ஸ் சொல்லட்டுமா?' என்றான்.

அந்தப் பக்கம் தமிழ்ச்செல்வி சட்டென்று சிரித்தாள்.



'வேண்டாம் அந்தத் தொல்லைக்கு இதுவே பரவாயில்லை.'

'ம்ஹூம்... அப்படியெல்லாம் விட்ர மாட்டேன்.. சொல்லியே தீருவேன்.. என்றான்.

'சரி.. சொல்லு!' என்றாள். சொன்னான்.

'போனில் ரிசீவரை எடுத்து நாம் ஏன் ஹலோ சொல்கிறோம் தெரியுமா?'

'தெரியாது.'

'ஏன்னா ரிசீவரை வெச்சிட்டா ஹலோ சொல்ல முடியாது.'

தமிழ்ச்செல்வி 'ஐயோடா. ராமச்சந்திரா..!' என்று சிரித்துவிட்டு வைத்தாள்.

தானும் சிரித்து விட்டுத் திரும்பிய பரணீதரன் தன் மனைவி தன்னை விழுங்குவது போல் பார்ப்பது கண்டு கிறக்க மனநிலைக்கு மாறினான்.

'ஹேய்! என்ன?' என்றான்.

அவள் அவனிடம் நெருங்கினாள்.

'அக்கா... மனச்சங்கடத்திலே இருக்காங்கன்னு எப்படித் தெரிஞ்சது?' என்றாள்.

'டெலிபதின்னு கேட்டிருக்கியே? அது மாதிரின்னு வச்சுக்கயேன்... கொஞ்ச நேரமாவே ஏதோ பரபரப்பா இருந்துச்சு.. அதான் ஃபோன் செஞ்சேன்' என்றான்.

'பரணி! உங்க வயசுக்காரங்க.. எத்தனையோ பேர் லைஃப் என்ஜாய்மென்ட்டுன்னு சுத்திட்டிருக்கறப்ப.. எப்படி உங்களால் இந்தக் குடும்ப பாரத்தை இவ்வளவு இயற்கையாச் சுமக்க முடியுது' என்று அவன் முகத்தைக் கையிலேந்தினான்.

பரிசுகளை வாரியிறைத்தாள்.

அவன் மயங்கிப் போய் சிரித்தான்.

'பாத்தியா.. அப்படியில்லேன்னா இப்படிப் பரிசு கிடைக்காதில்லே..' என்றான்.

'அத்தான்.. உங்களுக்கும் என்மேல விருப்பம் இருக்குன்னு தெரிஞ்ச அன்னைக்கு நான் ஒரு சபதம் எடுத்துக்கிட்டேன். உங்களை எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷத்துல வைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு வைக்கணும்னு.'

'குட்.. குட்! உன் லைஃப்லயே ஒரு நல்ல காரியம் செஞ்சிருக்கே!' என்றான். குறும்பாகச் சிரித்தபடி திடீரென்று.

'ஹேய்!' என்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

'என்ன?' என்றாள் மான்விழி முறைத்தபடி.

'இல்லே! ஒரு நாளைக்கு நான் 'அப்படிப் போடு'ன்னவுடனே தட்டை டமார்ன்னு கீழே போட்டயே எத்தனையோ தடவை நினைச்சு நினைச்சு சிரிச்சிருக்கேன் தெரியுமா?' என்றான்.

மான்விழியும் 'க்ளுக்' என்று சிரித்தாள்.

'சரி.. இங்கே வா..!' என்று அருகே இழுத்தான்.

ஜன்னலோரம் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'நட்சத்திரங்கள்.. கண் சிமிட்ற அழகைப் பார்த்தியா..' அதுக்கு சரியா.. மின்மினிப் பூச்சிகள் மின்னறதைப் பாத்தியா!' என்று இயற்கையை ரசிக்க ஆரம்பித்தவன் மெல்லத் திரும்பி..'

'பத்துப் பன்னிரெண்டு தென்னை மரம் வேணும்.. பக்கத்திலே பத்தினிப் பெண்.. வேணும்னு பாரதியார் பாடினதே இப்பத்தான் புரியுது' என்று இழைய ஆரம்பித்தான்.



'ரொம்ப சந்தோஷமா வச்சுக்கப் போறதா.. வாக்குக் குடுத்திருக்கே.. செயலில் காட்டவும்' என்று சிரித்தான்.

அதே நேரம்!

தமிழ்ச்செல்வி தன் மனத்தில் துன்பம் இருந்தது எப்படி பரணீதரனுக்குத் தெரிந்தது என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் மனத்தில் எழுந்த துக்கம் வேறொரு இடத்திலும் விளைவுகள் ஏற்படுத்தியிருந்தன என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை.

∴ ∴ ∴




அன்று கோனியம்மனுக்குத் திருக்கல்யாணம்!

மான்விழி போக வேண்டும் என்று விருப்பப் பட்டதால் பரணீதரன் அழைத்துப் போயிருந்தான்.

'மானு! மனுஷங்களுக்கு எத்தனை பேராசை பாத்தியா! கடவுளுக்கே கல்யாணம் பண்ணிப் பாக்கறானுங்களாம்!' என்று சிரித்தான்.

அவளும் புன்னகைத்தாள்.

'இவங்களுக்குப் பிடிச்ச நகையை போடறது.. இவங்களுக்குப் பிடிச்சதைப் படைச்சு சாமி பேரைச் சொல்லிட்டு இவங்களே சாப்பிடறது.' என்று மேலும் சிரித்தான்.

'அத்தான்... பக்திக்கும் அறிவுக்கும் சம்பந்தமேயில்லை. அன்பும், காதலும் எப்படி உணர்வு பூர்வமானதோ அப்படி அதுவும் உணர்வு பூர்வமானதுதான். நம்ம வீட்லயே பாருங்களேன்' வினிதாவும், விக்னேஷும் சின்ன வயசிலே

கூட்டாஞ்சோறு ஆக்கறேன்னுகிட்டு பொட்டுக்கடலையும் கரும்புச் சர்க்கரையும், கிண்ணத்துல கலந்து தட்டுல பரிமாறுவாங்க.. அப்ப.. நாமளே கூட அவங்க கூட உட்கார்ந்து சீரியஸா சாப்பிடற மாதிரி ஆக்ட் பண்ணியிருக்கோம் ஞாபகமிருக்கா!' என்றாள்.

'ஆமா!'

'அது மாதிரித்தான் இதுவும்! நாம படைக்கிறதை, கல்யாணம் பண்றதை அம்பாளும் ரசிச்சுப் பார்த்து சிரிச்சப்பாளாயிருக்கும்.'

பரணீதரன் திரும்ப அவளை வியப்பாய்ப் பார்த்தான்.

'ஹேய்! தட்ஸ் கால்ட் ஃபிலாஸஃபி' என்றான்.

'அத்தான்! எனக்குத் தோணும்.... நம்பளோட வேர்கள் ரொம்ப ஆழமானது. பாரம்பரியம் பழமையானது. எந்தப் புதுமையையும் நம்மளாலே இயல்பா ஒத்துக்க முடிகிறது. அதே சமயம் நம்ம பழமையையும் காப்பாத்திக்க முடியுதுன்னு. இந்தப் பக்குவத்துக்குக் காரணம் நம்மளோட ஆன்ம பலம். அதுக்குக் காரணம் நம்மளோட கல்ச்சர்..' என்றாள்.

'தொடர்ந்து சொல்லுங்க... குருவே!' என்றான்.

'மாதத்துக்கு ஒரு தடவையாவது மலையேர்றது... இந்த வெயில் காலத்துல மொட்டையடிக்கறது, யாத்திரைகள், யோகா, மூச்சுப் பயிற்சி இதுலயெல்லாம்... நிறைய அர்த்தம் இருக்கு.. தெரியுமா?'

'அப்படியா.. என்ன? இதைப்பத்தியெல்லாம் ரொம்ப யோசிச்சதில்ல!'

'இனிமே யோசிங்கத்தான்.. எனக்குப் புரியறதை விட இன்னும் நிறைய விஷயங்கள் உங்களுக்கு இன்னும் அழகாப் புரியும்' என்றாள்.

பரணீதரன் மௌனமாக அவளருகில் அமர்ந்து கொண்டான்.

'என்னத்தான்.. பேச மாட்டேங்கறீங்க!'



'இல்லே... யோசிக்கிறேன்.. எப்படி நம்ம ஊர்ப் பொண்ணுங்களுக்கு ரொம்பச் சின்ன வயசிலயே பக்குவம் வருதுன்னு ரொம்ப நாள் யோசிச்சிருக்கேன்.. நீ சொல்றது சரி... நம்ப கல்ச்சர்... கலாச்சாரத்துக்கு அதுல நிறைய பங்கு இருக்கு போலத்தான் இருக்கு.''

அதற்குப் பிறகு திருமண நிகழ்வுகள் தொடங்கவும் அதில் ஆழ்ந்து போனார்கள். குங்குமம் சந்தனம் கொடுத்து, மஞ்சள் கயிறு கொடுத்து என்று ஒரு வீட்டுக் கல்யாணம் போலவே அது நடந்தது.

பெண்கள் பரவசத்தில் கன்னத்தில் போட்டுக் கொண்டு வழிபடுவதை அவனும் ஒருவிதமான ரசனையுடன் பார்த்தான்.

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சக்தியைத் தாய் என்றும், தோழன் என்றும், தந்தை என்றும், தலைவன் என்றும் உண்மையாகவே மனத்துக்குள் உருவகித்தவர்கள்தான் உருகி உருகிப் பாடியிருக்கிறார்கள் என்பதும் புரிந்தது.

மான்விழி சொன்னது நிஜம்தான். பக்தியும் உணர்வுதான் என்று சிரித்துக் கொண்டான். பல சமயங்களில் மான்விழி இதுமாதிரி நிறையக் கருத்துக்களை சொல்லுவாள்.

'ஹேய்! இந்தச் சரக்கெல்லாம் உனக்கு எங்கேயிருந்து கிடைக்குது!' என்று அவன் கேலி போலக் கேட்டாலும் அந்தக் கருத்துக்களையெல்லாம் அவன் மனத்தில் வாங்கிக் கொள்கிறான் என்பது அவளுக்குத் தெரியும்.. அவளும் 'இதெல்லாம் என்னோட சரக்கு இல்லே! எங்கப்பா எங்களுக்குச் சின்ன வயசுல சொன்ன விஷயங்கள் என்பாள்.

அவளருகில் நெருங்கி அமர்ந்து கொண்டு அவள் முன் நெற்றியில் விழுகிற முடியை நீவிக் கொண்டோ, மெல்லத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு அவள் கன்னங்களை வருடியபடியோ இப்படியெல்லாம் பேச விட்டுக் கொண்டிருப்பதுதான்.

'மானு! நம்ம கல்யாணத்துக்கு முன்னே மனசுல ஒரு ஏக்கம் இருந்தது. அம்மா மடியில் உட்கார்ந்து கதை கேட்டதெல்லாம் எனக்கு இப்ப ஞாபகம் இல்லை. அண்ணனுக்குக் கல்யாணமாகி வந்தப்ப எனக்கும் கிட்டதட்ட பதினாலு வயசு. அண்ணி என்னை சொந்தக் குழந்தையாப் பாத்துக்கிட்டாங்கதான்.. ஆனா, ஒரு தாயோட மட்டும்தானே எந்த வயசுலேயும் நெருங்கி உட்கார முடியும். அது நமக்கு வாய்க்காம போச்சுன்னு. ஆனா, நம்ம கல்யாணத்துக்கப்புறம் நீ சில சமயங்கள்லே எங்கம்மாவை ஞாபகப்படுத்தறே.. தெரியுமா?' என்றான்.

'ஆமா.. சில விஷயங்கள்ல மனைவி தாய்தான். அதுல என்ன சந்தேகம்?' என்பாள்.

இன்றைக்கு கோவிலில் திருமணம் பார்த்துவிட்டு வந்து சிந்தனையிலாழ்ந்தான்.

'என்னங்கத்தான்?' என்றாள்.

இப்போதெல்லாம் அவ்வப்போது விக்னேஷையும் கீழேயே தங்க வைத்துப் பழக்கினார்கள்.

'மானு! என்னவோ தெரியலை. மனசுல ஏதோ சங்கடமாகவே இருக்கு. சம்ரெஸ்ட்லெஸ்னெஸ் ஏன்னு.. புரியலே!' என்றான்.

மான்விழிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'எங்கேயோ.. ஏதோ மிஸ்ஸிங்..' என்றான்.

அவளுக்கும் அவன் சங்கடம் பார்த்து என்ன செய்வதென்று தெரியவில்லை.

சட்டென்று அவளைத் தன்னருகில் இழுத்தான். 'போதும் சும்மா.. ஊர்க்கவலையெல்லாம்... இழுத்துப் போட்டுக்குங்க!' என்று அதட்டினாள்.

அவன் கவனத்தைத் திசை திருப்பினாள். அவனும் தன்னை மறந்தான்.

∴ ∴ ∴



பரணீதரன் சென்னைக்குப் போகிற ரயில் முதல் வகுப்பில் பயணித்துக் கொண்டிருந்தான். பத்து நாட்களுக்குப் பின்பு 'பவித்ராவுக்கும், மணிமாறனுக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடப்பதாக இருந்தது. எல்லோரும் அந்த வேலையில் இருந்தார்கள். இப்போது கூட மணிமாறன் சென்னை போக வேண்டிய வேலைதான். ஆனால், பரணீதரன் பொறுப்பேற்றுக் கொண்டான்.

அண்ணன் முன்பெல்லாம் 'தமிழு! நம்ம பரணி கல்யாணத்தை ஜாம், ஜாம்னு நடத்திரணும்' என்று சொல்லிக் கொண்டிருப்பான்.

ஒவ்வொரு நேரம் தோன்றும் இந்த மணிமாறனும், பவித்ராவும் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள், நல்ல பெற்றோர்கள். பணம், அன்பு எல்லாமும் தடையின்றிக் கிடைக்கவும் ஒரு கொடுப்பினை வேண்டும் போலும். ஆனால், அத்தனையும் சேர்த்துத் தனக்கு மான்விழி வாரி வழங்கி விடுகிறாள் என்று எண்ணும் போது மனசில் நிறைவு தோன்றும்.

இரவின் தாலாட்டில் மான்விழியின் சிரிப்பை உறவு நேரங்களில் அவளது வெட்கம் நிறைந்த பரிமாறல்களை என்று எண்ணிக் கொண்டே உறங்கினான்.

அடுத்த நாள் தனக்கு ஒரு பெரிய திருப்பத்தை வைத்துக் கொண்டு காத்திருக்கிறது என்பதை அறியாமல்.

∴ ∴ ∴

சென்னையில் அவர்களுக்கு ஒரு அலுவலகம் இருந்தது. அங்கேயே மணிமாறன் குடும்பத்தார் வந்து தங்குவதற்கு எல்லாவித வசதிகளுடனும் கூடிய ஒரு அறை இருந்தது. அங்கேதான் பரணீதரனும் தங்குவான்.

குளித்து முடித்துவிட்டு அலுவலகம் திறக்கும் வரை மேலாளர் வரும் வரை விச்ராந்தியாகப் பேப்பர் படித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அப்போது ஃபோன் ஒலித்தது.

எடுத்தான்.

அந்தப்புறம் அவன் சற்றும் எதிர்பாராத நபர் சிவசுந்தரம் பேசினார்.

'மாமா! என்ன விஷயம் மாமா?'

சொன்னார்.

அவனுக்கு முதலில் அதிர்ச்சி கலந்த உணர்வுதான் ஏற்பட்டது.

'நல்லாத் தெரிஞ்சுக்கிட்டுத்தானே சொல்றீங்க?'

'ஆமாப்பா.. நான் தெரியாமயா சொல்வேன்!'

'இப்ப நீங்க.. எங்கே இருக்கீங்க?'

சொன்னார்.

'சரி.. அங்கேயே இருங்க.. ஃபோன் நம்பர் குடுங்க.. நான் கான்டாக்ட் பண்றேன்' என்று மேலும் சில இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்தான்.

மணிமாறனுக்கு ஃபோன் செய்தான்.

'என்னது?' என்று அவனும் பரபரப்பானான்.

ஒரு நிமிடம் யோசித்தான்.

'சரி.. பத்து மணிக்கு மேனேஜர் வந்தவுடனே பேச வேண்டிய விஷயத்தைப் பேசிட்டு... நீ ஃப்ளைட் பிடிச்சு.. ஊர் வந்து சேரு நான் ஏர் டிக்கட் ஏற்பாடு பண்ணிடறேன்..' என்றான். பிறகு நினைவு வந்தவன் போல்...

'அதுவரைக்கும் ஐ வில் மானேஜ்' என்றான். மேலும் சற்று நேரம் பேசினார்கள்.



ரிசீவரை அதன் தொட்டிலில் வைக்கும்போது அவன் கைகள் நடுங்கின.

கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கி அழுதான்.

∴ ∴ ∴

**மா**ன்விழி பூஜை அலமாரியில் விளக்கேற்றினாள்.

பார்வதம் வந்து அவளருகில் நின்றாள்.

'ட... மானு! முன்னேயெல்லாம் வெள்ளிக்கிழமையானா ரெண்டு சாமி பாட்டுப் பாடுவியே ஏதாவது பாடேன்டி..' என்றார்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தன் இணையடி நீழலே'

என்ற அப்பர் தேவாரம் பாடினாள்.

'சித்தி.. பொருள் சொல்லு.. சித்தி' என்று குழந்தைகள் கேட்க உள்ளே ஹாலுக்கு அழைத்துப் போனாள்.

தமிழ்ச்செல்வி தனது பார்லரில் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டு முன்னறைக்கு வந்தாள்.

யாரோ இரண்டு மூன்று பேர் வருகிறார் போலத் தோன்றவே நின்றாள்.

சிவசுந்தரம் வந்து கொண்டிருந்தார்.

'ஓங்கு.. தாங்கான உருவம்! பின்னாலே இரண்டு மூன்று பேர் வருகிற மாதிரித் தெரிந்தது.

பரணீதன்! அவன் எங்கே? சென்னை போயிருந்தானே! கூட யார்..!

அவள் கண்கள் இமைக்க மறந்தன. தொண்டைக்குள் ஏதோ அடைக்கிறாற் போல் இருந்தது.

அந்த உருவம் மெல்ல வந்து வாசற்கதவருகில் நிற்பதைத் திகிலடித்தவள் போல் பார்த்தாள்.

மயங்கிச் சாய்ந்தாள்.

பரணீதரன் சாய்ந்து தாங்கிக் கொள்வதற்குப் போகுமுன்னே வேறு இரண்டு வலிய கரங்கள் அவளைத் தாங்கிக் கொண்டன.

'மானு! அம்மா.. இங்கே வந்து பாருங்க!' என்று சத்தமாய்ச் சொல்லிக் கொண்டே தமிழ்ச்செல்வி சாய எல்லாரும் உள்ளே இருந்து ஓடி வந்தார்கள்.

திகைத்து நின்றார்கள்!

சோமநாதன் தமிழ்ச்செல்வியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் கண்ணீர் சரசரவென்று வழிந்து கொண்டிருந்தது.

முதலில் திகைத்து நின்ற பெண்கள் பின்னர் வெடித்து அழ ஆரம்பித்தார்கள்.

பரணீதரனும், சோமநாதனும் தமிழ்ச்செல்வியை உள்ளே தூக்கிக் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள்.

சிவசுந்தரம் 'பரணி! பாத்துக்கப்பா...!' என்று விடைபெற்றுக் கொண்டு நகர்ந்தார்.

தமிழ்ச்செல்வியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார்கள்.

மெல்லக் கண்விழித்தாள்.

தான் காண்பது நிஜம்தானா.. என்று கைகள் நடுங்க.. அவன் முகத்தைத் தாடையைத் தடவிப் பார்த்தாள். வெறி கொண்டவள்போல் எழுந்தாள்.



'எங்கே.. எங்கே.. போனீங்க....? எங்களையெல்லாம் தவிக்க விட்டுட்டு.. தினமும் செத்து.. செத்துப் பொழைச்சேன்.. எங்கே. எங்கே விட்டுப் போட்டுப் போனீங்க..!' என்று சோமநாதனின் சட்டையைப் பிடித்து உலுக்கிக் கொண்டு அழுத சகோதரியைத் திகிலுடன் பார்த்த மான்விழி தடுக்க முயன்றாள்.

பரணீதரன் அதைத் தடுத்து விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தைகளையும், மனைவியையும், மாமியாரையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்தான்.

காரை எடுத்தான்.

'எல்லாரும் ஏறுங்க... கோயிலுக்குப் போயிட்டு வர்லாம்..' என்றான்.

'அத்தான்!' என்று திகைத்த மானுவிடம்,

'ஏறு மானு! அவங்களுக்கு இப்பப் பிரைவஸி வேணும்' என்றான் கண்டிப்பான குரலில்.

அவன் கண்டிப்பான குரல் கேட்டு எல்லாரும் பேசாமல் காரில் ஏறினார்கள்.

'அத்தான்..!' என்றாள் மான்விழி மறுபடியும்.

'மானு! அண்ணி மனசுக்குள்ள அடைச்சு வச்சிருந்த துக்கமெல்லாம்.. வடியட்டும்... அவங்க பேசித் தீர்க்கட்டும்' என்றான் தழுதழுத்த குரலில்.

அவன் கண்களிலும் கண்ணீர் கரகரவென்று வழிந்தது.

நிலைமையைப் புரிந்து கொண்ட மான்விழி குழந்தைகளைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டாள். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அவர்கள் திரும்ப வீட்டுக்கு வரும் வரை.

∴ ∴ ∴




பணம் பண்ண வேண்டும்தான்.. அதுக்காக மானத்தை விலை பேசியா? இல்லவே இல்லை.!

என்ன வார்த்தை கேட்டுவிட்டான் இந்தப் பரமசிவம். தம்பி சொன்னது சரிதான். தகுதி பார்த்துக் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டும்.

அன்றைக்கு இரவுதான் பரமசிவம் அந்த மாதிரிக் கேட்டது.

சோமநாதன் சற்றே திரும்பிப் பார்த்தான். கன்னங்களில் கண்ணீர் கோடாக வடிய தமிழ்ச்செல்வி உறங்கிப் போயிருந்தாள். இரவெல்லாம் வேதனையில் துடித்துப் போனாள்.

ஒண்ணுக்கும் ஆகாத பய! ஆகாவளி. அவன் இப்படிக் கேட்கப் போச்சே! அதையும் காதுல வாங்கிட்டு இப்படி உயிரோட இருக்கேனே! என்ற அவளுடைய வேதனைப் புலம்பலை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. எப்படி ஆறுதல் சொல்வது என்றே அவனுக்குப் புரியவில்லை.

காலையில் எப்படி மான்விழியின் முகத்தில் விழிப்பது? பரணீதரன் வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பானே? என்ன சொல்வது? தமிழ்ச்செல்வி கேட்டாற் போலே 'இது ஒரு பிழைப்பா? இப்படியாவது பணம் வேணுமா?' என்ற தன்னிரக்கம் தோன்றியது.

இருக்கிற மனநிலைக்குக் காலையில் நேராக எழுந்து பரமசிவத்திடம் போய் வெட்டுக்குத்து என்று நிற்க வேண்டும்? அதற்கு முன்னாலே அவன் முகத்தில் பணத்தை விட்டு எறிய வேண்டும். எப்படி? எங்கிருந்து பணம் புரட்டுவது?

எல்லாவற்றைக் காட்டிலும் மான்விழியின் முகத்தில் எப்படி விழிப்பது? தான் வளர்த்த பிள்ளை. அவள் வெடித்து அழுதால் எப்படிக் கண்கொண்டு பார்ப்பது?



பலதும் நினைத்து மறுகிப் போனான்!

சட்டென்று எழுந்தான்.

கல்கத்தாவில் தன் நண்பன் ஒருவன் வசதியாய் இருப்பது நினைவுக்கு வந்தது.

முன்பெல்லாம் 'வாடா! உனக்கும் ஒரு தொழில் செட் பண்ணித் தர்றேன்' என்று சொல்லிக் கொண்டிருப்பான்.

அவனைப் போய்ப் பார்க்கலாம்.

ஒரு நான்கைந்து செட் துணிமணிகளை எடுத்துக் கொண்டான். அவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டான்.

லாரி ஒன்றில் ஏறிச் சென்னை சேர்ந்தான். மறுநாள் சென்னையில் கந்தகோட்டம் போய்க் கந்தக் கடவுளை வணங்கினான். நண்பன் ஒருவன் வீட்டில் கழித்தான்.

இரவுதான் ஹௌரா மெயில்!

ஏறுவதற்கு முன் மனம் கேட்காமல் வீட்டுக்கு ஃபோன் செய்தான். நல்ல வேளையாக கடைசி நிமிஷத்தில் கேன்சலான ஒரு பெர்த் டி.டி.ஆர். மூலம் கிடைத்தது.

ஏறிப் படுத்தான்.

எதிரிலே ஒரு பிராமணக் குடும்பம். வயசான இரு பெற்றோர். இளஞ்ஜோடி ஒன்று. ஆந்திரா வரைக்கும் போகிறதாம்.

பதினோரு மணிக்கெல்லாம் பெட்டியில் எல்லோரும் படுத்து விட்டார்கள்.

அடுத்த பக்கத்தில் நண்பர்கள் கூட்டம் ஒன்று சளசளவென்று இந்தியில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் கூட அடங்கி விட்டார்கள். அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

ஊரில் இருந்து சாதிக்காத எந்தச் சாதனையை கல்கத்தாவில் செய்துவிடப் போகிறோம்? அவனுக்குப் புரியவில்லை! எதற்காக இப்படி ஓடி வருகிறோம்? மனதில் குழப்பம் மிஞ்சியது.

எழுந்தான். புரண்டு புரண்டு படுத்தான். சற்றுக் கழித்து மணியைப் பார்த்தான். இரண்டு மணிக்கு மேல் இருக்கும். மெல்ல பெட்டியின் கதவைத் திறந்து கொண்டு காற்றின் குளுமையை அனுபவித்துக் கொண்டு நின்றிருந்தான்.

விக்னேஷுக்குத் தனது இடுப்பின் மேல் கால் போட்டுக் கொண்டால்தான் உறக்கம் வரும்.. துக்கம் நெஞ்சில் மண்டியது.

அப்போது சற்றும் எதிர்பாராத விதமாக ரயில் பெட்டி தாறுமாறாகச் சரிந்து நிமிர்ந்தது. அனிச்சைச் செயல் போல் தனது ஏர்பேக்கை மாட்டிக் கொண்டுதான் நின்றிருந்தான்.

மீண்டும் ஒரு தாறுமாறான குலுக்கல். என்ன ஏதோ என்று உணருமுன்னே தான் தூக்கி எறியப்படுவதையும்.. புல்லும், முள்ளும் நிறைந்த தரையில் தன் உடல் விழுவதையும் உணர்ந்தான்.

அந்த வலியும், வேதனையும் அவனைத் தாக்கும் முன்னே மற்றொரு கோரமான காட்சி அவன் கண் முன்னே நடந்து கொண்டிருந்தது.

ஒரு சில ரயில் பெட்டிகள் தாறுமாறாக சரிந்து கொண்டிருக்கையில் அவன் நின்று கொண்டிருந்த பெட்டி எரிவதையும், அதற்கு முன்னாலே இருந்த பெட்டியும் எரிவதையும் அதிர்ந்து போய்ப் பார்த்துக் கொண்டு கிடந்தான்.

கிட்டத்தட்ட ஒரு நூறடி முன்னேயே அவன் விழுந்து கிடந்தான்.

எல்லா அதிர்ச்சிகளும் ஒன்றாகத் தாக்க மயங்கிவிட்டான்.

∴ ∴ ∴

அதிகாலையில் அவனுக்கு விழிப்பு வந்தது! எழுந்தான்.



உடலில் அங்கங்கே சிராய்ப்புக் காயங்கள். இரத்தம் உறைந்திருந்தது.

அவனுக்கு எதுவுமே புரியவில்லை.

எதுவுமே நினைவுக்கு வரவில்லை.

சற்று நேரத்துக்கு முன்பு பெட்டி எரிந்தபடி விழுந்து கிடந்தது மட்டும் நினைவுக்கு வந்தது.

கனவில் நடப்பவன் போல் நடந்து போய் இரயில் பெட்டி விழுந்து கிடந்த இடத்தைப் பார்த்தான்.

இப்போது கூட்டம் சேர்ந்திருந்தது. ஆங்காங்கே பாதி கருகிய உடல்களும், கை கால் இழந்தவர்களும் கிடக்க உதவி செய்வோர்கள் உதவி செய்து கொண்டிருந்தார்கள். தான் யார்? எதற்காக வந்தோம்? எதுவும் நினைவில்லை.

பெயர் மட்டும் சோமநாதன் என்று நினைவுக்கு வந்தது.

மனம் அதிகபட்ச அதிர்ச்சியைச் சந்திக்கும் போது தற்காப்பு முயற்சியாகச் சில விஷயங்களை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறது என்ற உளவியல் உண்மைதான் அவனுக்கு நிகழ்ந்து கொண்டிருந்தது. அது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பெட்டி சாய்ந்தது நினைவு வந்தது. ஆனால் அதற்கு முன் எங்கிருந்து வந்தோம்? தெரியவில்லை.

எல்லோரும் முன்னோக்கி அடுத்த ரயில்வே ஸ்டேஷன் போனார்கள். இவன் மட்டும் பின்னோக்கிப் போனான். வழியில் போய்க் கொண்டிருந்த ஏதோ ஒரு காரில் லிஃப்ட் கேட்டு முந்தைய ரயில்வே ஸ்டேஷனில் போய் நின்று கொண்டான்.

இரண்டு மூன்று நாட்கள் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தான். ஒருநாள் தமிழ் நாட்டிலிருந்து யாத்திரைக் குழு ஒன்று அங்கு ஒரு நாள் முழுக்க இருந்தது. அதிலே மடத்து சாமியார் தலைவர் போலும் இருந்தார்.

சோமநாதன் அவரிடம் போய்த் தமிழில் பேசவும் அவருக்கு ஆர்வமாகிப் போனது.

விபத்து மட்டும் நினைவுக்கு வருகிறது. என் பெயர் மட்டும் நினைவுக்கு வருகிறது. மற்ற எதுவும் நினைவுக்கு வரவில்லை என்றபோது தங்களுடனேயே அழைத்துக் கொண்டு போனார். செலவுகளை அவரே ஏற்றுக் கொண்டார்.

கல்கத்தா காளி கோயில் தரிசனம் முடித்து இராமகிருஷ்ணன் மடத்தில் மடத்துக் குருமார்களிடம் பேசி அவர்களின் பொறுப்பில் விட்டு விட்டு வந்தார்.

சோமநாதனுக்கு நினைவு வந்தால் தனக்குத் தெரிவிக்கும்படிக் கூறினார்.

மடத்தின் பெரிய குருவுக்கே உதவியாளன் போல் இருந்தான்.

அவரும் தமிழ்நாட்டில் இருந்து சென்றவர் என்பதால் தமிழ் தெரிந்த உதவியாளர் கூட இருப்பது பிடித்திருந்தது.

கூப்பிட்ட குரலுக்கு போய் நிற்பான். பெரிய வேலைகள் இல்லை. ஆனால், கண நேரம் சும்மா இருக்க மாட்டான்.

செடிகளைப் பெரிய கத்தரி கொண்டு ட்ரிம் செய்வது, தண்ணீர் விடுவது, மடத்தின் எந்தப் பிரிவினர் எந்த உதவி கேட்டாலும் செய்வது என்று இருப்பான்.

குருஜி அவனுக்கு ஹிந்தி கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான். மடத்துச் சாமியார்கள் பாடும்போது கூட அமர்ந்து டோலக் வாசிப்பான்.

தனக்கென்று தனியாக ஒரு நோட்டு வைத்துக் கொண்டிருந் தான். அதில் படங்கள் வரைவான்.

இராமகிருஷ்ணர், சாரதா தேவி, மடத்துப் பூங்காவனத்தில் பூத்திருக்கும் பூக்கள் என்று வரைவான்.



இரவு நேரங்களில் நேரம் கிடைக்கும் போது மனத்துக்குத் தோன்றுகிற மாதிரி வரைவான்.

ஒருநாள் மடத்துக் காரின் டிரைவர் கொண்டு வந்து அந்த நோட்டை குருமகராஜிடம் காட்டினார். குரு மகராஜ் அதனைப் புரட்டிப் பார்த்தார்.

ஒரு பெண்ணின் முகம் ஒரு இளைஞனின் முகம், இரண்டு குழந்தைகளின் உருவம், ஒரு நடுத்தர வயதுப் பெண், இளைய யுவதியின் படம் என்று அடிக்கடி வரைந்திருந்தான்.

மகராஜ் சொன்னார்: 'சோமனுக்குள்ளே ஏதோ ஒரு பிரளயம் மாதிரி இருக்கு. இவங்கள்ளாம் ஒருவேளை அவனுடைய குடும்ப அங்கத்தினர்களா இருக்கலாம். வேண்டாம்.. நாம எதையுமே கேட்கவோ.. கிளறவோ வேண்டாம்.. தானாகத் தெளிவு வரட்டும்'' என்றார்.

அதற்குப் பிறகு அவனிடம் யாரும் கடந்த காலத்தைப் பற்றிப் பேசவே இல்லை.

தியானமும், பஜனையும், ஆன்மிகப் பேச்சுக்களும் ஆன ஒரு சூழ்நிலையிலேயே இருந்ததாலோ என்னவோ மனம் மெதுவாக அமைதியடைந்தது போலும்.

ஒரு நாள் அதிகாலை தமிழ்ச்செல்வி பரணீதரன் என்ற பெயர்கள் மட்டும் மனதுக்குள் தோன்றின. அதே நோட்டில் எழுதி வைத்துக் கொண்டான்.

சிதறல்களாக ஒரு நிமிடம் போல் பழைய நினைவுகள் வந்து போயின. ஆனால் அவற்றை ஒருங்கிணைத்து வரிசைப்படுத்திக் கொள்கிற அளவுக்கு யோசிக்கத் தெரியவில்லை. அவனும் மெனக்கெடவில்லை.

ஒரு நாள் குருமகராஜிடம் போனான்.

'குருஜி... பாருங்க.. என் நோட்டில இப்படியெல்லாம் வரையேறன்.. என்னென்னவோ பேர் எல்லாம் எழுதறேன்.. ஆனா.. எதுவுமே புரியலே.. ஏதோ என் கடமையிலிருந்து தவறிட்ட மாதிரி ஒரு குற்ற உணர்ச்சி அப்பப்ப வருது. யாருக்கு துரோகம் செஞ்சேன்.. தெரியலை.. நான் இனி என்ன செய்யணும்?' என்று கேட்டான்.

'ஒண்ணும் செய்ய வேண்டாம். விட்ரு.. தியானப் பயிற்சி எடுத்துக்க.. ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான்.. உனக்குள் கடந்த காலம் மறந்து போயிருக்கணும்.. விட்ரு. எல்லாம் ஒரு நாளைக்கு தெளிவாகும்..' என்றார்.

அப்படியே ஒத்துக் கொண்டான். தியானம் செய்ய ஆரம்பித்தான்.

மனதில் அமைதி ஏற்பட்டது. நிகழ் காலத்தில் வாழ்வோம் என்ற மனதைத் தேற்றிக் கொண்டான்.

'சோமனைக் கேளுங்க' என்று எதற்கெடுத்தாலும் சோமநாதனைக் கூப்பிடுகிற அளவுக்கு குரு மகராஜுக்கு முக்கியமானவனாகிப் போனான்.

ஒரு நாள் டிரைவரிடம் சொன்னான். 'ஏம்ப்பா.. எனக்கு ஏன் இப்படி ஆச்சு... இப்படி எதுவுமே தெரியாம இருக்கிறது ரொம்பக் கஷ்டமா இருக்கு.' என்றான்.

'அது பத்தி.. ஏம்ப்பா கவலைப்படறே.. இப்பத்திக்கு.. இந்த மாதிரி நிலைமையிலே இப்படி ஒரு இடத்தில இருக்கிறது எவ்வளவு அதிர்ஷ்டம்.. அதை நினைச்சுக்க!' என்றான் டிரைவர்.

'ஆமா.. சாப்பாட்டுக்குப் பஞ்சமில்ல.. நல்லவங்களுக்கு நடுவிலே.. நல்ல சிந்தனைகளோட இருக்கிறதுக்குக் குடுத்து வச்சிருக்கணுமில்லே..' என்றான் சோமநாதன்.

'கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் ஓடி விட்டது. ஒரு சமயம் ஒரிசாவிலே கடல் கொந்தளிப்பு என்றார்கள்.



பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்வதற்காக மடத்திலிருந்து ஆட்கள் போனார்கள்.

அந்த விபத்தில் சிக்கிக் கொண்டவர்களைப் பார்க்கும்போது சடலங்களை அகற்றும்போது அவனுக்குத்தான் சிக்கிக் கொண்ட விபத்து முழுமையாக நினைவு வந்தது.

கடந்த காலத்தின் வாழ்க்கைச் சங்கிலியின் முதல் கண்ணி அன்றைக்கு பிடிபட்டது.

∴ ∴ ∴




ஏதோ ஒரு பாறையின் மேல் வெறித்த பார்வையுடன் அமர்ந்து கொண்டிருந்தான் சோமநாதன்.. வெகு நேரம்.

மடத்து டிரைவர் தேடிக் கொண்டு வந்தான்.

'க்யா ஹுவா.. சோமு பையா?' என்றபடி.

'குச்.. நை..' என்றபடி எழுந்தான் சோமநாதன். தமிழ்நாட்டிலிருந்து உதவி செய்வதற்காக அதிரடிப்படை வந்திருந்தார்கள்.

ஒரு குழுவில் இளம்பெண் கான்ஸ்டபிள் இருந்தார். பெயர் செல்வியாம். அந்தப் பெயரைக் கேட்டதில் இருந்தே சோமநாதனுக்கு ஒரு குழப்பம்.

அந்தப் பெண் இப்போதுதான் பயிற்சியில் இருக்கிறாளாம்.

'அங்கிள்.. நாங்கள்ளாம் எந்த நேரத்தில் அழைத்தாலும் ஆஜராயிடணும் தெரியுமா?' என்றாள்.

ஏதோ ஒரு இடத்தில் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவர்களைக் காப்பாற்றப் போவது குறித்துச் சொன்னாள்.

'அங்கிள்.. எங்க பாத்தாலும் வெள்ளக்காடு. நாங்க இருந்த கிராமம் துண்டிக்கப்பட்டாச்சு.. மூணாவது நாள்.. சாப்பாட்டுக்குக் கூட வழியில்லே.. ஊருக்குள்ளே ஒரு இடம் பாக்கியில்லாம தண்ணி வடியவேயில்லை. நல்லவேளை நாங்க நல்ல தருதியான டிரஸ் எல்லாம் கொண்டு போயிருந்தோம்.. அன்னைக்கு என் வாழ்க்கையில பணம் எல்லா இடத்திலயும் உதவாதுங்கற ஒரு பெரிய உண்மை தெரிஞ்சது..' என்றாள்.

அவன் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். செல்வி தொடர்ந்தாள்.

'அங்கிள்' என் சம்பளம்.. பிளாஸ்டிக் கவருக்குள்ளே போட்டுப் பத்திரமா என் பாக்கெட்டில் இருந்துச்சு.. ஆறாயிரம் ரூபா.. ஆனா அந்த ஆறாயிரம் ரூபாவுக்கும் அந்த இடத்துல மதிப்பே இருக்கலை.. ஒரு டம்ளர் டீ யாராவது குடுத்திருந்தா அந்த ஆறாயிரம் ரூபாயையும் தூக்கிக் குடுத்திருப்பேன்.. தெரியுமா?' என்றாள்.

இப்படிப் பேசிக் கொண்டே வேலைகளைச் செய்தார்கள். மூன்று நாட்கள் இது மாதிரி சர்வீஸ் முடித்து விட்டு மீண்டும் மடத்துக்கு வந்தார்கள்.

அன்றிரவு!

சோமநாதன் தன்னுடைய கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். அவனுக்கென்று ஒரு சின்ன அறை கொடுத்திருந்தார்கள்.

உறக்கம் பிடிக்கவில்லை!

சட்டென்று எழுந்து அமர்ந்தான்!

செல்வி என்ற பெயர் ஏன் தன்னை அவஸ்தைப்படுத்தியது என்பது அவனுக்குப் புரிந்தது.

தனது நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். தான் வரைந்த உருவங்கள் ஒவ்வொன்றும் அவனுக்குப் புரிந்தது.



குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் நினைவுக்கு வந்தார்கள்.

தொடர்ந்து பழைய நினைவலைகள் அலையாய் வந்து மோதியது.

'சோப்ரா!' என்று டிரைவரைக் குரல் கொடுத்து அழைத்தபடியே மயங்கிச் சரிந்தான்.

∴ ∴ ∴

**நா**ன்தான் ஏற்கெனவே சொன்னேனே சாமி! இவருக்கு ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டிருக்கு. அதனாலதான் இப்படின்னு.. படிப்படியா.. மாற்றம் வருது'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் டாக்டர்.

மடத்துக்கு வேண்டியவர், குருமகராஜிடம் மிகவும் மரியாதை.. அவரிடம்தான் சோமநாதனைப் பற்றி அடிக்கடி சொல்வார் ஆனந்தமகராஜ்.,

மெல்லக் கண் விழித்தான் சோமநாதன்.

'சோமு. ஏதாவது.. நினைவுக்கு வந்துச்சாப்பா..?' என்றார் ஆனந்த மகராஜ்.

அவன் மலங்க மலங்க விழித்தான்.

'வேண்டாம் விட்டுருங்க.. குருஜி.. ரெஸ்ட் எடுக்கட்டும். அவருக்கே தெளிவாத் தெரிஞ்சா சொல்லட்டும்' என்றார் டாக்டர்.

பேசிக் கொண்டே எல்லோரும் வெளியே போனார்கள்.

அவன் கண்களை மூடிக் கொண்டான். இப்போது எல்லாமே முழுமையான நினைவு வந்துவிட்டது.

லேசாகக் கண்களைத் திறந்து காலண்டரைப் பார்த்தான்.

தேதி அவனைக் குழம்பியது. மீண்டும் தலையை வலிக்கிற மாதிரி இருந்தது.

உறங்கி விட்டான்.

அவன் மீண்டும் சகஜ நிலைக்கு வந்த பிறகு கூட ஆனந்த் மகராஜ் அவனிடம் எதுவும் கேட்க வேண்டாமென்று சொல்லி விட்டார். அதனால் யாரும் எதுவும் அவனிடம் கேட்கவில்லை.

சோமநாதன் உள்ளுக்குள் சிந்தனையிலேயே இருந்தான்.

கிட்டத்தட்ட தான் வெளியே வந்து ஒன்றே முக்கால் வருடங்கள் ஆகிவிட்டது. தன்னை யாரும் தேடவில்லையா? இறந்துவிட்டேன் என்று நினைத்திருப்பார்களோ?

பிரச்சினைகளின் போது கைவிட்டு விட்டு ஓடி விட்டான் என்று தன்னைக் கேவலமாக எண்ணியிருப்பார்களோ?

பரணி பிரச்சனைகளைச் சமாளித்திருப்பானோ! இப்போது என்னவென்று போய் நிற்பது?

தனக்கு நேர்ந்ததையெல்லாம் சொன்னால் யாராவது நம்புவார்களா?

'நல்லாக் கதை பண்றான்டா.. அதை நாங்க நம்பணுமாக்கும்..?' என்று அந்தப் பரமசிவமே புரளி கிளப்புவான்.

கொஞ்சம் பொறுக்கலாம். ஊரில் நிலவரம் என்னவென்று தெரிந்து கொள்ளலாம். பிறகு போகலாம். ஒருவேளை. ஒருவேளை... தான் இல்லாமல் குடும்பத்தினர் நிம்மதியாக இருந்தால்..!

ஒருநாள் குருமகராஜிடம் போய் நின்றான்.

'குருஜி.. நானும் சந்நியாசம் வாங்கிக்கவா!' என்றான்.

'குருஜி அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

'உன் மனசு அதுக்கெல்லாம் தயாரில்லே.. சந்நியாசம் வாழ்க்கையிலிருந்து தப்பிச்சு ஓடறதுக்காக மாட்டிக்கற கவசம்



இல்லை. ஒன்னு வாழ்க்கையிலே பெருசா ஒண்ணும் இல்லேன்னு முடிவெடுக்கணும்.. இல்லே. இதைக் காட்டிலும் பெரிய விஷயம்... ஏதோ இருக்கணும்னு தேடணும். அப்படிப் பட்டவங்களுக்குத்தான் அது சரிவரும்.. இன்னும்.. உன்னை சம்சார பந்தம் விட்டலேப்பா..' என்றார்.

சோமநாதன் மறுபடியும் யோசித்தான். உள்ளூர சிரிப்புக் கூட வந்தது.

இன்னமும் வாழ்க்கையில் இருந்து தப்பிக்கத்தானே பார்க்கிறோம் என்று எண்ணிக் கொண்டான்.

யாரிடமாவது தொடர்பு கொண்டு ஊரில் உள்ளவர்களைப் பற்றி விசாரிக்கலாம் என்று எண்ணினான். யாரைத் தொடர்பு கொள்வது. தெரியவில்லை.

ஒரு நாளிரவு!

தான் வாழ்க்கையில் இதுவரை நடந்த விஷயங்களையெல்லாம் சுருக்கமாக ஒரு கடிதமாக எழுதினான்.

தமிழில் விலாசம் எழுதினான். ஆனால், போஸ்ட் செய்ய விரும்பாமல் தனது பெட்டியின் மேல் வைத்துவிட்டு மகராஜ் அழைப்பது கேட்டு எழுந்து போனான்.

அதே நேரம்! வேறு பக்கமாக இருந்து அவனைத் தேடிக் கொண்டு வந்த மகராஜ் பெட்டியின் மேல் இருந்த கடிதத்தைப் பார்த்தார். ஒரே பார்வையில் விலாசத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

மறக்காமல் தனது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

சோமநாதன் அன்று மாலையே கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டான்.

∴ ∴ ∴

'குருஜி, எனக்குள்ளே ஒரு பெரிய போராட்டம்.. ஒரு மனுஷன் தன் குடும்பத்தை வசதியாக வைத்துக் கொள்ள வேணும்னு நினைக்கிறது தப்பா?'

'தப்பேயில்லை. ஆனா எது வசதி என்பதைத் தீர்மானிக்கும் போது எச்சரிக்கையா இருக்கணும். நிம்மதியா, ஆடம்பரமா எது தேவைன்னு முடிவு எடுக்கணும்.'

'ம்..' சோமநாதன் உள்வாங்கிக் கொண்டான்.

'குருஜி. நாம நியாயமான வழியில் போனாலும் வெளிச் சக்திகள்னால நம்ம திட்டங்கள் பாதிக்கப்பட்டா.. தவறு நம் மீதா?'

'தவறு நம்மளாலே இல்லேன்னாலும், ஏற்கெனவே எடுத்த முடிவு. நம்மளோடதுங்கறதுனால நாம பாரம் சுமந்துதான் ஆகணும். ஆனா, கடவுள் ஒரு மனுஷனுக்குத் துன்பங்களைக் குடுக்கறார்ன்னா.. அவனைப் புடம் போடறார்ன்னு அர்த்தம்.'

'சாமி..! மனசு இன்னும் மனிதர்கள் மேலேயே பாசம் வக்குது. இப்பல்லாம் மனுஷங்க ரொம்ப குழம்பிப் போய்க் கிடக்கறாங்க. மேற்கத்திய தத்துவம் எப்படியாவது ஜெயிக்கலாம்... வெற்றியே குறிக்கோள்ங்குது. ஆனா, நம்ம தத்துவம் போதும் என்கிற மனமே பொன் செய்யும் மருந்ங்குது.. எது குருஜி நிஜம்?'

'வெற்றியே குறிக்கோள்ன்னு எப்படியாவது வெற்றின்னு தலை தெறிக்க ஓடும்போது வெற்றி கிடைக்கும். ஆனா அதுக்கு எதையெதையோ விலையாக் குடுக்க வேண்டியிருந்திருக்கும். அதையே ஒவ்வொரு அடியா எடுத்து வைக்கும்போது நிலைத்த வெற்றி கிடைக்கும். இடையில் கஷ்டங்கள் வந்தாலும் கடைசியில் வெற்றி இருக்கும். கூடவே நிம்மதியும் இருக்கும்.'

சோமநாதனின் மனது தெளிவடைந்த மாதிரி இருந்தது.

தனக்கு நினைவு வந்துவிட்டது என்பதையும் தன் வாழ்க்கையில் நடந்த



ஆனந்த மகராஜ் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்.

'பரவாயில்லே.. மகனே! நீ கெட்டிக்காரத்தனமா முயற்சிகள் எடுத்தே.. ஆனா, எதிர்பாராத வெளிச் சம்பவங்கள்னால நீ பாதிக்கப்பட்டுட்டே.. இடையிலே ரெண்டு வருஷங்கள் நினைவு போனது கூட இறைவனோட திருவிளையாடலாத்தான் இருக்கணும், ஆனா நினைவு வந்ததுக்கப்புறம் நீ பொறுப்புகள்ல இருந்து விலகி இருக்கக் கூடாது. உன் குடும்பத்தோட போய் சேரணும்..'

'ஐயோ... சாமி.. நான் அவங்களை எந்த முகத்தோட போய்ப் பார்ப்பேன்?'

'ஏதோ ஒரு முகத்தோட பாத்துத்தான் ஆகணும்.. மகனே! பாத்தவுடனே சந்தோஷம் துக்கம் எல்லாமுமே வெடிச்சுக் கிளம்பத்தான் செய்யும். எல்லா ஆவேசமும் அடங்கினதுக்கப்புறம் உன் பக்கத்தில் எந்த தவறும் இல்லைங்கறது புரியும்.. போகத்தான் வேணும்.'

'உத்தரவு மகராஜ்.'

'மகனே! என்னைக்கும் ஒன்னு நினைவுல வச்சுக்க. அரக்கப் பரக்க அகலமாக் காலை எடுத்து வைக்கறதை விட ஆழமாய்க் காலை ஊன்றி எடுத்து வைக்கறது நல்லது..!'

'அப்ப நான் இனிமே என்ன செய்யட்டும் குருஜி!'

'இத்தனை நாள் பொறுத்தது போல் இன்னும் ஒரு வாரம் பொறு மகனே! என்ன செய்யணும்னு முடிவெடுக்கலாம்' என்றார்.

புன்னகைத்து சோமநாதனின் தலையைத் தடவி ஆசீர்வதித்து விட்டு எழுந்து போனார்.

பல நாட்களுக்குப் பிறகு அன்றைக்கு நிம்மதியாக உறங்கினான் சோமநாதன். மனமும் உடலும் லேசாக இருந்தாற்போல் உணர்ந்தான்.

மடத்தின் நூலகத்திற்குள் நுழைந்து நல்ல புத்தகங்களாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். இத்தனை நாள் தன் வாழ்க்கைக்கு ஆதாரவாக இருந்த பெரியவர் கண்டிப்பாக இனிமேலும் வழிகாட்டுவார் என்ற மகிழ்ச்சியில் இருந்தான்.

இத்தனை நாள் பொறுத்தாகிவிட்டது. இன்னும் ஒரு வாரந்தானே? அதற்குள் மனம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறதே.. வேண்டாம்... அது இப்படி இருக்குமோ.. அது இப்படி இருக்குமோ.. என்று எந்தக் கற்பனையும் வேண்டாம்.. வருகிறதை வருகிற விதத்தில் ஏற்றுக் கொள்வோம்' என்று எண்ணிக் கொண்டான்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், என்று அவன் காலையில் பாடிக் கொண்டே செடிகளுக்கு நீரூற்றுவதை குருஜி நின்று புன்னகைத்தபடி பார்த்து விட்டுப் போய்விடுவார்.

நான்கைந்து நாட்கள் போயிருக்கும்! மாலை நேர தியானம் முடித்து விட்டு வெளியே வந்தான் சோமநாதன்.

எதிரே தனக்குப் பழக்கமான சிவசுந்தரம்!

'சோமநாதா..!' என்று தழுதழுத்தபடி இரு கைகளையும் நீட்ட..

'சித்தப்பா!' என்று ஓடிப் போய்க் கண்ணீர் வழியத் தழுவிக் கொண்டான் சோமநாதன்.



26

'என்னப்பா.. தம்பி.. கடிதாக வந்தப்ப என்னால நம்பவே முடியல. மடத்திலிருந்து நமக்கு எதுக்குக் கடுதாசின்னு யோசிச்சு.. யோசிச்சு மண்டை



குழம்பிப் போனேன். அப்புறம் படிச்சுப் பார்த்தேன்' என்று விவரித்தார் சிவசுந்தரம்.

அன்பிற்குரிய சிவசுந்தரத்திற்கு,

தங்கள் ஊர்க்காரர் சோமநாதன் என்று ஒரு நல்ல மனிதன். குருமகராஜ் அருளால் இந்த மடத்தில் நல்ல நலத்தோடு இருக்கிறார். தாங்கள் நேரில் வந்தால் முழு விவரங்களும் அறியலாம். இது தற்போதைக்கு தங்களுக்கு மட்டுமே தெரிந்தால் போதுமானது.'

என்ற ஒரு கடிதம் எழுதி ஆனந்த மகராஜ் அனுப்பியிருந்தார்.

உடனே புறப்பட்டு வந்தேன்.

'யாருக்கும் சொல்லலையா?'

'சொல்லாம இருப்பேனா? பரணீதரனுக்கு மட்டும் சொன்னேன். அவன் உடனே போக்குவரத்து வசதி ஏற்பாடு எண்ணி சௌகரியமா அனுப்பி வச்சான். நமக்காக சென்னையில காத்துட்டிருக்கான். போகும்போது விமானப் பயணம்' என்றார்.

சோமநாதன் பலவிதமான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டவனாய் இருந்தான்.

'சித்தப்பா.. தமிழ்ச்செல்வி எப்படி இருக்கா?'

'தாயீ! அந்தக் கொடுமையை ஏன் கேக்கறே! இருக்கயா இல்லையான்னு தெரியாம.. அந்தப் பொண்ணு பட்ட வேதனை இருக்கே.. ரொம்பக் கொடுமை.. இப்பவும் தன்னோட துக்கத்தைக் காமிச்சுக்கிட்டா இளசுங்கள்லாம் ரொம்ப வருத்தப்படுவாங் களேன்னு வெளில காட்டவும் முடியாம.. உள்ளயே வச்சு உருகறா, யாருக்குமே அப்படி ஒரு கஷ்டம் வரக் கூடாதுப்பா.'

சொல்லும்போதே சிவசுந்தரத்தின் கண்கள் கலங்கின.

சோமநாதன் குலுங்கிக் குலுங்கி அழுதான். தழுதழுத்த குரலிலேயே சிவசுந்தரம் தொடர்ந்தார்.

'ரயில் விபத்துன்னு செய்தி வந்தவுடனே குடும்பம் புறப்பட்டு வந்தாங்க. குவியல் குவியலா... பொணங்க.. செத்தவங்க எத்தனை பேரு.. பொழைச்சவங்க எத்தனை பேரு.. எரிஞ்சவங்க எத்தனை பேருன்னு யாருக்கும் தெரியலே.. வந்து தேடிப் பாத்து உன்னைக் கண்டு பிடிக்க முடியலே.. ஊர்ல நம்ம பொம்பளைங்க வேற சடங்கு அது.. இதுன்னு ஆரம்பிச்சட்டாங்க.. அப்புறம் நாந்தான்.. வள்ளலாரே கணவன் இறந்து போனாக் கூடத் தாலி வாங்க வேண்டியதில்லேன்னு சொல்றாருன்னு சொல்லி வாயை அடைச்சேன்' என்றார்.

கண்ணீர் தாரை தாரையாய் வழிய சோமநாதன் கேட்டுக் கொண்டிருந்தான்.

'ஆனா.. உன் தம்பி.. இருக்கானே.. அருமையான புள்ளைப்பா.. அவன் நீ எந்தப் பிறவியில் செஞ்ச புண்ணியமோ அப்படி ஒரு தம்பி கிடைச்சான்ப்பா..ஃப்ரெண்ட்ஸ்ங்க மூலமா... உடனடியா அந்த நாய்ப்பய பரமசிவத்தோட கடனை அடைச்சு.. இனிமே எங்க குடும்பத்தைப் பத்தி ஏதாவது பேசனீங்க... கண்டம் துண்டமா வெட்டிப் போடுவேன்னு மிரட்டிப் போட்டு வந்துட்டான் தெரியுமா?' என்று பெருமையாகக் கூறினார்.

'ஆமா.. அந்த ஒரு விஷயத்துல நான் ரொம்ப பாக்கியசாலி. அவன் ஆரம்பத்துல இருந்தே 'வேண்டாண்ணா, இதுல இறங்காதே' எச்சரிக்கை பண்ணிகிட்டேதான் இருந்தான். நாந்தான் கேக்கலை.. சித்தப்பா.. குழந்தைங்க.. எப்படி இருக்காங்க?'

'குழந்தைங்க.. நல்லா.. இருக்காங்கப்பா.. அதான் சொன்னேனே பரணீதரன்.. குழந்தைகளுக்கு அப்பா ஏக்கம் வராத அளவுக்கு ரொம்ப நல்லாப் பாத்துக்கறான்னு..'



'பரவாயில்லைங்க.. சித்தப்பா.. கடவுள். என்மேல் இரக்கம் காட்டிட்டாரு..' என்றான் சோமநாதன். பிறகு தனக்கு நினைவு தப்பிப் போனதை, சமீபத்தில்தான் முழுவதும் நினைவு வந்தது என்பதையெல்லாம் பகிர்ந்து கொண்டான்.

மடத்தில் எல்லோரிடமும் பிரியா விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

∴ ∴ ∴

'அத்தான் உங்களுக்கு எப்ப நியூஸ் தெரியும்?' என்றாள் மான்விழி.

'நேத்துக் காலையில என்ற போதே முந்தைய நாள் நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. குளித்துவிட்டு சென்னை அலுவலகம் திறக்கட்டும் என்று அமர்ந்திருக்கையில் சிவசுந்தரத்திடம் இருந்து ஃபோன் வந்தது.'

'ஹலோ!'

'தம்பி! சோமநாதனைப் பத்தி நல்ல நியூஸ் கிடைச்சிருக்கு..'

பரணீதரன் உற்சாகத்தின் எல்லைக்கே போனான்.

'சொல்லுங்க.. சித்தப்பா..'

'தம்பி கொல்கத்தாவில.. மடத்துல இருக்கானாம். மடத்துல இருந்து தகவல் வந்திருக்கு..'

'ஓ!' என்றான் உள்ளடங்கிய குரலில்.

'மடம்ன்னா! சாமியாரா ஏதாவது?'

'இல்லல்லே.. சாமியார் எல்லாம் ஆகலே போல இருக்கு.. எதுக்கும் நேரில வாங்கன்னு கடுதாசி வந்திருக்கு..'

'என்ன செய்யட்டும்?'

'சித்தப்பா.. பத்து நிமிஷம் டைம் குடுங்க.. நான் பேசறேன்' என்றான். உடனே மனிமாறனிடம் பேசினான்.

மாறனும் உற்சாகமானான்.

'ஒன்னும் கவலைப்படாதே.. இப்பவே உங்க சித்தப்பாவை ஃப்ளைட்ல அனுப்பறேன். மத்ததை அப்புறம் பேசலாம்' என்றான்.

சிவசுந்தரம் அன்று பிற்பகலுக்குள் வந்து சேர்ந்தார்.

'பரவால்லை. உன்னோட புண்ணியத்துல விமானப் பயணம்' என்று சிரித்தார்.

கடிதத்தைத் திரும்பத் திரும்ப படித்தார்கள். முழுதும் விளங்கவில்லை.

'ஏன்.. சித்தப்பா.. லெட்டர் பாத்தா.. அண்ணன் இத்தனை நாள் எதுவும் சொல்லாம இருந்திருப்பாங்களோ..'

'அதான் தம்பி புரியலை.. அதனாலதான்.. உங்க வீட்ல சொல்லலை. நாம இங்கே இருந்து போய்க் கூப்பிட்டு அவன் 'நா வர்லை. மடத்துலயே இருக்கேன்னுட்டா.. என்ன பண்றது?'

'ஓ! அப்படி ஒன்னும் இருக்கோ?' என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

'பிறகு எப்படியானாலும் சரி நீங்க நேர்ல போங்க.. சித்தப்பா.. பேசுங்க. மனநிலை தெரிஞ்சதுக்கப்புறம்.. நான் வர்றேன் இல்லே.. வர்றதானா கூட்டிட்டு வந்துடுங்க..' என்றான்.

சிவசுந்தரம் ஒத்துக் கொண்டார்.

'இப்படியாவது.. மடத்தைப் பாத்துட்டு வர்றேன்' என்றார்.

சோமநாதன் உடன் வருகிற மனப்பான்மையில் இருக்கிறான் என்று தெரிந்தவுடனே மறுபடியும் விமானப் பயணம் என்று ஏற்பாடு செய்தார்கள். விவரம் சொன்னான்.



'பெரியத்தான் உங்களை பாத்ததும் என்ன சொன்னாங்க!' என்றாள் மான்விழி ஆவலாக.

'என்ன சொல்வாங்க? கட்டிப் பிடிச்சுக்கிட்டு அழுதாங்க..' என்றான். தன்னைப் புகழ்ந்ததை, நன்றி சொன்னதையெல்லாம் பெரியதாக சொல்லிக் கொள்ளவில்லை.

'அத்தான்! நாமளும் ஏதோ புண்ணியம் பண்ணியிருக்கோம் போலத்தான்.. இருக்கு' என்றாள் மான்விழி.

அவனும் ஆமோதித்தான்.

∴ ∴ ∴

'ஐயோ! நினைப்பில்லாமயா இருந்தீங்க..!' என்று பதைத்துப் போனாள் தமிழ்ச் செல்வி.

உணர்ச்சிகளின் வெடிப்புகள் எல்லாம் நிகழ்ந்து முடிந்த பின் கணவனை விட்டு ஒரு கணமும் பிரியாதவளாய் நெருங்கி அமர்ந்திருந்தாள் தமிழ்ச்செல்வி.

சாப்பிடச் செய்தாள், காஃபி கொடுத்தாள்.

'தமிழு! உன் கை காஃபி குடிச்சு.. எத்தனை நாளாச்சு' என்று ஏக்கம் தீரச் சொன்னான் சோமநாதன்.

'ஐயோ! என்னால் நம்பவே முடியலீங்க.. எனக்கு இப்படியெல்லாம் அதிர்ஷ்டம் இருக்கா.. என்ன?' என்று அவன் முகம் தடவி, மார்பைத் தடவித் தன் மகிழ்ச்சியையெல்லாம் வெளிப் படுத்திய மனைவியிடம் அவனும் தன் தாபத்தையெல்லாம் வெளிப்படுத்தினான்.

சற்றுக் கழித்த பிறகு 'குழந்தைங்க.. எங்கே தமிழு?'

தமிழ்ச்செல்வி புன்னகைத்தாள். 'உங்க தம்பி.. நாம தனியாப் பேசிக்கட்டும்ங்கறதுக்காக அழைச்சுக்கிட்டு போயிருப்பான்' என்றாள் முகம் சிவக்க.

'உங்களுக்குத் தெரியுமா? மானுவுக்கும் பரணீதரனுக்கும் கல்யாணமாயிருச்சு..' என்றாள்.

'ஓ.. அப்படியா! சிவசுந்தரம் சித்தப்பா சொல்லவேயில்லை.'

'அந்த விஷயத்தை நேர்ல தெரிஞ்சுக்கட்டும்னு விட்டுருப்பாரா யிருக்கும்..' என்றான்.

மீண்டும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

∴ ∴ ∴

'டேய்! வாடா கண்ணா!' என்று கை நீட்டிய அப்பாவிடம் போகாமல் பரணியிடம் ஒண்டிக் கொண்டு நின்றான் விக்னேஷ்.

நிமிர்ந்து பரணீயின் முகத்தைப் பார்த்தான்.

'அப்பாடா.. குட்டி! வெளியூருக்கு வேலைக்குப் போயிருக் காருன்னு சொல்லியிருக்காரு இல்லே!'

'காரு பொம்மையெல்லாம்.. வாங்கிட்டு வருவாருன்னு சொன்னே!'

'வருவார்டா.. ராஜா.. நாளைக்கு எல்லாம் வரும்..'

பையன் மெதுவாக அருகில் போனான். சோமநாதன் பையனைக் கட்டிக் கொண்டு முத்தமாரி பொழிவதை குலுங்கி அழுவதை எல்லோரும் பார்த்துக் கொண்டு கண்ணீர் வழிய நின்றார்கள்.

இரவு ஹாலிலேயே எல்லாரும் அமர்ந்து டிபன் சாப்பிட்டார்கள்.

யாரும் தங்கள் தங்கள் அறைகளுக்குச் செல்லவேயில்லை.

விபத்தைச் சந்தித்ததை.. இடையில் என்ன நடந்தது என்றே தெரியாமல் போனதை... ஒரிசா சென்றதை..

'ஒரிசாவில் வைத்து நினைவு வந்ததை! என்று அவன் கதை போல் விவரிக்க.. கேட்டுக் கொண்டிருந்தார்கள்.



இரண்டு மணிக்கு மேல்தான் உறங்கப்போனார்கள்.

குழந்தைகளை தங்கள் பொறுப்பில் வைத்துக் கொண்ட பரணீதரன், அண்ணனிடம் தனிமையில் சொன்னான்.

'அண்ணா! மேலே பெட்ரூமுக்குப் போயிருங்க... அண்ணி கிட்டே நிறையப் பேசுங்கண்ணா பாவம்.. ரொம்பத் துக்கம் சுமந்துட்டாங்க..' என்றான்.

சோமநாதனும் புரிந்து கொண்டவனாய்த் தலையாட்டினான்.

இப்போதெல்லாம் வினிதாவும், பாட்டியும் ஒரு அறையில் தங்கிக் கொண்டார்கள். விக்னேஷுக்கும் ஒரு அறை என்றபோது அவன் சில நேரங்களில் தனிமையில் படுத்துக் கொள்வான். சில நேரங்களில் பரணீதரனுடன் ஒட்டிக் கொள்வான். இன்றைக்கு பரணீதரன் அவன் படுக்கையில் படுத்துக் கொள்ள மான்விழி அந்தப் பக்கம் வழக்கம் போல..!

நள்ளிரவில்!

யாரோ தன்னைத் தொட்டு எழுப்ப.. திடுக்கிட்டு விழித்த மான்விழி பரணீதரனைப் பார்த்து..

'என்னங்க!' என்றாள்.

'தூக்கம் வரலே!' என்றான்.

'ஓ!' என்று எழுந்து பின் கட்டுப் பக்கம் தாண்டி திண்ணையில் அமர்ந்து கொண்டார்கள்.

'மானு' என்று மடியில் படுத்துக் கொண்டான்.

'ம்..'

'லேசா இருக்கிறது.. இறக்கை கட்டிட்டுப் பறக்கறதுங்னெல் லாம்.. கேள்விப்பட்டிருக்கியா..'

'ம்..'

''அப்படியிருக்கேன்... இனி அய்யாவோட சந்தோஷ வேகத்தைத் தாங்கறதுக்கு அம்மா தயாராகயிருக்கணும்.. தெரியறதா?' என்றான்.

'தாராளமா.. அதுவும் சந்தோஷமா..' என்றாள் சிந்தனையுடன்.

'ஏங்கத்தான்.. ஒருவேளை மடத்துல இருக்கும்போது பெரியத்தான்.. சந்நியாசியாய்ப் போயிருந்தாங்கன்னா..' என்றாள்.

பரணீதரன் சிரித்தான்.

'இங்க பாரு! எங்கண்ணன் உங்கக்காகிட்டேயும், நான் உங்கிட்டயும் வகையாச் சிக்கியிருக்கமாச்சு.. சாமியாராப் போவதாவது.. ஒன்னாவது. உனக்கு விஷயம்.. தெரியுமா! அண்ணன் சயநினைவில்லாதப்ப கூடப் படமா வரைஞ்சு தள்ளியிருக்காங்க.. யாரு படம் தெரியுமா? அண்ணி படமா. அப்படி உள்ளே.. மனசுக்குள்ளே போயி உக்காந்துக்கறீங்க.. எங்க போய் சாமியார் ஆகறது?' என்றான் பெருமூச்சுடன்.

அவள் மகிழ்ச்சியாய்ச் சிரித்தாள்.

'சிரிக்காதேடி..' என்றான் பரணீதரன்.

'ஐய்யோ! ஆரம்பிச்சாச்சு' என்று அவள் எழ முயற்சிக்கவும் அவன் விடவில்லை. சற்றுக் கழித்து விடுவித்தான்.

'இன்னைக்கு.. விடு, நாளைக்கு உன்னைக் கவனிச்சுக்கறேன். இன்னைக்கு.. ஒரு முக்கியமான வேலையிருக்கு.'

'என்ன?'

'இந்த விக்கிப் பய எங்கயாவது மேலே கீழே போயிடப் போறான்.. இன்னைக்கு' என்று இழுக்கவும்.

'காவல் பணியாக்கும்' என்று சிரித்தாள் மான்விழி.



'ஆமா.. இன்னிக்குக் காவல் பணி. நாளைக்குக் காதல் பணி' என்று சிரித்தான்.

∴ ∴ ∴



27

மான்விழி பாத்திரங்களைக் கழுவி வைத்துக் கொண்டிருந்தாள். அந்தநேரம் அங்கே வந்த பரணீதரன், 'இந்தா.. இந்த ரெண்டு தட்டையும் விட்டுட்டியே..' என்று வேண்டுமென்றே முதுகில் படுகிற மாதிரி நின்று கொண்டு தட்டுக்களை சிங்கில் போட்டான்.

'சித்தா.. சித்தியை எதுக்கு இடிக்கிறே!' என்றான் விக்னேஷ்.

'டேய்.. அவதாண்டா என்னை இடிக்கறா.. நான் பாட்டுக்கு ஸ்ட்ரெய்ட் ரோட்டில போயிட்டிருந்த ஆளை இடையில வந்து இடிச்சதே... அவதாண்டா.'

விக்னேஷுக்குப் புரியவில்லை.

'கொஞ்சமாவது அறிவிருக்கா? அவன்கிட்டே போய் உளறிகிட்டு..' என்று மான்விழி கடிந்து கொண்டாள்.

'ஏய்.. இப்ப.. நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்.. அறிவிருக்குன்னா சொன்னேன்? அம்மா பக்கத்துல இருந்தா அறிவே வேலை செய்யறதில்லேன்னுதானே சொல்லிக்கிட்டு இருந்தேன்?'

'ஐயோ.. அத்தான்.. ஆரம்பிச்சுட்டீங்களா?' என்று சிரித்தாள் மான்விழி.

'என்னத்தை ஆரம்பிச்சேன்?'

'அக்கா!.. அக்கா..!' என்று சத்தமாக அழைத்தாள்.

'என்னடி..!' என்று வந்தாள் தமிழ்ச்செல்வி.

'இங்க.. பாரு! உன் கொழுந்தனை..? எடக்கு மடக்காப் பேச ஆரம்பிச்சாச்சு' என்றாள்.

'அதென்ன எடக்கு! அதென்ன மடக்கு?' - என்றான் பரணீதரன்.

'ம்.. தனியா... வாங்க.. பேசிக்கிறேன்!'

'அப்படிப் போடு!' என்று பரணீதரன் சிரிக்கையிலே மான்விழி சட்டென்று ஒரு காரியம் செய்தாள்.

கையிலிருந்த தட்டாலேயே வேகமாக ஓங்கி ஆனால் அடி பலமாக விழாத வண்ணம் அவன் முதுகில் ஒரு அடி வைத்தாள்,

'அப்படிப் போட்டாச்சு' என்றாள்.

'இரு.. இரு' என்று சீரியஸாகச் சொன்னவன்,

'அண்ணா! அண்ணா!' என்று அழைத்தான்.

'என்னடா!' என்று சோமநாதன் வந்தான்.

'அண்ணா! எனக்கு இன்னைக்கு ஒண்ணு தெரிஞ்சாகணும்!'

'என்ன?' என்றான் புரியாமல்.

'அன்னைக்கு, ஒருநாள்.. சாதாரணமா அப்படிப் போடுன்னேன். உடனே தட்டைப் பொத்துன்னு கீழே போட்டா.. இன்னைக்கு அப்படிப் போடுன்னவுடனே முதுகில போடறா.. ஐயய்யோ.. எப்பெப்ப.. எப்படிப் போடுவான்னே தெரிய மாட்டேங்குது இவ கூட குடும்பம் நடத்தவே எனக்கு பயமாயிருக்கு..!' என்றான்.

தமிழ்ச்செல்வியும், சோமநாதனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

'யப்பா.. தம்பி! ரெண்டு பேரும்.. மேலே போயி.. எப்பெப்ப எப்படி எப்படிப் போடறதுன்னு ஒரு முடிவு பண்ணிட்டு வாங்க!' என்றான் சோமநாதன்.



'சரி.. வா! அண்ணனே சொல்லிட்டாங்கல்ல.. வா பேசித் தீர்த்துக்கலாம்.' என்று வம்புக்கு நின்றான் பரணீதரன்.

'சும்மாயிருங்கத்தான்' என்றாள் மான்விழி வெட்கத்துடன்.

'இவ.. சும்மாயிருக்கச் சொல்றா... நீ வேற மாதிரி சொல்றே.. இது எப்படியாகறது?' என்றான் மறுபடியும்.

'தம்பி.. சும்மாயிருங்க.. தம்பி விக்கியும், வினிதாவும் குறுகுறுன்னு பாக்கறாங்க' என்று தமிழ்ச்செல்வி முணுமுணுக்கவும்தான் நகர்ந்தார்கள்.

போனவன் திரும்பி வந்து மெல்லிய குரலில் இளவரசனையும், இளவரசியையும் சீக்கிரம் தூங்க வைங்க.. அண்ணனைப் பத்தி நிறைய உண்மைகள் உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கு.' என்று சொல்லிவிட்டுப் போனான்.

தமிழ்ச்செல்வி அவர்கள் மாடிக்குப் போவதை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'என்ன தமிழு!' என்றான் சோமநாதன்.

'இல்லே! உங்க தம்பி ரொம்ப நாளைக்கப்புறம் வம்பு பேச ஆரம்பிச்சிருக்கான்' என்றாள்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

∴ ∴ ∴

வெகு நாட்களுக்குப் பிறகு வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தான் பரணீதரன்!

கடி ஜோக்குகளை அள்ளி விட்டபடி மனைவி கட்டிலில் அமர்ந்து அவனை வியப்பாய்ப் பார்ப்பதை ரசித்தபடி உருண்டு புரண்டு சிரித்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் அவளும் அவனுக்கு இணையாகச் சிரிக்க ஆரம்பித்தாள்.

ஒன்பது மணியிருக்கும்!

பெட்டியில் தேடி ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தான்.

'நீ.. வா.. இப்ப வேடிக்கையைப் பாரு!' என்று அழைத்து வந்தான். மான்விழியும் புன்னகையுடன் அவனைத் தொடர்ந்து வந்தாள்.

∴ ∴ ∴

'அண்ணி! இந்த நோட்டுப் புத்தகத்தைப் பாருங்களேன்!' என்று நீட்டினான் பரணீதரன்.

தமிழ்ச்செல்வி வாங்கிப் பார்த்தாள்.

ஓவியங்கள் பல வரையப்பட்டிருந்தன. முதல் ஓவியம் பார்த்தாள். ஒரு பெண்ணின் உருவம்.

ஏறத்தாழ அவளைப் போன்ற சாயலுடன் வரையப் பட்டிருந்தது.

ஏழெட்டுப் படங்கள் அவளுடைய உருவமாக இருந்தது.

அதற்குப் பிறகு பரணீதரனின் சாயலில் சில படங்கள்.

அதற்குப் பிறகு குழந்தைகள் இருவரின் படங்களும் கூட இருந்தது. கடைசியாக சில படங்களில் மான்விழியின் சாயலில் ஒரு பெண். அம்மாவின் சாயலில் ஒரு பெண் என்று குடும்பமே நிற்கிற படமாக இருந்தது.

தமிழ்ச்செல்வி புரியாமல் பார்த்தாள்!

'அண்ணி, அண்ணன் சுய நினைவில்லாதப்ப வரைஞ்ச படங்கள்... இது! முதல் முதல்ல உங்க படம்தான் வரைஞ்சிருக்காரு.. ஆனா, அப்படியும்.. முழுசும் நினைவுக்கு வர்லே! அப்புறமா



மெதுமெதுவா உங்க பேரையும் என் பேரையும் கிறுக்கலா.. எழுதிக்கிட்டிருப்பாராம்..' என்றான்.

தமிழ்ச்செல்வி ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அண்ணி! உள்ளுக்குள்ளே நினைவுகள்... மனசு ஆழத்திலே.. முட்டி மோதிக்கிட்டு வரும்போது.. முதல்ல, உங்க நினைவுதான் வந்திருக்கு.. அண்ணி இது புரியலையா.. உங்களுக்கு!' என்றான் நெகிழ்ந்து போன குரலில்.

தமிழ்ச்செல்விக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது.

'அண்ணி, ஷாஜகான்... மும்தாஜ்க்கு தாஜ்மஹால் கட்டினதை விட இது பெரிய விஷயங்கண்ணி... சுயநினைவில்லாத நேரத்திலே வரையற படங்கள்ல உங்க உருவம்தான் வந்திருக்குன்னா.. பாத்துக்குங்களேன்..' என்றான்.

தமிழ்ச்செல்வி கண்களில் கண்ணீர் தளும்ப ஆமோதித்தாள்.

'ரெண்டு வருஷம் பிரிஞ்சு நீங்க பட்ட வேதனையை அவரும் பட்டிருக்காரு. ஆனா, வெளியிடத் தெரியலே அண்ணி. நீங்க ரொம்ப லக்கி அண்ணி' என்றான்.

எல்லாரும் ஆழ்ந்த மௌனத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'உயிருக்குள்ளே நிறைஞ்சு.. உணர்வுக்குள்ளே.. கரைஞ்சுன்னெல்லாம் டயலாக் பேசறாங்களே! அதுமாதிரியே.. நீங்க அவரு மனசுக்குள்ளே இருந்திருக்கீங்க... இதைவிட... என்னங்கண்ணி வேணும்.. உங்களுக்கு...' என்றான்.

'ஒன்னும் வேண்டாம்ப்பா... அவரு திரும்பி வந்ததே எனக்குப் பெரிய விஷயம். இப்படி அவரோட மனசுக்குள்ளே இடம் கிடைச்சிருக்கிறது அதைவிடப் பெரிய விஷயம்.. ரெண்டு வருஷம் பட்ட மனசு வேதனைக்கு.. இந்த நிமிஷம்.. மருந்து போட்டுட்டப்பா.. நீ' என்று தேம்பியழுதாள்.

'தமிழு!' என்று சோமநாதன் பதறியபோது...

'விடுங்க.. இது சந்தோஷக் கண்ணீர் அழுதுக்கட்டும்..' என்றான் பரணீதரன். சோமநாதன் மனைவியைத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

'மானு! நமக்கு இங்கே இனி வேலை இல்லை! வா!' என்று குறும்பாகச் சிரித்தபடி அழைத்துக் கொண்டு போனான்.

'தமிழு! ஏய்.. இப்படி அழுறியே! போதும்.. சீட்டு நடத்தறேன் பேர்வழின்னு உன்னை நா எவ்வளவு கஷ்டப்படுத்தியிருக்கேன். உன்னை ஒருத்தன் பேசிட்டானேன்னு.. எனக்குத் தாங்கலை... அந்த அதிர்ச்சியெல்லாமும் சேர்ந்து மனசே பேதலிச்சுப் போச்சு..! ஆனா, உள்ளுக்குள்ளே உன் நினைப்பு இருந்துக்கிட்டேயிருந்திருக்கு. சுய நினைவு வர்றதுக்கு முன்னே ஆனந்த மகராஜ்கிட்டே இந்த நோட்டையெல்லாம் காட்டினேன். இப்பதான்.. உன் மனசுல உள்ளதெல்லாம் வெளியே வர ஆரம்பிச்சிருக்கு கொஞ்ச காலம் எதைப் பத்தியும், நினைக்காம அமைதியா இரு.. அப்படின்னார்.'

தமிழ்ச்செல்வி ஆழ்ந்து கேட்கலானாள்.

'அப்புறம்.. ஒரு தடவை.. நான் சந்நியாசம் வாங்கிக்கட்டா.. என்று கேட்டேன். உடனே குரு மகராஜ் 'வேண்டாம்.. சோமு! நீ இன்னமும் குடும்ப பந்தத்திலேயிருந்து விடுபடலே..' அப்படின்னார்' என்றான்.

'அத்தான்.. ரெண்டு மாசத்துக்கு முன்னாலே ஒரு நாள்.. என்னவோ உங்க நினைப்பாவே இருந்ததோட.. ரொம்ப சங்கடமா இருந்தது. அவரு எங்கயாவது உயிரோட இருந்தா.. அவருக்கு எந்தத் தொல்லையும் இல்லாம காப்பாத்துன்னு வேண்டிக் கிட்டிருந்தேன்' என்றாள்.

'டேட்.. சொல்லு!'



'எக்ஸாக்ட்டா.. டேட்.. ஞாபகமில்லே.. ஆனா.. அந்த சமயம்' சமயத்துலதான் ஒரிசாவில பெரிய கொந்தளிப்பு ஏற்பட்ட சமயம்' என்றாள்.

'ஓ...! தமிழு.. அன்னைக்குத்தான் எனக்கு சுய நினைவு வந்துச்சுன்னு நினைக்கிறேன். முந்தியெல்லாம் தம்பி.. அடிக்கடி.. டெலிபதி.. மனசுகளுக்கிடையே தொடர்புன்னு சொல்லிக் கிட்டிருப்பான். ஒருவேளை அது உண்மையா இருக்குமோ.. என்னவோ?' என்றான்.

'அத்தான்.. பரணி சொன்னது சரிதான். நான் பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும். இருக்கீங்களோ.. இல்லையோன்னு எல்லாரும்.. பேசிக்குவாங்க.. எனக்கு மனதில் நீங்க எங்கேயோ இருக்கீங்கன்னே ஒரு எண்ணம் தீர்மானமா.. நம்பினேன்' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

தமிழ்ச்செல்வி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'இனிமே.. கொஞ்ச நாளைக்கு எங்கயும் போகக் கூடாது. என் கூடவே இருக்கணும்' என்றாள்.

'சரி..!' என்றான் சிம்பிளாக. பிறகு தொடர்ந்து 'ஆனா.. முன்ன மாதிரி... நான் இப்ப இல்லே தமிழு.. ஒரு நிதானம் வந்திருக்கு... எல்லாத்திலயுமே..' என்று புன்னகைத்தான்.

அவளும் புன்னகைத்தாள். 'எனக்கும் வேற மாதிரி எதிர்பார்ப்பெல்லாம்.. இல்லை அத்தான்.. நீங்க கூட இருந்தா போதும்.'

அவன் கலகலவென்று சிரித்தான்.

'நான் அப்படிச் சொல்லலே.. எதிர்பார்ப்புக்கள்.. இருக்கு இல்லாமயா.. அம்பினியோட படமா வரைஞ்சு தள்ளியிருப்பேன்?

'தமிழு!' என்று சோமநாதன் பதறியபோது...

'விடுங்க.. இது சந்தோஷக் கண்ணீர் அழுதுக்கட்டும்..' என்றான் பரணீதரன். சோமநாதன் மனைவியைத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

'மானு! நமக்கு இங்கே இனி வேலை இல்லை! வா!' என்று குறும்பாகச் சிரித்தபடி அழைத்துக் கொண்டு போனான்.

'தமிழு! ஏய்.. இப்படி அழுறியே! போதும்.. சீட்டு நடத்தறேன் பேர்வழின்னு உன்னை நா எவ்வளவு கஷ்டப்படுத்தியிருக்கேன். உன்னை ஒருத்தன் பேசிட்டானேன்னு.. எனக்குத் தாங்கலை... அந்த அதிர்ச்சியெல்லாமும் சேர்ந்து மனசே பேதலிச்சுப் போச்சு..! ஆனா, உள்ளுக்குள்ளே உன் நினைப்பு இருந்துக்கிட்டேயிருந்திருக்கு. சுய நினைவு வர்றதுக்கு முன்னே ஆனந்த மகராஜ்கிட்டே இந்த நோட்டையெல்லாம் காட்டினேன். இப்பதான்.. உன் மனசுல உள்ளதெல்லாம் வெளியே வர ஆரம்பிச்சிருக்கு கொஞ்ச காலம் எதைப் பத்தியும், நினைக்காம அமைதியா இரு.. அப்படின்னார்.'

தமிழ்ச்செல்வி ஆழ்ந்து கேட்கலானாள்.

'அப்புறம்.. ஒரு தடவை.. நான் சந்நியாசம் வாங்கிக்கட்டா.. என்று கேட்டேன். உடனே குரு மகராஜ் 'வேண்டாம்.. சோமு! நீ இன்னமும் குடும்ப பந்தத்திலேயிருந்து விடுபடலே..' அப்படின்னார்' என்றான்.

'அத்தான்.. ரெண்டு மாசத்துக்கு முன்னாலே ஒரு நாள்.. என்னவோ உங்க நினைப்பாவே இருந்ததோட.. ரொம்ப சங்கடமா இருந்தது. அவரு எங்கயாவது உயிரோட இருந்தா.. அவருக்கு எந்தத் தொல்லையும் இல்லாம காப்பாத்துன்னு வேண்டிக் கிட்டிருந்தேன்' என்றாள்.

'டேட்.. சொல்லு!'



'எக்ஸாக்ட்டா.. டேட்.. ஞாபகமில்லே.. ஆனா.. அந்த சமயத்துலதான் ஒரிசாவில பெரிய கொந்தளிப்பு ஏற்பட்ட சமயம்' என்றாள்.

'ஓ...! தமிழு.. அன்னைக்குத்தான் எனக்கு சுய நினைவ வந்துச்சன்னு நினைக்கிறேன். முந்தியெல்லாம் தம்பி.. அடிக்கடி டெலிபதி.. மனசுகளுக்கிடையே தொடர்புன்னு சொல்லிக் கிட்டிருப்பான். ஒருவேளை அது உண்மையா இருக்குமோ. என்னவோ?' என்றான்.

'அத்தான்.. பரணி சொன்னது சரிதான். நான் பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும். இருக்கீங்களோ.. இல்லையோன்னு எல்லாரும்.. பேசிக்குவாங்க.. எனக்கு மனதில் நீங்க எங்கேயே இருக்கீங்கன்னே ஒரு எண்ணம் தீர்மானமா.. நம்பினேன் என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

தமிழ்ச்செல்வி அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'இனிமே.. கொஞ்ச நாளைக்கு எங்கயும் போகக் கூடாது. எ கூடவே இருக்கணும்' என்றாள்.

'சரி..!' என்றான் சிம்பிளாக. பிறகு தொடர்ந்து 'ஆனா.. முன் மாதிரி... நான் இப்ப இல்லே தமிழு.. ஒரு நிதானம் வந்திருக்கு எல்லாத்திலயுமே..' என்று புன்னகைத்தான்.

அவளும் புன்னகைத்தாள். 'எனக்கும் வேற மா எதிர்பார்ப்பெல்லாம்.. இல்லை அத்தான்.. நீங்க கூட இருந் போதும்.'

அவன் கலகலவென்று சிரித்தான்.

'நான் அப்படிச் சொல்லலே.. எதிர்பார்ப்புக்கள்.. இரு இல்லாமயா.. அம்மிணியோட படமா வரைஞ்சு தள்ளியிருப்பே

ஆனா எல்லாத்துலயும் ஒரு நிதானம் வந்துடுச்சு.. பணத்தாசை பெண்ணாசை எல்லாத்திலயுமே.. நிதானமான ஒரு அணுகுமுறை அப்படின்னு சொன்னேன்' என்றான்.

அவள் முகம் மலர்ந்தது.

'பரணி சொன்னது நிஜம்தான்.. சுய நினைவு இல்லாதப்பக் கூட என் படமா வரைஞ்சிருக்கீங்க.. இதுக்கு மேலே என்ன வேணும் எனக்கு?' என்றாள் கணவனை மார்பில் சாய்த்துக் கொண்டாள்.

'இந்த நேரத்துல எனக்கு ஒரு வரம் தரணும்..'

'ம்.. கேளு!'

'நான் ஒரு சுமங்கலி பூஜை நடத்தணும்.'

'எப்ப?'

'பவித்ராவுக்கும், மணிமாறனுக்கும் கல்யாணம் நடந்து முடிஞ்சவுடனே' என்றாள்.

அவனும் ஒப்புக் கொண்டான்.

∴ ∴ ∴




'அக்கா, பாத்தீங்களா, என்னோட நிச்சயத்துக்கு அலங்காரம் பண்ணி விட்ட ராசி.. இப்ப நீங்க சந்தோஷமா இருக்கீங்க.. அப்பவெல்லாம் நான் முன்னால வரக் கூடாதும்மா.. யாரும் எதுவும் சொல்லுவாங்கன்னு.. எவ்வளவு வருத்தப் பட்டீங்க.. இப்பப் பாருங்க.. எல்லாம் சரியாப் போச்சு' என்றாள்.

'அதான்.. பாரு! எந்தவிதத் தயக்கமும் இல்லாம.. நடமாடறேன்.. பாரு' என்றாள் தமிழ்ச்செல்வி சிரித்தமுகத்துடன்.



மான்விழி அதே நேரம் வேகமாக வந்தாள். 'அக்கா.. சீக்கிரம் முடிக்கச் சொல்றாங்க.. முகூர்த்த நேரம் நெருங்குதாம்.. மாப்பிள்ளை கோவில்ல இருந்து கிளம்பியாச்சாம்..'

'ஆச்சடி.. மானு!' என்று பரபரப்பானார்கள்.

மாலையை நாத்தனார் முறைக்காரர்தான் போட வேண்டும் என்று யாரோ சொல்ல மணிமாறனின் அம்மா தமிழ்ச்செல்வியிடம் மாலையைக் கொடுத்து, 'நீயே போடு! உன்னை மாதிரி சாவித்திரி மாதிரி புருஷனை எல்லாக் கஷ்டத்திலிருந்தும் மீட்டுட்டு வர்ற மாதிரி மாங்கல்ய பலம் அவளுக்கு அமையட்டும்' என்றார்.

தமிழ்ச்செல்வி ஒரு நிமிடம் திகைக்க, 'அப்ப.. இனிமே எனக்கு நாத்தனாரா.. நீங்க? சரிங்கண்ணி மாலையைப் போடுங்க.. மாறன் காத்துக்கிட்டிருப்பாரு' என்றாள் பவித்ரா. எல்லோரும் சிரித்தார்கள்.

'ஏய்.. இன்னைக்காவது கொஞ்சம் நாணம், மடம் அச்சமுனு நடந்துக்க' என்றாள் சீதா.

'ம்.. இதையே நான் சொன்னதாப் போயி மாறன்கிட்டே சொல்லுங்க' என்றாள் பவித்ரா.

மறுபடியும் சிரிப்பு!

'மானு நீயும், அண்ணியும் மணவறைக்குப் பக்கத்திலேயே இருங்க..' என்று ஆணையிட்டிருந்தான் மணிமாறன்.

தமிழ்ச்செல்வி முன்னாலே நின்று எல்லாச் சடங்குகளையும் செய்வதை சோமநாதனும் பரணீதரனும் ஒரு நிறைவோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தாலி கட்டுகிற நேரத்தில் பரணீதரன் எங்கிருந்தோ வந்து மான்விழியை இடித்துக் கொண்டு நின்றான்.

மான்விழி திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'பாவம், மாறன் மாட்டிக்கப் போறான் பாரு!' என்று அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக முணுமுணுக்க,

'மாட்டிக்கிட்டவரு எதுக்கு இப்படி இடிச்சுக்கிட்டு நிக்கறீங்க' என்று வாரினாள் அவள்.

'சரி, சரி, அட்சதையை அங்க போடு' என்றான்.

மனமார வாழ்த்தினார்கள்.

'உங்க கல்யாணத்தப்ப நீங்க என்ன மாதிரி டிரஸ் உடுத்தியிருந்தீங்களோ, அதே மாதிரி இன்னைக்கும் உடுத்திக்கணும்!' என்று வேண்டுதல் வைத்திருந்தான் சோமநாதன்.

அதேபோல மான்விழியும், பரணீதரனும் திருமணத்தன்று உடுத்தியிருந்ததையே உடுத்தினார்கள்.

திருமணம் முடிந்து கூட்டம் ஓய்வதற்குப் பத்து மணியாகி …ருந்தது. அப்போதும் உறவினர் கூட்டம் நிறைய இருந்தது.

…மணிமாறனும், பவித்ராவும் சற்று ஓய்வாக சோமநாதனிடம் …து அமர்ந்தார்கள். அப்போது நண்பர்களிடம் சொல்லி …ணீதரனையும் மான்விழியையும் அழைத்தான் மணிமாறன். … சோமநாதனிடம்,

'…ன்னா! நீங்க பரணியும் மானு சிஸ்டரும் கல்யாணக் …த்துல இருந்ததைப் பார்த்திருக்க மாட்டீங்க இல்லே! …னக்குப் பாருங்க!' என்று அவர்களை மணவறையிலே … மாலைகள் அணிவித்துப் பார்க்கச் செய்தான்.

…மநாதனிடமும், தமிழ்ச்செல்வியிடமும் இரண்டு …ரும் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள்.

…னை நண்பன் பெருமைப்படுத்துகிற விதம் பார்த்து … போனான் பரணீதரன்.

* * *



தனியறையில் பவித்ரா சற்று ஓய்வெடுத்துக் கொண்டாள்.

தமிழ்ச்செல்வியும் மான்விழியும் அவள் கனத்த பட்டுப் புடவையிலிருந்து மாறிக் கொள்ள உதவி செய்தார்கள். அப்போது பவித்ராவிடம் கேட்டாள்.

'ஏன் பவி..! எதுக்கு இப்படி மணிமாறன், என்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு முன்னால நிறுத்தறப்புல..' என்றாள் தயக்கத்துடன்.

'நான்தான் சொன்னேன்..!' என்றாள் பவித்ரா.

'ஓ..!' என்றாள் தமிழ்ச்செல்வி ஆச்சரியமாக.

'ஆமாங்கண்ணி! நிச்சயத்தப்ப.. எங்க உறவுக்காரங்கள்லயே சில பேரு என்ன இது... புருஷன் இருக்கானா.. இல்லையான்னே தெரியலே இந்த அம்மாளை உள்ளே விட்டுட்டு உழப்பறாங்கன்னு பேசினாங்க.. அவங்களுக்கெல்லாம் வாய் புளிச்சுதோ, மாங்கா புளிச்சுதோன்னு பேசறது எவ்வளவு தப்புன்னு புரிய வைக்கத்தான்' என்றாள்.

'இப்ப என்ன பேசறாங்க!' என்றாள் மான்விழி.

'இப்ப.. அப்படியே பிளேட்டைத் திருப்பிட்டாங்க. ஐயோ! இந்தப் பொண்ணு மாதிரி மாங்கல்ய பலம் கிடைக்கோணும்னு வேண்டிக்கறாங்க' என்று சிரித்தாள் பவித்ரா.

மான்விழியும், பவித்ராவும் சேர்ந்து சிரித்தார்கள்.

'பார்றா.. இந்தக் கண் கொள்ளாக் காட்சியை, தேவதைகளெல்லாம் ஒண்ணா சிரிக்கிறதை' என்று கமெண்ட் அடித்தபடி வந்தான் மணிமாறன்.

'ஏன்.. அவங்க உங்ககிட்டே மட்டும்தான் சிரிக்கணுமாக்கும்!' என்றாள் மான்விழி.

'நான் அப்படியா சொன்னேன்? எங்ககிட்டேயும் கொஞ்சம் அப்பப்ப சிரிச்சா சரின்னேன்'.

'சரி.. அதிருக்கட்டும்.. எதுக்கு சிரிச்சீங்க.. அந்தச் சொல்லு' என்றான் பரணீதரன்.

சொன்னார்கள்.

பரணீதரன் சிந்தனையுடன் சொன்னான். 'ஆமா இதைப் பத்தி நானும் யோசிச்சிருக்கேன். நம்ம நாட்டுப் பெண்கள் வாழ்க்கையைச் சந்திக்கிறதுல.. குடும்பம் நடத்துறதுலேயெல்லாம் ரொம்பப் பக்குவமானவங்களா இருக்காங்க.. ஆனா, அடுத்தவங்க பிரச்சினைன்னு வரும்போது இரக்கமில்லாம ஊர் வம்பு பசறாங்களே? அது ஏன்? அது மட்டும் இல்லாம இருந்தா.. வ்வளவு நல்லா இருக்கும்!' என்றான்.

'எல்லாரும் அந்தக் கருத்தைப் பகிர்ந்து கொண்டார்கள்.

பரணீதரன் தொடர்ந்தான்.

எனக்குத் தெரிந்த ஒரு கவிஞர் எழுதினாங்க

*பெண்ணே!*

*அடுப்பிலே குழம்பு*

*மடியிலே குழந்தை*

*பகலில் ஊர் வம்பு*

*..த்து வெளிவருவது எப்போது?'ன்னு*

..ரா சொன்னான்.

..பப் படிச்சவங்க.. நல்ல தொழில்ல இருக்கறவங்க கூட .. வம்புக்கு விலக்கில்லே, தெரியுமா?' என்று.

..ரி.. நீங்களாவது பேசாம இருந்தீங்கன்னா சரி..' என்று .. சிரித்தான்.

∴ ∴ ∴



பவித்ராவும், மான்விழியும் புதிதாகக் கல்யாணம் ஆனவர்களுக்கேயுரிய மெருகுடன் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமையல்காரரை வைத்து விருந்தே தயாரித்தாள் தமிழ்ச்செல்வி.

நூறு நூற்றைம்பது பெண்களுக்கு மேல் வந்திருந்தார்கள்.

அத்தனை பேருக்கும் மஞ்சள் குங்குமம் கொடுத்து விருந்து வைத்து மரியாதை செய்தாள் தமிழ்ச்செல்வி.

மணிமாறனின் பெற்றோர்கள், பவித்ராவின் பெற்றோர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.

சிறப்பாக நடந்தது.

எல்லாரும் சென்ற பின் மணிமாறனும், பவித்ராவும் மட்டும் இருந்தார்கள்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது பவித்ரா திடீரென்று,

'ஏய்.. மானு! இப்பல்லாம் டப்பா.. சாக்லேட் செய்யறதில்லையா? என்ன?' என்றாள்.

'அதையெல்லாம் போட்டுக் குடுத்தீங்களாக்கும்..' என்றாள் மான்விழி முணுமுணுப்பாக.

'அதை மட்டுமா.. சொன்னான்? அப்படிப் போடுங்கறதுக்கு நீ அப்பப்ப தர்ற இன்டர்பிரட்டேஷன்களையும் ஐயா வந்து ஒப்பிச்சுருவாரு.' என்றான் மணிமாறன்.

வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

'பவி! பால்ல குறு மிளகுப் பொடி போட்டுக் குடுக்கறது.. அ.. விட்டுட்டியே!' என்றான் பரணீதரன்.

மான்விழி முறைத்தாள்.

'தேவா! எதுக்கு முறைக்கறே? நான் பெருமையாத்தான் சொல்லிக்கிட்டிருக்கேன்' என்றான் பரணீதரன்.

'மாது' நிஜம்மாவே எங்களுக்கும் பால்ல ஒரு மிளகுப் பொடி போட்டுக் கலக்கித் தாயேன்! பேசிப் பேசித் தொண்டை கட்டிப் போனாப் போல இருக்குது.' என்றான் மணிமாறன்.

'இதோ..! இப்பக் கலக்கித் தர்றேன்' என்று எழுந்து போனாள் மான்விழி.

தமிழ்ச்செல்வியும் உதவிக்குப் போனாள்.

டம்ளர்களில் ஊற்றித் தட்டில் வைத்துக் கொடுத்துவிட்டு நிமிர்ந்த மான்விழி வாயிற்புறம் பார்த்துத் திகைத்து நின்றாள்.

∴ ∴ ∴

'எனக்கொன்னும் வருத்தமில்லே! வாங்க.. சாமி.. கும்பிடுங்க.. சாப்பிடுங்க!' என்று உபசரித்தாள் தமிழ்ச்செல்வி.

பரமசிவத்தின் மனைவியும், தங்கையும்தான் அந்த எதிர்பாராத விருந்தாளிகள்.

அவர்கள் வாயிலருகில் நிற்பதைப் பார்த்தவுடன் ஒரு நிமிடம் எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

முதலில் சுதாரித்துக் கொண்டவள் தமிழ்ச்செல்விதான்.

'வாங்க.. வாங்க..! ஏன் அங்கேயே நிக்கறீங்க..!' என்று வரவேற்றாள்.

'இல்லே! நீங்க சுமங்கலி பூஜை பண்றீங்கன்னு கேள்விப் பட்டோம்.. அதான் தாம்பூலம் வாங்கிக்கலாம்னு' என்றாள் பரமசிவத்தின் மனைவி சங்கரி.



'தாராளமா.. வாங்க! வாங்க! சாமி கும்பிடுங்கோ' என்று அழைத்துப் போனாள்.

மஞ்சளால் அம்மன் உருவம் செய்து வெள்ளியில் முகம் பதித்து.. அழகாக இருந்தது அமைப்பு!

வணங்கினார்கள்!

'தாம்பூலம் குடுங்க!' என்று வாங்கிக் கொண்டார்கள்.

'சாப்பிட்டுட்டுத்தான் போகணும்' என்று தமிழ்ச்செல்வி வற்புறுத்தவும் சாப்பிட்டார்கள்.

புறப்படுவதற்கு முன்பு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'நல்லவங்களைச் சங்கடப்படுத்தினா ஆண்டவன் கேக்காம விடமாட்டாங்கறது சரியாப் போச்சு' என்று தேம்பினாள் சங்கரி.

தமிழ்ச்செல்வியும், மான்விழியும் அமைதியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

'குடுக்கல், வாங்கல்லே அண்ணனும் தம்பியும் மனுஷத் தன்மையில்லாம நடந்துக்கறதைப் பாத்தோ என்னவோ எங்க சீதாவைப் பொண்ணெடுக்கவே யாரும் வரலை.'

'பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டு, சீதா.. லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டா..' என்றாள் சங்கரி.

'ஆனா.. அதுக்கப்புறம் இருந்தா சாக்குன்னு சீதாவை வீட்ல சேக்கலை. அவங்க வீட்டுக்காரருக்கும் ரொம்ப இடைஞ்சல் செஞ்சாங்க..'

'ஓ! சதாசிவத்துக்கும் கல்யாணம் ஆகலையா?' என்றாள் தமிழ்ச் செல்வி.

மான்விழி முறைத்தாள்.

'ஹேய்! எதுக்கு முறைக்கறே? நான் பெருமையாத்தான் சொல்லிக்கிட்டிருக்கேன்' என்றான் பரணீதரன்.

'மானு! நிஜம்மாவே எங்களுக்கும் பால்ல குறு மிளகுப் பொடி போட்டுக் கலக்கித் தாயேன்! பேசிப் பேசித் தொண்டை கட்டிப் போனாப் போல் இருக்குது.' என்றான் மணிமாறன்.

'இதோ..! இப்பக் கலக்கித் தர்றேன்' என்று எழுந்து போனாள் மான்விழி.

தமிழ்ச்செல்வியும் உதவிக்குப் போனாள்.

டம்ளர்களில் ஊற்றித் தட்டில் வைத்துக் கொடுத்துவிட்டு நிமிர்ந்த மான்விழி வாயிற்புறம் பார்த்துத் திகைத்து நின்றாள்.

∴ ∴ ∴

'எனக்கொன்னும் வருத்தமில்லே! வாங்க.. சாமி.. கும்பிடுங்க.. சாப்பிடுங்க!' என்று உபசரித்தாள் தமிழ்ச்செல்வி.

பரமசிவத்தின் மனைவியும், தங்கையும்தான் அந்த எதிர்பாராத விருந்தாளிகள்.

அவர்கள் வாயிலருகில் நிற்பதைப் பார்த்தவுடன் ஒரு நிமிடம் எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

முதலில் சுதாரித்துக் கொண்டவள் தமிழ்ச்செல்விதான்.

'வாங்க.. வாங்க..! ஏன் அங்கேயே நிக்கறீங்க..!' என்று வரவேற்றாள்.

'இல்லே! நீங்க சுமங்கலி பூஜை பண்றீங்கன்னு கேள்விப் பட்டோம்.. அதான் தாம்பூலம் வாங்கிக்கலாம்னு' என்றாள் பரமசிவத்தின் மனைவி சங்கரி.



'தாராளமா.. வாங்க! வாங்க! சாமி கும்பிடுங்கோ' என்று அழைத்துப் போனாள்.

மஞ்சளால் அம்மன் உருவம் செய்து வெள்ளியில் முகம் பதித்து.. அழகாக இருந்தது அமைப்பு!

வணங்கினார்கள்!

'தாம்பூலம் குடுங்க!' என்று வாங்கிக் கொண்டார்கள்.

'சாப்பிட்டுட்டுத்தான் போகணும்' என்று தமிழ்ச்செல்வி வற்புறுத்தவும் சாப்பிட்டார்கள்.

புறப்படுவதற்கு முன்பு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'நல்லவங்களைச் சங்கடப்படுத்தினா ஆண்டவன் கேக்காம விடமாட்டாங்கறது சரியாப் போச்சு' என்று தேம்பினாள் சங்கரி.

தமிழ்ச்செல்வியும், மான்விழியும் அமைதியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

'குடுக்கல், வாங்கல்லே அண்ணனும் தம்பியும் மனுஷத் தன்மையில்லாம நடந்துக்கறதைப் பாத்தோ என்னவோ எங்க சீதாவைப் பொண்ணெடுக்கவே யாரும் வரலை.'

'பொறுத்துப் பொறுத்துப் பார்த்துட்டு, சீதா.. லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டா..' என்றாள் சங்கரி.

'ஆனா.. அதுக்கப்புறம் இதுதான் சாக்குன்னு சீதாவை வீட்ல சேக்கலை. அவங்க வீட்டுக்காரருக்கும் ரொம்ப இடைஞ்சல் செஞ்சாங்க..'

'ஓ! சதாசிவத்துக்கும் கல்யாணம் ஆகலையா?' என்றாள் தமிழ்ச் செல்வி.

இவனுங்க ஆட்டத்துக்கு எவன் பொண்ணு குடுப்பான்?. வந்து பாருங்க. குடி.. பொம்பளைங்க... சகவாசம்னு... ரெண்டு பேரு முகமும் இருண்டு போய்க் கிடக்கு...'

சீதாவும், சங்கரியும் ஒருவரையொருவர் வருத்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள். சட்டென்று சங்கரி ஒரு காரியம் செய்தாள்.

'மானு! தமிழு! ரெண்டு பேரும் எங்க குடும்பத்தை மன்னிச்சோம்னு சொல்லுங்க...' என்று காலில் விழ முற்பட்டாள்.

'ஐயய்யோ... என்ன இது! 'என்று தமிழ்செல்வி தடுக்க தடுக்க காலில் விழுந்தாள்.

குலுங்கி அழுதாள்.




'உங்களோட மனசை குளிர்ந்தாத்தான் என்னோட வாழ்க்கை நல்லாருக்கும்' என்று குலுங்கி அழுதாள் சங்கரி.

தமிழ்ச்செல்வி புன்னகைத்தாள் 'சங்கரியக்கா.. நாங்க அதோட மறந்துட்டோம். அப்புறம்.. எங்க கவலையே எங்களுக்குப் பெருசா இருந்துச்சு... வேற எதைப் பத்தியும் வருத்தப்படவோ, வேற யாரையும் பத்தியும் சங்கடப்படவோ கூட எங்களுக்கு நேரம் இருக்கலே' என்றாள்.

போன மாசம்... ஒரு ஹார்ட் அட்டாக் வந்துருச்சு.. இப்பல்லாம்.. வட்டியும் சரியா வசூல் ஆகறதில்லை.. எத்தனையோ நல்லவங்க வயித்தெரிச்சலை கொட்டிக்கிட்ட பாவம் எல்லாம் எங்க போகும்? அத்தனையும் இப்ப சுத்தி வந்து தாக்குது. சின்னவனும் பொறுப்பில்லாம சுத்திப் பழகிட்டான். அதனாலே வளைஞ்சு



வேலை செய்ய மாட்டேங்கறான். அவனோட குடிப்பழக்கம் குணம் தெரிஞ்ச யாரும் அவனுக்குப் பொண்ணு தரத் தயாரில்லே' என்றாள் சங்கரி.

யாரும் எதுவும் பேசவில்லை. எல்லாரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டார்கள். 'சீதா வீட்டுக்காரர் நல்லவரு. ஆனா, அவரு வேலைக்குப் போற இடத்துல எல்லாம் இவங்க போய்த் தகராறு... செய்யறாங்க என்ன செய்யறதுனே தெரியலை...' என்றாள்.

'டாக்டர் என்ன சொல்றாங்க?' என்றான் சோமநாதன்.

'என்ன சொல்றாரு...? எல்லா மோசமான பழக்கங்களும் வச்சகிட்டா.. உடம்பு எப்படிம்மா ஒத்துழைக்கும்னு கேக்கறாரு!' என்றாள்.

மறுபடியும் கனத்த மௌனம்.

'போன ரெண்டு மூணு வருஷமா பணம் இருக்குன்னு ஏகமா ஆடிட்டாங்க..' என்றாள் வருத்தத்துடன்.

'போனது போகட்டும்மா.. இனியாவது இருக்கற சொத்தை வச்சு ஏதாவது நிரந்தரமா வருமானம் வர்ற மாதிரி வழி பண்ணிக்குங்கம்மா' என்றான் சோமநாதன்.

'அப்படித்தான் செய்யணுங்கண்ணா.. என்ன இருந்தாலும் பண்பாடுள்ள குடும்பம்னு எங்களை உட்கார வச்சுப் பேசி திருப்பிச்சிட்டீங்க... அக்கா.. எங்களுக்காக வேண்டிக்குங்க.. இப்பவும் தெரியாமத்தான் வந்திருக்கோம்' என்று புறப்பட்டாள் சங்கரி.

'சரிங்கக்கா... கண்டிப்பா.. நான் உங்களுக்காக கடவுள் கிட்டே வேண்டிக்கறேன்' என்று வழியனுப்பி வைத்தாள் தமிழ்ச்செல்வி.

'ஹேய் என்ன இவ்வளவு நேரம்?' என்று கோபித்துக் கொண்டான் பரணீதரன்.

'கீழே எல்லாம் ஒழுங்கு படுத்திட்டு வர வேண்டாமா?' என்றாள் மான்விழி.

'முடிஞ்சதா? சரி.. உட்காரு... இன்னைக்கு நிறைய விஷயங்கள் இங்கயும் ஒழுங்கு படுத்தனும்...' என்றான்.

கட்டிலிலிருந்த மெத்தையைக் கொண்டு வந்து மொட்டை மாடியில் போட்டுக் கொண்டு கைகளைத் தலைக்கு அணையாகக் கொடுத்துக் கொண்டு வானம் பார்த்துப் படுத்திருந்தான் பரணீ தரன்.

மனத்திலிருக்கிற பாரமெல்லாம் இறங்கினாற்போல் உணர்ந்தான்.

'மானு!' என்றான் கிறக்கமான குரலில்.

'ம்..!' என்றாள். அருகில் அமர்ந்தாள். காலைக் கட்டிக் கொண்டு அவன் முகம் பார்த்து அமர்ந்தாள்.

'இன்னைக்குத்தான் மணிமாறனுக்கும், பவிக்கும் முதலிரவு தெரியுமா?'

'ஓ..!'

'ஆமா... சொந்தக்காரங்க பட்டாளத்தையெல்லாம் ஓரங்கட்டி அனுப்பிச்சுட்டுத்தான்டா முதலிரவு. இதையெல்லலாம் சடங்கா வச்சு... ஏலம் போடணுமாக்கும்னு அன்னைக்கே சொல்லிட்டான். உனக்குத்தான் தெரியுமே அவங்களுக்கு நிறைய சொந்தக்காரங்க வட்டம். எல்லாம் ஒரு வழியா நேத்துத்தான் போனாங்க...' என்றான்.

மான்விழி அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

'எனக்கும் கூட.. நமக்கும் இன்னைக்குத்தான் முதலிரவு மாதிரி ஒரு எண்ணம்'

'.....!



'எப்பப் பாரு இந்த விக்கிப் பய எப்ப மேலே வருவானோன்னு ஒரு பயம். பொறுப்புக்கள்ளாம் மனசுக்குள்ள அழுத்திகிட்டிருக்கற மாதிரி.. ஒரு ஃபீலிங்... எல்லாத்தை விட அண்ணி இப்படி இருக்கறப்ப... நமக்கு மட்டும் என்ன சந்தோஷம்னு ஒரு சங்கடம்... அப்படி சந்தோஷமா இல்லேன்னு தெரிஞ்சாலும்.. அண்ணி சங்கடப்படுவாங்களேன்னு ஒரு வருத்தம்...எல்லாத்திலிருந்தும் இன்னைக்கு விடுதலையானாப் போல ஒரு உணர்வு'

'ஆமா.. விட்டு விடுதலையாகி நிற்பாய் சிட்டுக் குருவியைப் போலேன்னு பாரதியார் பாடின மாதிரி.. இல்லே!' 'ஆமாங்க... எனக்கும் அந்த மாதிரி ஒரு வருத்தம் உள்ளே இருந்தது. என்ன இருந்தாலும் அக்காவுக்கும் ரொம்ப வயசாயிடலே. அக்கா.. இப்படி ஏக்கத்துல இருக்கறப்ப.. நாம எப்படி... சந்தோஷமா இருக்கறதுன்னு.. ஒரு வருத்தம்...'

'ரொம்ப டெலிகேட்டான சிச்சுவேஷன்' என்றான் பரணீதரன்.

'ஆனா.. அக்கா அப்பப்ப ஜாடை மாடையா அட்வைஸ் பண்ணுவாப்ல. மானு! என்னைப் பத்தி யாரும் கவலைப்படாதீங்க... நான் அவரோட வாழ்ந்த வரைக்கும் ரொம்ப சந்தோஷமாத்தான் இருந்தேன். வாழ்க்கையோட எல்லா நல்லது சந்தோஷம் எல்லாத்தையும் பாத்துட்டேன்... இனிமே சந்தோஷம் அனுபவிக்க வேண்டியது நீங்கதான்னு...'

'நீ என்ன சொல்லுவே?'

'சரிக்கான்னு சொல்லுவேன்... வேறென்ன சொல்ல? அப்பவும் தயக்கம்தான். ஆனா, ஐயா அப்படி ஒரு விதமான பார்வையோட ஒரு விதமான சிரிப்போட பக்கத்துல வர்றப்போ எப்படி வேண்டாம்கறதாம்?' என்றாள்.

'ஹேய்...! இந்தக் கதையை இங்க விடாதே! என்று எழுந்து அமர்ந்தான். மெல்லத் தன் அருகில் இழுத்தான்.

'வித விதமான அலங்காரம் பண்ணிக்கிட்டு வந்து மாய வித்தை காட்னது நீயா.. நானா? என்னமோ தேவியாருக்கு மட்டும் எதுவும் பிடிக்காத மாதிரி...' என்று சண்டை பிடித்தான்.

'நான்.. ஒண்ணும் பிடிக்கலேன்னு சொல்லலியே' என்றாள் அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டு. பிறகு முகத்தை உயர்த்தாமலே பேசினாள்.

'எங்க.. இப்பத்த சினிமாவுல எல்லாம்.. கதாநாயகன்னா அவன் நாலு பேரு கூட ஃபைட் பண்ணனும்.. ரௌடித்தனம் பண்ணனும் அந்த மாதிரியெல்லாம் தானே காட்டறாங்க... ஆனா.. என்னைப் பொறுத்த வரைக்கும் என் பரணிதான் ஹீரோ...' என்றாள்.

'இதுதான் சாக்குன்னு பேரைச் சொல்றாடா!'

கதையை மாத்தாதீங்க. நீங்கதானே பேரைச் சொல்லிக் கூப்பிடுன்னு கெஞ்சலீங்க?

அவன் அவளை விழுங்கியது போல் பார்க்க அவள் தொடர்ந்தாள்.

'இருபத்தைஞ்சு வயசிலே.. திடீர்ன்னு குடும்பமே நிலை குலைஞ்சு போய் நின்னப்ப.. குடும்பத்தோட மானத்தைக் காப்பாத்தி.. பொறுப்புக்களை சுமக்கறதுன்னா... எவ்வளவு பெரிய விஷயம்? அதனாலேயே.. உங்க மேலே எனக்குக் காதல் பொங்கி வழிய ஆரம்பிச்சிருக்கன்னு சொல்லலாம்...'

'ம்..!' என்றான் கிறக்கக் குரலில்.

'அதனால.. உங்களை எவ்வளவு சந்தோஷமா.. வச்சுக்க முடியுமோ.. அவ்வளவு சந்தோஷமா வச்சுக்கணும்னு நினைப்பேன்.. பவிதான்... சொல்வாங்க.. நீங்க சொல்லீங்களாம்.. இந்த நாட்டுல சாதனைகள் செய்ய வேண்டிய வயசுல இளைஞர்கள் சினிமா ஹீரோக்கள் பின்னாலயும், அரசியல் தலைவர்கள் பின்னாலயும் போறாங்க..' ஆனா, தனிப்பட்ட



முறையில ஒழுக்கத்தோட தன்னோட கடமைகளைச் செய்ற ஒவ்வொருத்தனும் ஹீரோதான்னு...'

'ஆமா! அதிலென்ன சந்தேகம்! இப்பப்பாரு.. நா என் கடமையைச் செஞ்சேன்... எனக்காக உருகிப்போற ஒரு ஹீரோயின் எனக்குக் கிடைக்கலையா? வாழ்க்கையை அதன் சோகங்களை, பிரச்சினைகளை, வலியைச் சந்திக்கிற எவனுக்கும் கிடைக்க வேண்டியது கிடைக்காமப் போகாதுன்னு அடிக்கடி நினைச்சுக்குவேன்.. இப்பப் பாரு செத்துப் போயிட்டாருன்னு நினைச்ச அண்ணனையே கடவுள் எனக்குத் திருப்பிக் குடுக்கலையா?' என்றான்.

'ஆனா.. ஒரு கட்டத்துல நீங்க எனக்குக் கிடைப்பீங்களோ இல்லையோன்னு ஒரு பயம் இருந்தது...' என்றாள் மான்விழி.

பரணீதரன் அவளைக் கேள்விக் குறியாய்ப் பார்த்தான்.

'ஆமாங்க... பவித்ராகிட்டே நீங்க பழகினவிதம்...!' என்றாள்.

'ஓ..! மானு..' பவிகிட்ட மட்டுமல்ல.. எல்லாருகிட்டயும் ஒரு விஷயம் நான் தெளிவு பண்ணியிருந்தேன்.. அது என்னன்னா.. நான் எப்பவும் ஒரு தனியாளா... இருக்கணும்னு நினைக்கறாங்க.. நான் குடும்பத்திலே ஒருத்தனாவே என்னை நினைச்சதுனாலயோ என்னமோ.. பெரிசா.. எனக்கு எந்தப் பொண்ணு மேலும் நாட்டம் வர்லே..!'

'அதிலயும் பவியை மணிமாறனுக்கு ரொம்பப் பிடிச்சிருந்த துன்னு எனக்குத் தெரியும். பவிக்கும் ஒரு முடிவான எண்ணம் என்மேலே இல்லேங்கறதும் தெரியும்?' என்றான்.

'ஓஹோ..! ஒரு வேளை மாறன் அண்ணாவுக்கு பிரியம் இல்லேன்னு தெரிஞ்சிருந்தா ட்ரை பண்ணியிருந்திருப்பீங்க ளாக்கும்..' என்றாள். கோபமாக எழுந்து அறைக்குள் போய் விட்டாள்.

'பரணீதரன் புன்னகைத்துக் கொண்டான்.

'ஆரம்பிச்சுட்டாடா...!' என்று சிரித்துக் கொண்டு எழுந்து படுக்கையைச் சுருட்டி எடுத்தான்.

உடனேயே பின்னால் வருவான் என்று நினைத்த மான்விழி இன்னும் கோபமாக ஜன்னலருகில் போய் நின்றாள்.

பரணீதரன் படுக்கையைக் கொண்டு வந்து கட்டிலின் மேல் பரப்பி சுகாரியமாகப் படுக்கை விரிப்பைச் சுத்தம் செய்தான்.

சாவதானமாக மனைவியின் அருகில் போனான். அவளைத் தொட முயன்ற போது அவன் கையைத் தட்டிவிட்டாள். அவன் அதைக் கண்டு கொள்ளாமல் வேகமாக அருகில் இழுத்தான்.

'அசட்டுப் பொண்ணே! பவித்ராவுக்குப் புரிஞ்சது கூட உனக்குப் புரியலயே...!' என்றான்.

அவள் முறுக்கிக் கொண்டபடியே நின்றாள்.

'பரணி! உங்களுக்கு என் எந்தப் பொண்ணுகிட்டயும் சலனம் வர்லே தெரியுமா? மான்விழி உங்க மனசுல உட்கார்ந்துக்கிட்டிருக்கான்னு அவதான் சொன்னா!' என்றான்.

'ஆமா.. எல்லாத்தையும் யாராவது வந்து சொல்லணும்...'

'பின்னே! நான் எக்குத் தப்பா ஏதாவது சொல்லி... ஆஃப்டர் ஆல் உங்க வீட்ல இருக்கற பொண்ணுதானேன்னு என்னை சீப்பா நினைச்சுகிட்டிங்கன்னு கேட்டேன்னு வை...' என்று சிரித்தான்.

'அப்படியெல்லாம் கேட்பேனா? உங்க மனசுல ஓரத்திலே ஒரு இடம் நினைச்சாலும் போதும்னு ஏங்கிப் போய்க் கிடந்தேன்' என்றாள்.

'ரொம்ப நாள் கழிச்சு என் காது குளிர்ற மாதிரி ஒரு ஸ்டேட்மெண்ட் கேட்டிருக்கேன்.... தாங்ஸ்..' என்றான் சற்று நேரம் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.



முகங்களும், மனமும் மலர்ந்து கிடக்கையில்' மானு! எப்பப் பாரு எட்டிக்குப் போட்டியா சண்டைக்கு நிப்பியே! ரொம்பப் பிடிக்கும் தெரியுமா? இனிமேலும் அப்படியே இரு...' அண்ணனுக்கு ஒரு நாள் சொன்னயே' எசகு பிசகாய்' நுழைஞ்சு எக்குத் தப்பாய் ஏதாவது உளறுவீங்களோன்னு பயந்தேன்னு. அண்ணனுக்கே நான் முடிவு செஞ்சுட்டேன். இனிமே உன்கிட்டே எசகு பிசகாய்த் தான் நடந்துக்கறது... எக்குத் தப்பாய்த்தான் பேசறதுன்னு' என்று சிரித்தான்.

'ஓஹோ! யுத்த காண்டம் ஆரம்பிச்சிருச்சாக்கும்..!' என்று சிரித்தான்.

'நீதான்.. தமிழ் வாத்தியார் பொண்ணாச்சே! உங்க இலக்கியத்துல நிறையக் காதலைப் பத்தி சொல்லியிருக்காமே! எல்லாம் எனக்கும் சொல்லிக் குடு!'

'தப்புத் தப்பாய்ப் பேசாதீங்க.. நான் எப்படி சொல்லிக் குடுக்கறது. நீங்கதான் சொல்லிக் குடுக்கணும்.'

'சரி.. விடு.. எதுக்கு சண்டை? ரெண்டு பேருமாய் சேர்ந்து படிக்கலாம்..' என்றான்.

சற்று நேரம் படித்தார்கள். பிறகு சீரியஸான குரலில் சொன்னான்.

'மானு! இன்னும் ஒண்ணு ரெண்டு மாசத்துல நாம மேல தனிக்குடித்தனமா.. செட்டில் ஆகலாம்னு நினைக்கிறேன்' என்றான்.

'அத்தான்!' என்றாள் அதிர்ச்சியாக.

'ஒண்ணும் அதிர்ச்சியாகாதே. எல்லாருக்கும் பிரைவஸி இருக்கணும். அவங்கவங்க பொறுப்பை அவங்கவங்க சுமக்கணும். இப்ப என்ன அண்ணி சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டாங்க.. கடை வாடகை வருது.. போதும் அவங்களுக்கு அது போதும். நாமளும் இனி.. நம்ம குழந்தைகளுக்காகப் பிளான் பண்ணணும்.. இல்லே! அவள் முகம் சிவக்கத் தலையாட்டினாள்.

'ஆனா.. இன்னும் ரெண்டு வருஷத்துக்குக் குழந்தைங்க.. எல்லாம் இல்லே... ஃபாமிலி பிளானிங்தான். எனக்கும் வயசிருக்கு. உனக்கும் வயசிருக்கு. எல்லாப் பிரச்சினைகளையும் முடிச்சுட்டா.. அப்புறம் நிம்மதியாப் நம்ம வாரிசுகளை வளர்க்கலாம்..' என்றான்.

'அப்ப.. நானும் ஏதானும் வேலைக்குப் போறேன்?'

'ஆமா.. பின்னே நீ படிச்ச சிவில் என்ஜினியரிங் டிப்ளமாவுக்கு என்ன வேலை? இங்கே ஒரு ஆஃபீஸ் போட்ரலாம். நீ எனக்கு டிராயிங்ஸ் போடறது.. ஆஃபீஸ் நிர்வாகம் பாத்துக்கறதுன்னு ஹெல்ப் பண்ணு... அதுக்கெல்லாம் ஒரு சம்பளம் குடுத்துடுவேன்' என்றான்.

'சம்பளமெல்லாம் வேண்டாம்!'

'நோ.. நோ.. நோ... உனக்கு என்று ஒரு தொகை கையில் இருக்கணும். எல்லாத்துக்கும் என்கிட்டே கையேந்திகிட்டு நிக்கக் கூடாது... இன்ஃபாக்ட் என்னோட வருவாயையும்.. நான் உன்கிட்டே குடுத்துட்டு நான் கையேந்தி நிற்பேன்... அதுதான்.. சுகம்' என்றான்.

அவள் விலகினாள்' எல்லாத்துக்கும்.. எல்லாத்துக்கும்.. சம்பளம்.. குடுப்பீங்களா?' என்றாள் கோபமாக.

'நிச்சயமாக.. அந்த சக்தி எனக்கில்லே. அம்மாவுக்கு மூடு வந்தா.. ஒரு விதமாப் பாத்துகிட்டு நடமாடுவீங்களே! அதுக்கெல்லாம்.. எப்படி சம்பளம் குடுக்கறது? எவ்வளவு குடுத்தாலும்.. பத்தாது. அதை நான் சொல்ல வர்லே.. இன்ஃபாக்ட்.. இப்பல்லாம் பெண்கள் ஒரு குடும்பத்துக்காக என்னென்ன சர்வீஸ் செய்றாங்கன்னு ஒரு அவேர்னெஸ் வந்திருக்கு தெரியுமா! என் வாரிசுகளைச் சுமக்கப் போறே அதுக்கு நான் என்ன சம்பளம் குடுக்கறது. ஆனா.. பொண்ணுங்களுக்கு பொருளாதார சுதந்திரமும்.. இருக்கணுமில்லே.. அதனால.. தொழில்ல நீ பண்ற



ஹெல்புக்கெல்லாம்.. சர்வீஸ் சார்ஜ் உண்டு...' என்றான்.

'பரவீதரா! பயங்கரமான ஆள் நீ! எல்லாத்தைப் பத்தி யோசிச்சு வச்சிருக்கே..! என்றாள் மான்விழி அவனைப் போல சிறுக்கக் குரலில்

அவன் ரசித்துச் சிரித்தான்.

'அதுசரி.. விஷயத்துக்கு வா! என்றான்.

'என்ன விஷயம்?' என்றாள் மான்விழி.

'ஹேய்! நான்தான் சொன்னேனே.. இன்னைக்குத்தான்.. ந ஃபர்ஸ்ட் நைட் மாதிரி எனக்கு ஒரு ஃபீலிங்.. அதுக்கேத்த மா ஒரு ப்ரோகிராம்.. போடு! என்றான்.

அவள் முறைத்தாள்.

'ப்ரோகிராம்.. நான் போடணுமா?'

'சரி.. வேண்டாம்.. நான் போடறேன.. அப்புறம்.. நாளை முழுக்க என்னை ரொம்ப மோசமான ஆளய்யா நீன்னு தி கூடாது' என்று குறும்பாக குலுங்கிச் சிரித்தான்.

தன் வெட்கத்தை மறைத்துக் கொள்வதற்காகவோ என்ன தலையணையை எடுத்துக் கொண்டு அவனை அடிக்கிறாற்டே நடித்தாள் மான்விழி.

அவன் சிரித்துக் கொண்டே விளக்கை அணைத்தான்.

'அப்படிப் போடுங்கறதுக்கு இப்படியும் விளக் இருக்காக்கும் என்று முணுமுணுத்தான்.

'இதையும் போய் எல்லாருகிட்டேயும் சொல்லிக்கிட்டி காதிங்க' என்று கவனமாய் எச்சரித்தாள்.




'விக்கி.... இந்த சித்தப்பாவைப் பாரு! நம்மளையெல்லாம் சீக்கிரம் எந்தரிக்கச் சொல்லிட்டு எட்டு மணிக்கு வர்றதை 'என்று கிண்டல் செய்தாள் வினிதா.

சோமநாதன் சிரிப்பை அடக்கிக் கொண்டு எழுந்து செய்தித்தாளை எடுத்துக் கொண்டு முன்னறைக்குப் போனான்.

தமிழ்ச்செல்வி காரியமாய் வேலையிருப்பவள் போல் சமையலறைக்குப் போனாள். அங்கே மான்விழி சிரிப்பை அடக்கிக் கொண்டு முகம் சிவப்பதைக் கண்டு கொள்ளாதவளாய் ஏதோ டப்பாக்களைத் தேடினாள்.

'அதுடா... ராஜா! நேத்து நைட் கொஞ்சம் வேலை. முக்கியமான ஒரு டிராயிங் போட வேண்டியிருந்தது' என்றான்.

மான்விழி மறுபடியும் குபீரென்று சிரித்தபடி அவனுக்கு டிஃபன் எடுத்து வந்தாள்.

மாடியிலிருந்து அவசரமாக இறங்கும் போதுதான் சட்டை பட்டனைக் கூட மாட்டிக் கொண்டு வந்தான் பரபரப்பாக இருந்தான்.

'அத்தான்... அவசரமில்லாமச் சாப்பிடுங்க... நீங்க கொஞ்சம் லேட்டா வருவீங்கன்னு மாறன் அண்ணாகிட்டே பர்மிஷன் கேட்டிருக்கேன்' என்றாள்.

உன்னை யாரு என்னைக் கேக்காம அவன்கிட்டே பர்மிஷன் கேட்கச் சொன்னது? என்றான் சற்றே எரிச்சலுடன்.

மான்விழி அதைக் கண்டு கொள்ளாதவள் போல் சொன்னாள்.

'அவரே கொஞ்சம் லேட்டாத்தான் வர்ற மாதிரித்தான் சொன்னாரு' என்றாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ரகசியமாகச் சிரித்துக் கொண்டார்கள்.



'மானு! ஃப்ரெண்ட்ஷிப் வேற. வொர்க் ரிலேஷன்ஷிப் வேற. இனிமே என்கிட்டே கேட்காம பர்மிஷன் எல்லாம் சொல்லாதே!' என்றான்.

'சரிங்கத்தான்' என்றாள் மான்விழி.

சரியான நேரத்துக்குக் கிளம்பிவிட்டான்.

'மானு! மாறனும் கரெக்ட் டைமுக்கு வந்துடுவான்' என்றான்.

'அத்தான்... இன்னைக்கு மாறன் அண்ணாவும் பவித்ராவும் ஈவ்னிங் வர்றாங்களாம் என்றாள்.

∴ ∴ ∴

அன்றைக்கு பரணியின் தனி ஆஃபீஸ் திறப்புவிழா.

மணிமாறனும், பவித்ராவும் அன்றைக்கு அவர்கள் வீட்டிற்கு வந்தபோது மணிமாறன் சொன்னான்.

'சோமு.... அண்ணா! இந்த பில்டிங் முடிச்சவுடனே... உங்க கடன் முடிஞ்சுருது. அதனால நானும் அப்பாவும் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். இனிமே பரணி எங்க ஆஃபீஸ்ல ஒரு ஆளா இருக்கத் தேவையில்லை. அதுக்கு பதிலா எங்களோட சப் காண்ட்ராக்டரா இருந்து பில்டிங் கட்டிக்கலாம். வேற கட்டிடம் கிடைச்சா அதுவும் கட்டிக்கலாம். எங்க கட்டிடங்களுக்கு நாங்க மெட்டீரியல் சப்ளை செஞ்சுடுவோம். தனிப்பட்ட முறையில் கட்டட வேலை செஞ்சா... ஒரு ஃப்ரெண்டா நான் மெட்டீரியல் வாங்க அவனுக்கு அட்வான்ஸ் குடுப்பேன்' என்றான்.

பரணீதரன் நெகிழ்ந்து போனான்.

'தாங்ஸ்... தாங்ஸ்' என்றான்.

'எல்லாம் சுயநலம்தான் அப்பனே.... உன்னைப் போல நம்பிக்கையான காண்ட்ராக்டர்ஸ் எங்களுக்கும் கிடைக்கணு மில்லே....' என்றான்.

அந்த அடிப்படையில் பரணீதரன் 'தமிழ்ச்செல்வி கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்' என்று ஆரம்பித்தான்.

'ஆஃபீஸ் நிர்வாகம் அண்ணனுது...' என்றான்.

மான்விழியும் அந்த அலுவலகத்தில் கட்டிட பிளான்கள் வரைந்து கொடுக்கும் வேலை செய்வாள். அவளும் வெளியாட்களுக்கும் பிளான்கள் வரைந்து கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

திறப்பு விழாவன்று மணிமாறனின் பெற்றோர்களும், பவித்ராவின் பெற்றோர்களும் வந்திருந்தார்கள்.

தமிழ்ச்செல்வி மனதார நன்றி சொன்னாள். அப்போது மணிமாறனின் அப்பா... 'அம்மா... என் மகன் வாழ்க்கையிலேயே செஞ்ச நல்ல காரியம்.... இந்தப் பரணீதரனின் ஃபிரண்டா ஆனதுதான். குடும்பப் பொறுப்பு, ஒழுக்கம், நல்ல சிந்தனைன்னு என் பையன் நல்லா வர்றதுக்கு அவனும் ஒரு காரணம். என்னமோ நாங்க பணம் குடுத்ததைப் பெருசாச் சொல்றீங்க... என் பங்காளி பையன் ஒருத்தன் தினம் ரெண்டாயிரம் ரூபா ஃபாரின் சரக்குக்கே செலவு பண்றான். கணக்குப் போடுங்க. என்னாச்சுன்னு... அதனால, இந்தப் பயலுக பழகறது எனக்கு ரொம்ப லாபம்தான். அதனால உருகி உருகி இப்படி நன்றி சொல்றதை நிறுத்துங்க' என்றார்.

'என்னவோங்கய்யா.... இந்த வீடே என்னமோ மின்னல் தாக்கின மாதிரி ஒரு கலங்கு கலங்கிப் போச்சு' என்றான் சோமநாதன்.

'அப்படியில்லே! பெரியத்தான், மின்னல் தாக்கியிருந்தா மிஞ்சியிருப்போமா? இப்படி வேண்ணா வச்சுக்கலாம். மின்னலின் ஒரு துளி லேசா தொட்டுப் பாத்துட்டுப் போயிடுச்சுன்னு வேண்ணா சொல்லலாம்' என்றாள்.

'ஆமா... இங்க வந்து மான்விழியை எட்டிப் பார்த்துட்டு இங்கயே ஒரு மின்னல் கொடி இருக்கறப்ப நமக்கு என்ன வேலைன்னு ஓடிப் போயிடுச்சு...' என்றாள் பவித்ரா.

எல்லாரும் சிரித்தார்கள்.



'பாருங்க... மாறன் அண்ணா! பவி என்னைக் கேலி செய்யறாப்பல என்று சிணுங்கினாள்.

'பவி எதுக்கும் நாத்தனார்கிட்டே நல்ல பேர் வாங்கறதுக்குப் பாரு' என்றான் மணிமாறன்.

மேலும் சற்று நேரம் கழித்து மகிழ்வோடு விடை பெற்றுக் கொண்டார்கள்.

∴ ∴ ∴

ஏழு மணிக்கெல்லாம் சோமநாதன் அலுவலகத்திற்கு வந்து விடுவான்.

சித்தாட்கள், கட்டிட மேஸ்திரிகளுக்கெல்லாம் வேலையைப் பிரித்துக் கொடுத்து அனுப்பிவிட்டு சூஃபர்வைசர்களிடம் எங்கெங்கே எவ்வளவு மெட்டீரியல்கள் தேவையென்று ஆர்டர் குறித்துக் கொண்டு திரும்ப வீட்டுக்குச் சென்று குளித்து முடித்து பத்து மணிக்கு அலுவலகம் வருவான்.

எட்டரை மணிக்குக் கீழே வரும் பரணீதரன் அண்ணனிடம் கலந்து பேசிவிட்டு வெளியே கட்டிடங்களைப் பார்க்கக் கிளம்பி விடுவான்.

தனக்கு வசதி போல மான்விழி அலுவலகத்திற்கு வருவாள்.

பிற்பகலில் பரணீதரன் சற்று நேரம் ஓய்வுக்குப் போவான். சோமநாதனும் ஓய்வெடுப்பான். அதனால் நான்கு மணிக்குத்தான் மீண்டும் திறப்பார்கள்.

ஓய்வெடுக்கிறேன் பேர்வழியென்று மனைவியிடம் சற்று நேரம் விளையாடிக் கொண்டிருப்பான்.

தமிழ்ச்செல்வியும் தனது அழகு நிலையத்துக்கு 'பரணி அழகு நிலையம்' என்று பெயரிட்டு பலகை மாட்டினாள்.

இரண்டு பெண்களைத் துணைக்கு வேலைக்கு வைத்துக் கொண்டாள்.

...ம்மா சுதந்திரமாக யாத்திரைகள் போய் வந்து ...ந்தார்.

...பா... எனக்கு கிராஃப் ஷீட் வேணும்' என்று அவனிடம் ...ந்தைகள் வந்து நிற்பார்கள்.

...நாதனுக்கு அதுகுறித்து லேசாக ஏக்கம் இருப்பதை ...பரணீதரன் 'டேய்! அப்பாகிட்டே கேளுங்கடா' என்று சில ...ங்கே தள்ளிவிடுவான்.

... பிற்பகல்!

...மாறனும், பவித்ராவும் வந்திருந்தார்கள். எல்லாரும் ...ாகப் பேசிக் கொண்டிருக்கையில் சோமநாதன் திடீரென்று ...ான்.

... புதுசா... ஒரு ப்ராஜக்ட் ஆரம்பிக்கப் போறேன்...'

...வர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

...ா... ஒரு ஏலச்சீட்டு... குரூப்...' என்றான்.

...பா! அண்ணா!' என்று பரணீதரன் தலையில் கையை ...க் கொண்டான்.

...மநாதன் சிரித்துக் கொண்டே தேதியைக் காட்டினான். ...ஒன்று'

...படியும் சிரித்தார்கள்.

...வண்டாம்ப்பா... நான் முட்டாளானதே போதும்' இனி... ...ன முட்டாளாக்க மாட்டேன்' என்றான் சோமநாதன்.

...ு மௌனம் நிலவியது

...ரு சொன்னான்.

...று... மாறன்! வாழ்க்கையிலே ரெண்டு விஷயம் [illegible]



...ரும்பம் அமைஞ்சா... மீண்டர்லாம்... அதிலயும் தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றான்.

...கண்களில் நீர் நிறைந்தது.

'அண்ணா ப்ளீஸ்! என்றான் பரணீதரன்.

'அது மாதிரி... நானும் சொல்லலாம்... தாய் மாதிரி அண்ணி, தகப்பன் மாதிரி நீ இதோ... இந்த மானு... அப்புறம்.. மாறன், பவி மாதிரி எனக்கும் அமைஞ்சதாலதான் நானும் ஏதோ நிமிர்ந்து நிக்க முடிஞ்சது' என்றான்.

'சோமு... அண்ணா! ரொம்பவும் வருத்தப்படாதீங்க... நீங்க ஒண்ணும் ரொம்ப முட்டாள் தன மெல்லாம் பண்ணிடலே. சோமுத்துரோட நிலைமை இப்படியே இருக்காது. எப்படியும் நாலைஞ்சு வருஷத்துல நிலைமை மாறும். வால்யூ ஏறும். அப்ப நீங்க வாங்கிப் போட்டிருக்கிற வேண்ட்ஸ்ல தாராளமா ஒரு காலனியே உருவாக்கிடலாம்' என்றான் மணிமாறன்.

சோமநாதன் ஒரு பெருமூச்சுவிட்டான். 'பார்க்கலாம்... நாளைக்கு என்ன நடக்குதுன்னு... ஆனா, ஆசிரமத்துல இருந்ததுல... வாழ்க்கையோட இன்னொரு பக்கமும் தெரிஞ்சுகிட்டேன். கண்டிப்பா... நம்ம வருமானத்துல சொளைட்டிக்கும் ஏதாவது செய்யணும்' என்றான்.

'செய்வோம்...' என்றார்கள் கோரஸாக.

பவித்ராவும், மணிமாறனும் கிளம்பிய பிறகு மான்விழியும், பரணீதரனும் மேலே தங்கள் அறைக்கு வந்தார்கள்.

'ஹேய்... மானு' என்று அழைத்தான் பரணீதரன்.

'என்ன இப்பல்லாம் வம்பு பேசறது குறைஞ்சு போச்சு...' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

'...மா... நீங்க... வேற மாதிரி பதில் குடுக்கறீங்களாக்க...'

சொன்னியே... மின்னலின் ஒரு துளின்னு... அது ரொம்பப் பிடிச்சது தெரியுமா?' என்றான்.

மனைவியை மார்பில் சாய்த்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான்.

'ஹலோ! இது பகல் நேரம்!'

'அடடா! கொஞ்ச நேரம் பேசறதுக்குப் பகலென்ன... இரவென்ன?'

'ஆச்சு... எகனை மொகனை பேச ஆரம்பிச்சாச்சு...'

அவன் சிரித்தான் 'ஹேய்! அதென்ன எகனை அப்புறம் மொகனை' என்று சிரித்தான்.

'சிலதுக்கெல்லாம் விளக்கம் வார்த்தையில கேட்கக் கூடாது...'

'ஓஹோ! அப்ப செயல்ல காட்டப் போறேங்கறே! அப்படிப் போடு! என்று சிரித்தான். சுற்றும் முற்றும் பார்த்த மான்விழி சட்டென்று அவன்மேல் தொப்பென்று சாய்ந்தாள். உருண்டு சிரித்த அவன் 'மானு' இதுக்கென்ன அர்த்தம்!

'அர்த்தமா? அப்படிப் போடுன்னீங்களே! போடறதுக்கு இங்கே ஒண்ணையும் காணோம். அதான் அப்படியே என்னையே போட்டுட்டேன்' என்றாள்.

இருவரும் கலகலவென்று சிரிக்கும் ஒலி கீழே கேட்க சோமநாதனும் தமிழ்ச்செல்வியும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

